

# வலிமையிலிருந்து
# வலிமையைக் கட்டியெழுப்புதல்

SMIB

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

*ஆண்டறிக்கை 2017*



# வலிமையிலிருந்து வலிமையைக் கட்டியெழுப்புதல்

*எமது சமூகத்தில் பல்வேறு பிரிவுகளிலிருந்தான எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே எப்போதும் எமது மிக முக்கியமான சொத்தாகும். எமது பொருளாதாரம் சமூகம் மற்றும் சுற்றுச்சூழலிற்கு உறுதியாக பங்களிக்கத்தக்கதும் மேலும் நிலைபேறான வர்த்தகத்தைக் கட்டியெழுப்புவதற்கான எமது பொதுவான சவால்களை புரிந்து கொள்ளக்கூடியதுமான எமது வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடனான எமது ஈடுபாடான அணுகுமுறையானது வெற்றியளித்துள்ளது. இவ்வருடம் முழுவதும் வளர்ச்சியை வளர்ச்சிக்காக துரத்துவதை தவிர்த்து நிலைபேறான வளர்ச்சியை அடைவதை உறுதிசெய்வதே நோக்கமாக இருந்தது. அணுகுமுறைகள் மூலம் பலவற்றை வெற்றிக்கண்டுள்ளதுடன் வலிமையிலிருந்து வலிமையாக வளர்ந்துள்ளோம்.*

# பொருளடக்கம்

தொலை நோக்கு, செயற் பணி, கூட்டிணைந்த பெறுமதிகள் **05** | நிதிசார் முக்கிய குறிப்புகள் **06** | நிதியியல் மீளாய்வு **07** |
தலைவரின் செய்தி **10** | பொது முகாமையாளரின் மீளாய்வு **12** | பணிப்பாளர்கள் சபை **16** | கூட்டிணைந்த முகாமைத்தவம் **18** |
கூட்டிணைந்த ஆளுமை **22** | சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை **60** | சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு
அறிக்கை **62** | சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை **64** | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் **65** | மனித வளங்கள் **74** |
கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு **77** | எங்கள் பண்டங்கள் **78** | நிறுவனத் தகவல்கள் **(பின்பக்க உட்புற அட்டை)**

# நிதியியல் தகவல்கள்

வருமானக் கூற்று **103** | விரிவான வருமானக்கூற்று **103** | நிதி நிலமையின் கூற்று **104** |
உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று **105** | காசுபாய்ச்சல் கூற்று **106** | கணக்கீட்டு கொள்கைகள் **107** |
நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் **118** | பெறுமதி கூட்டப்பட்ட கூற்று **139** | மூலதன போதுமை **140** |
வருமானத்தின் மூலகங்களும், பயன்பாடும் **141** | பத்து வருட புள்ளிவிபரவியல் சுருக்கம் - வங்கி **142**





# தொலை நோக்கு

*பாவணையாளர் நிதி சந்தையில் தலைமை தாங்குபவர்களாக இருப்பதுடன், அபிவிருத்தி வங்கியியலில் தேசத்தின் பெறுமதிமிக்க பங்காளராக இருப்பதும்.*

# செயற் பணி

*தேசத்திற்கான முன்னணி வீடமைப்பு வங்கியாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொடர்ந்தும் இருப்பதுடன், அபிவிருத்தி வங்கியியலில் பெறுமதிமிக்க பங்காளராகவும் இருப்பது.*

**வாடிக்கையாளர்** : *அதி உயர்வான வாடிக்கையாளர் சேவை, புத்தாக்கம், தரம், மற்றும் காலத்திற்கேற்ற தொழில் நுட்பம் என்பவை ஊடாக, எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அவர்களின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதி தேவைகளுக்கு பொருத்தமான, கவர்ச்சிகரமான நிதியியல் தீர்வுகளை வழங்கும் கடப்பாடுடையவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.*

**வர்த்தக பங்காளர்கள்** : *முதலீடுகளுக்கு உறுதியான பாதுகாப்பும் மற்றும் நெகிழ்ச்சியும் உள்ள சிறந்த வருவாய்களை நாங்கள் வழங்குகின்றோம்.*

**பணியாட் தொகுதியினர்** : *நியாயமான மதிப்பீட்டுக் குழுக் கலாச்சாரத்துடன் கூடிய ஆரோக்கியமானதும், உற்பத்தியாற்றல் மிக்கதுமான பணிச் சுற்றாடல் ஒன்றை உருவாக்கும் அதே நேரத்தில். எமது பணியாளர்கள், தம்மை முழுமையான ஆற்றலுடையவர்களாக வளர்த்துக் கொள்வதற்கும், தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கும் தேவையான வாய்ப்புகளையும் நாங்கள் வழங்குகின்றோம்.*

**பங்குடமையாளர்கள்** : *பங்குடமையாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் அதே நேரத்தில், இலாபமீட்டும் வளர்ச்சியினூடாக பங்குடமையாளர்களின் பெறுமதியை விருத்தி செய்யும் கடப்பாடுள்ளவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.*

**தொழில்நுட்பம்** : *துரிதமான செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருப்பது, தரம் மற்றும் வசதிகள் ஆகியவை, தானாகவே இயங்கக் கூடிய தன்மை மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றை பிரயோகிப்பதன் ஊடாக, பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வெளியக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் கட்டுப்பட்டிருக்கின்றோம். தீர்மானம் எடுக்கும் செயன் முறையில் திறமையையும். பயனுறுதியையும் விருத்தி செய்வதற்கு துரிதமானதும், மிகச் சரியானதுமான தகவல்களையும் உள்ளக வாடிக்கையார்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.*

**சமுதாயம்** : *தேசிய அபிவிருத்தியில் நாங்கள் ஒரு பங்காளராக இருப்பதானல், எமது சமூகத்தின் வாழ்க்கை முறையை விருத்தி செய்வதற்கு நாங்கள் பணியாற்ற வேண்டியவர்களாக இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.*

# கூட்டிணைந்த பெறுமதிகள்

## *நாங்கள் நிலை நிறுத்துபவை*

- நாங்கள் நேர்மையாக செயற்படுவதுடன், மரியாதை காண்பிப்பவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் செய்கின்றவை அனைத்திலும் தொழிற்சார் திறமைகளையும், அதி உயர்வான சிறப்புகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதுடன், எமது செயற்பாடுகளுக்கான பொறுப்பு கூறுதலையம் பொறுப்பேற்கின்றோம்.
- நாங்கள் வெளிப்படைத் தன்மையை காட்சிப்படுத்துவதுடன் குழுவாக பணியாற்றுவதற்கும் முயற்சிக்கின்றோம்.
- நாங்கள் புத்தாக்கமுள்ள கருத்துக்களையும் தீர்வுகளையும் எடுப்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றோம்.
- நாங்கள் கற்றுக் கொள்வதற்கான அவாவையும். வங்கியுடன் இணைந்து வளருவதற்கான ஆர்வத்தையும் கொண்டிருக்கின்றோம்.

# நிதிசார் முக்கிய குறிப்புகள்

| நிதிசார் கூற்றுகளின் பகுப்பாய்வு | 2017 ரூபா மில். | 2016 ரூபா மில். | மாற்றம் % |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 4,745 | 4,241 | 11.89 |
| வட்டிச் செலவினம் | (3,102) | (2,425) | 27.90 |
| தேறிய வட்டி வருமானம் | 1,643 | 1,815 | (9.49) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | 379 | 706 | (46.33) |
| வரிவிதிப்புக்கள் | 200 | 270 | (25.79) |
| வரிக்குப்பின் தேறிய இலாபம் | 179 | 436 | (59.06) |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | 1,035 | 668 | 55.04 |
| கடன்களும் முற்பணங்களும் | 32,987 | 28,164 | 17.13 |
| மொத்தச் சொத்துக்கள் | 42,022 | 35,347 | 18.88 |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 33,620 | 28,845 | 16.55 |
| கடன் பெறுகைகள் | 2,497 | 503 | 396.55 |
| பங்குதாரர்களின் நிதி | 4,956 | 4,918 | 0.78 |
| **விகிதப் பகுப்பாய்வு** | | | |
| **இலாபத்தன்மை பகுப்பாய்வு** | % | % | |
| தேறிய வட்டி எல்லை | 4.25 | 5.22 | (18.60) |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் (ROE) | 3.62 | 9.50 | (61.93) |
| சராசரி சொத்துக்கள் மீதான வருவாய் (ROA) | 0.98 | 2.03 | (51.74) |
| **மூலதன போதுமை** | | | |
| பங்கு மூலதனம்/மொத்தச் சொத்துகள் | 11.79 | 13.91 | (15.23) |
| பங்கு மூலதனம்/மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 15.03 | 17.46 | (13.96) |
| அடுக்கு1 | 23.74 | 22.96 | 3.40 |
| அடுக்கு 1 & 11 | 24.29 | 23.47 | 3.49 |
| **திரவத் தன்மை** | | | |
| திரவச் சொத்து விகிதம் | 22.10 | 22.82 | (3.16) |
| வைப்பு/கடன்களும் முற்பணங்களும் | 101.92 | 102.42 | (0.49) |
| பெறுகைகள்/கடன்களும் முற்பணங்களும் | 7.57 | 1.79 | 323.94 |
| **தரப்படுத்தர்** | | | |
| **சொத்துத் தரம்** | | | |
| செயற்படாத கடன்களும்/மொத்த கடன்களும் முற்பணங்களும் | 22.93 | 25.17 | (8.90) |
| மொத்த சொத்துகளுக்கான கடன்களும் முற்பணங்களும் | 78.50 | 79.68 | (1.48) |

# ரூ. 11.19 பில்லியன்

கடன் பகிர்வுகள்

# நிதியியல் மீளாய்வு

### நிதியியல் மீளாய்வு

சந்தையில் நிலவிய வட்டி வீதங்களின் போட்டியின் மத்தியிலும் 2017ஆம் ஆண்டின் போது அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதன் அதிமுக்கிய வளர்ச்சியை தொடர்ந்து எய்தியது. வலுவான சொத்து முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் திறமையான சந்தை அடிப்படையிலான உத்திகள் என்பவையூடாக, நிதிச் சந்தையின் சவால்களை வங்கி வெற்றிகரமாக சந்தித்தது.

### இலாபத் தன்மை

பெறுமதி சேர் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 566 மில்லியனை 2017ம் ஆண்டு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி பெற்றுக்கொண்டுள்ளது. வரிக்கு முன்னரான இலாபத் தன்மை 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையயில் நாட்டில் காணப்பட்ட மறைப் பொருளாதாரம் காரணமாக சிறிய வீழ்ச்சி காணப்படுகின்றது.

### வட்டி வருமானம்

2017ம் ஆண்டு முழுவதிலும் பிரதானமாக கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஊடாக வட்டி வருமானம் குறிப்பாக 11.90% வீதம் அதிகரித்ததுடன் இதற்கு வங்கியின் உபாயக் கடன் துறை பக்கபலமாக துணை நின்றது. 2017ம் ஆண்டு வங்கியின் பாரிய சாதனையாக அமைந்திருந்தத அதேவேளை நாங்கள் போதிய திரவத்தன்மையை வைத்திருப்பதற்கு முடிந்தது. .

| வட்டி வருமானம் | 2017 ரூ.மில் | 2016 ரூ.மில் |
|---|---|---|
| மொத்த வட்டி வருமானம் | 4,745.59 | 4,240.77 |

### வட்டிச் செலவு

வட்டிச் செலவு சந்தையில் நிலவிய அதிகூடிய வட்டி வீதங்களின் காரணமாக, 2017 இல் வங்கியின் வட்டிச் செலவினம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27.90% வீதம் அதிகரித்துள்ளது.

| வட்டிச் செலவினம் | 2017 ரூ.மில் | 2016 ரூ.மில் |
|---|---|---|
| வைப்புகள் | 33,620.23 | 28,845.16 |

### வருவாய், செலவினங்கள் மற்றும் இலாப ஒப்பீடு (ரூ.மில்)

இவ்வருடத்தினுள் வங்கியின் மொத்த வருமானம் 12.44% வீதத்தினால் அதிகரித்ததுடன் இதன் பெறுமதி 4916 மில்லியனாகும்.

| வருவாய், செலவினங்கள் மற்றும் இலாப ஒப்பீடு | 2017 ரூ.மில் | 2016 ரூ.மில் |
|---|---|---|
| வருவாய் | 4,916 | 4,372 |
| செலவினங்கள் | 4,537 | 3,666 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 379 | 706 |

### கடன்களும் முற்பணங்களும், வைப்புகளும் சொத்துக்களும்

சராசரி வளர்ச்சியானது கடன்களும் முற்பணங்களும் 17% வீதத்தினாலும், வைப்புகள் 16.55% வீதத்தினாலும், மொத்த சொத்துக்கள் 18..88% வீதத்தினாலும் அதிகரித்துள்ளதுடன் மொத்த மூலதன அடிப்படை 0.8% வீதத்தினாலும் மேற்குறிப்பிட்ட துறைகள் தொடர்ச்சியாக அதிகரித்ததுடன் அவற்றின் பெறுமதி துறைரீதியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கடன்களும் முற்பணங்களும், வைப்புகளும் சொத்துக்களும் | 2015 ரூ.மில் | 2016 ரூ.மில் | 2017 ரூ.மில் |
|---|---|---|---|
| கடன்களும் முற்பணங்கள் | 26,523 | 28,164 | 32,987 |
| மொத்த சொத்துக்கள் | 34,232 | 35,347 | 42,022 |
| வைப்புகள் | 27,836 | 28,845 | 33,620 |
| மொத்த உரிமைப் பங்கு | 4,263 | 4,918 | 4,957 |

### தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிப் பொறுப்புள்ள ஒரு நிறுவனப் பிரஜையாக 2017 இன் பொருளாதாரத்திற்கு, பல்வேறுபட்ட வழிகளின் மூலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கியது. 2016 இன் ரூபா 664.85 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 இல் நாட்டின் பொருளாதாரத்திற்கு, அரசாங்கத்திற்கான வரிகளாகவும் தீர்வைகளாகவும் பங்களிப்பு செய்யப்பட்ட தொகை ரூபா 490.71 மில்லியன் ஆகும். நாங்கள், இந்தப் பங்களிப்புகளை வழங்கிய போதிலும் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட அவசியமான திரவ மற்றும் மூலதனப் போதுமை விகிதத்தை தொடர்ந்தும் பேணியது தொடர்பாக பெருமைகொள்கின்றோம்..




# நிலைத்திருப்பு

தலைவரின் செய்தி 11

பொது முகாமையாளரின் மீளாய்வு 13



“நிதி வளங்கள் அதிகரித்த காரணத்தினால் இவ் வருடகாலத்தில் முதலீடானது 24.61% இனை அடைய பெற்றது. அத்துடன் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 18.88% மொத்த ஆதன வளர்ச்சியை காட்டியது.”

# தலைவரின் செய்தி

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது தேசிய பொருளாதார நோக்கங்களுக்காக சேவை செய்யும் பழமையான வங்கி, முக்கியமாக நாட்டின் வீட்டு வங்கியாக கடந்த எட்டு தசாப்தங்களாக சேவை செய்து வருகின்றது. எமது வங்கியானது எமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு அவர்களது வருமான வகைகளை கருத்தில் கொள்ளாது இலங்கை பிரஜைகளின் வீட்டுத் தேவைகளுக்கு உதவி செய்வதில் முன்னனி வகிக்கின்றது.

எமது வங்கியானது இலங்கை அரசாங்கத்தின் மெக்ரோ பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி கொள்கையின் கீழ் வீடமைப்பு, விவசாயம் மற்றும் கைத்தொழில் முறைமையிலுள்ள எந்தவொரு நபருக்கும் அம்முறைக்கான பொருளாதார தேவைகைகளுக்கான நிதியுதவியை வழங்குகின்றது. அ.ஈ.மு.வங்கியின் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகளில் நோக்கங்களின் கட்டுப்பாடானது, சந்தையில் முன்னேறுவது மற்றும் சந்தைப் பங்குகளை அதிகரிப்பதில் சில கட்டுப்பாடுகளை விதித்தள்ளது. ஆயினும் வங்கியானது உள்நாட்டு மற்றும் உலகலாவிய ஸ்திரதன்மையின்மை மற்றும் கடும் போட்டிகளிற்கிடையே முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

எமது பயணத்தின் முனைப்பானது பராமரிக்கத்தக்க முன்னேற்றத்தை அடைவதாகும். நாட்டின் வெவ்வேறு சமூகத்திலிருந்தான பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே எமது முக்கிய சொத்தாகும். பொறுப்புடைய அரச வங்கியாக விளங்கும் எமது நோக்கமானது இலங்கை மக்களின் வீட்டுக் கனவை நனவாக்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 1931 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு, நாட்டின் பழமையான வங்கியாக திகழ்கின்றது. இது 1931 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தினால் 1931 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி சிலோன் அரச ஈட்டு வங்கியாக ஆரம்பிக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட விவசாய மற்றும் கைத்தொழில் வரவு கூட்டுத்தாபனத்துடன் சிலோன் அரச ஈட்டு வங்கி இணைக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியாக தாபிக்கப்பட்டது.

எமது வங்கி 1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியானது அ.ஈ.மு வங்கியை உரிமம் வழங்கப்பட்ட சிறப்பு வங்கியாக அங்கீகரித்தது. அன்று முதல் அ.ஈ.மு. வங்கியானது நாட்டில் வீட்டுத் தேவைகளில் பெரும் கவனம் செலுத்தியது. பின்னர் அது வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்று அதன் நிதி அடித்தளத்தை அதிகரித்தது. இந்த குறிப்பித்தக்க நிகழ்வானது 1991 ஆம் ஆண்டு நடைபெற்றதுடன் அதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு வங்கிப் புத்தக சேமிப்பு வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது நாடு முழுவதும் எமக்கு 25 கிளைகள் உள்ளன. எமது வங்கியே "தேசத்தின் வீடமைப்பு வங்கி" என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

இலங்கை சமூகத்தின் நிலையானதும் நிலைபேறானதுமான அபிவிருத்தி மூலம் வீடமைப்பு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எமது வங்கி தாபிக்கப்பட்டது. எமது கைதேர்ந்த பணிப்பாளர் சபை மற்றும் கூட்டிணைந்த முகாமைத்துவத்தினால் எமது பயணம் வெற்றி நடைபோடுகின்றது. எமது வாடிக்கையாளர்களுக்கு சமமானதும் போதிய அளவினதுமான சேவையை வழங்குவதே எமது பிரதான நோக்கமாகும்.

பணிப்பாளர் சபையானது மூலோபாய திட்டத்தை தங்குதடையின்றி நிறைவேற்றுவதற்கு சேவை தரம், நிலைத்த தன்மை மற்றும் குழு வேலை என்பவற்றில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.

தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் குழுவாக செயற்படுவதை சபையானது ஊக்குவிக்கின்றது. முகாமைத்துவ மாற்றத்துடன், தங்குதடையின்றிய வகைக்கூறல் மற்றும் பொறுப்புத்தன்மை என்பவற்றை தாபிப்பதற்கு ஒழுங்காக வடிவமைக்கப்பட்டதும் வழங்கப்பட்ட அதிகாரத்துடனான செயற்பாட்டு முறைமையை சீர்திருத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

### இடர் முகாமைத்துவம்

அ.ஈ.மு வங்கியினால் இடர் முகாமைத்துவத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்பதுடன் பழக்கப்பட்ட விடயங்களிலிருந்து புதியதும் அச்சுருத்தல் மிக நிறைந்ததுமான புதிய வியாபரத்திற்கு மாறும் போது மிகவும் கண்காணிப்புடனும் காணப்படுகின்றது. ஆகையினால் பணிப்பாளர் சபையானது இடர் முகாமைத்துவத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை அடையாளம் கண்டுள்ளது. ஆகையினால் வங்கியானது இடர் முகாமைத்துவ முறைமை மற்றும் கட்டமைப்பை ஏலவே ஆரம்பித்துள்ளது. முக்கிய முகாமைத்துவ பணியாள் இந்த முக்கிய பரப்பை கண்கானிக்க நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் சபையானது, இடர் முகாமைத்துவ பாங்கு தொடர்பில் அறிவை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு வழிசமைத்துள்ளது.

பண வைப்பு மற்றும் கடன் விநியோகம் என்பவை கவனமாக கையாளப்பட வேண்டியவையாகும். 2017 ஆம் ஆண்டில் இவை இரண்டிலும் குறிப்பிடத்தக்க வெற்றியை கண்டுள்ளது. இந்த வெற்றியானது இந்த இலக்கை மெய்ப்பிப்பதற்கு பங்களிப்பு நல்கிய அனைத்து ஊழியர்களதும் வெற்றியாகும்.

### நல் - ஆளுமையுள்ள வங்கி

எமது வர்த்தகத்தை கொண்டு நடத்துவதற்கு அடிப்படையாக இருப்பது எமது திடமான அர்ப்பணிப்பும் செயல் திறமையான ஆளுகையுமாகும். பணிப்பாளர் சபைக்கும் முகாமைத்துவத்திற்குமிடையே தெளிவான விரித்துரை காணப்படுகின்றது. அறுதியான அதிகாரத்தைக் கொண்ட சபையானது வியாபாரத்தில் முறையான முகாமைத்துவம் நடைபெறுவதை கண்காணித்து வருகின்றது.

இலங்கை மத்திய வங்கினால் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பு வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆட்சிக்கான வங்கிச் சட்ட வழிகாட்டல்கள் மற்றும் கூட்டிணைந்த ஆட்சிக்கான மேன்மையான செயற்பாட்டிற்கான சட்டத்தொகுப்புக்கு இணங்க, முன்னேற்றமானதும் இணக்கப்பாடுடையதுமான கூட்டிணைந்த ஆட்சி கட்டமைப்பை எமது வங்கி கொண்டுள்ளதை உறுதி செய்துள்ளோம். அதே வேளை நாம் எமது ஆட்சி நடவடிக்கைக்காக மேம்படுத்துவதற்கும் உறுதிசெய்வதற்கும் வழிவகைகளை தேடுவதுடன், உலகளாவிய கூட்டிணைந்த ஆட்சி முறைமையின் சிறப்பான நடைமுறையையும் பின்பற்றுகின்றோம்.

### சவாலான பொருளாதார பரப்பு

2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட சவாலான மெக்ரோ சூழலை பொருத்தவரையில் மெச்சத்தக்க செயற்பாட்டை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி கொண்டிருந்தது. விவசாயம் மற்றும் விவசாயத்தை அடிப்படையாக கொண்டிருந்த கைத்தொழில்களில் காலநிலை மாற்றம் கொண்டிருந்த தாக்கம் GDP வளர்ச்சியில் தாக்கத்தை காட்டியது. இது 2017 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் அனைத்து வாடிக்கையாளர் பொருட்களிற்கும் 3.3% இற்கு மட்டுபடுத்தப்பட்டது.

எமது பொருளாதாரம் சமூகம் மற்றும் சுற்றுச்சூழலிற்கு உறுதியாக பங்களிக்கத்தக்கதும்மேலும்நிலைபேறானவர்த்தகத்தைக்கட்டியெழுப்புவதற்கான எமது பொதுவான சவால்களை புரிந்து கொள்ளகூடியதுமான எமது வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடனான வங்கியின் ஈடுபாடான அணுகுமுறையானது வெற்றியளித்துள்ளது. இவ்வருடம் முழுவதும் வளர்ச்சியை வளர்ச்சிக்காக துரத்துவதை தவிர்த்து நிலைபேறான வளர்ச்சியை அடைவதை உறுதிசெய்வதே நோக்கமாக இருந்தது. அணுகுமுறைகள் மூலம் பலவற்றை வெற்றி கண்டுள்ளதுடன் வலிமையிலிருந்து வலிமையாக வளர்ந்துள்ளோம். வருடத்தின் முதல் அரையாண்டில் காணப்பட்ட மெதுவான பொருளாதார நடவடிக்கைகள் வங்கியின் வளர்ச்சியை மட்டுபடுத்தியது. ஆயினும் வங்கியானது வரிக்கு முந்திய இலாபமாக ருபா 378.92 மில்லியனை பெற்றுள்ளது. நிதி வளங்கள் அதிகரித்த காரணத்தினால் இவ் வருடகாலத்தில் முதலீடானது 24.61% இனை அடைய பெற்றது. அத்துடன் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 18.88% மொத்த ஆதன வளர்ச்சியை காட்டியது.

நிறைவாக 2017 ஆம் ஆண்டு செழுமை நோக்கிய பயணத்தில் இன்னொரு சிறந்த ஆண்டாக விளங்கியது. தலைவராகிய நானும் பணிப்பாளர் சபையும் இனி வரும் காலங்களிலும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை உறுதி செய்கின்றோம்.

மேலும், நான் பணிப்பாளர் சபை, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு இவ் இலக்கை அடைவதற்கு அவர்களது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியதற்கு நன்றிகூர கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் அ.ஈ.மு.வ உத்தியோகத்தர்கள் மற்றும் வியாபார குழுவிற்கு அவர்களது அர்ப்பணிப்பான கடமைகளுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வங்கியின் தலைவராக எனது கடமைகளை செவ்வனே நிறைவேற்ற எனக்கு உதவிய, வழிகாட்டிய அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கௌரவ பிரதமர், கௌரவ நிதி அமைச்சர், கௌரவ அரச நிதி அமைச்சர், திறைசேரி செயலாளர், மத்திய வங்கி உத்தியோகத்தர்கள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திஸ்ஸ ஜினதாச**

**தலைவர்**



"கடன் மற்றும் முற்பணம் ரூபா 28,164 மில்லியனிலிருந்து ரூபா 32,987 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி வீதம் 17.13% ஆகும்.

வருடாந்த மொத்த கடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை கண்டுள்ளது. இது முக்கியமாக உயர வளர்ச்சித் துறைகளின் வீட்டு நிதி கடன் மற்றும் ச.ந.நி மற்றும் சில்லறை வியாபாரத்தினால் ஏற்பட்டதாகும்."

# பொது முகாமையாளரின் மீளாய்வு

அ.ஈ.மு வங்கியின் வரலாற்றில் 2017 ஆம் ஆண்டு இன்னுமொரு வெற்றியாண்டாக அமைந்தது. மூலோபாய நடைமுறைகள், கிளைகளின் இடமாற்றம், முறையான மனிதவள முகாமைத்துவம், தொடர்ச்சியானதும் ஆய்வுதன்மையுடையதுமான செயற்பாட்டு மீளாய்வு மற்றும் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ கட்டமைப்பினூடாக வங்கியின் இலாபம், காசின் திரவதன்மை மற்றும் சொத்து அடித்தளத்தை மேம்படுத்துவது ஆகியன தொடர்பாக முகாமைத்துவத்தினால் இவ் வருட காலத்தில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக நாம் புதிய மூலோபாய திட்ட நடவடிக்கைகள் மூலம் வங்கி முகம் கொடுத்த அச்சுறுத்தல்கள் மற்றும் பலவீனங்களை நாம் முறை-யே சந்தர்ப்பங்கள் மற்றும் சக்திகளாக மாற்றுவதில் வெற்றிக் கண்டுள்ளோம். இவ்வருடம் முன்னர் அனுபவித்த குறைவான மற்றும் திருப்தியற்ற சில நடவடிக்கைகளை மீள பெறுவதற்கு விரைவான மற்றும் முகாமைப்படுத்தப்பட்ட வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சவால்கள் இருந்த போதிலும் போட்டிகரமான சூழலில் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக பயணத்தில் வங்கியானது உறுதியுடன் முன்னேறியது. பல வெற்றிகரமான நடவடிக்கைகளினுள் கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இவ் வருடம் வங்கியானது வரவு அதிகரிப்பு, வைப்பு அதிகரிப்பு மற்றும் சொத்து அதிகரிப்பில் குறிப்பிடத்தக்களவான வீதத்தை எட்டியுள்ளது.

### செயற்பாட்டு விளைவுகள்

2017 ஆம் ஆண்டு 16.1% கைத்தொழில் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது வரவு தேவைப்பாடு அதிகரிப்பினால் எமது கடன் மற்றும் முன்பண கொடுப்பனவு சராசரியாக 17.15% இனால் அதிகரித்துள்ளது. முதல் தடவையாக வருடாந்த மொத்த கடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை கண்டுள்ளது. - இது முக்கியமாக உயர வளர்ச்சித் துறைகளின் வீட்டு நிதி கடன் மற்றும் ச.ந.நி மற்றும் சில்லறை வியாபாரத்தினால் ஏற்பட்டதாகும். கடன் மற்றும் முற்பணம் ரூபா 28,164 மில்லியனிலிருந்து ரூபா 32,987 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி வீதம் 17.13% ஆகும்.




2017 ஆம் நிதியாண்டில், நாட்டின் வீட்டு வங்கியான அ.ஈ.மு. வங்கியின் நிதி உதவியுடன் வாடிக்கையாளர்களின் வீட்டுக் கனவை நனவாக்கும் சேவையை வழங்கியதன் மூலம் பெருமளவில் வருடாந்த வரவு வளர்ச்சியை கண்டுள்ளது. மேலும் நியாயப்படுத்தக்க NPL விகிதத்துடன், அ.ஈ.மு.வங்கியானது வரவு விகிதத்தில் வளர்ச்சியை கண்ட போதும் அதன் வரவு தரம் உறுதியாக காணப்பட்டது.

வங்கியானது, வாடிக்கையாளர்கள் தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை அ.ஈ.மு.வங்கியில் முதலீடு செய்வதற்கான நம்பிக்கையை வென்றுள்ளது. அதற்கமைவாக வங்கியானது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 16.55% வைப்பு அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இது குறிப்பிட்டு கூறத்தக்க வெற்றியாகும். 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எமது பங்குச் சந்தையும் அதிகரித்துள்ளது. குறைந்த கட்டண - உயர் வட்டி வீத சூழலில் பெரும் தொகையான குறைந்த கட்டண வைப்புக்கள் பெரும-ளவில் பங்களிப்பு செய்துள்ளது. இதன் காரணமாக ரூபா 4,775.07 மில்லியன் அதிகரிப்பு காணப்பட்டு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று ரூபா 33,620.24 மில்லியனாக காணப்பட்டது.







வங்கியானது நியதிச்சட்ட தேவைப்பாட்டுக்கு மேலதிகமாக மூலதன தேவைப்பாட்டை நிலைநிறுத்தக் கூடியதாக இருந்ததுடன் இது வங்கி பல வகையான இடர் நிலைகளை முகம்கொடுக்கும் திறனை அடையகூடியதாகவும் இருந்தது. மேலும் வங்கியானது தலைமை அலுவலக கட்டிடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, ஓர் சிறந்த செயற்பாட்டு சூழலையும் பாதுகாப்பான சூழலையும் வழங்க உத்தேசித்துள்ளது. மீளாய்வு வருடத்தில் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சொத்து அதிகரிப்பு 18.88% ஆக காணப்பட்டது

# பொது முகாமையாளரின் மீளாய்வு

### மூலோபாய கட்டமைப்பு, நோக்கு மற்றும் வாய்ப்புக்கள்

பதவியணியினரின் தேர்ச்சி மற்றும் திறனை மேம்படுத்தவும் செயல்திறனுடன் தொடர்புடைய வெகுமதியை நோக்காக கொண்ட அவர்களது வாழ்க்கைத் தொழிலை மேம்படுத்தவும் பதவியணியினரை பதவியில் வைத்திருப்பதையும் மற்றும் செயல்திறனை அதிகரிப்பதையும் நோக்காக கொண்டு மனிதவள மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய குறிகாட்டிகளின்படி உலகளாவிய பொருளாதாரம் நிலையானதாக காணப்படுவதுடன் இலங்கையின் பொருளாதாரம் 2018 ஆம் ஆண்டும அதற்கு அப்பாலும் வளர்முகத்தைக் காட்டுகின்றது. அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதியில் வளர்ச்சியை தரக்கூடிய மூலதன சந்தர்ப்பங்களை வழங்குவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதில் நான் நம்பிக்கையுடையவனாக இருக்கின்றேன்

நாங்கள் செய்யும் அனைத்து நடவடிக்கைகளிலும் எமது வாடிக்கையாளர்களை மையப்படுத்தி, சரியான வர்த்தகத்தை சரியான நேரத்தில் மேற்கொண்டு அவர்களின் நம்பிக்கையை வென்று, வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான திடமான நிதிப்பொருட்களின் தொகுப்பினை உருவாக்கி எமது மூலோபாய திட்டத்தை நாம் முன்னெடுப்போம்.

### நன்றி நவிலல்

அ.ஈ.மு வங்கியின் நோக்கினை அடைவதில் பொறுப்புக்களை பகிரும் எனது திறமையில் நம்பிக்கை கொண்ட தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் 2017 ஆம் ஆண்டு முழுவதும் அ.ஈ.மு வங்கியின் பயணத்தில் அயராத உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தை நல்கிய அ.ஈ.மு வங்கிக் குழாமின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். மேலும் வங்கிக்கு நீண்டகால அர்ப்பணிப்புடன் செயல்பட்டு 2017 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற எமது குழு அங்கத்தர்கள் வழங்கிய பங்களிப்புகளுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

**டபிள்யு எம் தயாசிங்க**
பொது முகாமையாளர் / த.நி.உ.

# பழைமையான அரச வங்கி


பணிப்பாளர்கள் சபை 16

கூட்டிணைந்த முகாமைத்துவம் 18

கூட்டிணைந்த ஆளுகை 22

**சபையின் உப குழு அறிக்கைகள்**

சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை 60

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை 62

சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை 64

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் 65




# பணிப்பாளர்கள் சபை




### 01. திரு. திஸ்ஸ ஜினதாச - *தலைவர்*

2015 பெப்பரவரி 09 அன்று அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் தலைவராக திரு. திஸ்ஸ ஜினதாச நியமிக்கப்பட்டார். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து கலைமாணி பட்டப்படிப்பினை பெற்றுள்ளார். பொதுத் துறையிலும் அவ்வாறே தனியார் துறையிலும் 32 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவத்தை கொண்டவர். 2000 - 2002 வரையிலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பணியாற்று பணிப்பாளராக சேவையாற்றி உள்ளார். மேலும் அவர் 1989 - 1994 வரை கௌரவ பிரதி சபாநாயகர் காமினி பொன்சேக்காவிற்கு அந்தரங்க செயலாளராகவும் சேவையாற்றி உள்ளார். அத்துடன் 1996 - 1998 வரை வடக்கு - கிழக்கு ஆளுனரின் செயலாளராகவும் இருந்துள்ளார். 1985 - 1989 வரை வரையறுக்கப்பட்ட மகாராஜா நிறுவனத்தின் குழும ஆளணி முகாமையாளர்/நிர்வாக பணிப்பாளர் பதவிகளின் அனுபவங்களும் உள்ளவர் ஆவர்.

### 02. டாக்டர். சீ.என்.எஸ். கமகே - *பணிப்பாளர்*

டாக்டர் நிரோஷன் கமகே 06.03.2015 இலிருந்து அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையில் ஒருவராக இருக்கின்றார். இவர், பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து மிருக வைத்திய துறையில் பட்டப்படிப்பையும் பொருளாதாரம் மற்றும் அணுமூலக் கூறு உயிரியலும், உயிரியல் தொழில்நுட்பமும் துறைகளில் முதுகலை பட்டமும் கொண்டிருக்கின்றார். பொதுத்துறை முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும் இவர் கொண்டிருக்கின்றார். தற்போது இவர் பொது நலமும், கால்நடை அபிவிருத்தியும் அமைச்சில் பிரதிப் பணிப்பாளராக (கால்நடை அபிவிருத்தி) சேவையாற்றுகின்றார். விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான சபை மற்றும் மில்கோ பிரைவட் லிமிடட் ஆகியவற்றின் பணிப்பாளரும் ஆவார். இவர் ரோயல் கல்லூரியின் மிருக வைத்திய சிகிச்சையாளர்களின் உறுப்பினர்களில் ஒருவரும், விஞ்ஞான முன்னேற்ற இலங்கை சபையின் உறுப்பினருமாவார்.

## பணிப்பாளர்கள் சபை தொடர்ச்சி

### 03. திரு. எம்.எஸ்.டி. ரணசிறி - பணிப்பாளர்

திரு. எம். எஸ். டி. ரணசிறி, 25.11.2013 இல் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கு ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 24.02.2015 இல் இவர் மீள் நியமிக்கப்பட்டார். இவர் வர்த்தக துறையில் (சிறப்பு) கலைமாணி பட்டப் படிப்பை பெற்றுள்ளதுடன் இலங்கை கணக்காய்வாளர் சேவை (வகுப்பு 01) இன் ஒரு உறுப்பினராகவும் இருக்கின்றார். இவர் தற்போது நிதியும் திட்மிடலும் அமைச்சின் திறைசேரி செயற்பாடுகளின் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றுகின்றார். அரசாங்க சேவையில் 31 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவம் இவருக்கு இருக்கின்றது.

### 04. திரு. ரஜித ஹல்வெல - பணிப்பாளர்

திரு. ரஜித ஹல்வெல 2015 நவம்பர 02ம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர் சர்வதேச வர்த்தகம் மற்றும் நியதியலில் இளமாணிப் பட்டத்தினைப் பெற்றுள்ள தகைமை வாய்ந்த முகாமைத்துவ கணக்காளராவார். உலகளாவிய முன்னணி வங்கியொன்றில் பணியாற்றிய அனுபவத்தினைக் கொண்டிருப்பதால் இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் சர்வதேச வங்கியியல் மற்றும் அரச துறை நிதியிடல் தொடர்பான துறைகளில் அதீத ஆர்வத்தினைக் கொண்டுள்ளார். ரஜித தற்போது நிதி அமைச்சரின் அலுவலகத்தில் ஆலோசகராக சேவையாற்றி வருகின்றார். அத்துடன் அவர் இலங்கையில் முன்னணி உரிமை ஆராய்ச்சி கம்பனியொன்றிற்கான சிரேஷ்ட இணை உதவித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் நிபுணத்துவம் பெற்ற துறைகளாக நிதிச் சந்தைகள், தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச வர்த்தக நிதி ஆகிய துறைகள் விளங்குகின்றன.

### 05. திரு. ரொஷான் ஹெட்டியாராச்சி - பணிப்பாளர்

திரு. ரொஷான் ஹெட்டியாராச்சி 02 நவம்பர் 2015 ம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஒரு சட்டத்தரணியாக விளங்குவதுடன் புலமைச் சொத்து மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

அவர் சட்டத்தரணியாக 16 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய அனுபவத்தினைக் கொண்டிருப்பதுடன், வர்த்தகச் சட்டம், புலமைச் சொத்துச் சட்டம் மற்றும் அரச சட்டத்துறையின் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். மேலும், இவர் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஈடுபடுகின்ற பல்தேசியக் கம்பனிக்கு தொழில்சார் சட்ட ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார். அத்துடன் இவர் பல்வேறு நிரல்படுத்தப்படாத கம்பனிகளிலும் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

### 06. திருமதி. டப். கே. கே. அத்துகோரள - பணிப்பாளர்

திருமதி. டப்.கே.கே. அத்துகோரள 2016.01.04 இலிலிருந்து அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கான ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அமைச்சின் செயலாளராவர் இவர் 05.02.2017ம் திகதி ஓய்வு பெறும்வரையில் வங்கியின் பணிப்பாளராக செயலாற்றினார். இவர் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தின் சிரேஷ்ட அலுவலராக விளங்குவதுடன் நாட்டின் பல்வேறு துறைகளில் முதன்மைப் பதவிகளை வகித்து 33 வருட கால சேவை அனுபவத்தினைக் கொண்டுள்ளார். உதவி கூட்டுறவு ஆணையாளராக 1985 இல் தனது சேவையினை அரசாங்க துறையில் ஆரம்பித்த இவர் 1991 இலிருந்து 2006 வரையில் பிரதேச செயலாளரகவும் (வெலிகம, ஹக்மன மற்றும் மாத்தறை), 2006 இலிருந்து 2008 வரையில் மேலதிக மாவட்டச் செயலாளராகவும் மற்றும் 2008 இலிருந்து 2013 வரையில் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபராகவும் (மாத்தறை மாவட்டம்) கடமையாற்றியுள்ளார். மேலும், 2013 இலிருந்து 2015 வரையில் பிரதம செயலாளராகவும் (தென் மாகாணம்) சேவையாற்றியுள்ளார். தற்போது இவர் வீடமைப்பு மற்றும் நிருமானத்துறை அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

### 07. திரு. பி.ஏ. குலசூரிய - பணிப்பாளர்

திரு பி.ஏ. குலசூரிய அவர்கள் 06.02.2017ம் திகதி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். திரு குலசூரிய சட்டத்தரணி மற்றும் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஆவார். இவர் பொருளாதாரத்தில் கலைமாமணி (விசேட) பட்டத்தையும், சட்டப்படிப்பு பட்டத்தையும் கொண்டிருப்பதுடன் மருத்துவப் பதிவேடுகள் தொடர்பாக பட்டப்பின்படிப்பினையும் பயின்றுள்ளார்.

### 08. திரு பி.எஸ்.கே.ஆர். வீரகோன் - பணிப்பாளர்

திரு பி.எஸ்.கே.ஆர். வீரகோன் அவர்கள் 01 மார்ச் 2017ம் திகதி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் களனி பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமானிப் பட்டத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், களனிப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் முப்பது வருடத்திற்கு மேற்பட்ட அரச சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போது விவசாய அமைச்சில் மேலதிக செயலாளராக பணிபுரிகின்றார்.

### 09. திரு. ஈ.ஏ.எல். எதிரிசிங்க - பணிப்பாளர்

திரு. ஈ.ஏ.எல். எதிரிசிங்க அவர்கள் 15.02.2017ம் திகதி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். சிரேஸ்ட நிறைவேற்று அலுவலராக 11 வருட அனுபவத்தை உள்ளடக்கி தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிய 31 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் கம்பஹா பிராந்திய அபிவிருத்தி வங்கியில் தலைவராகவும், லேடி லோஹார் லோன் பன்ட் நம்பிக்கை நிதியத்தின் சபை அங்கத்தவராகவும், அத்தனகல்ல பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர்/ உப தலைவர் மற்றும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர் நலன்புரிச் சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

### 10. திரு. எஸ்.ஜீ. சேனாரத்ன - பணிப்பாளர்

திரு.எஸ்.ஜீ.சேனாரத்ன அவர்கள் 21.04.2017ம் திகதி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விசேட வர்த்தகமானிப் பட்டத்தையும், பொது நிதியியல் முகாமைத்துவத்தில் டிப்ளோமாவையும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் வியாபார மற்றும் நிதியில் நிர்வாக பட்டப்பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழையும் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் ஒரு பட்டய பொது நிதி கணக்காளர் ஆவார். இவர் FCA, FCMA, FPFA மற்றும் AAT நிறுவனங்களில் சக உறுப்பினராகவும் உள்ளார். இவர் பல்கலைக்கழகங்களில் வருகை தரும் விரிவுரையாளராக சேவையாற்றியதுடன், அரச சேவையில் 28 வருட காலத்திற்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போது இலங்கை பொது நிதியில் கணக்காளர் நிறுவனம், வாகனப் புகை நம்பிக்கை நிதியம் மற்றும் நீதி உட்கட்டமைப்பு பாராமரிப்பு நம்பிக்கை நிதியம் என்பவற்றில் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

# கூட்டிணைந்த முகாமைத்துவம்



10 05 06 04 01 03 02 13

**01. திரு. டபில்யூ.எம்.தயாசிங்க** - *பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி*

திரு. டபில்யூ.எம்.தயாசிங்க வங்கியின் தற்போதைய பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருப்பதுடன், இதவர் கணக்காய்வு, நிதி, கூட்டிணைந்து வங்கிச்சேவை, திறைசேரி முகாமைத்துவம் மற்றும் முழுமையான தொழிற்பாட்டு நடவடிக்கைகள் என பாரிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்பம் சங்கம் என்பவற்றில் அங்கத்தவராக இருக்கின்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இவர் வர்த்தக துறையில் (சிறப்பு) கலைமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் திறைசேரி முதலீடு மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் தகவல் முறைமை பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு என்பவற்றில் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

திரு.டபில்யூ.எம்.தயாசிங்க, வங்கியில் 11 மார்ச் 2003ம் ஆண்டு இணைந்துள்ளதுடன், இவர் உள்ளக கணக்காய்வாளர், பிரதான முகாமையாளர் - நிதி, திறைசேரி மற்றும் கிளைத் தொழிற்பாடுகள் மற்றும் உதவி பொது முகாமையாளர் - நிதி போன்ற பல சிரேஸ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார்.

இவர் 1984ம் ஆண்டு ஒரு கணக்காளராக தனது பணியை ஆரம்பித்துள்ளார். அன்றிலிருந்து த்ரோடொன் பண்டிதரத்ன சார்டட் ∴ப்ம், சேர்லி கங்கொட எக்கவுன்டன்சி ∴பேம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் மற்றும் கிரேலைன் குழுமக் கம்பனிகள் என பல நிறுவனங்களில் தன் தொழில்சார் சேவைகளை வழங்கியுள்ளார். தற்போது இவர் வங்கியின் போதைய பொது முகாமையாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்கின்றார்.

**02. திரு.டீ.எம்.ஜே.விக்ரமசேகர** - *உதவிப் பொது முகாமையாளர் (கடன்-ஈபிஎப் எஸ்டேட்/எஸ்எம்பி மற்றும் மைக்ரோ)*

திரு.டீ.எம்.ஜே.விக்ரமசேகர வியாபாரம் மற்றும் நிதி நிர்வாகம் என்பவற்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும், இவர் வர்த்தக துறையில் (சிறப்பு) கலைமாணி பட்டப் படிப்பை கொண்டுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் தொழில்சார் 11 பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் தனது பணியை 1983ம் ஆண்டு உதவி கணக்காய்வாளராக ஆரம்பித்தார்.

திரு.டீ.எம்.ஜே.விக்ரமசேகர வங்கியில் ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக 01 ஒகஸ்ட் 1986ம் திகதி இணைந்து கொண்டார். அவர் தனது பணியில் கடன் அலுவலர் (வகுப்பு II), சிரேஸ்ட கடன் அலுவலர்/பிரதான முகாமையாளர் (கடன்) மற்றும் உதவி பொது முகாமையாளர் (கடன் நிர்வாகம், ஈபிஎப்- கடன், விசேட மீட்பு மற்றும் கடன் துறைகள்) என பல பதவிகளை அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியில் வகித்தார்

**03. திரு. ஏ.டி.என்.தர்மரத்ன** - *உதவிப் பொது முகாமையாளர் (மதிப்பீடு/ தலைமை சந்தைப்படுத்தல்)*

திரு.ஏ.டி.என்.தர்மரத்ன, வங்கி மற்றும் நிதியில் வியாபார நிர்வாகம் பற்றிய முதுகலைமானியையும், தோட்டங்கள் முகாமைத்துவம்

## கூட்டிணைந்த முகாமைத்துவம் தொடர்ச்சி



12 14 11 15 17 09 16 07 08

மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், ஐபிஎஸ்எல் இல் வங்கி முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார புள்ளிவிபரவியல் துறையில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும், வணிகத்தில் உயர் தேசிய டிப்ளோமா என்பவற்றைக் கொண்டிருப்பதுடன், அவர் பட்டய நிலஅளவையாளர் ரோயல் நிறுவனத்தின் (இங்கிலாந்து) அங்கத்தவராகவும் இருக்கின்றார். இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவனத்தின் பின்தொடர் அங்கத்தவர், தொழில்சார் வங்கியாளர்களின் அங்கத்துவ சங்கத்தில் அங்கத்தவர் மற்றும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப நிறுவன அங்கத்தவர் பல நிறுவனங்களில் அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

இவர் தனது பணியை உதவி கள உத்தியோகத்தராக 1983ம் ஆண்டு ஆரம்பித்தார். அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றில் பணிபுரிந்தார்.

திரு. ஏ.டி.என். தர்மரத்ன, 04 நவம்பர் 1986ம் திகதி வங்கியில் ஒரு மதிப்பீட்டு இன்ஸ்பெக்டராக இணைந்தார். இவர் தொடர்ந்தும் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியில் பணியாற்றியதுடன், இவர் மதிப்பீட்டு இன்ஸ்பெக்டர், சிரேஸ்ட மதிப்பீட்டு இன்ஸ்பெக்டர் மற்றும் உதவி மதிப்பீட்டு அலுவலர் (உதவி முகாமையாளர் - மதிப்பீடு) , பிரதி முகாமையாளர் (மதிப்பீடு), முகாமையாளர் (மதிப்பீடு), பிரதான முகாமையாளர் (மதிப்பீடு) எனப் பல பதவிகளை வகித்ததுடன், தற்போது உதவி பொது முகாமையாளர் (மதிப்பீடு) எனும் பதவியை வகிக்கின்றார். அத்துடன் உதவிப் பொது முகாமையாளர் பதவிக்கு மேலதிகமாக கடன் அலகு - பி, விசேட மீட்பு அலகு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு என்பவற்றை மேற்பார்வை செய்கின்றார்.

### 04. *திரு. கே.எல்.என்.ஏ. பெரேரா - உதவிப் பொது முகாமையாளர் (நிதி)*

திரு. கே.எல்.என்.ஏ.பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதித்துறையில் எம்பிஏ பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் இவர் வர்த்தக துறையில் (சிறப்பு) கலைமாணி பட்டத்தையும், கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமாவையும், ஒருங்கிணைந்த வங்கியியல் இடர் முகாமைத்துவ டிப்ளோமா என்பவற்றைப் பெற்றிருப்பதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் இருக்கின்றார். இவர் தனது பணிகளை கணக்காய்வுப் பரிசோதகராக (II) 1995 பணிகளை ஆரம்பித்தார்.

திரு. கே.எல்.என்.ஏ. பெரேரா, 02 செப்டெம்பர் 2010ம் திகதி வங்கியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளராக இணைந்தார். இவர் தொடர்ந்தும் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியில் பணியாற்றியதுடன், பிரதான கணக்காய்வாளர் போன்ற பதவிகளை வகித்ததுடன், தற்பொது உதவிப் பொது முகாமையாளர் (நிதி) எனும் பதவியை வகிக்கின்றார்.

### 05. *திருமதி. என்.பி.கே. லொகுகே - உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்)*

திருமதி.என்.பி.கே.லொகுகே ஒக்டோபர் 1995ம் திகதி வங்கியில் இணைந்தார். இவர் 30 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை சட்டத் தொழிலில் கொண்டிருப்பதுடன், 22 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை வங்கித்துறையில் கொண்டுள்ளார். இவர் அரச ஈடு மற்றும் முதலீட்டு

# கூட்டிணைந்த முகாமைத்துவம் தொடர்ச்சி

வங்கியில் சேவையாற்றுகின்ற காலத்தில், உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) என்பதற்கு அப்பால் பல பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், இவர் சட்டமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளார். இவர் அட்டோனியாக 1988ம் ஆண்டு சட்ட மன்றத்தில் இணைந்துள்ளார். இவர் கம்பனி செயலாளராகவும் ஆணையாளராகவும் சத்தியப் பிரமானம் எடுத்துள்ளார். இவர் இலங்கை வங்கியியில் நிறுவனத்தில் வங்கியில் கற்கையை பூர்த்திசெய்துள்ளார்.

தற்போது இவர் உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) என்பதற்கு மேலதிகமாக பல பணிகளை செய்கின்றார். இவரின் வங்கிச் சேவைக் காலத்தில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றியதன் ஊடாக ஆசிய நாடுகளின் சட்ட முறைமை தொடர்பான பல்வேறுபட்ட வெளிப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

இவரின் அனுபவம் வங்கிச் சட்டம், கூட்டிணைந்த சட்டம், வணிகச் சட்டம் மற்றும் தொழில்சட்டம் என்பவற்றைப் பூர்த்திசெய்கின்றது.

**06. திரு. பி.எம்.டி.பி.பி. பஸ்நாயக்க** - *உதவிப் பொது முகாமையாளர்(தகவல் தொழில்நுட்பம்)*

திரு. பி.எம்.டி.பி.பி. பஸ்நாயக்க, முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான முதுமானியைக் கொண்டிருப்பதுடன், முகாமைத்துவ தகவல் முறைமைகள் பட்டத்தைக் கொண்டுள்ளார் மற்றும் இவர் பிரித்தானியா கணணி சமுகத்தில் ஒரு சான்றுபடுத்தப்பட்ட அங்கத்தவராவார். இவர் தனது பணியை 1997இல் ஒரு கணணி நிகழ்ச்சித்திட்டப் பயிலுனராக ஆரம்பித்தார். இவர் கொமர்ஷல் வங்கியில் 2002 இருந்து 2017 வரை சேவையாற்றினார். இவர் அங்கிருந்து விலகும் பொழுது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் எனும் பதவியை வகித்தார்.

இந்த வங்கியில் திரு. பி.எம்.டி.பி.பி. பஸ்நாயக்க 17 ஒக்டோபர் 2017ம் திகதி உதவிப் பொது முகாமையாளராக இணைந்துகொண்டார்.

**07. திருமதி. டபில்யு.ஜீ.எஸ்.எஸ்.கே. அபேவிக்ரம** - *உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமையாளர்) - பிரதான முகாமையாளர் (இணக்கம்)*

திருமதி. டபில்யு.ஜீ.எஸ்.எஸ்.கே. அபேவிக்ரம ஒரு சட்டத்தரணியாவார். இவர் தனது பணியை 1988இல் ஆரம்பித்தார். இவர் சமரரத்ன அசோசியேசன், இலங்கை வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சேலான் மேர்ச்சன்ட் வங்கி லிமிடட் என்பவற்றில் பணியாற்றினார்.

திருமதி. டபில்யு.ஜீ.எஸ்.எஸ்.கே. அபேவிக்ரம இந்த வங்கியில் 27 மார்ச் 2000ம் திகதி ஒரு சட்ட அலுவலராக (வகுப்பு 11) - பொது முகாமையாளராக இணைந்தார். இவர் தனது சேவையின் போது முகாமையாளர் (சட்டம்), பிரதான முகாமையாளர் (சட்டம்), பிரதான முகாமையாளர் (இணக்கம்) எனும் பதவிகளை வகித்ததுடன், தற்போது பிரதான முகாமையாளர் (இணக்கம்) எனும் பதவியை வகிப்பதுடன், வங்கியின் பதில் உதவி பொது முகாமையாளராகவும் (இடர் முகாமைத்துவம்) சேவைபுரிகின்றார்.

**08. திரு.எல்.டபில்யு.சமரவிக்ரம** - *பதில் உதவிப் பொது முகாமையாளர் (கடன் - பிரதான முகாமையாளர் (கடன்)*

திரு. எல்.டபில்யு. சமரவிக்ரம தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன் வங்கிச்சேவை மற்றும் நிதியில் உயர் சான்றிதழைக் கொண்டுள்ளார். இவர் தனது பணிகளை 1993ம் ஆண்டு கள விசாரணையாளராக ஆரம்பித்துடன், இது வரை தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றில் பணியாற்றியுள்ளார்.

இந்த வங்கியில் திரு.எல்.டபில்யு.சமரவிக்ரம 16 பெப்பரவரி 1996ம் ஆண்டு ஒரு மதிப்பீட்டு இன்ஸ்பெக்டராக இணைந்தார். இவர் தொடர்ந்தும் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியில் பணியாற்றியதுடன், இவர் சிரேஸ்ட மதிப்பீட்டு இன்ஸ்பெக்டர், உதவி முகாமையாளர் - கடன், கிளை முகாமையாளர், பிரதான முகாமையாளர் (கடன்) எனப் பல பதவிகளை வகித்ததுடன், தற்போது பிரதான முகாமையாளர் (கடன்) பதவியுடன் உதவி பொது முகாமையாளர் (கடன்) எனும் பதவியை வகிக்கின்றார்.

**09. திருமதி. டபில்யு.கே.பெரேரா** - *உதவிப் பொது முகாமையாளர் (மீட்பு - பிரதான முகாமையாளர் (சட்டம்)*

திருமதி. டபில்யு.கே. பெரேரா கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டமானிப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், சட்டத்தரணியாகவும் கம்பனியின் செயலாளராகவும் இருக்கின்றார். இவர் தனது பணியை சட்டத்தரணியாக 1991ம் ஆண்டு ஆரம்பித்தார்.

திருமதி.டபில்யு.கே.பெரேரா, 15 மார்ச் 2000ம் திகதி ஒரு சட்ட அலுவலராக (வகுப்பு 111) - பிரதி முகாமையாளர்ராக வங்கியில் இணைந்தார். அவர் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் அன்றிலிருந்து முகாமையாளர் (சட்டம்) மற்றும் பிரதான முகாமையாளர் (சட்டம்) போன்ற பதவிகளை வகித்ததுடன், தற்போது பிரதான முகாமையாளர் (சட்டம்) பதவியுடன், பதில் உதவி பொது முகாமையாளராகவும் (மீட்பு) பணிபுரிகின்றார். அத்துடன் வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவியையும் வகிக்கின்றார்.

**10. திரு. டி.எம்.ஆர். திசாநாயக்க** - *பிரதான முகாமையாளர் (கிளைத் தொழிற்பாடுகள்)*

திரு. டி.எம்.ஆர். திசாநாயக்க களனி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கலை முதுமானிப் பட்டம், பௌத்தக் கற்கையில் பட்டப்பின் டிப்ளோமா, தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி, சிவில் பொறியியலில் ஸ்பேர்ட் டிப்ளோமா, கணணி நிகழ்ச்சித்திட்டத்தில் டிப்ளோமா, வங்கியில் மற்றும் நிதியியலில் உயர் சான்றிதழ், ஊடகத்துறையில் டிப்ளோமா, வங்கியியல் மற்றும் நிதியியலில் டிப்ளோமா என்பவற்றைக் கொண்டுள்ளதுடன், இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் துணை அங்கத்தவராகவும், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினை துணை அங்கத்தவராகவும் இருக்கின்றார். இவர் தனது பணியை மதிப்பீட்டாளர் திணைக்களத்தில் 1994ம் ஆண்டு ஆரம்பித்தார்.

திரு. டி.எம்.ஆர். திசாநாயக்க, 16 பெப்பரவரி 1996ம் ஆண்டு மதிப்பீட்டு இன்ஸ்பெக்டராக வங்கியில் இணைந்தார். இவர் தனது பணிக்காலத்தில் உதவி முகாமையாளர் (கடன்), கிளை முகாமையாளர், பிரதான முகாமையாளர் (கடன்), பிரதான முகாமையாளர் (கிளைக் காரியாலயம்), பிரதான முகாமையாளர் (பிராந்தியக் காரியாலயம்) போன்ற பதவிகளை வகித்ததுடன் தற்போது பிரதான முகாமையாளர் ( கிளைத் தொழிற்பாடுகள்) பதவியை வகிக்கின்றார்.

**11. திரு. எஸ். விக்ரமசிங்க** - *பிரதான முகாமையாளர் (கடன்) நிர்வாகம் மற்றும் லொஜிஸ்டிக் பிரிவு*

திரு. எஸ்.விக்ரமசிங்க தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி (விசேட) பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தில் துணை அங்கத்தவராவார். இவர் தனது பணியை 1993ம் ஆண்டு கள விசாரணையாளராக ஆரம்பித்தார்.

திரு. எஸ்.விக்ரமசிங்க 16 பெப்பரவரி 1996ம் ஆண்டு மதிப்பீட்டு இன்ஸ்பெக்டராக வங்கியில் இணைந்தார். இவர் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் உதவி முகாமையாளர் (கடன்), கிளை முகாமையாளர், பதில் பிரதான முகாமையாளர் (கிளைக் காரியாலயம்), பிரதான முகாமையாளர் (பிராந்தியக் காரியாலயம் - இரத்தினபுரி) போன்ற பதவிகளை வகித்ததுடன் தற்போது பிரதான முகாமையாளர் (கடன்) பதவியை வகிக்கின்றதுடன், நிர்வாகம் மற்றும் லொஜிஸ்டிக் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

# கூட்டிணைந்த முகாமைத்தவம் தொடர்ச்சி

**12. திரு. கே.ஜீ. கருணாரத்ன** - *பிரதான முகாமையாளர் (மதிப்பீடு)*

திரு. கே.ஜி. கருணாரத்ன தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி (விசேட) பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் தனது பணியை 1984ம் ஆண்டு ஆரம்பித்ததுடன், அதன் பின்னர் கடுகண்ணாவை நகர சபை மற்றும் தேசிய வீடமைப்புத் திணைக்களம் என்பவற்றில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே.ஜி. கருணாரத்ன , 16 பெப்பரவரி 1986ம் ஆண்டு மதிப்பீட்டு இன்ஸ்பெக்டராக வங்கியில் இணைந்தார். இவர் தனது பணிக்காலத்தில் சிரேஸ்ட மதிப்பீட்டு அலுவலர், உதவி முகாமையாளர் (மதிப்பீடு), பிரதி முகாமையாளர் (மதிப்பீடு), போன்ற பதவிகளை வகித்ததுடன் தற்போது பிரதான முகாமையாளர் (மதிப்பீடு) பதவியை வகிக்கின்றார்.

**13. திரு. டி.பி.பீ. வில்லாராச்சி** - *உள்ளகக் கணக்காய்வாளர்*

திரு. டி.பி.பீ. வில்லாராச்சி, வியாபாரக் கற்கையில் முதுமானி, வியாபாரம் மற்றும் நிதியில் பட்டப்பின் டிப்ளோமா, வணிக் கல்வியில் விசேட பட்டம், ஐசீடிஎல் சான்றிதழ், என்பற்றைக் கொண்டிருப்பதுடன், தொழில்சார் வங்கியாளர்களின் அங்கத்துவ சங்கத்தில் அங்கத்தவராகவும் மற்றும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப நிறுவன அங்கத்தவராகவும் இருக்கின்றார். இவர் தனது பணியை 1995ம் ஆண்டு சிரேஸ்ட மதிப்பீட்டாளராக தன் பணியை ஆரம்பித்தார். அதிலிருந்து ஹுலுகல சமரசிங்க மற்றும் கம்பனி, பிரமுக சேமிப்பு வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிடட், டீ ரென்ட்ஸ் எக்ஸ்போர்ட் (பிறைவட்) லிமிடட், விவசாய அமைச்சு, நீர்ப்பாசன மற்றும் மஹாவலி அபிவிருத்தி திணைக்களம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றில் பணியாற்றியுள்ளார்.

இவர் 01 ஜனவரி 2015ம் திகதி உள்ளக கணக்காய்வாளராக வங்கியில் இணைந்தார்

**14. திரு.ஆர்.எம்.அபேரத்ன** - *சிரேஸ்ட கணக்காளர் (03.06.2017ம் திகதி ஓய்வு பெற்றார்)*

**15. திருமதி.கே.பி.கே.எச்.டி.பெரேரா** - *உதவிப் பொது முகாமையாளர் (மீட்பு) (20.10.2017ம் திகதி*

**16. திரு.ஆர்.பி.யு.பத்திரன** - *பிரதி பொது முகாமையாளர் (கடன்) (16.02.2017ம் திகதி ஓய்வுபெற்றார்)*

**17. திரு.ஜே.ஏ.டி.பி.பிரியலால்** - *பிரதான முகாமையாளர் (மீட்பு) (19.09.2017ம் திகதி ஓய்வுபெற்றார்)*

**படத்தில் இல்லாதவர்கள்**

**1. திரு.எஸ்.எஸ்.வீஜேதொரு** - *உதிவிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் லொஜிஸ்டிக்)*

**2. திரு.ஐ.கே.காமினி** - *பிரதான முகாமையாளர் (கடன்)*

**3. திருமதி.டி.கே.ஹிதெல்லாராச்சி** - *உதவிப் பொது முகாமையாளர் (கடன், பகிர்ந்தளிப்பு மற்றும் கண்காணிப்பு)*

# கூட்டிணைந்த ஆளுமை

எதிர்கால அபிவிருத்தி மற்றும் கூட்டிணைந்த செயலாற்றுகைக்கு அடிப்படையை வழங்குவதற்கு வங்கி சிறந்த கூட்டிணைந்த ஆளுமையின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை, இதுவே வங்கியின் நிதி செயலாற்றுகைக்கும் மற்றும் தொழிற்பாடுகளுக்கும் பொறுப்பான மற்றும் வைப்பாளர்கள், கடன் பெறுநர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளின் தேவையை உறுதிப்படுத்தும் உயர் தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்பாகும். வங்கி விவேகமான முறையில் நிர்வகிக்கப்பட்டு, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் வங்கியின் சொந்தக் கொள்கைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு முகாமைத்துவப்படுத்தப்படுகின்றது என்பதை சபை உறுதிப்படுத்துகின்றது.

வங்கியியல், நிதி, பொருளாதாரம், வியாபார முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம், சந்தைப்படுத்தல் போன்ற நடைமுறை அனுபவத்தைக் கொண்ட நிபுணர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டினை சபை கொண்டுள்ளது. அவர்கள் உபாயமார்க்கம், செயலாற்றுகை மற்றும் வளங்களின் பிரச்சினைகள் மீது சுயாதீன தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளனர்.

வங்கியின் ஆளுமைக் கலாச்சாரம் மற்றும் கட்டமைப்பானது திறமையான முடிவெடுப்பு, பாரிய வெளிப்படைத்தன்மைக்கான வசதி மற்றும் வியாபாரத்தின் அனைத்து அம்சங்களிலும் பொறுப்புணர்வை ஊக்குவித்தல் என்பவற்றை அடித்தளமாக கொண்டுள்ளது.

### பொறுப்புக்கூறல்

வங்கியின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்பு என்பன பற்றி தலைவரின் மீளாய்வு மற்றும் பொது முகாமையாளரின் மீளாய்வுகளில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழுவின் விதப்புரையின் மீது, வங்கியின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுகளை சபை மீளாய்வு செய்கின்றதுடன் அங்கீகரித்தது. வங்கியின் பங்குதாரர்களுக்கு தகவல்கள் அறிக்கையிடப்படல் வேண்டும் என்பதுடன் பொது மக்களுக்கு வெளிப்படையாக இருத்தல் வேண்டும்.

### நியாயம்

வங்கி அதனுடைய அனைத்து பங்குதாரர்களையும் நியாயமாக நடத்தும். வாடிக்கையாளருக்கு பணியாற்றும் வகையில் வங்கி செயற்படும். வங்கி கடன் வசதிகளை வழங்கும் பொழுது மாதாந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வாடிக்கையாளர்களின் மீளக்கொடுப்பனவு இயலளவை மதிப்பீடு செய்கின்றது. வங்கி கடன் நிலுவையைப் பெற்றுக்கொள்வதற்கு தனது கடைசி நடவடிக்கையாக மட்டுமே சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

### வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்

தெளிவாகவும் மற்றும் இலகுவாகவும் விளங்கிக்கொள்ளும் வகையில், இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை நிதியியல் நியமங்கள் என்பவற்றுடன் இணங்கும் வகையில் நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வங்கியினால் காலாண்டுக்கொருமுறை அது வெளியிடப்பட்டது.

வங்கியின் மூலதனப் போதுமை, பிரதான செயலாற்றுகைக் காட்டிகள், வியாபார ஒரு முகச்சிந்தனைகள், கூட்டிணைந்த ஆளுமைக் கூற்றுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுகள் என்பவற்றை வருடாந்த அறிக்கை ஊடாக அதன் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் வெளிப்படுத்தியது.

2017ம் ஆண்டு தொடர்புடைய தரப்பினருடன் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி மேற்கொள்ளவில்லை.

### வங்கியின் பணிப்பாளர்கள்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை நிதி அமைச்சு மற்றும் பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக உரிய வகையில் நியமிக்கப்பட்ட பல்வேறுபட்ட துறைகளில் அறிவினைக் கொண்ட ஒன்பது சுயாதீனமான மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற பணிபாளர்களைக் கொண்டுள்ளது.

வங்கியின் நோக்கமான விவசாய, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதலை நிறைவேற்றும் வகையில் சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு மற்றும் நீர்ப்பாசன மற்றும் கமநல அமைச்சுகளின் சார்பில் மூன்று அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். சபையின் கலவையானது, சபையின் தீர்மானம் எடுப்பதற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்கு போதியள சக்தியைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவின் ஊடாக தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்கும் நிறைவேற்று அதிகாரியான பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு அதி உயர் மட்ட உபாயமார்க்க வழிகாட்டலையும் அதனை அமுல்படுத்தவதற்கான அதிகாரத்தையும் வழங்கி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை மேற்பார்வையுடன் வங்கியின் முழுமையான பொறுப்பையும் பொறுப்புக்கூறலையும் ஏற்றுக்கொள்கின்றது. வங்கியானது வினைத்திறனான தலைமைத்து கட்டமைப்பைக் கொண்டுள்ளதனால், அது சபையை ஒரு குழுவாக இயங்குவதற்கு அனுமதிக்கின்றது.

பணிபாளர்கள் பாரிய திறன், தொலைநோக்குப் பார்வை மற்றும் முன்னனுபவம் என்பவற்றைக் கொண்டுள்ளனர். வியாபார நடத்தைக்கான உபாயமார்க்கம், செயலாற்றுகை, வளங்கள், பிரதான நியமனங்கள் மற்றும் நியமங்கள் என்பவற்றுக்கான பிரச்சினைகளின் போது தீர்மானங்கள் உட்பட சுயாதீன தீர்ப்பினைப் பயன்படுத்தி தீர்மானங்களை எடுத்தல் மற்றும் போதிய நேரத்தையும் சக்தியையும் செலவழித்தல் என்பவற்றை சபைக் கூட்டத்திற்கு முன்னர் மேற்கொள்வதனால் சபைக் கூட்டத்தின் போது சிறந்த கலந்துரையாடல்களையும் விடயங்களை விளக்கமாகவும் விபரிக்கின்றனர்.

வங்கியை முன்நோக்கிக் கொண்டு செல்வதற்கு சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் தங்களுடைய வலுவான பங்களிப்பையும் மதிநுட்பமான வழிகாட்டல்களையும் வழங்குகின்றனர்.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை சந்திப்பதுடன், 2017ம் ஆண்டு 13 தடவைகள் சந்தித்துள்ளனர்.

பொது முகாமையாளர் அனைத்துக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டுள்ளார். உபாயமார்க்க இலக்குகள், நிதி, சமூக மற்றும் சுற்றாடல் செயலாற்றுகைகள், தொழிற்பாட்டு சூழலினால் முன்மொழியப்பட்ட மாற்றங்கள் மற்றும் சவால்கள், கொள்கைச் சட்டக விதப்புரைகள் மற்றும் நிறைவேற்றுத்தர ஆளுகை கட்டமைப்புகள் என்பவற்றின் முன்னேற்றத்தை அமுல்படுத்தல் உட்பட ஏனைய நிறைவேற்றுனர்களின் பிரசன்னம் அவசியமாகிய பொழுது அவர்கள் பணிப்பாளர் சபை கூடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

வங்கியைக் காப்பாற்றும் கூட்டிணைந்த திட்டம், வங்கியின் தொலைநோக்கு, செயற்பணி, வியாபாரக் குறிக்கோள் மற்றும் உபாயமார்க்கம் என்பவற்றை உருவாக்கும் செயற்பாட்டுத் திட்டம், வியாபார சந்தர்ப்பங்களை கவனத்தில் கொள்ளல் மற்றும் பிரதான இடர்கள் என்பவற்றை சபை காலந்தோறும் மீளாய்வு, மதிப்பீடு செய்து அங்கீகாரத்தினை வழங்குகின்றது.

வங்கியின் முகாமைத்துவ அங்கத்தவர்களையும் உள்ளடக்கி சபை அங்கத்தவர்கள் கலந்துரையாடி அனுமதி வழங்கும் முறைமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உபாயமார்க்கத் திட்டம் போன்றவற்றுக்கான திருத்தங்களுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னர் அது பொருத்தமானதாக

# கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

எனக் கருதுவதற்கு முன்மொழிவுகளை சபை முன்மொழிகின்றது. முகாமைத்துவமானது உபாயமார்க்கங்களை அமுல்படுத்தி, முன்னேற்ற அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்கின்றது.

| பணிப்பாளரின் பெயர் | நியமனத் திகதி | ஓய்வுபெற்ற - பணிப்பாளர் / பதவியில் இருந்து நீக்கப்பட்ட திகதி | பணிப்பாளரின் வகை |
|---|---|---|---|
| திரு. திஸ்ஸ ஜினதாச (தலைவர்) | 13.02.2015 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| டாக்டர். நிரோஷன் எஸ்.கமகே | 06.03.2015 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. எம்.எஸ்.டி. ரத்னசிறி | 24.02.2015 | ஒய்வுபெற்ற திகதி 31.01.2017 | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. ரொஷான் ஹெட்டியாரச்சி | 02.11.2015 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. ரஜித நுவன் ஹல்வல | 02.11.2015 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. மதி.டபில்யூ.கே.கே. அத்துகோரல | 04.01.2016 | ஒய்வுபெற்ற திகதி 05.12.2017 | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. பீ.ஏ. குலசூரிய | 06.02.2017 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. ஈ.ஏ.லெஸ்லி எதிரிசிங்க | 15.02.2017 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. பி.எஸ்.கே.ஆர். வீரகோன் | 01.03.2017 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. எஸ்.ஜி. சேனாரத்ன | 21.04.2017 | - | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |
| திரு. எஸ்.ஜி. சேனாரத்ன | 21.04.2017 | | சுயாதீன நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர் |

2017ம் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களுக்கு பங்குபற்றிய பணிப்பாளர்களின் வருகை வருடாந்த அறிக்கையில் பக்கம் 62இல் பணிப்பாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### சபையின் செயலாற்றுகை தொடர்பான மதிப்பீடு

2007ம் ஆண்டு 11ம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் என்பவற்றுக்கு இணங்கும் வகையில் அவர்களுடைய பொறுப்பில் திருப்பதியடையும் வகையில் அவர்கள் செயற்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் தங்களுடைய சொந்த செயலாற்றுகையினை வருடம் தோறும் மற்றும் அரையாண்டுக்கு ஒருமுறை சுயமதிப்பீடு செய்யும் முறை வங்கியினால் பின்பற்றப்படுகின்றது. இந்த முறைமை ஒவ்வொரு பணிப்பாளரும் சுய மதிப்பீட்டுப் படிவம் மற்றும் பணிப்பாளர் சபையின் சுய ஆளுகை வழக்கங்களின் செயற்திறனை மதிப்பிடும் கேள்விக்கொத்து என்பவற்றை பூரணப்படுத்தல் வேண்டும். சேகரித்தல் சபையின் செயலாளரின் பொறுப்பாவதுடன், அது சபையின் பரிந்துரைக் குழுவிற்கு கலந்துரையாடலுக்காகவும் மதிப்பீட்டுக்காவும் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் குழுவின் அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

#### பொது முகாமையாளரின் பணிகள்

வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியை, வங்கியின் ஊழியர்களுக்கான பொது முகாமையாளராக வங்கி நியமித்துள்ளது. வங்கியின் முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் பொது முகாமையாளருக்கு சாட்டப்பட்டுள்ளதுடன், வங்கயின் அனைத்து முகாமைத்துவ குழுக்கள் மற்றும் கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவுக்கு தலைவராக பொது முகாமையாளர் இருப்பார். பொது முகாமையாளரின் பணிகள் வங்கியின் தொழிற்பாட்டு மற்றும் வியாபார நடவடிக்கைகளின் நாளாந்த முகாமைத்துவ நடடிவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் நிறைவேற்றுனராகவும் இருத்தலாகும்.

சபை அழைக்காவிடின் அல்லாது சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் பொது முகாமையாளர் சமூகமளித்து பங்குபற்றுவார், ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கு அமைவாக தலைவர் மற்றும் பொது முகாமையாளர் இருவருக்கிடையிலான பொறுப்புகள் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.

#### சபையின் உப குழுக்கள்

வங்கிக்கு நேரடியாக அறிக்கையளிக்கும் வகையில் சபையின் உப குழுக்களை நிறுவியுள்ளது. இந்த உப குழுக்கள் சபையின் கணக்காய்வுக் குழு, சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழு, சபையின் பரிந்துரைக் குழு மற்றும் சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக்குழு. சபை தனது பணிகள் சிலவற்றை சபையின் உப குழுக்களுக்கு சாட்டியுள்ளதுடன், இந்தக் குழுக்களின் பரப்பெல்லை வருடாந்த அறிக்கையில் பல்வேறுபட்ட உப குழுக்களின் அறிக்கைகளாக விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த குழுக்கள் உரிய துறைகளில் நிபுணத்துவம் உள்ள நிறைவேற்று அதிகாரமில்லாத பணிபாளர்களினால் தலைமை தாங்கப்படுகின்றது.

வங்கியின் கூட்டிணைந்த ஆளுகை மற்றும் இடர் காரணிகள் மற்றும் கைத்தொழிற்துறையின் பிரதான இடர் குணகங்கள், அவருகளுடைய ஒருங்கிணைப்பு மற்றும் நிதித் தகவல்களை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் சபையின் கணக்காய்வு சபை மற்றும் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு என்பன சபைக்கு உதவுகின்றன. சபை சில சிக்கலான பரப்புக்களை தொழிற்பாட்டு மட்டத்திற்கு மாற்றாது, கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கு அமைவாக தன்னுடனேயே வைத்துக்கொண்டுள்ளது.

#### இடர் முகாமைத்தவம்

வங்கி குறைந்த தொடர்பு இடர் மற்றும் குறைந்த நபர்களுக்கிடையில் அக்கறைக்கான முரண்பாடு என்பவற்றை அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சிறந்த இடர் முகாமைத்துவம் காட்டுகின்றது. சிறந்த இடர் முகாமைத்துவத்தை அமுல்படுத்தலின் சிறப்புத்தன்மை வங்கியின் சிறந்த செயலாற்றுகைக்கு வழிகாட்டுகின்றது.

# கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

### முகாமைத்துவக் குழுக்கள்

பாஸல் வழிகாட்டி வரிசைக்கு அமைவாக சபையானது நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் கூடாது ஆனால் நியாயமான முகாமைத்துவத்திற்கான போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பிரதான நிறைவேற்று அதிகாரி - பொது முகாமையாள என்பவர்களினால் பிரதான முகாமைத்துவ நபர்கள் தலைமை தாங்கப்படுவதுடன், வியாபார தொழிற்பாடுகள் வங்கியினால் சாட்டப்பட்டுள்ளதுடன் வங்கிப் பணிப்பாளர்கள் வங்கியின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றனர். இந்தக் குழுக்கள் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகள் பாதுகாப்பாகவும் பிரதான முகாமைத்துவ நபர்களினால் சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த சபைப் பணிப்பாளர்களுக்கு குறிப்பறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன் கீழ் பணிப்பாளர் சபையினால் சபையின் உப குழுக்களுக்கு மேலதிகமாக கீழ்வரும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டுளது.

- நிறைவேறறுக் கடன் குழு
- சொத்துக்கள் / பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு
- சந்தைப்படுத்தல் குழு
- உற்பத்தி அபிவிருத்திக் குழு
- மீட்புக் குழு
- ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு
- சிரேஸ்ட முகாமைத்துவக் குழு
- முகாமைத்துவக் குழு

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No. BAF/G/SMIB/CG/2017/16   ඔබේ අංකය / உமது இல / Your No.   දිනය / திகதி / Date 05 டிசம்பர் 2018

**தலைவர்**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி**

**இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை பணிப்புரையின் தேவைப்பாட்டுக்கு இணங்குவது மீதான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் விடயம் தொடர்பான முடிவுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை மத்திய வங்கியினால் (இமவ) வெளியிடப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் தேவைப்பாட்டு அனுமதி மற்றும் சந்திப்பதற்கு முன்வைக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் ஆளுகை அறிக்கை பற்றிய வகையில் என்னால் இந்த அறிக்கையின் பிற்சேர்க்கை தொடர்பாக கணக்கிடப்பட்ட செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகள் இணங்கி செயன்முறைகள் பற்றி பொருத்தமான 4400 இலங்கை நியமம் தொடர்பான சேவைகளின் (SLSRS 4400) கொள்கைகளுக்கேற்ப செயற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு நிர்வாக வழிகாட்டலின் அனுமதி மற்றும் உதவி செய்ய சந்திப்பதற்கும் இந்த செயன்முறைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டுள்ளன. இணங்கிய செயன்முறைகளை செயற்படுத்துவதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை என்னால் பெறமுடிந்தது.

இவ் அறிக்கைக்கு இணைக்கப்பட்ட பிற்சேர்க்கையில் என்னால் கண்டறிந்தவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலுள்ள செயற்பாடுகளுக்கிடையில் இலங்கையில் கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைக்கப்பட்ட கணக்காய்வொன்று அல்லது மிள்பரிசீலனையொன்று உள்ளடக்கப்படாததென்றும், இலங்கை மத்திய வங்கி மூலம் வழங்கப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் இணங்குவிப்பின் பிரகாரம் எந்தவொரு சான்றிதழையும் நான் சமர்ப்பிக்கவில்லை.

மீளாய்வு நடவடிக்கைகள் மீது இலங்கை கணக்காய்வு நியமங்கள் அல்லது இலங்கை நியமங்களுடன் இணங்குகின்றதா என ஆளுகை அறிக்கை தொடர்பாக மேலதிக நடைமுறைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது கணக்காய்வு அல்லது மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தால், உங்களுக்கு அறிக்கையிடப்பட்ட வேறு காரணங்களுக்கு அது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனது அறிக்கை மாத்திரம் என்னால் இந்த அறிக்கையின் முதல் பந்தி வரைக்கும் உள்ள நோக்கங்களுக்காகவும் மற்றும் உங்களுக்கு தெரிந்துகொள்வதற்காகவும் இருப்பதோடு இது வேறு நோக்கங்களுக்காகவோ அல்லது வேறு எந்த தரப்பினருக்கும் பயன்படுத்தியிருக்கவோ முடியாது.

இந்த அறிக்கையின் மேலுள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்டவர்களுக்காக மட்டும் பொருந்துவதோடு முழுமையாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் எந்தவொரு நிதிக் கூற்றும் செய்யப்பட மாட்டாது.

**எச். எம். காமினி விஜயசிங்க**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| 3(1) | பணிப்பாளர் சபையின் பொறுப்புகள | இணங்குவிப்பு | இணங்குவிப்பு இன்மை | ஏ/இ | குறிப்பு | கணக்காய்வு அவதானிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 3(1)(i) | வங்கியின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. | இணங்கியது | | | | |
| | அ) வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்களின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டன. | இணங்கியது | | | 31.05.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 17/05/40 ம் இலக்க சபை பத்திரத்தின் கீழ் 2017-2021 வரையிலான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2017ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் சமா்ப்பிக்கப்பட்டது<br><br>29.12.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 17/12/28 ம் இலக்க சபை பத்திரத்தின் கீழ் 2018-2022 வரையிலான கூட்டிணைந்த திட்டம் சமா்ப்பிக்கப்பட்டது | இணங்கியது. 31.15.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 17/05/40 ம் இலக்க சபை பத்திரத்தின் கீழ் 2017-2021 வரையிலான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2017ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் சமா்ப்பிக்கப்பட்டது.<br><br>29.12.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 17/12/28 ம் இலக்க சபை பத்திரத்தின் கீழ் 2018-2022 வரையிலான கூட்டிணைந்த திட்டம் சமா்ப்பிக்கப்பட்டது. |
| | வங்கியின் செயற்பாட்டின் ஊடாக வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்கள் உரிய முறையில் தொடா்பாடல் செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது | இணங்கியது | | | உபாயமாா்க்க நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த பெறுமதிகள் தொடா்பாக 2017ம் ஆண்டு நடைபெற்ற மாதாந்த முன்னேற்றக் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவா்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | உபாயமாா்க்க நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த பெறுமதிகள் தொடா்பாக 2017ம் ஆண்டு நடைபெற்ற மாதாந்த முன்னேற்றக் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவா்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. . |
| | ஆ) வங்கியின் ஒட்டு மொத்த வியாபர உபாயங்கள் தொடா்பான சபையின் அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | வங்கியின் ஒட்டு மொதத வியாபர உபாயமாா்க்கத் (கூட்டிணைந்த தொலைநோக்கு, செயற்பணி மற்றும் இலக்கு) திட்டங்கள் 31.05.2017ம் திகதி நடைபெற்ற பணிப்பாளா் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | வங்கியின் ஒட்டு மொதத வியாபாரத் திட்டங்கள் 31.05.2017ம் திகதி நடைபெற்ற பணிப்பாளா் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.. |
| | ஒட்டு மொத்த இடா் தொடா்பான கொள்கைகள், இடா் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமை என்பன வங்கியின் ஒட்டு மொத்த வியாபர உபாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனவா எனவும் பரீட்சிக்கப்பட்டன. | இணங்கியது | | | வங்கியின் இடா் முகாமைத்துவத்தை மேம்படுத்தவதற்காக இலக்குகளை வங்கி ஆவணப்படுத்தியது. | வங்கியின் இடா் முகாமைத்துவத்தை மேம்படுத்தவதற்காக இலக்குகளை வங்கி ஆவணப்படுத்தியது.<br><br>இணங்கியது. 2017-2021ம் ஆண்டுக்கான அளவிடக்கூடிய இலக்குகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள. |
| | குறைந்தது எதிா்வரும் மூன்று வருடங்களுக்கான அளவிடக் கூடிய இலக்ககளை ஒட்டுமொத்த வியாபார உபாயம் கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டது. | இணங்கியது | | | 2017-2021ம் ஆண்டுக்கான அளவிடக்கூடிய இலக்குகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள | |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | இ) | பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட இடர்களை முகாமை செய்வதற்கு உரிய புத்திசாதுர்யமான முறையிலும் பொருத்தமான முறையிலும் அவற்றை முகாமை செய்தல் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | தொடர்ச்சியாக அடையாளம் காணப்பட்ட இடர்களை சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்கின்றது. அதனால், சபை சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்கின்றது. அதனூடாக இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான முறைமையைக் கொண்டுள்ளமையை உறுதி செய்கின்றது. மேலும் சபை சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் பட்டயம், சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சட்டகம், இடர் மற்றும் சுய மதிப்பீட்டு நடைமுறை, தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ முறைமை மற்றும் அழுத்தப் பரிசோதனை கொள்கை என்பவற்றுக்கு அனுமதி வழங்கியியுள்ளது. காலாண்டு தோறும் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பிரதான இடர் காட்டிகள் மற்றும் அழுத்தப் பரிசோதனை பெறுபேறுகளை பணிப்பாளர் சபை மீளாய்வு செய்கின்றது. | சபையினால் சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் பட்டயம், சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சட்டகம், இடர் மற்றும் சுய மதிப்பீட்டு நடைமுறை, தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ முறைமை மற்றும் அழுத்தப் பரிசோதனை கொள்கை என்பவை 20.09.2017ம் திகதி சபையில் அவதானிக்கப்பட்டது. |
| | ஈ) | வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்களை உள்ளடக்கிய சகல அக்கறை காட்டுனர்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையானது தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்து அமுல்படுத்தி உள்ளதா என பரீட்சிக்கப்பட்டது. | இணங்கியது | | | வங்கிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் பட்டயம் பயன்படுத்தப்படுகின்றது.<br><br>அத்துடன், அரசாங்கம் வங்கியின் 100வீத உரிமையைக் கொண்டுள்ளதுடன் அனைத்துப் பணிப்பாளர்களும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் நிதி அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கிப்படுகின்றனர். அதனால் அரசாங்கம்-பங்குதாரர்கள் மற்றும் வங்கிக்கிடையில் வினைத்திறனான தொடர்பாடல் பேணப்படுகின்றது.<br><br>பணிப்பாளர் சபை குறிப்பு இலக்கம் 15.11.155.01 மற்றும் சபைப் பத்திரத்தின் சபைக் குறிப்பு 15/11/08இன் ஊடாக தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது.. | பணிப்பாளர் சபையானது சபை குறிப்பு இலக்கம் 15.11.155.01 மற்றும் சபைப் பத்திரம் 15.11.08இன் ஊடாக தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது.<br><br>அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி பொது திறைசேரியில் இருந்து பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதுடன், அதனூடாக அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணுகின்றது. அத்துடன்,அனைத்தப் பணிப்பாளர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். |
| | உ) | வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத் தகவல் முறைமையின் ஒருமைப்பாடு மற்றும் நிறைவுத் தன்மையினை சபை மீளாய்வு செய்துள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | கணக்காய்வுக் குழுவினால் உள்ளகக் கட்டுப்பாட்டின் போதுமை மற்றும் ஒருமைப்பாடு மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை மீளாய்வு செய்யப்படுகின்றது. சபை சபையின் கணக்காய்வுக் குழுவினை மீளாய்வு செய்கின்றது. அத்துடன் 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/04/35வது குறிப்பில், 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/04/37வது குறிப்பில், 27.09.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/09/30வது குறிப்பில், 26.01..2018ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 18/01/39வது குறிப்பில், சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் பத்திரங்கள்/குறிப்புகள் உள்ளன. | வங்கியின் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளும் சபை இந்த நடவடிக்கைகளை உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளுதலை மேற்பார்வை செய்யும் சபையின் கணக்காய்வு குழுவின் ஊடாக மேற்கொள்கின்றது. அத்துடன், நாங்கள் 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/04/35வது குறிப்பில், 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/04/37வது குறிப்பில், 27.09.2017ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 17/09/30வது குறிப்பில், 26.01..2018ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் இலக்கம் 18/01/39வது குறிப்பில், சபையின் ஒன்றினைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் பத்திரங்கள்/குறிப்புகள் உள்ளன என்பதை அவதானித்தோம். |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமங்களில் வரையறுத்த பிரகாரம், முக்கிய முகாமைத்துவ பதவியினர் அடையாளம் காணப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் (i) முக்கியமான கொள்கைகள் தொடர்பாக செல்வாக்கு செலுத்துபவர்களாகவும் (ii) செயற்பாடுகளை நெறிப்படுத்து பவர்களாகவும் (iii) வியாபாரச் செயற்பாடுகள், தொழிற்பாடுகள் மற்றும் முகாமை இடர் தொடர்பான கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனரா எனப் பரீட்சிக்கப்பட்டது. | இணங்கியது | | | சபை அடையாளம் கண்டுள்ளதுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 24இல் வரையறுக்கப்பட்டவாறு பிரதான முகாமைத்துவ நபர்கள் பதவிக்கமர்த்தப்பட்டுள்ளனர். 11.12.2015ம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தில் 15.11.149.26 (சபைப் பத்திரம் 15/10/57) அவதானிக்கப்பட்டது.<br>. | வங்கி சபையின் பிரதான முகாமைத்துவ நபர்களை 29.12.2015ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பில் உள்ள சபையின் இலக்கம் 15.11.149.26 (15.10.145.02)ம் பத்திரத்தில் உள்ளவாறு நியமித்துள்ளது. |
| | எ) | பணிப்பாளர் சபையின் கொள்கையுடன் நிலையான தன்மையினைப் பேணுகின்ற பிரதான முகாமைத்துவ பதவியினர்களால் வங்கி அலுவல்கள் உரிய முறையில் மேற்பார்வை செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி பணிப்பாளர் சபை பரீட்சிக்கப்பட்டது. | இணங்கியது | | | பிரதான முகாமைத்துவ நபகளின் ஊடாக வங்கியின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுவதற்கு சபை பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது | சபை பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் அழுத்தப் பரிசோதனை பெறுபேறுகள் தொடர்பாக சந்திப்புகளை மேற்கொண்டுள்ளது என்பது தொடர்பாக 25.09.2017ம் திகதியிடப்பட்ட இலக்கம் 17/09/30ம் திகதி சபைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | ஏ) | பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் தங்களுக்கும் மற்றும் பிரதான முகாமை பதவியர்களுக்குமான வரையறுக்கப்பட்ட விடயம் பரப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சட்டத்தின் 1975 இன் 13 ஆம் இலக்கத்தின் 07 வது பிரிவின்படி, பணிப்பாளர் சபையினால் உப குழுக்களுக்கான பணிப்பாளர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுக்களுக்குமான பட்டயம் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. தொழில் விபரிப்பில் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளது | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சட்டத்தின் 1975 இன் 13 ஆம் இலக்கத்தின் 07 வது பிரிவின் கீழ் பணிப்பாளர்களின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது.<br><br>பணிப்பாளர் சபையினால் உப குழுக்களுக்கான பணிப்பாளர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுக்களுக்குமான பட்டயம் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. தொழில் விபரிப்பில் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளது. |
| | ஐ) | பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மற்றும் பணிப்பாளர்களின் சொந்த ஆளுமைச் செயன்முறைகள் கால அடிப்படையில் பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்துள்ளமையினை பரீட்ச்சித்துள்ளதுடன் அவை கீழ் வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன: (i) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைப் பதவியினர்களின் தெரிவு, பெயர் குறிப்பிடல் மற்றும் வாக்கெடுப்பு, (i) முகாமை ஆளணியினரின் ஈடுபாடுகளின் முரன்பாடுகள் மற்றும் ஆர்வங்கள் மற்றும் (i) பலவீனங்கள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்தல். | இணங்கியது | | | 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அமைச்சரினால் பணிபாளர் நியமனத் தேர்வு, பரிந்துரை, மற்றும் தேர்வு மேற்கொள்ளப்படுகின்றது.<br>அதன் சுய ஆளுகை நடைமுறைகளின் வருடாந்த மதிப்பீடு அவர்களின் சுய மதிப்பிட்டுப் படிவங்களின் ஊடாக பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்துகின்றனது.<br><br>வினாக்கொத்துக்களின் ஊடாக பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது | 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவிற்கு அமைவாக அமைச்சரினால் பணிபாளர் நியமனம் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>நடைமுறைகளின் வருடாந்த மதிப்பீடு அவர்களின் சுய மதிப்பிட்டுப் படிவங்களின் ஊடாக பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்துகின்றனது. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஓ) | பிரதான முகாமை பதவியினர்கள் தொடர்பாக அமர்வு திட்டமொன்றை பணிப்பாளர் சபை கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது | இணங்கியது | | | 2016ம் ஆண்டுக்கான பிரதான முகாமைத்துவ நபரை உள்வாங்குவதற்கான திட்டம் கிடைக்கப்பெறுகின்றது. 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் உள்ள குறிப்புகளில் 17.04.52.04 (சபைப் பத்திர இல 17.04.21) இல் காணப்படுகின்றது. | 28.04.2017ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் சபைப் பத்திர இல 17.04.21 இல் 2016ம் ஆண்டுக்கான பிரதான முகாமைத்துவ நபரை உள்வாங்குவதற்கான திட்டம் கிடைக்கப்பெறுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>சபைப் பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவதானால் அவர்களை உள்வாங்குவதற்கான திட்டம் அவர்களுக்கு பொருத்தமானதல்ல. பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்ற அலுவலர் 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவு 20ற்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ளனர். |
| | ஓ) | கொள்கைகளின் மீளாய்வு, தொடர்பாடல் மார்க்கங்களின் உருவாக்கம் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களின் செயலாற்றுகையினை கண்காணித்தல் போன்ற பணிகள் தொடர்பாக பிரதான முகாமைப் பதவியினர்களுடன் வழமையான கூட்டங்களை பணிப்பாளர் சபையானது நிரற்படுத்தியுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | ஒவ்வொரு கூட்டங்களின் போதும், கூட்டங்களுக்கு வருகை தருமாறு சபை பொது முகாமையாளருக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், இதன் மூலம் நிருவன நோக்கங்கள் குறித்த முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கும் தொடர்பாடலை நிருவுவதற்கும் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது. மேலும் கூட்டிணைந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றினைந்து பணிபுரிதலை உறுதிப்படுத்தவதற்கு முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்களையும் நடாத்துமாறு சபை பணிப்புரை வழங்கியுள்ளது. | கூட்டங்களின் போதும், கூட்டங்களுக்கு வருகை தருமாறு சபை பொது முகாமையாளருக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், இதன் மூலம் நிருவன நோக்கங்கள் குறித்த முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கும் தொடர்பாடலை நிருவுவதற்கும் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது. அத்துடன் அவசியமானபோது, பிரதான முகாமைத்துவ நபர்களுக்கு கூட்டத்திற்கு வருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டள்ளது.<br><br>மேலும் கூட்டிணைந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றினைந்து பணிபுரிதலை உறுதிப்படுத்தவதற்கு முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்களையும் நடாத்துமாறு சபை பணிப்புரை வழங்கியுள்ளது.<br><br>ஒவ்வொரு மாதமும் சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்துமாறு பணிப்பாளர் சபை பணித்திருந்த போதிலும் இவ்வருடத்தினுள் 6 கூட்டங்களே நடாத்தப்பட்டது. |
| | ஔ | ஒழுங்கு முறைப்படுத்தல் சூழலினை புரிந்து கொள்வதற்கான செயற்பாடுகள் மற்றும் செயன் முறைகளை பணிப்பாளர் சபை எடுத்துள்ளமை பற்றியும் அவ் ஒழுங்கு முறைகளுடன் வங்கி ஒரு பிணைப்பினைப் பேணுகின்றமை பற்றியும் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | ஒழுங்குமுறைப்படுத்தலாளரின் நோக்கங்களை பரஸ்பரம் புரிந்துகொள்வதற்காகவும் உரிய நேரத்தில் சரியான பதிலளிப்பதற்காகவும் ஒழுங்குபடுத்துனர்களுடன் தொடர்ச்சியான உறவுகளைப் பேணுவதற்காக இணக்க அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இணக்கப்பிரிவு காலாண்டுக்கொருமுறை சபைக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுடன், கணக்காய்வுக் குழுவின் பட்டயத்தில் உள்ள நிபந்தனைக் குறிப்புகளுக்கு அமைவாக சபை அதனை மீளாய்வு செய்யும். சபையின் கணக்காய்வுக் குழு இது தொடாபாக வங்கிக்கு உதவும்.. | பொது முகாமையாளரின் இல பிÆளப் 466ம் இலக்க கடிதத்தின் ஊடாக இணக்க அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். வாராந்தம், மாதாந்தம், காலாண்டுக்கொருமுறை மற்றும் வருடாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு இணக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டள்ளது. இணக்கப் பிரிவு வருடாந்த அடிப்படையில் சபைக்கு அறிக்கையினை சமர்ப்பிக்கும். உதாரணம்: “நியதிச்சட்ட ஆய்வு அறிக்கை மேற்பார்வை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாட்டுத் திட்டம்”<br>. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ∴ | வெளியக கணக்காய்வாளர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான செயன்முறையொன்றினை பணிப்பாளர் சபை மேற்கொண்டிருக்கின்றமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | | பொ/அ | 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக கணக்காளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்காளர் நாயகமே வெளிவாரிக் கணக்காளர் ஆவார்.. | இது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்கு பொருத்தமானதல்ல. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சட்டத்திற்கு அமைவாக கணக்காளர் நாயகமே வெளிவாரிக் கணக்காளர் ஆவார். |
| **3(1)(ii)** | பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினை (பி.நி.அ) நியமித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த வழிகாட்டல்களின் 3 (5) ஆம் பிரிவுகளுக்கு இணைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | | இணங்கியது | | | 1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 13ம் பிரிவுக்கு அமைவாக, நிதி அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார். பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி சபையினால் நியமிக்கப்படுகின்றார்.<br><br>மேற்குறிப்பிட்ட பணிப்புரைக்கு அமைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன என்பது பரிசீலனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | 1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 13ம் பிரிவுக்கு அமைவாக, நிதி அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார்.<br><br>சபை பத்திர இலக்கம் 10/10/29 மூலம் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br><br>1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்திற்கு அமைவாக பிரதான நிறைவேற்று அலுவலரின் பொறுப்புகள் அமைந்துள்ளன. |
| **3(1)(iii)** | பணிப்பாளர் சபை அண்ணளவாக ஒரு வருடத்தின் போது மாதம் ஒரு முறை என்ற வகையில் உரிய தினங்களில் கூடி பணிப்பாளர் சபை கூட்டங்களை குறைந்தது 12 முறையிலாவது நடாத்தியுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | இணங்கியது | | | 2017ம் ஆண்டின் போது சபை கிட்டத்தட்ட மாதாந்த இடைவெளிகளில் 13 முறை கூடியது. சபைக் குறிப்புகள் மற்றும் பணிப்பாளர்களின் வரவுப் பதிவேட்டில் அவதானிக்க முடிந்தது. | 2017ம் ஆண்டின் போது சபை 12 முறை கூடியது |
| **3(1)(iv)** | வங்கியின் இடர் முகாமை மற்றும் வியாபார மேம்பாடு தொடர்பான விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் தேவைப்படுகின்ற சந்தர்பங்களில் வழமையான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்கு பணிப்பாளர்களை இயலச் செய்யும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | இணங்கியது | | | சபையின் அனுமதியின் கீழ் சபைச் செயலாளரினால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அதனை பரிசீலனை செய்துள்ளார்.<br><br>குறைந்தபட்சம்<br><br>7 நாட்களுக்கு முன்னதாக கூட்டத்திற்கான அறிவிப்பும் நிகழ்ச்சி நிரலும் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால், ஏதேனும் முன்மொழிவுகளை வழங்குவதற்கும் கற்கை செய்வதற்கும் போதியளவு நேரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைவாக விடயங்களும் வியாபார முன்னேற்றம் தொடர்பான முன்மொழிவுகளும் வங்கியின் முகாமைத்துவ இடர்களும் சபைப் பணிப்பாளர்களினால் கலந்துரையாடப்பட்டது. | தலைவரின் அனுமதியின் கீழ் சபைச் செயலாளரினால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. |
| **3(1)(v)** | சகல பணிப்பாளர்களும் கூட்டங்களில் பங்குபற்று வதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்காக வழமையான கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அறிவித்தல் விடப்படுகின்றமை மற்றும் ஏனைய சகல சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் விடப்பட்டுள்ளமை பற்றியும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | | இணங்கியது | | | சபைச் செயலாளரின் கூற்றுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் ஒவ்வொரு பணிப்பாளருக்கும் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது சபைத் தலைவரினால் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் குறைந்தபட்சம் கூட்டம் நடப்பதற்கு 7 நாட்களுக்கு முன்னதாக தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது. | சபைச் செயலாளரின் கூற்றுக்கு அமைய சபைக் கூட்டத்திற்கான திகதிகள் கூட்டம் நடப்பதற்கு 7 நாட்கள் முன்னராக சபையின் ஒவ்வொரு பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது |
| **3(1)(vi)** | பணிப்பாளர்கள் ஒரு வருட காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட எண்ணிக்கையில் 2/3 கூட்டங்களுக்கு அல்லது தொடர்ச்சியாக நடைபெற்ற 3 கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளதாக என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக் கூட்டம் தொடர்பில் மாற்று பணிப்பாளர் ஒருவரின் பங்குபற்றல் எவ்வாறாயினும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான சமுகமளித்தமை தொடர்பான எற்புடைமையாக ஏற்றுக் கொள்ளப்படும். | | இணங்கியது | | பொ/அ | தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர்கள் கூட்டங்களுக்கு வருகை தந்தனர். எனவே, அவ்வாறான நடவடிக்கைகள் தேவைப்படவில்லை.<br><br>பணிப்பாளர்களின் வரவுப்பதிவேடு மற்றும் சபைக் குறிப்புகள் அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர்கள் கூட்டங்களுக்கு வருகை தந்தனர். எனவே, 2017ம் ஆண்டு அவ்வாறான நடவடிக்கைகள் தேவைப்படவில்லை. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3(1) (vii)** | 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் தொடர்பில் செயலக சேவைகளை வழங்குதல் மற்றும் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமை பரீட்சிக்கப் பட்டுள்ளது. | இணங்கியது | | | 1988 ம் ஆண்டின் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் 43 வது பிரிவு மற்றும் 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக, சபையின் செயலாளராக திருமதி டபில்யூ.கே.பெரேரா ( சட்டத்தரணி) நியமிக்கப்பட்டார்.<br><br>சபையின் செயலாளர் சபையின் செயலக சேவைகளையும், மற்றும் சபைக் கூட்டங்களை கையாளுவதிலும் நியமத் தேவைப்பாடுகளிலும், ஏனைய ஒழுங்கமைப்பு விதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் பொறுப்புடையவராக செயற்படுவார். | 1988 ம் ஆண்டின் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் 43 வது பிரிவுக்கு அமைவாக, சபையின் செயலாளர் சட்டத்தரணியாவார். |
| **3(1) (viii)** | கம்பனிச் செயலாளரின் சேவைகள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேச இயலுமையினை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | சபையின் செயலாளர் என்ற வகையில், கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் மற்றும், சேவைகளையும் பணிப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ள இயலும். | சபையின் செயலாளர் என்ற வகையில், கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் மற்றும், சேவைகளையும் பணிப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ள இயலும். |
| **3(1)(ix)** | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளை கம்பனிச் செயலாளர் பேணுவதுடன் அவ்வாறான கூட்ட அறிக்கைகளை பணிப்பாளர்கள் பரீட்சிப்பதற்கான செயன் முறையொன்று உள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது, | இணங்கியது | | | சபையின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் கிரமப்படி கோவையிட்டு சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டன. சபை கூட்டங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் எந்த நேரத்திலும் எந்த ஒரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும். | சபையின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் கிரமப்படி கோவையிட்டு சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டன. சபை கூட்டங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் எந்த நேரத்திலும் எந்த ஒரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும். |
| **3(1)(x)** | சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கு கின்றது அல்லது பின்வரும் விடயங்களை மேல் ஆய்வு செய்துள்ளது என செவ்வை பார்க்கப்பட்டுள்ளது:<br><br>(அ) பணிப்பாளர் சபையானது தனது கலந்துரையாடலின் போது சுருக்கத் தரவுகள் மற்றும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டமை.<br>ஆ) பணிப்பாளர் சபையினால் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள்.<br>இ) உரிய கவனம் மற்றும் மதிநுட்பத்துடன் பணிப்பாளர் சபையானது தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்ததா என வெளிப்படுத்தக் கூடிய விலகல்கள் அல்லது உள்ளடக்கப் பிரச்சினை அல்லது உண்மை நிலவர கலந்துரையாடல்கள்:<br>ஈ) குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகவும் பணிப்பாளர் சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கை களுக்கு இணைவாகவும் விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.<br>உ) எவ்வகையான இடர் தொடர்பாக வங்கி முகங் கொடுக்கின்றது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள இடர் முகாமைச் செயற்பாடுகளினை மீளாய்வு செய்வதற்கும், மற்றும்<br>ஊ) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள். | இணங்கியது | | | இப்பிரிவின் கீழ் தேவைப்படும் தகவல்கள் போதியளில் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு சபையின் கூட்ட அறிக்கைகளைப் பரிசோதிக்கப்பட்டது. கீழ்வருவன சபைக் குறிப்புகளில் உள்ளடக்கபட்டுள்ளன.<br>i) முன்னைய கூட்ட அறிக்கையை உறுதிப்படுத்துவது.<br>ii) முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கையில் எழுந்த விடயங்கள்.<br>iii) அறவீட்டு விடயங்கள், நிதி சார்ந்த விடயங்கள்.<br>iv) சந்தைப்படுத்தல் மற்றும் பிரசாரங்கள் குறித்த விடயங்கள்.<br>v) நிர்வாகமும் மற்றும் ஆளணி விடயங்களும்.<br>vi) கடன் மீட்பு விடயங்கள்.<br>vii) இடர் விடயங்கள்<br>viii) சட்ட விடயங்கள் மற்றும்<br>ix) ஏனைய விடயங்கள் | இப்பிரிவின் கீழ் தேவைப்படும் தகவல்கள் போதியளில் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு சபையின் கூட்ட அறிக்கைகளைப் பரிசோதிக்கப்பட்டது. கீழ்வருவன சபைக் குறிப்புகளில் உள்ளடக்கபட்டுள்ளன.<br><br>i) முன்னைய கூட்ட அறிக்கையை உறுதிப்படுத்துவது.<br>ii) முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கையில் எழுந்த விடயங்கள்.<br>iii) அறவீட்டு விடயங்கள், நிதி சார்ந்த விடயங்கள்.<br>iv) சந்தைப்படுத்தல் மற்றும் பிரசாரங்கள் குறித்த விடயங்கள்.<br>v) நிர்வாகமும் மற்றும் ஆளணி விடயங்களும்.<br>vi) கடன் மீட்பு விடயங்கள்.<br>vii) இடர் விடயங்கள்<br>viii) சட்ட விடயங்கள் மற்றும்<br>ix) ஏனைய விடயங்கள் |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3(1)(xi)** | வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுதந்திரமான தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கிகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | நியதிச்சபை ஆய்வுகள் மீதான மேற்பார்வை பிரச்சினைகள் தொடர்பாக சபையின் பணிப்பாளர்கள் அவசியமான போதெல்லாம் நிபுணத்துவ ஆலோசனைகளை வங்கியின் செலவில் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி சபைப்பத்திரம் வழங்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.பொதுவாக வங்கி அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகளை பின்பற்றுகின்றது.. | நியதிச்சபை ஆய்வுகள் மீதான மேற்பார்வை பிரச்சினைகள் தொடர்பான 30.04.2014ம் திகதியுடைய சபை பத்திர இலக்கம் 14/14/19ற்கு அமைவாக சபையின் பணிப்பாளர்கள் அவசியமான போதெல்லாம் நிபுணத்துவ ஆலோசனைகளை வங்கியின் செலவில் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| **3(1) (xii)** | பிணக்குகள் தொடர்பான நிலைமைகள் அல்லது பிணக்குகள் ஏற்படுவதற்கான தோற்றப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் மற்றும் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்குமான ஒழுங்கு முறைமை ஒன்று பிரயோகத்தில் உள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் வாக்களிப்புக்கு விடப்படுகின்ற விடயம் தொடர்பில் அவர் / அவள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது அவ் விடயம் தொடர்பான முக்கியமான ஆர்வம் இருக்கின்ற பட்சத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொள்ளல் மிக முக்கியமாகும்.<br><br>குறிப்பிட்ட கூட்டத்தின் கூட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கூட்ட நடப்பெண் தொடர்பில் அவரின் ∴ அவளின் பெயர் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டது. | இணங்கியது<br><br>இணங்கியது | | பொ/ அ | 1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 17ம் பிரிவுக்கு அமைவாக தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொள்கை சபையினால் 26.08.2016ம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சபைப் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.08.95.02)<br><br>மேலும், வங்கி எந்தவொரு பணிப்பாளருக்கும் அல்லது வங்கியின் ஊழியருக்கு அல்லது பணிப்பாளரின் துணைக்கு அல்லது தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு அல்லது பணிப்பாளர் ஊழியராக அல்லது பணிப்பாளராக இருக்கும் இன்னொரு கம்பனிக்கு கடன்கள் வழங்கப்படமாட்டாது.<br><br>1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 17ம் பிரிவுக்கு அமைவாக 2017ம் ஆண்டினுள் அவ்வாறன குறிப்புகள் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை.<br><br>மேலும் வருடாந்த அறிக்கையின் பணிப்பாளர்கள் அறிக்கையில் நேரடியான இல்லது மறைமுகமான வங்கியுடன் 31 டிசம்பர் 2017ம் ஆண்டு முடிவடைந்த ஆண்டினுள்ள அவ்வாறன ஒப்பந்தங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அதனால் இப்பிரிவு பொருத்தமாற்றது. | சபைப் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.08.95.02இன் ஊடாக தொடர்புடைய தரப்பினருக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் கொள்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>1975ம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 28ம் பிரிவுக்கு அமைவாக வங்கி எந்தவொரு பணிப்பாளருக்கும் அல்லது வங்கியின் ஊழியருக்கு அல்லது பணிப்பாளரின் துணைக்கு அல்லது தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு அல்லது பணிப்பாளர் ஊழியராக அல்லது பணிப்பாளராக இருக்கும் இன்னொரு கம்பனிக்கு கடன்கள் வழங்கப்படவில்லை. |
| **3(1) (xiii)** | வங்கியின் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான தீர்மானங்கள் தொடர்பாக வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேடவிடயங்களின் முறைசார் நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான அதிகாரம் தொடர்பாக வங்கி உறுதியாக இருக்கின்றமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | சபைச் செயலாளரின் குறிப்புக்கு அமைவாக சபைப் பத்திர இலக்கம் 16.10.40 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.10.122.02இன் ஊடாக சபைக்கான வழமையான அட்டவணைப்படுத்த விடயங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. | சபைப் பத்திர இலக்கம் 16.10.40 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.10.122.02இன் ஊடாக சபைக்கான வழமையான அட்டவணைப்படுத்த விடயங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3(1) (xiv)** | வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அல்லது அது போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கின்ற நிலைமையில் அல்லது சொத்து இழப்புக்கள் ஏற்படுவதற்கான அண்மித்த நிலையில் இருக்கின்ற நிலைமையில் அல்லது வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன் காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்துவதற்கு அண்மித்த நிலையில் இருக்கின்ற போது அல்லது அவ்வாறான நிலைமைகளின் போது ஏதாவது தீர்மானம் அல்லது செயற்பாட்டினை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமை தொடர்பான வங்கி மேற்பார்வை பணிப்பாளர்கள் முன்னோடியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது. | | | பொ/அ | சபைக் குறிப்புகளின் மீளாய்வின் போது அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை. | 2017ம் ஆண்டினுள் அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் நிகழவில்லை. |
| **3(1) (xv)** | நிதிச் சபை வேண்டியுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபையினால் வங்கி உரிய காலத்தில் மூலதனப்படுத்தி உள்ளதா என்று பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | இலங்கை மத்திய வங்கியின், மூலதன போதுமை விகிதத்தின் தேவைப்பாடு, (அடுக்கு I) 5% மாகவும் (அடுக்கு II) 10% மாகவும் உள்ளது. 31.12.2017 அன்றுள்ளவாறு அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மூலதன போதுமை விகிதம் (அடுக்கு I) 23.74% மொத்த அடுக்கு 24.29%. | இது "நிதியியல் தகவல் வலையமைப்பில்" அறிக்கையில் உள்ளது. இலங்கை மத்திய வங்கியின், மூலதன போதுமை விகிதத்தின் தேவைப்பாடு, (அடுக்கு I) 5% மாகவும் (அடுக்கு II) 10% மாகவும் உள்ளது. 31.12.2017 அன்றுள்ளவாறு அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மூலதன போதுமை விகிதம் (அடுக்கு I) 23.74% மொத்த அடுக்கு 24.29% மாகவும் நிதிக்கூற்றின் அடிப்படையில் காட்டுகின்றது. |
| **3(1) (xvi)** | இந்த வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுக்கு இணைவாக வங்கியின் வருடாந்த அறிக்கை, வருடாந்த கூட்டாண்மை அறிக்கை போன்றவற்றை பணிப்பாளர் சபை வெளியிட்டுள்ளமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | வருடாந்த கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையை வங்கியின் 2017 வருடாந்த அறிக்கையின் பணிப்புரைகளின் பணிப்புரை 3ற்கு அமைவாக சபை வெளியிடப்பட்டிருந்தது. | வங்கியின் 2016 வரைவு வருடாந்த அறிக்கையில் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. |
| **3(1) (xvii)** | வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சுய மதிப்பீட்டு திட்டம் ஒன்றின் பின்பற்றல் மற்றும் அவ்வாறான மதிப்பீடுகளின் தரவுகள் பராமரிக்கப்படுகின்றமை பற்றி பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | 2017ம் ஆண்டு பணிப்பாளர் சபையினால் சுய மதிப்பீட்டு நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது. | பணிப்பாளர்கள் அனைவரினதும் 2017ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுப் படிவங்கள் சபைச் செயலாளரினால் பெறப்பட்டுள்ளது. |
| **3(2) பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்** | | | | | | |
| **3(2)(i)** | பணிப்பாளர் சபையானது 7 பேரைவிடக் குறை யாததும் 13 பேரை விஞ்ஞாததுமான பணிப்பாளர்களைக் கொண்டுள்ளமை பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர் சபைக்கு 9 பொருத்தமான நபர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவர். எனினும் 31 டிசம்பர் 2017ம் திகதியின் போது வீட்டு அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதியை நியமிப்பதில் ஏற்பட்ட காலதாதம் காரணமாக சபையில் 8 பணிப்பாளர்களே இருந்தனர். வீட்டு நிர்மாணிப்பு பிரதிநிதி அரச ஈட்டு மற்றும் முதலீட்டு பணிப்பாளரை 01 பெப்பரவரி 2018ம் திகதி நியமித்தது. | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர் சபைக்கு 9 பொருத்தமான நபர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவர் |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3(2)(ii)** | (அ) | பி.நி.அ.தரப் பதவியொன்றை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களை விஞ்சுதல் கூடாது என்பது பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br>பணிப்பாளர்களின் நியமன மற்றும் இராஜினாமா கோப்பு பார்வையிடப்பட்டது | எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| | (ஆ) | ஏதேனுமொரு பணிப்பாளர் 9 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருப்பாராயின், அவ்விடயம் தொடர்பில் நிலை மாற்று ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கவும். | | | பொ/த | எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை | |
| **3(2)(iii)** | | பி.நி.அ. உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட சிரேட்ட நிறைவேற்றுத்தர அலுவலர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது | இணங்கியது | | | 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சபை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 9 பணிப்பாளர்களை கொண்டிருந்தது. இவர்கள் நிதி அமைச்சர் மற்றும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் என்பவர்களினால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாகவும் இருந்தனர். | 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவின் திருத்தச் சட்டமான 1984ம் ஆண்டு 19ம் இலக்கச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப நிதி அமைச்சர் மற்றும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் என்பவர்களினால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நிறைவே வற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாகவும் இருந்தனர். |
| **3(2)(iv)** | | குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் அல்லது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கினர் எது உயர்வானதோ அதனை சபை கொண்டிருப்பதை சரிபார்த்தது.<br><br>நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் சுதந்திரமான அலுவலர்களாக கருதப்படுவார்களாயின், அவர் / அவள் | இணங்கியது | | | பணிப்பாளர் நிதி அமைச்சர் மற்றும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் என்பவர்களினால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நிறைவே வற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர். | இவர்கள் அனைவரும் நிறைவே வற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவர். |
| | அ) | வங்கியின் 1 சதவிதத்திற்கு அதிகமான பங்கு முதலை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வைத்திருத்தல் | | | பொ/த | அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடைய வங்கியாக இருக்கின்றதால், வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் குறித்தொதுக்கப்பட்ட பங்குடமையை பிரதிநிதித்துவப்படுத்தியமைக்கு சான்றுகள் இல்லை. | அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடைய வங்கியாக இருக்கின்றதால், வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் குறித்தொதுக்கப்பட்ட பங்குடமையை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. |
| | ஆ) | 3 (7) ஆம் அறிவுறுத்தலில் விளக்கப்படுத்திய பிரகாரம் வங்கியின் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில், நியமனம் பெற்றதன் பின்னர் தொடர்கின்ற இரண்டு வருட காலப் பகுதியின் போது அல்லது தற்பொழுது வங்கியின் ஒழுங்கு முறையான மூலதனத்தின் 10 சதவீத்தினை விஞ்சுகின்ற பிரகாரம், ஒரு தொகை முதலை வைத்திருத்தல். | | | பொ/த | 2017ம் ஆண்டு அறிக்கையின் பணிப்பாளர் கூற்றுக்கு அமைவாக 2017இல் முடிவடைநத ஆண்டினுள் வங்கியுடன் எவ்விதமான நேரடியான அல்லது மறைமுகமான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவில்லை.<br><br>பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரகடணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதுடன் அதற்கான சான்றுகள் ஏதுமில்லை. | 2017ம் ஆண்டு நிதி கணக்கின் 27ம் குறிப்புக்கு அமைவாக அவ்வாறான கொடுப்பனவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. |
| | இ) | பணிப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியான இரண்டு வருட காலத்தில் வங்கியின் ஊழியராக இருந்திருத்தல். | | | பொ/த | வங்கியில் பணிபுரியும் அவ்வாறான நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் இல்லை.<br>பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரகடணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதுடன் அதற்கான சான்றுகள் ஏதுமில்லை. | வங்கியில் பணிபுரியும் அவ்வாறான நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் இல்லை. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஈ) | பணிப்பாளராக, பி.நி.அ, பிரதான முகாமை அங்கத்தவராக, இவ் வங்கியின் அல்லது வேறு வங்கி யொன்றின் பிரதான பங்குதாரருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல். (இவ் விடயம் தொடர்பில், நெருங்கிய தொடர்பு என்பதன் பொருள், துணை அல்லாத நிதி ரீதியாக தங்கியிருக்கின்ற பிள்ளை என்று பொருள்படும்) | | | பொ/த | நிதி அமைச்சரினாலும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரினாலும் பணிப்பாளர்களின் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது.<br><br>வங்கிச் சட்டத்தின் 42ம் பிரிவுக்கு அமைவாக பணிபாளர்களின் மேற்கொள்ளப்பட்ட சுய பிரகடணத்தில் எந்தவொரு நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளரும் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது.<br><br>வங்கிச் சட்டத்தின் 42ம் பிரிவுக்கு அமைவாக பணிபாளர்களின் மேற்கொள்ளப்பட்ட சுய பிரகடணத்தில் எந்தவொரு நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளரும் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| | ந) | வங்கியின் குறிப்பிட்டதொரு பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல். | | | பொ/த | அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடைய வங்கியாக இருக்கின்றதால், வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் குறித்தொதுக்கப்பட்ட பங்குடமையை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. | அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடைய வங்கியாக இருக்கின்றதால், வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் குறித்தொதுக்கப்பட்ட பங்குடமையை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. |
| | க) | கம்பனி ஒன்றின் அல்லது வியாபார நிறுவனம் ஒன்றின் ஊழியர் அல்லது ஒரு பணிப்பாளர் அல்லது முக்கியமான பங்குதாரராக இருத்தல்<br><br>I. வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சுகின்ற அளவானதும், 3 (7) ஆம் அறிவுறுத்தலில் வரையறுத்த பிரகாரம் வங்கியுடன் தற்போது ஒரு கொடுக்கல் வாங்கில் ஈடுபட்டிருத்தல். அல்லது<br><br>II. வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுக்கு மத்தியில் எவரேனும் ஒருவர் அதன் ஊழியராக அல்லது பணிப்பாளராக இருத்தல் அல்லது அங்கு பங்குதாரராக நியமனம் பெறல், அல்லது<br><br>III. இங்கு உள்ள அறிவுறுத்தல்களில் 3 (7) அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், வங்கியுடன் அதன் செயற்பாட்டு மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சும் வகையிலான கொடுக்கல் வாங்கல் ஒனறை வங்கியின் வேறு யாரேனும் ஒருவர் பணிப்பாளர் ஊடாக நடாத்துதல். | | | பொ/த<br><br>பொ/த<br><br>பொ/த | 2017ம் ஆண்டு அறிக்கையின் பணிப்பாளர் கூற்றுக்கு அமைவாக 2017இல் முடிவடைநத ஆண்டினுள் வங்கியுடன் எவ்விதமான நேரடியான அல்லது மறைமுகமான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவில்லை.<br><br>பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரகடணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதுடன் அதற்கான சான்றுகள் ஏதுமில்லை. | வங்கியுடன் பணிப்பாளர்கள் வியாபார கொடுக்கல்வாங்கல்களில் எவ்விதமான ஒப்பந்தங்களிலும் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. |
| **3(2)(v)** | சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாற்று பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், சுதந்திரமான பணிப்பாளர் ஒருவர் தொடர்பாக பிரயோகிக்கத் தக்க பிறமாணங்களை அடையும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்ச்சிக்கப்பட்டது. | | | | பொ/த | சபை செயலாளரின் கூற்றுக்கு அமைவாக இவ்வருடத்தினுள் மாற்றீடாக பணிப்பாளர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை | கலந்துரையாடலுக்கு அமைவாக, சபை செயலாளரின் கூற்றுக்கு அமைவாக இவ்வருடத்தினுள் மாற்றீடாக பணிப்பாளர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. |
| **3(2)(vi)** | வங்கி சுதந்திரமான பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக ஒரு முறைமையினைக் கொண்டிருக்கின்றதா என்று பரீட்ச்சித்துப் பார்த்தல். | | இணங்கியது | | | 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் நிதி அமைச்சரினாலும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரினாலும் நியமிக்கப்பட்டனர். | 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர். |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3(2) (vii) | வங்கியின் கூட்ட நடப்பெண் 50% விட அதிகமான பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றதா என்றும் அவ் நடப்பெண்ணில் 50% லும் அதிகமான நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு (பிரிவு 16) அமைவாக, தேவைப்படும் கோரம் 3 அங்கத்தினர்களாகவும், இது 50% வீதத்திற்கான பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>50% வீதத்திற்கும் அதிகமான பணிப்பாளர்கள் பங்குபற்ற வேண்டும் என்பதுடன் இது ஐந்திற்கும் மேற்பட்ட பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன், இப்பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று தரம் அதிகாரமற்றவர்கள் | அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. |
| 3(2) (viii) | வருடாந்த கூட்டாண்மை ஆட்சி அறிக்கையில் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்று தரம் இல்லாத பணிப்பாளர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளர்களின் வகையடிப்படையில் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளிப்படுத்துகின்றதா என்று பரிட்சிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | | | தலைவர் மற்றும் பணிப்பாளர்களின் பெயர் உள்ளடங்களாக பணிப்பாளர் சபையின் உள்ளடத்தை வங்கி வெளியிட்டுள்ளது. அது வருடாந்த அறிக்கையில் நிறைவேற்றுத்தரமுள்ள பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் என வகைப்படுத்தி வெளியிட்டுள்ளது | 2016ம் ஆண்டு அறிக்கையில் பணிப்பாளரின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| **3(7) சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்** | | | | | | | |
| **3(7)(i)** | | எந்தவொரு நபரினாலும் வங்கி நடவடிக்கையில் வட்டி தொடர்பில் எழக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் சபையினால் நிறுவப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது. மேலும் இது “சம்பந்தப்பட்ட தரப்பினர்” எனக் குறிப்பாக கருதப்படுகின்ற பின்வரும் வகையிலடங்கும் நபர்கள் தொடர்பிலானதாகும்:<br><br>அ) வங்கியின் யாதேனும் துணை நிறுவனம்<br>ஆ) வங்கியின் யாதேனும் கூட்டு நிறுவனம்<br>இ) வங்கியின் யாரேனும் பணிப்பாளர்கள்<br>ஈ) வங்கியின் யாரேனும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்<br>உ) வங்கிப் பணிப்பாளரின் அல்லது பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தரின் நெருங்கிய உறவினர்<br>ஊ) வங்கியில் கூடியளவு வட்டிக்குச் சொந்தமாக விருக்கும் ஒரு பங்குதாரர்.<br>எ) யாரேனும் வங்கியின் பணிப்பாளர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர் அல்லது அதன் பிரதான பங்குதாரர் கணிசமானளவு வட்டியினைக் கொண்டிருத்தல் தொடர்பிலான கரிசனை. | இணங்கியது | | | விருப்ப முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காண்பதற்கு நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொள்கை சபையினால் 26.08.2016ம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சபைப் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.08.95.02) | சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொள்கை சபையினால் அனுமதிக்கப்பட்டிருப்பது 16 ஒகஸ்ட் 2016 சபையின் பத்திர இலக்கம் 16/08/35இல் அவதானிக்க முடிந்தது. அது சம்பந்தப்பட்ட தரப்பினர், சம்பந்தப்பட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல் வகைகள், ஏதேனும் நிகழ்வுகளின் முரண்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. |
| **3(7)(ii)** | | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புடையதாக பின்வரும் வகையிலடங்கும் நடவடிக்கைகளை அடையாளங்கண்டு அதனை அறிக்கை செய்வதற்கான செயன்முறையொன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது. | இணங்கியது | | | சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொள்கை சபையினால் அனுமதிக்கப்பட்டிருப்பட்டுள்ளது. சபையின் பத்திர இலக்கம் 16/08/35 சபைக் குறிப்பு 16.08.95.02<br>திகதி: 16 ஒகஸ்ட் 2016 | சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொள்கை சபையினால் அனுமதிக்கப்பட்டிருப்பது 16 ஒகஸ்ட் 2016 சபையின் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபைக் குறிப்பு 16.08.95.02 இல் அவதானிக்க முடிந்தது. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அ) | கடன் வசதிக்கான அதிகபட்ச தொகை தொடர்பில் நாணய சபையினால் வரையறுக்கப்பட்டவாறான எவ்வகையானதொரு கடன் வசதியளிப்பு | | | | | |
| | ஆ) | வங்கியின் யாதேனும் பொறுப்புகளை வைப்புகள், கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகள் ஆகிய வடிவங்களில் ஏற்படுத்தல்.. | | | | | |
| | ஆ) | இ) வங்கிக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வங்கியிடமிருந்து பெறுகின்ற நிதிசார் அல்லது நிதிசாரா தன்மையுடைய ஏதேனும் சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள். | | | | | |
| | ஈ) | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பயனுள்ள வகையிலான இரகசிய அல்லது முக்கிய தகவல்களை தெரிவிக்கும்படியான தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் தொடர்பான செயற்பாட்டினை வங்கிக்கும் அத்தகைய ஏதேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் உருவாக்குதல் அல்லது பேணுதல். | | | | | |
| **3(7)(iii)** | | மேலே பணிப்புரை 3(7)(i) இல் விபரிக்கப்பட்ட வாறான சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வங்கியானது தொடர்பினைப் பேணவில்லை என்பதை உறுதிப் படுத்துவதற்கானதொரு செயன்முறையை சபை கொண்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது. . | இணங்கியது | | | ஆவணப்படுத்தப்படாத போதிலும், விருப்ப முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காண்பதற்கு நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு எவ்வித வசதிகளும் வழங்கப்படவில்லை. பிரதான முகாமைத்துவ நபர்களினால் பெற்றுக்கொள்ளப்படும் வசதிகள் ஒரு வரையறைக்குள் மட்டுமே அனுமதிக்கப்படும். | தயவுசெய்து 3(7)ஐ வாசிக்கவும். 16 ஒகஸ்ட் 2016 சபையின் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபைக் குறிப்பு 16.08.95.02 ஐ வாசிக்கவும். |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அ) | வங்கியின் தொழிற்பாட்டு மூலதன சதவீதத்தை விஞ்சுகின்ற தொடர்புடைய வகுதியினர்களுக்கு முழு மொத்த கவனம் வழங்குதல் பரீட்ச்சிக்கப்படுவது பணிப்பாளர் சபையினால் நடைபெறுவதுடன் அது இங்கு உப கட்டளையின் ஊடாக தீர்மானிக்கப்படும்.<br>I. "கவனம் எடுத்தல்" என்பதன் ஊடாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் உச்ச அளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.<br>II. "மொத்த நிகர ஆர்வம்" கணக்கெடுக்கப் படுவது மொத்த ஆர்வத்தில், அது போன்ற தொடர்புடைய பகுதியினரால் வங்கியின் கொடுக்கல் வாங்கல் மூலதனம் மற்றும் 5 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான கடன் அளவான தொகைக்கு சமமான அளவான முதலீட்டை குறைப்பதன் ஊடாகவாகும். | | | | | |
| | ஆ) | வங்கியின் சிறந்த கடனுக்கான வீதத்தைவிட குறைந்த வட்டி வீதம் ஒன்றை அறவிடல் அல்லது சம்பந்தமில்லாத ஒப்பிடத்தகு வாடிக்கையாளருடனான ஒப்பிடத்தகு நடடிக்கை ஒன்றுக்காக வங்கியின் வைப்பீட்டுக்கான வீதத்தைவிட அதிகம் செலுத்துதல். | | | | | |
| | c) | சாதகமான தவணைக்காலம், வியாபார இழப்புகளை மீட்கும் வகையில் மற்றும்/அல்லது சம்பந்தமற்ற தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட பிரமாணங்களுக்கு அப்பால் விரிவாக்குகின்ற கட்டணங்கள்/ தரகுப்பணங்களை விலக் களிப்புச் செய்தல் போன்ற விரும்பத்தகு நடவடிக்கைகளை வழங்கல். | | | | | |
| | ஈ) | மதிப்பீட்டு நடைமுறை எதுவுமின்றி ஒரு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சேவைகளை வழங்கல் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரிட மிருந்து சேவைகளைப் பெறுதல் | | | | | |
| | உ) | சட்டப்படியான கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான போது தவிர உரிய வகுதியினருடன் முக்கியமான தகவல்கள் அலலது உரிமைகள் வெளிப்படுத்தப்படுகின்ற வித்தில் தகவல் பரிமாற்றம் மற்றும் அறியப்படுத்தல் செயன்முறைகள் பேணப்பட்டுள்ளன | | | | | |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3(7)(iv)** | | வங்கி அதன் எவராவது பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு கடனுதவியை வழங்குவதற்கான செயன்முறை யொன்றை கொண்டிருக்கின்றது என்பது பரீட்சிக்கப்பட்டது.<br><br>அத்தகைய கடனுதவியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்கு குறையாத அதன் அதன் பணிப்பாளர்களின் சபை கூட்டமொன்றில் அத்தகைய கடனுதவிக்கு சார்பாக வாக்களிப்பது தடைசெய்யப்படுவதோடு இந்த கடனுதவி வசதியானது நிதிச் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பாதுகாப்பினால் பாதுகாக்கப்படல் வேண்டும். | | | பொ/த | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை. | சட்டத்தின் ஊடாக பணிப்பாளர்களுக்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கும் கடன்கள் வழங்குதல் தடைசெய்யப்பட்டள்ளது. தகவல் தொழில்நுட்ப அலகினால் சமர்ப்பிக்கபட்ட கடன் அட்டவணைக்கு அமைவாக பணிப்பாளர்களுக்கு கடன் வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| **3(7)(v)** | அ) | கணிசமான நலனை கொண்டுள்ள நபரொருவருக்கு அல்லது நபரொருவரின் நெருங்கிய உறவினர் அல்லது சம்பந்தப்பட்ட நபரொருவருக்காக வங்கியினால் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதாவது கடனுதவியொன்றுக்கு வங்கி செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்பத பரீட்சித்து அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட்டும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | | | பொ/த | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை. | சபைச் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக, 2017ம் ஆண்டு சபையில் அத்தகைய நிகழ்வுடைய பணிப்பாளர் நியமனம் அறிவிக்கப்படவில்லை. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆ) | மேலே 3(7)(V) (அ) பணிப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அக்காலத்தில் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது பரீட்சிக்கப்பட்டு அத்தகைய பணிப்பாளரின் நியமனத்திகதியிலிருந்து பதினெட்டு மாத காலங்கள் காலாவதித் திகதியில் அல்லது கடனுதவி வசதி வழங்கப்பட்ட காலத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எது முன்னையதோ அக்காலப்பிரிவினுள் ஏதாவது கடனுதவி வசதி கணக்கின் மீதான ஏதாவது செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியுடன் மீட்பதற்கு நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கின்றது. | | | பொ/ த | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை. | |
| | இ) | பணிப்பாளர் பதவியில் விலகிச்சென்றுவிட்டார் என கருதப்படக்கூடிய மேற்குறிப்பிட்ட உப பணிப்புரைகளுடன் இயைந்துசெல்ல தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரையும் அடையாளம் காண்பதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டிருக்கின்றதோடு அந்த விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது | | | பொ/ த | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை. | |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஈ) வங்கியில் ஊழியர் ஒருவராக கடனுதவி வசதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த எந்தவொரு பணிப்பாளருக்கும் பிரயோகிக்கப்பட முடியாத 3(7) (V) (அ) உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிக்கப்பட்டதோடு அத்தகைய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்கக்கூடிய திட்ட மொன்றின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டது. | | | பொ/த | சபையின் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை. | |
| **3(7)(vi)** | ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்க கூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான வட்டியை கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய தரப்புக்கு அல்லது மேலே 3(7) (V) இன் பணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் நிதிச் சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான பாதுகாப்பினால் பாதுகாக்கப்பட்டவருக்கு கட்டணங்கள் அல்லது தரகுகள் விலக்களிப் பெற்றவர் தொடர்பிலான ஏதாவது கடனுதவி அல்லது “மிகவும் சார்புடைய நடவடிக்கை” ஐ வங்கி வழங்குகின்ற போது அடையாளங் காண்பதற்கான செயன்முறையொன்று இருப்பது பரீட்சிக்கப்பட்டது | | | பொ/த | ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்க கூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான வட்டியை கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய தரப்புக்கு அல்லது கடனுதவி தொடர்பாக வங்கி எந்தவொரு வசதிகளை அல்லது அதி விசேட சலுகைகளையும் வழங்கவில்லை. | சபைச் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக, 2017ம் ஆண்டு சபையில் அத்தகைய நிகழ்வுடைய பணிப்பாளர் நியமனம் அறிவிக்கப்படவில்லை. |
| **3(7) (vii)** | மேலே பணிப்புரை 3(7)(V) மற்றும் 3(7) (Vi) என்பவற்றின் கீழ் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு கடனுதவி வசதிக்காக நிதிச் சபையின் முன்அங்கீகாரத்தை பெறுவதற்கான செயன்முறையொன்று பரீட்சிக்கப்பட்டதா நிதிச் சபையின் முன்அங்கீகாரமின்றி அத்தகைய கடனுதவி வசதியின் ஏதாவது ஒரு பகுதியோ அதன் பேரிலான ஏதாவது வட்டி அனுப்பப்பட்டிருக்கின்றதா அத்துடன் அத்தகைய அங்கீகாரமின்றி எந்தவொரு பண அனுப்புகையும் செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகும். | | | பொ/த | வங்கி எந்தவொரு வசதியையும் அல்லது மேலதிக சார்பான சலுகைகளை எந்தவொரு ஊழியருக்கும் அல்லது ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு வழங்கவில்லை. | பொருத்தமானதல்ல. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| **3(8)** வெளிப்படுத்தல்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3(8)(i)** | | சபை வெளிப்படுத்தியவை சரிபார்க்கப்பட்டது<br><br>அ) கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு தராதரங்களினால் குறித்துரைக்கப்பட்ட அமைப்புகளுடன் இயைந்த வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதோடு அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. | இணங்கியது | | | வருடாந்த கணக்காய்வுக் கூற்றக்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய கணக்கீட்டு நியமங்களுடனும் தயாரிக்ப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கூற்றுக்ள கீழ்வரும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.<br>1. டெயிலி நிவூஸ்<br>2. லங்காதீப<br>3. தினக்குரல் | வருடாந்த கணக்காய்வுக் கூற்றக்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய கணக்கீட்டு நியமங்களுடனும் தயாரிக்ப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது.<br><br>அந்த கூற்றுக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. |
| | | ஆ) காலாண்டு நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. | இணங்கியது | | | இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, காலாண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் அவதானிக்கப்பட்டது | இதற்கமைவாக காலாண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் அவதானிக்கப்பட்டது |
| **3(8)(ii)** | வருடாந்த அறிக்கையில் சபை பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்களை மேற் கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது: | | இணங்கியது | | | நிதியில் அறிக்கையில் பணிப்பாளரின் பெறுப்புகளில் இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>(பக்கம் 71, வருடாந்த அறிக்கை 2016) | அறிக்கையில் பணிப்பாளரின் பெறுப்புகளில் இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| | | | இணங்கியது | | | 2016 ஆண்டறிக்கையில் வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீதான பணிப்பாளரின் கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| | | | இணங்கியது | | | 2016 ஆண்டறிக்கையின் 57 ஆம் பக்கத்தில் வங்கியின் உள்ளக கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. | |

# கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அ) கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்களுடன் தொடர்புடைய கூற்றானது குறிப்பான வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட பொருத்தமான கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்த வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | | | பொ/த | 2016இன் ஆண்டறிக்கையின் 10-13 ஆம் பக்கங்களில் பணிப்பாளர்களின் விபரத்திரட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2016இன் ஆண்டறிக்கையின் 93 ஆம் பக்கத்தில் பணிப்பாளர்களின் ஊதியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | 2016 ஆண்டறிக்கையின் 57 ஆம் பக்கத்தில் வங்கியின் உள்ளக கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. |
| | ஆ) நம்பகமான நிதிசார் அறிக்கையிடல் தொடர்பில் நியாயமான உத்தரவாத்ததை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற நிதிசார் அறிகையிடல் முறைமை வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான சபையின் அறிக்கையை உறுதிப்படுத்துவதோடு வெளியக நோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது | இணங்கியது | | | சபைச் செயலாளரின் விளக்கத்திற்கு அமைவாக எவ்வித வசதிகளும் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்படவில்லை. | 2016இன் ஆண்டறிக்கையின் 10-13 ஆம் பக்கங்களில் பணிப்பாளர்களின் விபரத்திரட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2016இன் ஆண்டறிக்கையின் 93 ஆம் பக்கத்தில் பணிப்பாளர்களின் ஊதியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>பிரதான முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் 2016 ஆண்டறிக்கையில் 64ம் பக்கதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| | இ) மேலே 3(8)(ii)(b) பணிப்புரையோடு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதி மீதான வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்படடிருப்பதை சபை பரீட்சித்தது | இணங்கியது | | | 2016 ஆண்டறிக்கையின் 72 ஆம் பக்கத்தில் வங்கியின் இணக்கம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. | 2016 ஆண்டறிக்கையின் 72 ஆம் பக்கத்தில் வங்கியின் இணக்கம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. |
| | ஈ) பெயர்கள், தகைமைகள், வயது வழிகாட்டல் பொருத்தப்பாடு மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகினற அனுபவம் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செலுத்தக்ப்பட்ட மொத்த கட்டணம்/ஊதியம் உள்ளிட்ட பணிப்பாளர்களுடன் தொடர்புடைய விபரங்கள் | | | | ஆண்டறிக்கையில் பொருண்மையான இணங்குவிப்பின்மை எவற்றையும் சரிப்படுத்தவதற்கு, நிபந்தனைகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் அனுகு முறையும் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளும் குறித்த இணங்குவிப்பு விபரங்களும், புறம்பான அறிக்கையில் தரப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிப்பாளரின் அறிக்கையானது பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் கூற்றை உள்ளடக்கியுள்ளது. (2016இன் ஆண்டறிக்கையின் 64 ஆம் பக்கம்) பிரதான முகாமையாளரின் (இணக்கம்) விளக்கத்திற்கு அமைவாக, வங்கியின் மேற்பார்வை பணிப்பாளர், 2017ம் ஆண்டினுள் எவ்விதமான இணகுவின்மை தொடர்பான எந்தவொரு அறிக்கையையும் அனுப்பவில்லை. | ஆண்டறிக்கையில் பொருண்மையான இணங்குவிப்பின்மை எவற்றையும் சரிப்படுத்தவதற்கு, நிபந்தனைகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் அனுகு முறையும் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளும் குறித்த இணங்குவிப் பு விபரங்களும், புறம்பான அறிக்கையில் தரப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிப்பாளரின் அறிக்கையானது பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் கூற்றை உள்ளடக்கியுள்ளது. (2016இன் ஆண்டறிக்கையின் 64 ஆம் பக்கம்) பிரதான முகாமையாளரின் (இணக்கம்) விளக்கத்திற்கு அமைவாக, வங்கியின் மேற்பார்வை பணிப்பாளர், 2017ம் ஆண்டினுள் எவ்விதமான இணகுவின்மை தொடர்பான எந்தவொரு அறிக்கையையும் அனுப்பவில்லை. |

## கூட்டிணைந்த ஆளுமை (தொடர்ச்சி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உ) தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3(7) (iii) இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த நிகர கடனுதவி. தொடர்புடைய ஒவ்வாரு வகுதிக்கும் வழங்கப்பட்ட நிகர கடனுதவி வங்கியின் ஒழுங்குறுத்துகை மூலதனத்தின் வீதமொன்றாக வெளிப்படுத்தப்படும். | இணங்கியது | | பொ/த | | 2016 ஆண்டறிக்கையின் 72 ஆம் பக்கத்தில் வங்கியின் இணக்கம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது. |
| | ஊ) செலுத்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்பட்ட கடனுதவி வங்கியிலுள்ள முதலீடுகள் போன்ற சபை வகுதியினால் குறிப்பிடப்பட்ட வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியிருக்கும் அதனால் வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பெறுமதி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி | இணங்கியது | | | | ஆண்டறிக்கையில் பொருண்மையான இணங்குவிப்பின்மை எவற்றையும் சரிப்படுத்தவதற்கு, நிபந்தனைகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் அனுகு முறையும் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளும் குறித்த இணங்குவிப்பு விபரங்களும், புறம்பான அறிக்கையில் தரப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிப்பாளரின் அறிக்கையானது பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் கூற்றை உள்ளடக்கியுள்ளது. (2016இன் ஆண்டறிக்கையின் 64 ஆம் பக்கம்) பிரதான முகாமையாளரின் (இணக்கம்) விளக்கத்திற்கு அமைவாக, வங்கியின் மேற்பார்வை பணிப்பாளர், 2017ம் ஆண்டினுள் எவ்விதமான இணகுவின்மை தொடர்பான எந்தவொரு அறிக்கையையும் அனுப்பவில்லை. |
| | எ) கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் இயைந்ததாக சபை வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை பெற்றிருந்தமை பரீட்சிக்கப்பட்டது | | | | | |
| | ஏ) சாதூரியமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் இயைந்து செல்லக்கூடிய விபரங்களின் அறிக்கையொன்றை தயாரித்திருப்பதோடு இயைந்து செல்லாத ஏதாவது விடயத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | பொ/த | | |
| | ஐ) வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை போன்ற ஒழுங்கமைப்பு கூற்றுகள் என்பனவற்றுடன் மேற்பார்வை அக்கறைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இருப்பின், அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் நாணயச் சபையின் பணிப்புரைகளுடன் சேர்த்து, அத்தகைய அக்கறைகள் குறித்து வங்கியினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | | | | | |

# சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### தலைவரின் கண்ணோட்டம் - 2017

அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை மீது 2007ம் ஆண்டு 12ம் இலக்க பணிப்புரையின் பிரிவு 3 (6)ற்கு இணங்குமாறு சபையின் கணக்காய்வு குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளதுடன், பணிப்பாளர் சபையானது கணக்காய்வுப் பட்டயத்தையும் அதனுடன் இணைந்த சபைத் தீர்மானங்களையும் அங்கீகரித்துள்ளது.

வங்கியின் நிருவன ஆளுமை பிரயோகங்கள் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வது சபை கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீனமான நோக்கத்துடன் மீளாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்காக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட TOR யை பின்பற்றி உள்ளக மற்றும் வெளியக காரணிகள் இரண்டினாலும் வடிவமைக்கப்பட்ட அதன் நிகழ்ச்சி நிரலுடனும், மத்திய வங்கியின் பணிப்புரையில் தரப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இயைந்ததாகவும் சபையின் கணக்காய்வு குழு மற்றுமொரு போட்டி ஆண்டை பார்வையிட்டது.

### குழுவின் தொகுப்பு

மூன்று நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்களும், ஒரு மாற்று நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளரும் கணக்காய்வு குழுவில் இடம் பெறுகின்றனர். பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஏனைய சிரேஸ்ட அதிகாரிகளும் பொதுவாக அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்கேற்பார்கள்.

### வருகை

| அங்கத்தவர் | கணக்காய்வுக் குழுவில் பதவி | குழு அங்கத்தவர் | | 2017ம் ஆண்டு கூட்டங்களுக்கான வருகை |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| திரு.எஸ். ஜி.சேனாரத்ன | தலைவர் | 2017 ஜனவரி | 2017 டிசம்பர் | 02 |
| திரு நிரோஷன் கமகே | அங்கத்தவர் | 2017 ஜனவரி | 2017 டிசம்பர் | 02 |
| திரு ராஜித ஹல்வெல | அங்கத்தவர் | 2017 ஜனவரி | 2017 டிசம்பர் | 03 |

குழுவின் அங்கத்தினர்கள் அனைவரும் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் என்பதுடன் அவர்கள் கல்வித் தகைமையுள்ள நிதியியல் முகாமைத்துவமும் பெற்றவர்கள். சட்டம், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் நிதி துறைகளில் ஒவ்வொருவரும் அனுபவம் வாய்ந்தவர்கள். இந்த ஆண்டறிக்கையில் அங்கத்தவர்களின் விபரக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. சபையின் கணக்காய்வு குழுவின் பட்டயத்திற்கு அமைவாக சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வு குழுவின் செயலாளராகப் பணிபுரிவார்.

### உள்ளக கணக்காய்வும் சபையின் கணக்காய்வுப் பட்டயமும்

உள்ளக கணக்காய்வு மற்றும் சபை கணக்காய்வு ஆகியயை திறமையாக மற்றும் சுயாதீனமாக தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு பட்டயம் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பட்டயம், உள்ளக் கணக்காய்வின் பரப்பெல்லை, செயற்பாடுகள், பொறுப்புகள், அதிகாரங்கள், அறிக்கையிடல் நடைமுறைகள், சுயாதீனத்தன்மை மற்றும் நோக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. சபையின் கணக்காய்வு குழுப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள நியதிகளினுள் குழு செயற்படுகின்றது. பட்டயத்தின் நியதிகளின் படி பணிப்பாளர் சபையின் கீழ்வரும் பொறுப்புகளை பூர்த்திசெய்வதற்கு, உதவுதல் குழுவின் பரப்பெல்லையாக அமைந்துள்ளது.

(அ) வங்கியின் நிதியியல் கூற்றுகளின் ஒருங்கிணைப்பு
(ஆ) வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் வினைத்திறன்
(இ) வங்கியின் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை
(ஈ) வங்கியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை

### உள்ளக கணக்காய்வு கையேடு

உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை பொதுவாக ஆளுகை செய்யும் கொள்கைகள், நியமங்கள் மற்றும் நடைமுறைகளை வரையறுப்பதுடன் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் தொழிற்பாட்டின் சுருக்கத்தை வங்கியின் உள்ளக கணக்காய்வுக் கையேடு கொண்டுள்ளது.

### குழுவின் பணியும் பொறுப்புகளும்

வங்கியின் நிதியியல், நிர்வாக மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் பணிப்பாளர் சபைக்கு உதவுவது சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். சபையின் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையில் உள்ளடங்குபவை.

- வங்கியின் நிதி அறிக்கையிடல் இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளுடன் நேர்மையாகவும் இணங்குவிப்பாகவும் செயற்படுவதை கண்காணிப்பது
- செயற்படுத்தல் மற்றும் நிதிசார்ந்த கட்டுப்பாட்டு முறைகள் உறுதியாக உள்ளதா என்பதை மீளாய்வு செய்வது.
- உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையையும், செயலாற்றல் மதிப்பீட்டையும் கண்காணிப்பது மற்றும் மீளாய்வு செய்வது.
- வங்கியினால் சந்திக்கப்படும், இடர்களை தவிர்ப்பதற்கு/குறைப்பதற்கு, உள்ள உள்ளக ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமையை மீளாய்வு செய்வது.
- அனைத்து ஒழுங்கமைப்பு விதிகள் தொடர்பாகவும் இணங்குவிப்பாக செயற்படுவதையும் கண்காணிப்பதையும் மீளாய்வு செய்வது.
- வெளியக கணக்காய்வாளர்களுடன், அவர்களின் கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் அறிக்கைகள் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்துவது.
- வர்த்தகத்தின் நிதி அந்தஸ்து மற்றும் அலுவல்கள் மீதான குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் அனைத்து விடயங்கள் குறித்தும் சபை அறிந்திருப்பதை குழு உறுதிப்படுத்துவது.

### கூட்டங்கள்

2017 ஆண்டின் போது நான்கு கூட்டங்கள் நடந்தன. சபையின் கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பாக அரசாங்க கணக்காய்வின் அத்தியட்சகர் பிரதிநிதியாக கலந்துகொண்டார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

# சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை (தொடர்ச்சி)

### 2017ம் ஆண்டில் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்

கிழ்வரும் செயற்பாடுகளில் குழு பங்குபற்றியது.:

01. சபையின் கணக்காய்வுக் குழுவினால் 2016ம் ஆண்டுக்கு அமுல்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான உள்ளக கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.

02. 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதியியடல் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக 31 டிசம்பர் 2016இல் முடிவடைந்த ஆண்டுக்கான, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரிவு 14(2)(C) பிரிவின் கீழான அறிகை மீளாய்வு செய்யப்பட்டது.

03. கிளைகளின் வரவு செலவு திட்ட இலக்குகள் எய்தப்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் குழு மீளாய்வு செய்தது. கிளைகளினால் பேணப்படும் உத்தேச இலக்குகள் மற்றும் தரமான புத்தகங்கள் மற்றும் கிளைகளினால் மேற்கொள்ளப்படும் பதிவுகள் என்பவற்றில் குழு விசேட கவனம் செலுத்தியது.

04. 2016ம் ஆண்டு முடிவடைந்த வங்கியின் நிதியியில் கூற்றுகள் மற்றும் 31 மார்ச், 30 ஜுன், 30 செப்டெம்பர் முடிவடைந்த காலாண்டு கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், வெளியிடப்படுவதற்கு முன்னர் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கியது.

05. ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் அனைத்துடனும் ஒத்துப் போவதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குழு காலாண்டு மீளாய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

06. வங்கியினால் முகங்கொடுக்கப்படும் இடர்களை இடர்ப்பிரிவு உரிய காலத்தில் அடையாளம் காண்பதை உறுதிப்படுத்துவதற்காக இடர் பிரிவின் செயலாற்றல்களை குழு மீளாய்வு செய்தது.

07. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகைகள் காலாண்டு மீளாய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

08. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிரேஸ்ட ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டது.

09. மத்திய வங்கியின் ஆய்வறிக்கைக்கு அமைவாக திருதத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மீளாய்வு செய்யப்பட்டது.

10. உள்ளக கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டது.

11. குழுவின் விதப்புரைக்கு பிரதிபலிப்பாக, உள்ளக கணக்காய்வு தயாரித்த உள்ளக கணக்காய்வு கையேட்டை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

12. வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கு முகாமைத்துவத்தின் பதில்களை குழு கண்காணித்துள்ளதுடன் மீளாய்வும் செய்துள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றல்களின் திறமையை குழு மீளாய்வு செய்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒத்ததாக, உள்ளக கணக்காய்வு பணிகளின் போதுமை இருப்பதையும் கண்காணித்துள்ளது.

### வெளியக கணக்காய்வு அறிக்கைகள்

சட்டத்தின்படி, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார், வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழு கூட்டங்களின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புகளை விவாதிக்க அழைக்கப்பட்டனர். கணக்காய்வு நோக்கத்திற்காக, வெளிவாரி கணக்காய்வாளருக்கு அவசியமாகும் அனைத்துத் தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதை இக்குழு உறுதிசெய்தது. இறுதியான கணக்காய்வு அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள வெளியக கணக்காய்வு அவதானிப்புகளை குழு மீளாய்வு செய்துள்ளதுடன், வெளியக கணக்காய்வாளர்களின் அவதானிப்புகளுக்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள சரிப்படுத்தல் நடவடிக்கைகளின் போதுமையையும் மீளாய்வு செய்துள்ளது.

### உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பு

உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பின் கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்புடன் ஒத்துப் போகத்தக்கதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு திறமையானதாக இருப்பதை, பணிப்பாளர் சபையின் சார்பாக, குழு மீளாய்வு செய்தது.

### அறிக்கையிடல்

குழுவின் குறிப்பு விதிமுறைகளின் அனைத்துப் பொருள் அம்சங்களிலும் தொகுக்கப்பட்டுள்ளன என்ற கருத்தைக் குழு கொண்டுள்ளது. கூட்டங்களின் குறிப்புகளுடன் அதன் செயற்பாடுகள் பணிப்பாளர் சபைக்கு குழுவினால் நேரடியாக சமர்ப்பிக்கப்படுகின்றது.



**திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன**
*தலைவர் - சபையின் கணக்காய்வுக் குழு /பணிப்பாளர்*

# சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

**• சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் தொகுப்பு**

2017ம் ஆண்டு சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம் என்பவர்களை அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது.

**2017ம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளில் கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டு குழு அமைந்திருந்தது**

| | |
|---|---|
| திரு.ரொ'ான் ஹெட்டியாராச்சி | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் (குழுவுக்குத் தலைவர்) |
| திரு நிரோஷன் கமகே | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. ராஜித என் ஹல்வல | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. டபில்யூ.எம். தயாசிங்க | - பொது முகாமையாளர் |
| திருமதி. ஜே.ஜ. சேனாநாயக்க | - உதவிப் பொது முகாமையாளர் இடர் முகாமைத்துவ பிரிவு |
| செல்வி. நிஷானி லொக்குகே | - தலைவி - சட்டப்பிரிவு |

**2017ம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டு குழு அமைந்திருந்தது.**

| | |
|---|---|
| திரு.எஸ்.ஜி.சேனாரத்ன | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் (குழுவுக்குத் தலைவர்) |
| திரு நிரோஷன் கமகே | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. ராஜித என் ஹல்வல | - நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. டபில்யூ.எம்.தயாசிங்க | - பொது முகாமையாளர் |
| செல்வி. டபில்யூ.ஜி.எஸ்.எஸ்.கே. அபேவிக்ரம | - பதில் உதவிப் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவ பிரிவு |
| செல்வி. நிஷானி லொக்குகே | - தலைவி - சட்டப்பிரிவு |

**சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பு வங்கி நிருவன ஆளுமை மீதான 2007 இன் 12 ஆம் இல. பணிப்புரையின் 3 (6) (V) பிரிவிற்கு இணங்குவிப்பாக, பணிப்பாளர் சபையினால் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டது.

27.03.2012 இல் நடந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம் அங்கீகரிக்கப்பட்டு கிரமமாக செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் அதன் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகின்றது.

பட்டயத்திற்கு அமைவாக, சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு, .

- வங்கியின் இடர் அவாவை மீளாய்வு செய்வது.
- நிறுவப்பட்டுள்ள இடர் மட்டங்களுக்கு அமைவாக, வங்கியின் முக்கிய இடர் கொள்கைகளை மீளாய்வு செய்வதும் அங்கீகரிப்பதும், மற்றும் முக்கிய மட்டங்களுக்கு வங்கியின் இணக்கப்பாடு மீதான அறிக்கைகளைப் பெறுவதும்.
- வங்கி முகங்கொடுக்க வேண்டியுள்ள இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாக முகாமைத்துவத்திடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது, மீளாய்வு செய்வது மற்றும் கருத்துகளை வழங்குவது என்பவற்றுடன், கடன். சந்தை, திரவத்தன்மை செயற்பாட்டு இடர்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வகைப்படுத்தலின் கீழான வெளிப்படுத்தல், குறிப்பிடத்தக்க அவதானிப்புகள் என்பவையும், அத்தகைய இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாகவும். மற்றும் வங்கியின் வர்த்தகத்தை செயற்படுத்துவதற்கும் வங்கியினால் கைக்கொள்ளப்படும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து புரிந்து கொள்வதற்கும் போதுமைத் தன்மையை அறிந்து கொள்ளுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு உதவுவது. அத்தகைய இடர் வெளிப்படுத்தல்களின் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருத்தமானதுமான வெளிப்படுத்தல் கண்காணிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட அளவீடுகளும் முகாமைத்துவக் கருத்துகளும் அவதானிக்கப்பட்டன.
- வங்கியின், முக்கிய கொள்கைகளும் முகாமைத்துவ இடர் வெளிப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளும் அமைப்பு முறைகளும் உள்ளடங்களாக. வங்கியின் கடன், சந்தை, திரவத் தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்யும் சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், இடர் முகாமைத்துவ முறைமைகளும் அழுத்த பரிசோதனைகளுக்கான அணுகுமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன.
- அனைத்து இடர் வகைகளையும் ஆனால் கடன், சந்தை, பணப்புழக்கம், தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க/மதிப்பு இடர்கள் என்பவை உள்ளடங்களாக, அதற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் வங்கிக்கு பொருத்தமான ஆபத்துக் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் மூலம் மதிப்பீடு செய்யலாம்.
- வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்புத் தேவைகளின் அடிப்படையில், குழுவால் அமைக்கப்படும் இடர் சகிப்புத்தன்மைக்கு அப்பால் எடுக்கப்பட்ட இடர்களைத் தீர்மானிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அதிகாரசபைகளுக்கு இணங்க இடர் முடிவுகள் எடுக்கப்பட்டன.
- இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் இடர் போதுமை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடர் அலுவலர்களின் தகைமைகள் மற்றும் பின்னணி என்பவற்றை மதிப்பீடு செய்தல்.
- இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரத்தை மீளாய்வு செய்தல்.

# சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை (தொடர்ச்சி)

- குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளிட்ட வங்கியின் இடர் மூலதன கட்டமைப்பு (கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்கள்), குறித்த மீளாய்வு.
- வெளிப்படுத்தலை முகாமைத்துவப்படுத்துவதற்கு முகாமைத்துவம் பயன்படுத்தும் குறிப்பிட்ட கொள்கைகள், படிமுறைகள் மற்றும் முறைமைகள் உள்ளடங்களாக வங்கியின் ஐந்தொகை, ஐந்தொகைக் கட்டமைப்பு, மூலதனம், நிதியிடல், வட்டி வீதம் மற்றும் திரவ முகாமைத்துவ கட்டமைப்பை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் திரவத்தன்மை, வைப்புத் தொகை மற்றும் நிதியிடல் செயற்பாடுகள் பற்றிய முகாமைத்துவத்தில் இருந்து அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் ஒழுங்குமுறை மூலதன நிலை மற்றும் மூலதனக் கட்டமைப்பைப் பற்றிய முகாமைத்துவ அறிக்கையை மீளாய்வு செய்தல்.
- அதன் மூலதன இலக்குகள் உட்பட வங்கி மூலதன மதிப்பீட்டு கட்டமைப்பை மீளாய்வு செய்தல். - இடர் முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான விடயங்களைப் பொறுத்தவரை, உதவி பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம், தலைமை இணக்க அலுவலர், பிரதான கணக்காய்வாளர், பிரதான நிதி அலுவலர், பொருளாளர், முகாமைத்துவத்தில் உள்ள ஏனையவர்கள், சுயாதீன கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் வெளிவாரி நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து தகவலைப் பெறவும்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்தக் குழுக்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் செயல்திறனை சோதிக்க சிரேஸ்ட நிர்வாகத்தால் தொடக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல்/அந்தக் குழுக்கள் அவர்களுடைய பணிப்பாணை தொடர்பாக சிறந்த விளக்கத்தைக் கொண்டுள்ளார்கள் மற்றும் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் உருவாக்கப்பட்ட தரம் மற்றும் அளவு சுட்டளவுகளினுள் இடர்களை அடையாளம் காணும், அளவிடும், தவிர்க்கும், இல்லாமல் செய்யும், மாற்றும் அல்லது முகாமைத்துவம் செய்வதற்கான போதியவு பொறிமுறை, வருடந்த செயல் திட்டம், தொடர்புடைய உபாயமார்க்கம், கொள்கைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட குழுக்களின் சட்டவரம்புகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
- முகாமைத்துவக் குழுக்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பிட்ட இடர்களைக் கையாள்வதை தொடர்ந்து பாராமரிப்பதுடன், அவர்களது செயல்பாடுகளின் செயலாற்றுகைகளில் மற்றும் /அல்லது அவர்களின் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் ஏதேனும் இடையூறுகள், தடங்கல்கள், அதைரியப்படுத்தல்கள் அல்லது தடைகள் ஏற்படுமாயின் உடனடியாக சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.
- நோக்கம் கொண்ட இடர் முகாமைத்துவ நோக்கங்களுக்கு சேவை செய்ய இத்தகைய குறிகாட்டிகள் போதுமானதை நிர்ணயிக்கும் நோக்கத்துடன், எந்த நேரத்திலும் குறிப்பிட்ட இடர்களின் அளவைக் கண்காணிக்க வடிவமைக்கப்பட்ட இடர் குறிகாட்டிகளை மதிப்பீடு செய்தல்.
- ஒவ்வொரு இடர் குறியீட்டிற்கும் எதிராக ஒவ்வொரு மாதமும் கணக்கிடப்பட்ட உண்மையான விளைவுகளை மதிப்பாய்வு செய்து, குறிப்பிட்ட இடர்களின் விளைவுகளை குறைக்க உடனடி திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும், அத்தகைய இடர்கள் பணிப்பாளர் சபையினால் வரையறுக்கப்பட்ட விவேகமான வரையறையை விட அதிகமாக இருக்கும்.

### சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டங்கள்

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு காலாண்டுக்கு ஒருமுறை சந்திப்புகளை மேற்கொண்டது. இந்த வருடம் வங்கி நான்கு சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தியது. அங்கத்தவர்களின் வருகை பின்வருமாறு அமைந்தது

| பணிப்பாளரின் பெயர் | வருகை தந்த கூட்டங்களின் எண்ணிக்கை-இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு.ரொஷான் ஹெட்டியாராச்சி (தலைவர் - முதல் இரு காலாண்டுகள்) | 2/4 |
| திரு.எஸ்.ஜி.சேனாரத்ன (தலைவர் - முதல் இரு காலாண்டுகள்) | 2/4 |
| டாக்டர் நிரோஷன் கமகே | 1/4 |
| திரு. ராஜித என் ஹல்வல | 4/4 |

இவ்வருடம், சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு, குழுவிற்கு சாட்டப்பட்ட பொறுப்புகளை பூர்த்தி செய்வதற்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மற்றும் முகாமைத்துவ இடர்களைக் கையாளும் சிரேஸ்ட முகாமைத்துவ நபர்களுடன் மிக நெருக்கமாக பணிகளை மேற்கொண்டது.

### அறிக்கையிடல்

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் விதப்புரையுடன், சபையின் பார்வைகள், இசைவு மற்றும் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை சபையிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவில் முன்மொழியப்பட்டவைகள் மற்றும் கலந்துரையாடப்பட்டவை சபைக்கு அறிக்கையிடப்பட்டது. குறிப்பிட்ட வருடத்தில் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் பணிப்பாளர் சபை மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. சபைக்கு அவசியமான தகவல்களுடன் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் கூட்டக் குறிப்புகள் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.



**திரு. எஸ். ஜீ. சேனாரத்ன**
*தலைவர் - சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு*

31 டிசம்பர் 2017

# சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை

### குழுவின் தொகுப்பு

வங்கியின் நான்கு பணிப்பாளர்களையும் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்று பணிப்பாளரையும் கொண்டு அமைந்திருக்கும். பெரும்பான்மையான குழுவின் அங்கத்தவர்கள் நிறைவேற்று அதிகாரம் அற்ற சுயாதீனப் பணிப்பாளர்கள் ஆவர். குழு மூன்று வருடத்திற்கு நியமிக்கப்படும்.

2017ம் ஆண்டின் இறுதியில், வங்கியில் கீழ் கண்ட சுயதீனமாக நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டு சபையின் பரிந்துரைக் குழு அமைந்திருந்தது.

2017ம் ஆண்டின் அங்கத்தவர்கள்

திரு. கே.கே.டீ. ஜினதாச - தலைவர்
டாக்டர் நிரோஷன் கமகே - அங்கத்தவர்
திரு. பி.ஏ. குலசூரிய - அங்கத்தவர்
திரு.ஈ.ஏ லெஸ்லி எதிரிசிங்க - பதில் அங்கத்தவர்

### குழுவின் பரப்பெல்லை

தற்போதைய சபையின் பணிப்பாளர்களின் மறுபரிசீலனை, முக்கிய நிர்வாக அலுவலர்களுக்கான திட்டமிடல், சபையின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய நிர்வாக அலுவலர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரைகள் (அல்லது பரிந்துரைக்காது) செய்தல் வேண்டும். வங்கிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பணிப்புரை 3(3) இன் கொடுக்கப்பட்டுள்ள மூலப்பிரணமானத்திற்கு அமைவாக அலுவலகத்தை நடத்த பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வு ஆகியவற்றிற்கான தகைமைகளை உருவாக்கல்.

### குழுவின் பிரதான பணிகள்

- பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுக்க-நியமிக்க நடைமுறையை அமுல்படுத்தல், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவியுயர்வு செய்வதற்கு அவசியமான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய இயல்புகளைத் தீர்மானித்தல், உள்ளீர்ப்பு திட்டமிடல் மற்றும் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கியின் விவகாரங்கள் தொடர்பாக பொருத்தமான தொலைநோக்கு உள்ளதென்பதை உறுதிசெய்வதுடன், சந்தையில் வங்கி போட்டியிடுவதற்கு போதியளவு இயலளவைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் நோக்குடன் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பை மீளாய்வு செய்தல்.
- பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் உரிமையையும் மற்றும் அவர்களின் சொந்த ஆளுகை நடைமுறைகளையும் மதிப்பீடு செய்தல்.
- பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் பொருத்தம் மற்றும் உரிமையை மதிப்பீடு செய்தல்
- அவ்வப்போது மேலதிக-புதிய நிபுணத்துவத்தின் தேவைகள் குறித்து பரிசீலித்தல் மற்றும் பரிந்துரைத்தல்.

### குழுவின் கூட்டங்கள்

குழுவானது வருடத்திற்கு இரு முறை கூடுதல் வேண்டும். கூட்டத்தின் தேவை எழும் பொழுது கூட்டத்தை கூட்டுவதற்கு முடியும். 2017ம் ஆண்டு மூன்று குழுக்கூட்டங்கள் நடைபெற்றது.

கூட்டம் நடத்த தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கையானது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் அவர்கள் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக கூட்டம் முழுவதிலும் இருக்க வேண்டும். குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது.

கூட்டத்தில் பங்குபற்றிய அங்கத்தவர்களின் வருகை

| பணிப்பாளரின் பெயர் | பரிந்துரைக் குழுவில் பதவி | பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திரு. கே.கே.டீ. ஜினதாச | தலைவர் | 03 | 03 |
| டாக்டர் நிரோஷன் கமகே | அங்கத்தவர் | 02 | 02 |
| திரு. பி.ஏ. குலசூரிய | அங்கத்தவர் | 02 | 02 |
| திரு.ஈ.ஏ லெஸ்லி எதிரிசிங்க | பதில் அங்கத்தவர் | 02 | 02 |

திரு. டபில்யூ.எம். தயாசிங்க, பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் திரு.எஸ். விஜேவர்தன, உதவி பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் சட்டம்) குழுவின் அழைப்பின் சார்பாக கூட்டத்தில் பங்குபற்றினர்.

வங்கியின் கம்பனி செயலாளர், குழுவின் செயலாளராக செயற்படுவார்.

**திஸ்ஸ ஜினதாச**
குழுவின் தலைவர்

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம்

## இடர் கலாச்சாரம் மற்றும் தொலைநோக்கு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி தயாரிப்புகள், சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் முழுமையான வங்கி நடவடிக்கைகள் முழுவதிலும் இடர்களை நிர்வகிக்கும் அதேநேரத்தில் செழிப்பை நோக்கிய பயணத்தின் நிலையான உபாயமார்க்க வளர்ச்சியியை ஆதரிக்க வலுவான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு அவசியம் என்பதை உறுதியாக நம்புகின்றது.

துரிதமாக மாற்றமடைந்துவரும் நிதியியல் சுற்றாடல்கள், பல்வேறு வகையான இடர்களுக்கு வங்கிகளை பாதுகாப்பற்றதாக்குகின்றன. நடவடிக்கை அல்லது நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி நிருவனமொன்றில் ஏற்படக்கூடிய நிதியியல் இடர்களில் பாதகமான தாக்கங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளுள்ளன. அத்தகைய விளைவுகளின் காரணமாக வருவாய் ஈட்டல்கள்-மூலதனங்கள் என்பவற்றில் நேரடியான நட்டங்கள் உருவாக்கலாம் அல்லது, வங்கியின் வர்த்தக நோக்கங்களை சந்திப்பதற்கு அதற்குள்ள தகுதியில் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமையலாம்.

வங்கியின் இடர் விபரத் திரட்டும் முகாமைத்துவமும் முக்கிய இடர் வகைப்படுத்தல்களான கடன் இடர், சந்தைப்படுத்தல் இடர், திரவ இடர், செயற்பாட்டு இடர், சட்ட இடர் மற்றும் மூலோபாய இடர் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது.

கட்டுப்பாடற்ற எல்லை வரம்புகள் அனைத்து பொருள் மற்றும் தொடர்புடைய இடர் வகுதிகள் மற்றும் இடர் மூலதன நிலைக்கான வங்கியின் ஆபத்து நிலையை விளக்குகின்றன.

பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட வரையறை வங்கியின் இடர் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட துறைகளுடன் வங்கியின் வளர்ச்சியடைந்துவரும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில் இடர்களை அடையாளம் காண்பது அளவிடுவது, கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பவை உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் வர்த்தக உத்திகள் மற்றும் நோக்கங்களுடன் ஒத்ததாக, இடர்களை மேற்கொள்ளும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இடர்களை எடுக்கும் அல்லது முகாமைத்துவம் செய்யும் ஊழியர்கள், இடரை மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளும் கலாச்சாரம் ஒன்றை வங்கி உருவாக்கியுள்ளதுடன், இடர்களைக் குறித்து எடுக்கும் தீர்மானங்கள் வெளிப்படையானதாகவும், தெளிவானவையாகவும் இருக்கின்றன. எடுக்கப்படும் இடர்களை தாங்கும் அரணாக போதுமான மூலதனத்தை வங்கி பேணுகின்றதுடன், எடுக்கப்படும் இடர்களுக்கான இழப்பீடுகளை செய்யும் கொடுப்பனவு தீர்வுகளாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வங்கியின் இடர் முகாமைத்துவ சட்டகம்

ஒரு நிறுவனத்தின் பரந்த இடர் முகாமைத்துவ கட்டுப்பாட்டு சட்டகமானது அனைத்து மட்டங்களிலும் மற்றும் அனைத்து ஆபத்து வகைகளிலும் ஆபத்துகளை மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்பணர்வுக்கும் உதவுகின்றது. ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ சட்டகத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு,

- இடர் ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு
- இடர் நாட்டம்
- இடர் முகாமைத்துவக் கருவிகள்
- இடர் விழிப்புணர்வு பற்றிய கலாச்சாரம்




வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் படிமுறையானது இடர் முகாமைத்துவம், இடர் ஆளுகை, உள்ளகக் கட்டுப்பாடு, இடர் நாட்டம், இடர் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் இடர் சார் கலாச்சராம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கூறுகளைக் கொண்டுள்ளது. வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை அடிப்படையிலான கலாச்சாரம் கொண்ட அந்தக் கூறுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன மற்றும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு நிறுவனத்தினதும் உபாயமார்க்க முகாமைத்துவத்தின் மத்திய பகுதியாக இடர் முகாமைத்துவம் உள்ளது. இது அவர்களின் செயல்முறைகளுக்கு பொருந்தக்கூடிய இடர்களை நிறுவனங்கள் முறையாகக் கையாளும் ஒரு வழிமுறையாகும். ஒரு வெற்றிகரமான இடர் முகாமைத்துவ முன்முயற்சியானது நிறுவனத்தில் உள்ள ஆபத்து நிலைக்கு விகிதாசாரமாக இருத்தல் வேண்டும், பெருநிறுவன நடவடிக்கைகளுடன் இணைந்திருத்தல் வேண்டும், அதன் நோக்கத்தில் விரிவானது வழக்கமான சூழ்நிலைகளில் மாற்றம் மற்றும் மாறும் சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் வகையில் மாறும். இடர் முகாமைத்துவத்தின் கவனம் குறிப்பிடத்தக்க இடர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பொருத்தமான இடர் பதில்களை நடைமுறைப்படுத்தல் ஆகும். நிறுவனத்தின் அமைத்து நடவடிக்கைகளில் இருந்தும் அதிபட்ச நிலையான மதிப்பை அடைய வேண்டும் என்பது தான் குறிக்கோள். இடர் மேலாண்மை ஒரு நிறுவனத்தைப் பாதிக்கும் காரணிகளின் சாத்தியமான தலைகீழ் தன்மை மற்றும் குறைபாடு பற்றிய புரிதலை மேம்படுத்துகின்றது. இது வெற்றி நிகழ்வை அதிகரிக்கின்றது மற்றும் தோல்வியின் நிகழ்தகவு மற்றும் அமைப்பின் குறிக்கோள்களை அடைவதற்கான நிச்சயமற்ற நிலை ஆகிய இரண்டையும் குறைக்கின்றது.

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

- வங்கியின் இடர் ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு வணிக செயல்பாடு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு/இணக்கம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. வங்கிக்கு எதிரான ஏற்றுக்கொள்ள முடியாத இடர் வெளிப்பாட்டைத் தடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் இந்த மூன்று வரிசைப் பாதுகாப்பு தொழிற்படுத்தப்படும். பொறிமுறையின் முக்கிய செயற்பாடாக சபை இருப்பதுடன் சிரேஸ்ட முகாமைத்துவம் இடர் முகாமைத்துவம், இடர் அளவீடு மற்றும் கண்காணிப்பு கட்டுப்பாடு என்பற்றுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வரையறுப்பதுடன் ஊடாக மேற்கொள்வதுடன் மூன்றாவது நிரலில் சுயாதீன கணக்காய்வின் ஊடாக பாதுகாக்கப்படுகின்றது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி எதிர்கொள்ளப்பட்ட கடன், சந்தை மற்றும் செயற்பாட்டு அபாயங்களுக்கு பொறுப்பான இடர் மேலாண்மை கொள்கைகளையும் நடைமுறைகளையும் வரையறுத்துள்ளது.

இணக்கத்தை உறுதிப்படுத்த கொள்கைகள் மற்றும் முறைமைகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. வங்கியின் நிறுவனக் கட்டமைப்பானது இடர்களை எடுத்துக்கொள்வதையும் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் தனிப்பட்டவர்களின் வகிபாகங்களையும் பொறுப்புகளையும் தெளிவாக வரையறை செய்கின்றது. திறனை நிர்வகித்தல் மற்றும் மீளாய்வு பொறிமுறையின் ஊடாக வங்கியில் உள்ள இடர் முகாமைத்துவக் கொள்கைகளை உள்முகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறுபட்ட இடர்கள் தொடர்பு குறைவதால் அல்லது ஆபத்தில் அதிகரிக்கும் என்பதால், வங்கியின் இடர் முகாமைத்துவ செயல்முறை, அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் பொருத்தமானதாக இருப்பதைக் கண்டறிந்து பிரதிபலிக்கின்றது. வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை செயல்பாடு, நிறுவனததிற்கு இடையில் இடர் ஆபத்து தொடர்பாக பார்க்க பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளது.



# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### சபை மற்றும் சபையின் உப குழுக்களின் பொறுப்புகள்

வங்கியின் இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வையிடுவதற்கான இறுதிப் பொறுப்பையும், நிர்வாகத்தின் கட்டமைப்பையும், கொள்கை கட்டமைப்பையும், இடர் முகாமைத்துவ செயன்முறையையும், ஒரு வழக்கமான அடிப்படையில் அபாயகரமான ஆபத்தான முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மற்ற விடயங்களையும் மீளாய்வு செய்வதற்குமான இறுதிப் பொறுப்பை பணிப்பாளர் சபை தன்கையில் கொண்டுள்ளது.

கடன், சந்தை, தொழிற்பாடு மற்றும் வேறு சில இடர்களை நிர்வகிப்பதில் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்களாக வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பைக் கண்காணிப்பதில் சபைக்கு உதவுவதற்கு சபை, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவை நியமித்துள்ளது.

செயற்பாட்டு கட்டுப்பாடுகள் நடைபெறுகின்றன என்பதையும், சம்பந்தப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சபையின் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது.

குறிப்பாக, நடைமுறையில் இருக்கும் தொழிற்பாட்டுக் கட்டுப்பாட்டுக்கு இணக்க கடன் கணக்காய்வுகளை அது மேற்கொள்ளுகின்றது.

சபைக் குழுக்களுக்கு அப்பால், முகாமைத்துவக் குழுக்கள் பல்வேறுபட்ட இடர் பரப்புகளுக்கான வினைத்திறனான இடர் சட்டகங்களையும் கலாச்சாரத்தையும் வடிவமைத்தல், அமுல்படுத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றின் மீதான மேற்பார்வை கண்ணோட்டம் தொடர்பாகவும் பொறுப்பாக உள்ளன. வியாபார வரிசை முகாமையாளர்கள் அவர்கள் பொறுப்பாக உள்ள பரப்புகளில் வரும் இடர்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் விருத்தியடையும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்

2012 இல் வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ பிரிவு நிறுவப்பட்டது. சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, ஒருங்கிணைந்த நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் உப குழுக்களான கடன் மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான விதிமுறைகளும் பூரணமடைந்துள்ளன.

இடர் முகாமைத்துவ கொள்கை, கடன் கொள்கை, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ கொள்கை, திரவ முகாமைத்துவ கொள்கை மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை என்பவை கடன், திரவத்தன்மை மற்றும் அவதானிப்பு இடர் முகாமைத்துவம் என்பவற்றிற்கு பொருத்தமான வரையறைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டன.

வங்கியின் கடன் கையேடு மீள் மதிப்பிடப்பட்டதுடன், இடர்களை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடும் செயற்பாட்டு அதிகாரிகளை நெறிப்படுத்தவதற்காக முழுமையான கையேடு உள்ளகத்திற்கு அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் அங்கீகாரத்திற்கு முன்னர், குறிப்பிடத்தக்க வழிமுறை ஒன்றினூடாக கடன் இடர் வெளிப்படுத்தல் சுதந்திரமாக மீளாய்வு செய்யப்பட்டது.

வாடிக்கையாளர்களின் இடர் வியாபரத்திரட்டின் அடிப்படையில் வசதிகளை வகைப்படுத்துவதற்கு இடர் தரப்படுத்தல் மாதிரி ஒன்று உள்ளகத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், புதிய வாடிக்கையாளர்களை மதிப்பீடு செய்வதற்காக வங்கி முழுவதும், இம்மாதிரி கையேடு அமுலாக்கப்பட்டது.

பிரச்சினைக்குரிய கடன்களை மீள் மதிப்பீடு செய்யவும், ஆரம்பதிலேயே அவற்றின் எச்சரிக்கை சமிக்ஞைகளை அடையாளம் காணவும், கடன் மீளாய்வு பொறி முறை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு நிகழ்வுகளின் கீழ் வங்கியின் கடன் மூலதனம் மற்றும் திரவ நிலைமைகளை மதிப்பிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் அழுத்த பரிசோதனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களில் நுழையும் பொழுது குறைந்த, மத்திய மற்றும் உயர் இடர் வகுதிகளாக வகைப்படுத்துவற்கும் வாடிக்கையாளர்களை மதிப்பீடு செய்வதற்கும் இடர் அணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திணைக்கங்களுக்கு இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு அனைத்து இடர் சார்ந்த நடைமுறைகள் மற்றும் வங்கியின் இடர் நாட்ட அறிக்கை உட்பட ஒரு ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது.

வங்கியின் செயற்பாட்டு இடர் குறைப்பு செயன்முறையை வலுப்படுத்தும் பொருட்டு குறைந்தபட்டச பாதுகாப்பு அம்பசங்கள் பற்றிய ஆய்வுகள் நடாத்தப்பட்டன. வங்கியின் கடன் இடரினை குறைப்பாற்காக வருமான மூலத்தை உறுதிப்படுத்தும் மொடல் உருவாக்கப்பட்டது.

குஜரு பணிப்புரைகள் மற்றும் நியதிச்சட்ட வழிகாட்டல்களுடன் ஒருங்கிணைத்து மேம்படுத்தப்பட்ட இடர் மேட்ரிக்ஸ் 2ம் பாகம் அமுல்படுத்தப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர கடன்களுக்கு இடர் தரப்படுத்தலை அமுல்படுத்துவதன் ஊடாக கடன் இடர் கலாச்சாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

### • இடர் நாட்டம்

வங்கியின் இடர் பற்றாக்குறையானது, அதன் மூலோபாய இலக்குகளை அடைவதில் வணிகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள இடர் சாராசரி குவாண்டத்தை ஈடுசெய்வதற்கு வங்கியின் விருப்பத்தை வரையறை செய்கின்றது. ஒழுங்குமுறைத் தேவைகள், மூலோபாய இலக்குகள், மூலதனப் போதுமை மற்றும் பிற விவேகமான காரணிகள் ஆகியவை குழுவால் ஆபத்து நாட்ட அறிக்கையை வரையும் போது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

வங்கியின் இடர் நிர்வாகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது. இடர் நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை வரம்புகளை வெளிப்படுத்தும் பொருட்டு குழு தர மற்றும் அளவு நடவடிக்கைகளை உருவாக்கும். சபையினால் உருவாக்கப்பட்ட உபாயமார்க்க வழிகாட்டல்களை கொள்கைகளாகவும் நடைமுறைகளாகவும் உருமாற்றுவதும், அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வினைத்திறனுள்ள படிநிலையை உருவாக்குவதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கடமையாகும்.

வங்கியின் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் இந்த கொள்கைகள் சரியாக ஒழுங்கை தொடர்புபடுத்தி, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிந்துள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இடர் சகிப்புத்தன்மையானது அளவிடக்கூடிய இடர்களுடன் தொடர்புடையது பொதுவாக வங்கி சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தரமான அபாய இடர் அளவுகள் வழிகாட்டுதல்களாக அறிவிக்கப்பட்டு, நிர்வாக வணிக முடிவுகளிலிருந்து வருகின்றன.

வங்கியின் இடர் நாட்டம், இடர் முகாமைத்துவ செயற்பாட்டினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றதுடன் அது அன்றாடம் பணிப்பாளர் சபைக்கு, கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கு மற்றும் உரிய குழுக்களுக்கு அறிக்கையிடும்.

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

இந்தக் கொள்கைகளை உள் மற்றும் புறச்சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, பணிப்பாளர் சபை அவ்வப்போது இந்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்து, அதற்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். இந்த இடர் நாட்ட வரம்புகள் மாதாந்தம் மற்றும் காலாண்டுகளில் கண்காணிக்கப்படுவதுடன், வங்கியின் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைப்புக்குறியீடுகளின் இடர் முகாமைத்துவ இயலளவுகள், வியாபார சந்தர்ப்பங்கள், வியாபார உபாயமார்க்கங்களுடன் இணங்கும் வகையில் குறைந்த பட்சம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் சட்டகத்தில் இடர் நாட்ட அறிக்கைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

## இடர் முகாமைத்துவ கருவிகள்

இடர் முகாமைத்துவ கருவிகள் இடர் அடையாளம் காணல், அளவீடுகள், மதிப்பிடல், கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு வசதியளிக்கும். இடர் முகாமைத்துவக் கருவிகள் கொள்கைகள், வரையறைகள் மற்றும் அழுத்தப் பரிசோதனைகளை கொண்டிருக்கும். இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் பொறுப்பாக இடர் அளவீடு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதல் அமைந்துள்ளது. முகாமைத்துவக் குழுக்களுக்கும் உபாயமார்க்க தீர்மானங்களை சபை எடுக்கும் பொழுதும் வழமையான மற்றும் தற்காலிக அறிக்கைகள் மீளாய்வுக்காக வழங்கப்படும். வழங்கிய அறிக்கைகள், அடையாளம் காணப்பட்ட இடர்களின் தொகைகள், வகைகள் மற்றும் உணர்திறனின் தெளிவான வரைபடத்தை வழங்குவதற்கு உடன்பட்ட கொள்கை வரையறைகளுடன் ஒப்பிடப்பட்ட பண்டங்கள் மற்றும் பிரிவைச் சார்ந்த இடர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைகள் மீதான தகவல்களை உள்ளடக்கியிருக்கும்.




*அடிப்படை I, II, III மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏனைய ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள் மீதான அடிப்படையில் உருவாக்கப்பட்ட வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகமானது, முகாமைத்துவ இடரின் நோக்கம், படிமுறை மற்றும் வகிபாகங்கள் என்பவற்றை தெளிவாக வரையறுக்கும்.*

*கடன் இடர் நாட்டம், சந்தை இடர் வரம்புகள், மூலதனம் மற்றும் நிதியில் தேவைகள் பற்றிய முடிவுகளை எடுப்பதற்காக மாறுபட்ட சந்தை நிலமைகள் மற்றும் பிற இடர் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் வருமானம், மூலதனம் மற்றும் திரவத்தன்மை மீதான தாக்கத்தை மதிப்பீடு செய்ய தனிப்பட்ட இடர் நிலைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் அழுத்த சோதனைகள் செய்யப்படுகின்றது.*

## மூலதனப் போதுமை முகாமைத்துவம்

மூலதனப் போதுமை அளவீடுகள் என்பது இடருடன் தொடர்புடையது எனக் கருதும் குழுவின் மொத்த மூலதனப் போதுமையாகும். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதனுடைய ஒழுங்குபடுத்துனரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக அடிப்படை I, II, III சட்டகத்தைப் பயன்படுத்தி இடரை (பிளர் 1) அளவிட்டவாறு கீழ்வரும் வகையில் மூலதனப் போதுமையை கணிப்பிடுகின்றது.

மேலும், உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு படிமுறையை அபிவிருத்தி செய்து பராமரிப்பதற்கு கோரும் வங்கி சட்டத்தின் 2016ம் ஆண்டு 1ம் இலக்க பணிப்புரையில் அடிப்படை III இன் கீழ் கோரப்படும் மூலதனத் தேவைப்பாட்டுடன் இணைந்து மேற்பார்வை மீளாய்வு படிமுறை (அடிப்படை 111 இன் பில்லர் 2) மீதான ஒழுங்குபடுத்தல் சட்டகத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட 2013ம் ஆண்டின் 05ம் இலக்க பணிப்புரையின் படி அடிப்படை I, II,வின் தேவைப்பாட்டுக்கு அமைவாக பில்லர் 11 அமைந்திருக்கும்.

- கடன் இடருக்கான நியம அணுகுமுறை
- சந்தை இடருக்கான நியம அணுகுமுறை
- தொழிற்பாட்டு இடருக்கான அடிப்படை காட்டி அணுகுமுறை

31.12.2017 அன்றுள்ளவாறு அ.ஈ.மு.வ.யின் அடுக்கு 1 மூலதன விகிதம் 23.74% மாகவும் மொத்த மூலதன விகிதம் 24.29% மாகவும் இருந்தது. இந்த வீதங்கள் வங்கித் தொழிலின் சராசரிக்கு அதிகமானதாகவும், இடர் உறிஞ்சுதலின் வலுவான திறமையையும் சுட்டிக்காட்டுகின்றது.

பின்வரும் வரைபடங்களில் மூலதன முகாமைத்துவ அளவுருக்கள் காட்டப்படுகின்றன.



# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### பிரதான இடர்களை முகாமைத்துவம் செய்தல்

#### கடன் இடர்

வங்கியின் கடன் பெறுநர் ஒருவர் அல்லது எதிர்தரப்பினர், ஒப்புக்கொண்ட விதிமுறைகளுக்கு அமைவாக தனது கடப்பாடுகளை சந்திக்க தவறும் போது உருவாகும் சாத்தியமுள்ள இடர், கடன் இடர் என எளிமையாக வரையறுக்கப்படுகின்றது. அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் கடன் இடருக்கு முக்கியமான மூலகத்தை இது உருவாக்குகின்றதுடன், பல்வேறு உற்பத்திகளுக்கென எதிர்தரப்பினருக்கு வழங்கப்படும் கடன்களும் முற்பணங்களுமாகும்.

கடன் பெறுபவர்களும் எதிர் தரப்பினர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் நியமங்களை ஏற்படுத்துவது, உறுதியான இடர் முகாமைத்துவ துறை, வங்கி ஒன்றின் எதிர்தரப்பினருக்கான கடன் நிலைப்பாடு சீரழிவிற்கு வழியமைக்கக் கூடியதான பொருளாதாரம் அல்லது ஏனைய சூழ்நிலைகளின் தொடர்சியான மாற்றல்கள் எனும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில், வங்கி அவதானிப்பை செலுத்துகின்றது.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் அவா மட்டங்களுக்குள், வாடிக்கையாளர் தெரிவு, முன்னெச்சரிக்கை இடர் தாங்குதல், மீளாய்வு மற்றும் அறவீட்டு நடைமுறைகள், துறைகளை கண்காணிப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வது என்பவை குறித்து வங்கி கடன் கொள்கை ஒன்றையும் கடன் கையேடு ஒன்றையும் விருத்தி செய்துள்ளது. பொருத்தமான கடன் இடர் சுற்றாடல் ஒன்றை ஸ்தாபிப்பதன் ஊடாக, கடன் இடரின் அளவை அடையாளம் காணுவது, கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பவற்றிற்கு இந்த ஆவணங்கள் வழிகாட்டியாக இருக்கும். அத்துடன் உறுதியான கடன் வழங்கும் செயன்முறை ஒன்றின்கீழ் செயற்படுவது, பொருத்தமான கடன் நிர்வாகத்தைப் பேணுவது, அளவிடுதலும், கண்காணித்தலும் செயன்முறை மற்றும் கடன் இடர்மீது போதுமான கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்துவது என்பவையும் இவற்றிலடங்கும்.

வங்கியின் இடர் அவா மற்றும் வர்த்தக உற்பத்திகள் என்பவற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதாக பணிப்பாளர் சபையினால் கடன் கொள்கையும் கையேடும் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

கடன் இடர் செயற்பாடுகளுக்கான பொறுப்பேற்றலுக்கு, தனிப்பட்ட வர்த்தக கூறுகளும் வங்கியின் அனைத்து மட்டங்களிலும் நிலவும் ஆரோக்கியமற்ற போக்குகளும் காரணமாகவுள்ளன.

#### கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடரை முகாமைத்துவம் செய்யும் போது பின்வரும் கையேட்டு மாதிரிகளில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி அவதானிப்பை செலுத்துகின்றது.

கடன் கையேட்டினால் வழிநடத்தப்படும் தரப்படுத்தல்களுக்கு அமைவாக, இடர் உரிமையாளர்களினால் கடன்பெறுபவர் குறித்த பூர்வாங்க ஆய்வும், கடன் மதிப்பீடும் மேற்கொள்ளப்படும். கால அடிப்படையில், கடன் பெறுனரின் கடப்பாடுகளின் தகமைகள் இருப்பதை கடன் மதிப்பீடு உறுதி செய்யும். பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள இடர் அவாவுடன் இணங்கி, கடன் மதிப்பீட்டு செயன்முறைகள் பேணப்படுவதற்கான கல்வி, கடன் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் இணைப்பிணையங்கள் மற்றும் உத்தரவாதங்களை பிணையங்களாக பெறுவதனூடாக கடன் இடர் குறைக்கப்படும் என்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அலகுகள் கொள்கைகளினால் நியமிக்கப்படும். ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு அமைவாக, இணைப் பிணையத்தின் உண்மை பெறுமதி காலந்தோறும் பெறுமதியிடப்பட்டு மதிப்பிடப்படுகின்றது. அத்துடன் தேவைப்படும் போது முக்கியமாக அறவீட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும் இருக்கின்றது.

அரச சார்பற்ற விண்ணப்பங்களின் வருமான மூலத்தை மதிப்பிடுவதற்கு வருமான மூல உறுதிப்படுத்தல் மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் உள்ளக இடர் தரப்படுத்தல் மாதிரி ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.பல்வேறு உத்தேச மதிப்பீட்டு அலகுகளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு தரப்படுத்தல் மாதிரி பிரயோகிக்கப்படும். இடர் மதிப்பிடுதல், கடனை தீர்மானிக்கும் செயன்முறைகள் மற்றும் இடர் அடிப்படையிலான விலையிடலுக்கு ஒரு கருவியாக பயன்படுத்த உதவும் ஒரு மாதிரியாக தரப்படுத்தல் மாதிரி இருக்கும்.

வாடிக்கையாளர்களின் இடர் விபரத்திரட்டின் சுதந்திரமான உத்தேச மதிப்பீடுகள், இடர் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்றதுடன், இடர் உரிமையாளர்களினால் வாடிக்கையாளர்களுக்கு இடர் தரப்படுத்தல் வழங்கப்படுகின்றது.

கடன் அங்கீகரித்தல் கட்டமைப்பிற்கு. வங்கியில் தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கீகரிப்பு செயன்முறையின் வெவ்வேறு மட்டங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டும் உள்ளது. எந்தவொரு தனிநபரும் கடன் ஒன்றை உருவாக்கி அங்கீகாரம் வழங்க முடியாது. இடர் முகாமைத்துவ பிரிவில் இணைக்கப்பட்டுள்ள இடர் அதிகாரிகளினால் கடன் வசதிகள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர், சுதந்திரமான உத்தேச மதிப்பீடு செய்யப்படும். அத்துடன் அத்தகைய வசதிகளை அங்கீகரிக்கும் போது கருத்துகளும் வழங்கப்படும்.

திறமையுடன் செயற்படும் பிந்திய அனுமதியை வழங்கும் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கும் வங்கியின் வழிகாட்டல்களுடன் இணங்கியதாக கடன் விடுவிக்கப்படுவதை உறுதி செய்வதற்காகவும் கடன் நிர்வாகப் பிரிவு ஒன்று வங்கியினால் தாபிக்கப்பட்டுள்ளது.

நட்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுக்கு எதிராக, வங்கியை பாதுகாப்பதற்கென, பிரச்சினைக்குரிய கடன்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காணுவதை உறுதி செய்வதற்கு வங்கியின் இடர் முகாமைத்துவ பிரிவினால் கடன் மீளாய்வு பொறிமுறை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்திலேயே எச்சரிக்கை சமிக்ஞைகளை அடையாளம் காணுவதற்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும், வங்கியினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கடன் இடர் குறிகாட்டிகள் அடிக்கடி கண்காணிக்கப்படுகின்றன. கடன் பிரிவும் அறவீட்டு பிரிவும் பிரச்சினைக்குரிய கடன்கள் மற்றும் செயற்படாத முற்பணங்கள் என்பவற்றை அறவிடுதலுக்குப் பொறுப்பாக உள்ளன. ஆரம்ப கட்டத்தில், கடன் அதிகாரிகள், முற்பணங்களின் அறவீட்டில் கவனம் செலுத்துவார்கள். கடன் செயற்படாதவை என கருதப்படும்போது அறவீட்டு பிரிவிற்கு மாற்றம் செய்யப்படும். அறவீட்டு விடயங்கள் முடிவிற்கு வரும்வரை அறவீட்டு செயன்முறைகளை இந்தக் கூறு செயற்படுத்தும். அதே நேரம் இணைப் பிணையங்களின் பெறுமதியையும் கண்காணிக்கும். பயனாளிக்கும் தொடர் நடவடிக்கைகளுக்காகவும் மாற்றங்களை அறிவதற்காகவும் அறவீட்டுப்பிரிவு, கடன் இடர் முகாமைத்துவத்துடன் இணைப்பிலிருப்பதை உறுதி செய்யும். இறுதி தேர்வாக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அறவிட முடியாத முற்பணங்கள் சட்டப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்படும்.

#### கடன் அவதானிப்பு இடர்

எதிர் தரப்பு ஒன்றிற்கு அல்லது எதிர்தரப்பு பிரிவு ஒன்றிற்கு மிகையான வெளிப்படுத்தல் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட நட்டத்தை இந்த இடர் குறிக்கும். துறைசார்ந்த வெளிப்படைத்தன்மை, உற்பத்தி வெளிப்படைத் தன்மை, மற்றும் புவியியல் வெளிப்படைத் தன்மை என்பவற்றின் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைவாக, கடன் அவதானிப்பு இடரை வங்கி, அளவிடுகின்றது.

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி).

### 31.12.2017ம் திகதியன்று துறைசார்ந்த வெளிப்படுத்தல்கள்

| துறைகள் | தொகை (ரூபா) |
|---|---|
| விவசாயமும் மீன்பிடி தொழிலும் | 4,460 |
| வீடமைப்பும் கட்டிட நிர்மாணமும் | 29,033 |
| சுற்றுலாத்துறை | 84 |
| **மொத்தம்** | **33,577** |

துறைசார்ந்த வெளிப்படுத்தல்கள்




### 31.12.2017ம் திகதியன்று புவியியல் ரீதியான அவதானிப்பு

| மாகாணம் | தொகை (ரூபா) |
|---|---|
| மேல் | 13,984.56 |
| மத்திய | 4,210.12 |
| தென் | 4,039.90 |
| சப்ரகமுவ | 1,472.00 |
| ஊவா | 1,567.95 |
| கிழக்கு | 751.72 |
| வட மத்திய | 3,113.55 |
| வட மேல் | 3,503.02 |
| வட | 934.18 |
| **மொத்தம்** | **33,577** |

புவியியல் ரீதியான அவதானிப்பு




### உற்பத்தி ரீதியான அவதானிப்பு

| உற்பத்தி | தொகை (ரூபா) |
|---|---|
| ஈட்டு கடன்கள் | 9,180 |
| உசேநி கடன்கள் | 9,313 |
| வாகனக் கடன்கள் | 27 |
| பணியாளர் கடன்கள் | 882 |
| சுய தேவைக் கடன்கள் | 13,194 |
| ஏனையவை | 981 |
| **மொத்தம்** | **33,577** |

உற்பத்தி ரீதியான அவதானிப்பு




2017 ஆண்டில் மொத்தம் மற்றும் தேறிய செயற்படாத முற்பண விகிதங்களின் அசைவுகள்




31.12.2017 அன்றுள்ளவாறு, 66.43% ஊ.சே.நி. கடன்களின் செயற்படாத நிலைமையின் காரணமாகவே செயற்படாத முற்பணங்களின் விகிதம் உயர்வாக உள்ளது. இது, இலங்கை மத்திய வங்கியில் பிடித்து வைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தின் மிகுதிகளில் இருந்து ஆண்டுதோறும் அறவிடப்படுகின்றது.

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### சந்தை இடர்

இது சந்தை வீதங்களின் அல்லது விலைகளின் அசைவுகளினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களினால் ஐந்தொகைக்கு உள்ளும் வெளியிலும் ஏற்படும் பெறுமதியினால் உருவாகும் இடர்.

வங்கியை பொறுத்தவரை. சந்தை இடர் என்பது வட்டி வீதங்கள் மற்றும் திரவ இடர்களை பெரும்பாலும் குறிப்பிடுகின்றது. பொதுவாக நிதி சந்தைகளின் தளம்பல்களிலிருந்து ஏற்படக்கூடிய உத்தேச தாக்கங்களுக்கு முக்கியமாக வீடமைப்பு நிதி சந்தைகளுக்கு வங்கி குறிப்பிடத்தக்க மேலதிக கவனத்தை செலுத்துகின்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு (ALCO) சந்தை இடரின் மேற்பார்வைக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பேற்பதுடன், வங்கியின் திரவ இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவுள்ளது.

வங்கியின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கட்டமைப்பு - தொகுப்பு என்பவற்றை கண்காணிப்பதற்கும், கடன்களும் முற்பணங்களின் உற்பத்தி விலைகளை தீர்மானிப்பதற்கும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு பொறுப்பேற்கின்றது. தேவைப்படும் முதிர்ச்சி விபரத்திரட்டையும், அதிகரிக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அலகையையும் குழு தீர்மானிக்கின்றது.

வங்கியின் நோக்கில் தெளிவான வட்டி வீதத்தை வைத்திருத்தல், எதிர்கால உபாயமார்க்கத்தைத் தீர்மானித்தல், நிதியிடல் கொள்கையை மீளாய்வு செய்தல் தற்போது குழுவினால் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகளாகும். அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ கொள்கையும், மற்றும், திரவ விடயங்களை நிர்வகிப்பதற்காக அவசர தேவைக்கான நிதி திட்டங்களையும் வைத்துள்ளது.

### வட்டி வீத இடர்

குறிப்பிட்ட கால எல்லைக்குள் வட்டி வீத திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைமைகளுக்கிடையில் ஒரு பொருத்தப்பாடு இன்மை காணப்படும் போது வட்டி வீத இடர் ஏற்படுகின்றது. வங்கியின் கடன் வழங்கல், நிதியளிப்பு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகள் போன்றவை வட்டி வீத இடர்களுக்கு வழி வகை செய்கின்றன.

வைப்புக்களின் ஊடாக பிரதான நிதியளிப்புச் செய்யப்படுகின்றமையால் இது வங்கியின் சந்தை இடரின் பாரியதொரு பகுதியாக காணப்படுகின்றது. சேமிப்புகள் குறுகிய காலம் முதல் நடுத்தர காலத்தை கொண்டிருக்கின்றது. ஆயினும் வங்கியின் முக்கிய வர்த்தகமான வீடமைப்பு நிதியிடல் பொதுவாக நீண்ட கால கடன் வழங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. வங்கியின் பெரும்பாலான பொறுப்புகள் அடிக்கடி மீள்விலையிடல்களுக்கு உள்ளாகும் அதேநேரம் அதன் கடன் வழங்கும் வீதம் நிலையான வீதத்தில் இருக்கின்றது. ஆண்டின் போது அதிகரித்த வட்டி, கிரய எல்லையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் வங்கி, இந்த சமமின்மையை சந்திப்பதற்கு உபாயங்களையும் ஆராய்ந்து வருகின்றது.

சமமின்மைகளை சமப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் தேவைகளையும், சந்தை நிலைமைகளையும் சமப்படுத்துவதற்கும் ஆண்டின்போது அனேக புதிய சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பொதுவாக, தேறிய வட்டி வருமானம் தொடர்பான எந்தவொரு எதிர் தாக்கத்தையும் குறைக்கும் பொருட்டு சந்தை வீத தளம்பல்களின் உத்தேச தாக்கங்கள் மற்றும் உழைப்பு வளைய கோட்டின் மாற்றங்கள் என்பவற்றில் முக்கியமான தாக்கத்தை சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான குழு முகாமைத்துவம் செய்கின்றது.

### திரவத்தன்மை இடர்

நிறுவனமொன்று அதன் கடப்பாடுகளை சந்திப்பதில் இயலாமை ஏற்படும் போது உருவாகும் உத்தேச நட்டம் அல்லது, சொத்துக்கள் தொடர்பான நிதி அதிகரிப்பினால் அல்லது வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இயலாமை போன்றவற்றின் ஊடாக நிறுவனத்திற்கான நட்டத்தினை ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணியாக திரவ இடர் காணப்படுகின்றது. திரவ இடரினை தனிமைப்படுத்த முடியாது, காரணம், சந்தை இடர் மற்றும் கடன் இடர் போன்ற ஏனைய நிதி ரீதியான இடர்களின் விளைவாக இது அடிக்கடி ஏற்படுகின்றது.

வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விபரத்திரட்டின் தன்மையின் காரணமாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி தொடர்பாக திரவத் தன்மை முகாமைத்துவம் மிக முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது. கடன் வகைகளின் தரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக வங்கி அதிக கவனம் செலுத்தும் அதே வேளை சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொகுப்பு, பொறுப்புகளின் பன்முகப்படுத்தும் நிலைப்பாடு மற்றும் ஸ்திரத்தன்மை போன்றவை தொடர்பாகவும் கண்காணிப்புச் செய்கின்றது.

வைப்புக்கள் தொடர்பாக வழங்கப்படுகின்ற வட்டி வீதங்களின் போட்டித் தன்மை மற்றும் நியாயமான வீதம் போன்றவற்றின் ஊடாக வங்கி வைப்பாளர்களின் நம்பிக்கையினைப் பெற்றுள்ளது மற்றும் அதிகரிக்கப்பட்டுள்ள கிளை வலையமைப்பின் ஊடாக சிறுவர்த்தக வைப்பாளர்கள் தொடர்பான பிரவேசமும் அதிகரித்துள்ளது. எனவே, மொத்த விற்பனை வைப்புகளில் தங்கியிருப்பது குறைந்துள்ளது. சொத்து புத்தகத்தில் முதிர்வு சமமின்மைகளின் விளைவான, பெற்றுக் கொள்ளக் கூடிய கிரயங்களிலான நீண்டகால கடன் பெறுகை பத்திரங்கள் குறைவடைந்துள்ளன. முதிர்ச்சி சமமின்மைகளை குறைப்பதற்கு புத்தாக்கமுள்ள உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் ஆய்வுகளில் வங்கி ஈடுபட்டுள்ளது.

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான குழுவினாலும், சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினாலும் கலந்துரையாடப்படும். இலங்கை மத்திய வங்கியின் இடர் பணிப்புரைகளுக்கு அமைவாக, திரவ விகிதங்கள் பலவற்றை வங்கி கண்காணிக்கின்றது.

கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் தொடர்பான வங்கியின் ஆரம்ப நிலை நடு நிலையாளர் என்ற வகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய குழு, தளம்பல் நிலையான சந்தை நிலைமைகளில் அதிக பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு நிரல் படுத்தப்பட்ட முறைசார் கூட்டங்களின் தடவைகளை அதிகரித்துள்ளது.

### திரவத்தன்மை தொடர்பான விகிதங்கள்




திரவத் தன்மையுடன் தொடர்புடைய ஒழுங்குவிதித் தேவைகளை வங்கி ஒழுங்காக நிறைவேற்றுகின்றது. திரவ வேறுபாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் மோசமான நிலைமைகளுக்கு, துறை சார்ந்த நீண்டு சுருங்கும் தன்மையை அளவிடுவதற்கு, அடுத்தடுத்த இடைவெளிகளில் அழுத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### 31.12.2017 அன்றுள்ளவாறு முதிர்ச்சி சமமின்மைகளின் பகுப்பாய்வு (ரூ.மில்)

| ரூ. மில். | 7 நாட்களுக்கு குறைவு | 7-30 நாட்கள் | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 ஆண்டுகள் | 3-5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் | வகைப்படுத்தப் படதாவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துகள் | 1,668 | 4,320 | 606 | 1,890 | 2,915 | 6,263 | 5,786 | 9,781 | 8,860 | 42,090 |
| மொத்த பொறுப்புகள் | 2,479 | 1,733 | 6,368 | 5,743 | 12,065 | 3,872 | 4,206 | 9 | 5,614 | 42,090 |
| இடைவெளி | (811) | 2,587 | (5,762) | (3,853) | (9,150) | 2,391 | 1,580 | 9,772 | 3,246 | - |

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### தொழிற்பாட்டு இடர்

மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளியக நிகழ்வுகளிலிருந்தான அழுத்தங்களின் காரணமாக பற்றாக்குறை அல்லது உள்ளக ரீதியாக தோல்வியடைந்த செயன்முறைகளின் விளைவால் ஏற்படுகின்ற நட்டம் தொழிற்பாட்டு இடராகும். மனிதர்களின் தவறுகள், முறைமையின் கோளாறுகள் மற்றும் முழுமையற்ற ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொழிற்பாட்டு இடர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துகின்றன.

கொள்கைகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உரிய ஒழுங்குக்கு கொண்டு வருவதன் ஊடாக தொழிற்பாட்டு இடரினை வங்கி குறைக்கின்றது. இடரை அடையாளம் காணல், மதிப்பீடு, அமுல்படுத்தல் கட்டுப்பாடுகள், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை என்பவற்றை உள்ளடக்கிய விரிவான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி கொண்டுள்ளது. பிரதான செயற்பாடுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் மற்றும் தொழிற்பாட்டு வழிகாட்டிகள் போன்ற வழிகாட்டிகள் மூலம் வேறாக வழிநடத்தப்படுகின்றது.

வங்கியானது தனது முறைமை அபிவிருத்திச் செயன்முறை மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்பம், இடர் தவிர்ப்பு மேற்பார்வை, ஊழியர்களின் திறன் அபிவிருத்தி, ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் உரிய நேர அறிமுகம் நடைமுறைகள் மற்றும் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் இடர்களை பரிவர்த்தனை செய்யும் செயற்பாடுகளின் பயன்பாடு போன்றவற்றின் ஊடாக கட்டுப்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் தொடங்கியுள்ளது. தொழிற்பாடுகள் மற்றும் பணிகளின் மீளாய்வுகள் கிரமமாக கூட்டங்களின் போது கவனத்திற்கு கொள்ளப்படுகின்றன.

ஊழியர்கள் தங்களுடைய தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சரியான தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளை பெற்றுக் கொள்வதற்கும் அக் கொள்கைகளுடன் தொடர்புபடுவதற்கான தங்களுடைய பொறுப்புக்களை எந்த நேரத்திலும் மேன்மைப்படுத்தும் நோக்கத்துடனும் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.

நடவடிக்கை கூறுகள் ஒவ்வொன்றிற்கும், நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளினால், இடர் முகாமைத்துவ பிரிவிற்கு செயற்பாட்டு இடர் நிகழ்வுகள் அறிவிக்கப்படுகின்றன. வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நடவடிக்கையினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை மாதிரிகளிலமைந்த மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வு கண்டு பிடிப்புகள், கணக்காய்வு செயன்முறைகள் கிளைகளுக்கான விஜயங்கள் என்பனவும் இடர் அடையாளம் காணும் செயன்முறைக்கு தகவல்களை அளிக்கின்றன.

வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில், நட்ட நிகழ்வுகளை சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், நட்டங்களை தேடிக் கண்டடையும் தரவுத் தளம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்களின் மீது தடைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.

செயன் முறையில் ஏதும் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்படும் போது ஏற்கனவே செய்யப்பட்ட வேலை மீண்டும் தொடரப்படுவதை தவிர்த்துக் கொள்வதற்காக உடனடி முறைசார் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமுகமான மற்றும் சிறந்த தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தி வியாபாரச் செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளில் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வங்கி ஏற்புடைய உரிய கொள்கைகளுடன் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் இணக்கப்பாட்டு மட்டத்தை உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் கண்காணிக்கின்றனர்.

திறமையான சேவை வழங்குதல் மற்றும் சரியான தீர்மானங்கள் எடுக்க உதவுவது எனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பலப்படுத்தவதற்காக தகவல் முறைமையையும் முகாமைத்துவ தகவல் முறைமையையும் தரமுயர்த்துவதற்கு, முதலீடு செய்யும் நடவடிக்கைகளை வங்கி ஆரம்பித்துள்ளது.

மாற்று பங்கீட்டு துறைக;டாக சந்தை பங்குகளை ஊடுறுவுவதையும், மக்கள், கட்டமைப்பு, மற்றும் முறைமைக;டாக போட்டிகளில் வாய்ப்பான சூழ்நிலைகளை உறுதி செய்வதற்கு அவசியமான முதலீடுகளை செய்வதையும் வங்கி தனது கடப்பாடாகக் கொண்டுள்ளது.

### சட்ட இடர்

நீதிமன்ற கட்டளையின் படியான நெருக்குதல் செய்ய முடியாத கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வங்கிக்கு எதிராக ஆக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக தவிர்த்துக் கொள்வதில் தோல்வியடைதல் போன்றவற்றின் காரணமாக சட்ட இடரானது எழுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் போது வங்கியின் தற்போதைய சட்டக் குழு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமல்லாது இவ்வாறான இடர்களை வெளிப்படுத்துவதற்கும் அவற்றுக்கான தீர்வு காணல் தொடர்பாகவும் வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுக்கின்றது. வங்கி முகங்கொடுக்கக் கூடிய சட்ட இடர்களிலிருந்து விடுபடும் பொருட்டு தேவையாயின் வங்கி வெளியக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும்.

### மூலோபாய இடர் முகாமைத்துவம்

மோசமான வியாபாரத் தீர்மானங்கள், தீர்மானங்களின் முறையற்ற அமுலாக்கம் அல்லது கைத்தொழில் மாற்றங்கள் தொடர்பாக குறைவான பிரதிபலிப்பு என்வற்றின் ஊடாக எழுகின்ற மூலதன உருவாக்கம் அல்லது உழைப்புக்கள் தொடர்பான நடைமுறை மற்றும் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களின் சாத்தியத் தன்மை என்பன உபாய இடர் முகாமைத்துவத்திற்கு காரணமாகின்றது.

நிருவன முகாமைத்துவத்துடன் இணைந்து பணிப்பாளர் சபை மற்றும் பொது முகாமையாளர் உபாயத் திட்டங்களை நடாத்துவதுடன் அவற்றின் உரிய அமுலாக்கத்திற்காக தொடர்பாடல்களையும் மேற்கொள்கின்றது. தீர்மானங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் இடர்களைத் தவிர்த்துக் கொள்வதற்காவும் ஒழுங்குவிதிகள் தொடர்பான தேவைப்பாடுகள், பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள், கூட்டாண்மை ஆட்சித் தேவைகள், ஒழுக்கம் மற்றும் கைத்தொழில் துறையின் சிறந்த படிமுறைகள் தொடர்பாக உரிய அவதானத்தை சபையும் நிருவன முகாமைத்துவமும் எடுக்கும் போது சகல உபாயத் தீர்மானங்களுக்கும் முன்னுரிமை வழங்குகின்றது.

### இணங்குவிப்பு இடர்

பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டங்கள், ஒழுங்கமைப்புகள், நடத்தை விதிகள் மற்றும் நற்பிரயோகத்தின் தரங்களுடன் இணங்கிச் செயற்படாமையினால், வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டமாக இது உள்ளது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்குள் இணங்குவிப்பு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபையினால் இணங்குவிப்பு கையேடு ஒன்று அங்கீகரிக்கப்பட்டுமுள்ளது. இணங்குவிப்பு இடரின் ஸ்திரமான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, வர்த்தகம் மற்றும் செயற்பாட்டு அலகுகளுடன் இணங்குவிப்பு நடவடிக்கைகள் நெருக்கமாகப் பணியாற்றுகின்றன.

- **இடர் விழிப்புணர்வுக்கான கலாச்சராம்**

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள கொள்கைகள் ஒழுங்கான முறையில் தொடர்புபடுத்தப்பட்டு, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிக்கப்பட்டன என்பதை வங்கின் சிரேஸ்ட முகாமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அளவுபடுத்தக்கூடிய இடர்களுக்கு தொடர்புடைய இடர் சகிப்புத்தன்மையானது பொதுவாக வங்கியின் சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் என அறிவுறுத்தப்படும். முகாமைத்துவ வியாபார தீர்மானங்களில் இருந்து ஊகிக்கக்கூடிய மற்றும் வழிகாட்டல்களாக பண்பார்ந்த இடர் நடவடிக்கைகள் அறிவிக்கப்படும். சிரேஸ்ட முகாமைத்துவம் / பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் இடர் உள்ளதென்பதை வியாபார வரிசை முகாமையாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் சகிப்புத்தன்மைகளுக்கு விதிவிலக்கு ஏதுவாக இருந்தாலும், சிரேஸ்ட முகாமைத்துவம் - பணிப்பாளர் சபை முறையான திருத்த நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இந்த விதிவிலக்குகள் இடர் முகாமைத்துவம் தொடர்பான முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் தகுதியை மதிப்பிடுவதற்கான ஒரு உள்ளீடுகளாகவும் செயல்படுகின்றன.

வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகத்தினுள் இடரினை முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களில் பங்குபற்றும் மற்றும் இடர்களை தெளிவாக விளங்கிக்கொண்டு முகாமைத்துவம் செய்யும் ஊழியர்களுக்கு வங்கி இடர் விழிப்புணர்வு தொடர்பான கலாச்சாரத்தை உருவாக்க எண்ணியுள்ளது.




# பெறுமதி உருவாக்கம்


மனித வளங்கள் 74

கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு 77

எங்கள் பண்டங்கள் 78

# மனித வளங்கள்

முகாமைத்துவம் (மனித வளம்) டிசென்சோ மற்றும் ரொபின்ஸ் அவர்களின் கூற்றுக்கு அமைவாக "மனித வள முகாமைத்துவம் என்பது முகாமைத்துவத்தில் மக்களின் பரிமாணத்தை கருத்தில் கொள்கின்றது". ஒவ்வொரு நிறுவனமும் மக்களினால் உருவாக்கப்பட்டது, நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு அவசியமானது, அதனால் அதனை பேணுவதை உறுதிப்படுத்துவதற்கு. அவர்களின் சேவைகளை கைப்பற்றுதல், அவர்களின் திறனை அபிவிருத்தி செய்தல், உயர் மட்டத்திலான சேவைகளுக்கு அவர்களை ஊக்குவித்தல் அவசியமாகும். அதனால் திறமையான மனித வளங்களை பெற்றுக்கொள்வது, அபிவிருத்தி செய்வது மற்றும் பராமரிக்கும் செயல்முறையினை மனித வள முகாமைத்துவம் என வரைவிலக்கணப்படுத்த முடியும், இதன் மூலமே ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்கள் பயனுள்ள மற்றும் திறமையான முறையில் அடையப்படுகின்றன. அதை சுருக்கமாகக் கூறின், நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தமது சிறப்பான பங்களிப்பை வழங்கும் வகையில் பணியிடத்தில் மக்களை முகாமைத்துவம் செய்யும் கலை மனித வள முகாமைத்துவம் எனப்படும்.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில், மனித வள முகாமைத்துவத்தின் நோக்கமானது, ஊழியர்களின் வினைத்திறனை உச்சப்படுத்தல் மூலம் வங்கியின் உற்பத்தித்திறனை உச்சப்படுத்தல் ஆகும். மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்து மனித மூலவளம் என்பதை வங்கி கருத்திற் கொண்டுள்ளது. எனவே, அதன் முக்கியமான தொழிற்பாட்டு வீரர்கள் அதன் ஊழியர்கள் என்பதையும் அவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்பதையும் வங்கி நம்புகின்றது. மிக உயர்வான போட்டித்தன்மை நிலவும் வர்த்தக சூழலுக்குள் நாங்கள் இருப்பதால் தடைகள் மற்றும் கொந்தளிப்பான நேரங்களில் அவற்றிற்கு முகங் கொடுப்பதற்கான சக்தியை அவர்களின் கூட்டுப் பங்கேற்றலின் ஊடாக வங்கி பெறுகின்றது. ஊழியர்களில் மறைந்துள்ள சாத்தியமான இயலுமைக் கூறுகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாகவே போட்டி வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள இயலும் எனும் இரகசியத்தையும் வங்கி நம்புகின்றது.

### மனித மூலவள முகாமைத்துவ அணுகுமுறை

ஏற்புடைய மனித மூலதன தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதில் வங்கி கடப்பாடு உடையதாக இருக்கும். எதிர்காலத்தில் ஸ்தாபன தேவைகளின் அடிப்படையிலான வர்த்தக அபிவிருத்தியினூடாக தாபன நோக்கத்தை அடையாளம் காணுவதன் அடிப்படையில் மனித மூலவளத்தின் முகாமைத்துவ அணுகுமுறை அமைந்திருக்கும். ஒரு விரிவான மனித வள முகாமைத்துவ அணுகுமுறை தனிப்பட்ட மற்றும் நிறுவன செயற்திறன் மீது குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### பணியாட் தொகுதியினரின் வலு

இந்த ஆண்டின்போது பணியாட் தொகுதியினரின் மொத்த எண்ணிக்கை 365 ஆக இருந்தது. இவ் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவானதாக இருப்பினும், வங்கியின் செயற்பாட்டிற்கு அவர்கள் அளித்த பங்களிப்பு பாரியதாக இருந்தது. இந்த ஆண்டின் போது, 16 ஊழியர்கள் வங்கியில் இருந்து ஓய்வுபெற்றதுடன், 6 ஊழியர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக இராஜினாமா செய்ததனால் 22 ஊழியர்கள் வங்கியில் இருந்து விலகினர். இந்த வருடம் 12 புதிய ஊழிய அங்கத்தவர்கள் வங்கிக்கு இணைக்கப்பட்டனர். அத்துடன் 15 ஊழியர்கள் அவர்களுடைய முன்னனுபவம் மற்றும் செயலாற்றுகையின் அடிப்படையில் உள்ளக ரீதியல் பதவியுயர்வு செய்யப்பட்டனர். வெற்றிடங்களானது உள்ளக மற்றும் வெளியக ஆட்சேர்ப்பு கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

### பணியாட் தொகுதியின் வேறுபாடுகள்

| முகாமைதத்துவ மட்டம் | வேறுபாடுகள் | | | |
|---|---|---|---|---|
| | ஓய்வு பெறல் | இராஜினாமா/ வேறு | வெளி வாரியான ஆட்சேர்ப்பு | உள்ளக பதவியுயர்வு |
| கூட்டியைந்த முகாமைத்துவம் | 2 | 2 | 1 | |
| சிரேஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம் | 2 | | 1 | |
| நிறைவேற்றுத் தரம் | 4 | 4 | 10 | 10 |
| நிறைவேற்றுத் தரமல்லாத | 8 | | | 05 |
| மொத்தம் | 16 | 6 | 12 | 15 |

### ஊழியரின் பலம் அடுக்கு ரீதியாக

| முகாமைத்துவ மட்டம் | 31.12.2017ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| கூட்டிணைந்த முகாமைத்துவம் | 8 | 2 |
| சிரோஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம் | 9 | 2 |
| நிறைவேற்றுத் தரம் | 119 | 33 |
| நிறைவேற்றுத் தரமல்லாத | 229 | 63 |
| மொத்தம் | 365 | 100 |

### பாலின ரீதியான விபரத்திரட்டு

சமனான முறையில் ஆண்கள் மற்றம் பெண்கள் இருவருக்கும், தொழில் வழங்குதில் சமனான தொழில் வழங்குனராக அரச ஈட்டு முதலீட்டு வங்கி இருக்கின்றது. 2017 ஆம் ஆண்டில், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பாலின ரீதியான விபரத் திரட்டிற்கு அமைய ஆண்கள் 48% மாகவும் பெண்கள் 52% மாகவும் கணக்கிடப்பட்டனர்.

### பணியாளர் வயது விபரத்திரட்டு

வங்கி அனுபவம் வாய்ந்த மற்றும் சிரேஸ்ட பணியாளர்களின் திறனைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளது. வங்கி 40 வயதிற்கும் அதிகமான 47% பணியாளர்களை கொண்டுள்ளது. .

| வயது வகுதி | 31.12.2017ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 50 அல்லது அதற்கு மேல் | 97 | 27 |
| 40 - 49 | 75 | 21 |
| 30 - 39 | 125 | 34 |
| 29 அல்லது அதற்கு கீழ் | 68 | 18 |
| மொத்தம் | 365 | 100 |

### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஊழியரின் மனோபாவத்தை மாற்றுவதன் மூலம் அல்லது அவரது திறன்களையும் அறிவையும் அதிகரிப்பதன் மூலம் வழக்கமான கற்றல் ஊடாக செயலாற்றுகைக்கான தற்போதைய அல்லது எதிர்கால ஊழியரின் திறனை மேம்படுத்துவதற்குகான ஒரு முயற்சியாக பயிற்சியும் அபிவிருத்தியும் அமைகின்றது. மனித வள அபிவிருத்திக்கு பயிற்சியும் அபிவிருத்தியும் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது என வங்கி நம்புகின்றது. சிறந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சரியான மக்களை வைத்திருப்பதற்கும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் உதவும். உயர் திறனுக்கான போரானது அதிக போட்டித்தன்மை உடையதாக உருவாகின்றதுடன், முன்னெப்பொழுதையும் விட ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியமாகின்றது.

மனித வள பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பரப்பினுள் பயிற்சி வகுப்புகளுக்கான உதவி மற்றும் பயிற்சிக் கட்டணத்தை மீளச்செலுத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளன. பயிற்சி மற்றும் அபிவிருத்தி அதன் உபாயமார்க்க நிலையைக் கொண்டுள்ளதுடன், அது நிறுவனத்தின் வியாபார இலக்குகளையும் குறிக்கோள்களையும் நோக்கி நேரடியாக பங்களிப்பு செய்கின்றது. 2017ம் ஆண்டினுள் வேறுபட்ட வகுதியினுள் வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான சுருக்கம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

.

# மனித வளங்கள் (தொடர்ச்சி)

| பிரதான பரப்பு | பங்கு பற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அறிவு மற்றும் திறன் அபிவிருத்திப் பயிற்சி | 140 |
| எண்ணக்கரு அபிவிருத்தி பயிற்சி | 23 |
| தொழில்நுட்ப தகைமை மற்றும் தகவல் தொழில்நுட்ப பயிற்சி | 14 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 3 |
| கருத்தரங்குகள், செயலமர்வுகள், அங்கத்தவர் கட்டணங்கள், வினா விடைப் போட்டிகள | 97 |

எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றிக்கான பிரதான பாதையாக ஊழியர்களின் அபிவிருத்தி கருதப்படுகின்றது என வங்கி எண்ணுவதனால் அதற்கேற்றவையில் வங்கியின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மனிதவளக் கொள்கையும் நடைமுறை கையேடும் 2017ம் ஆண்டு திருத்தப்பட்டதுடன், அதில் பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாக உச்சப்படுத்தப்பட்ட வெளியீட்டைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மீளாய்வு செய்யப்பட்டது. 2017ம் ஆண்டுக்காக 50 மாவட்டப் பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டது. எனினும் உண்மையாக 93 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதனால், பயிற்சிச் சாதனை 186 சதவீதமாகும்.

### ஊழியர் சேவை

| சேவை வகை | 31.12.2017ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 0-4 | 130 | 36 |
| 5-9 | 48 | 13 |
| 10-14 | 52 | 14 |
| 15-19 | 45 | 12 |
| 20 ற்கு மேல் | 90 | 25 |
| மொத்தம் | 365 | 100 |

51% ஊழியர்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக வங்கியில் பணிபுரிந்துள்ளதுடன் வங்கியின் அபிவிருத்திக்கு தமது சேவைகளை வழங்கியும் உள்ளனர். நிதி சார்ந்த நன்மைகளை மட்டுமன்றி நிதி சாராத நன்மைகளையும் பணியாட் தொகுதியினருக்கு வழங்கியதன் ஊடாக அவர்களின் தொழில் திருப்தி அதிகரித்துள்ளது.

நாம் இன்றுள்ள நிலைக்கு வருவது இலகுவான காரியமல்ல. ஆனால் ஊழியர்களின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக வங்கி அனைத்தையும் அடைந்துள்ளது.



கடன் திணைக்களத்தில் புது வருடக் கொண்டாட்டங்கள்



பிரதான நிறைவேற்று அலுவலர் ஊழியர்களுக்கு உரையாற்றும் பொழுது.



கூட்டிணைந்த திட்டக் கலந்துரையாடல்

## மனித வளங்கள் (தொடர்ச்சி)



கூட்டிணைந்த கிரிகட் போட்டியின் வெற்றியாளர்கள் - கம்பஹா




செலான் வங்கி பூபந்து போட்டி இரண்டாவது இடம்



தேசிய சேவைகள் தடகள சங்கத்தின் தடகள போட்டியின் வெற்றியாளர்கள்



செலான் வங்கி பூபந்து போட்டி இரண்டாவது இடம்



மாஸ்டர்ஸ் அத்தலட்டிக் போட்டியின் வெற்றியாளர்கள் - சிங்கப்பூர்



தேசிய சேவைகள் நொக்வுட் பூப்பந்து போட்டி “சீ” பிரிவு வெற்றியாளர்கள்.

# கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு

மனிதர்கள் தங்களின் ஆரம்பத்திலிருந்து தங்களை ஒரு முறைமையியலில் ஒழுங்கமைத்துள்ளனர். ஒழுங்கமைக்கப்படுவதின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று சமூகத்தில் ஒருவருக்கொருவர் சவாலாக உள்ள மனித நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாகும். இது கூட்டுத்திறன் எனும் எண்ணக்கருவை நிறுவனத்தின் ஊடாக சமூகமயப்படுத்துவதாகும்.

“தேர்வு” எனும் கருத்தில் கூட மற்றவர்களுக்கான கூட்டுச்செயற்பாடு மற்றும் வாய்ப்பினை வழங்கல் என்பது பரவலாக உள்ளது. மூலதனத்தை மையமாகக்கொண்ட நவீன உலகமும் சகல அம்சங்களிலும் கூட்டு அபிவிருத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்கின்றது. இலாபகத்தை அடிப்படையாகக் கொண்ட சந்தை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், மனித சமூதாயம் கருப்பு சந்தை அல்லது சட்டவிரோத மற்றும் ஒழுங்கற்ற வர்த்தக அமைப்புகளை அங்கீகரிக்கவில்லை.

எனினும், இலாபமாக வரும் பொழுது வாடிக்கையாளர் ஈர்ப்பு கட்டாயமானதாகும். வாடிக்கையாளர் கொள்வனவுகளை மேற்கொண்டால் மாத்திரமே இலாபம் சாத்தியமாகும். இந்தக் கொடுக்கல் வாங்கலில் கொள்வனவாளர் நன்மையினையும் விற்பனையாளர் இலாபத்தையும் பெற்றுக்கொள்வர். விற்பனையாளர் அரசாங்க அல்லது தனியார்துறையினராக இருக்க முடியும். ஆயினும்கூட, நவீன உலகின் போக்கு, அரசாங்க அல்லது தனியார் துறையினாரால் சம்பாதிக்கப்பட்ட இலாபத்தைப் பயன்படுத்தி, சமூகத்தை சிறந்த இடமாக மாற்றுவதாக அமைந்துள்ளது. பொது மக்களுக்கு நன்மையளிப்பதற்கு இலாபத்தைப் பயன்படுத்தும் பொழுது, அங்கு நிதி நன்மை எதிர்பார்க்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட விற்பனையாளரின் நற்பெயரை வளர்க்கின்றது.

சேவை வழங்குனர்கள் சமூகத்தின் நலனுக்காக தங்கள் இலாபத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதைக் காணலாம். இலங்கையில் நிலவும் சூழ்நிலை, அரசாங்க மற்றும் தனியார் துறை இரண்டும் இந்தப் பாதையைப் பின்பற்றுகின்றன.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, ஒரு அரச வங்கியாக கடந்த காலத்திலிருந்து அதன் இலாபத்தின் ஒரு பகுதியை மீண்டும் முதலீடு செய்து வருகின்றது. இது கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளில் செய்யப்படுகின்றது. இந்த முயற்சியில் வங்கியால் சமுதாயத்தில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த முடிந்தது. 2016 மற்றும் 2017ம் ஆண்டுகளில் கொள்கைக்கு கட்டுப்பட்டவிதத்தில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது வங்கியானது, தனது சொந்த கூட்டிணைந்த சமூகப் பொறுப்பைக் கொண்டுள்ளமை தொடர்பாக பெருமைகொள்கின்றது. இது வங்கியின் இலாபத்தின் கணிசமான வீதத்தை சமூக அபிவிருத்தி செயற்பாட்டில் பயன்படுத்துவதற்கு உதவியது, இது மனித சமுதாயத்தின் நியாயமான எதிர்பார்ப்பு ஆகும்.



5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி செயலமர்வு



இரத்ததானப் பிரச்சாரம் 2017

.



சோமாவதி விகாரைக்கு தானம் வழங்குதல்



இரத்ததானப் பிரச்சாரம் 2017

# எங்கள் பண்டங்கள்

வங்கியின் ஒவ்வொரு முயற்சியும் குடிமக்களுக்கு நட்புறவாக இருக்க வேண்டும் என நாங்கள் நம்புகின்றோம். அனைத்து சேவைகளினதும் இறுதி பயன்பெறுநராக பொது மக்கள் உள்ளனர். சேவை வழங்கலின் போது ஒரே இடத்தில் சேவையை வழங்குவது முக்கியம். வேறுபட்ட தேவைகளுடன் வரும் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்துதல் என்பது இலகுவான இலக்கல்ல. எங்கள் வெளியீடும் எங்களால் வழங்கப்படும் சேவைகளும் உயர் தரத்தில் இருத்தல் வேண்டும். இதுவே வாடிக்கையாளர் திருப்திக்கு வழிவகுக்கும்.

வங்கியின் ஊழியர்கள் இந்த கொள்கைக்கு ஒத்துழைப்பதற்கு ஆர்வமாக இருப்பதை அவதானிக்கலாம். 2017 ஆம் ஆண்டு எமது வங்கியின் அடைந்த முன்னேற்றமானது இதற்கு சான்றாகும். நாடு முழுவதிலும் சேவையை வழங்குவதற்காக செயற்படுத்தப்படும் கிளை வலையமைப்பு ஊடாக கிடைத்த முன்னேற்றம் என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

எங்களால், அனைத்து பொது மக்களுக்கும் அவசியமான பொருத்தமான பண்டங்களை அறிமுகப்படுத்தவதற்கு இயலுமானது. நாங்கள் ஒவ்வொரு வீட்டு நிதியியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை கொண்டுள்ளோம். அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மிக உயர்ந்த சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயத்துறைக்கும் நாம் முக்கிய பங்களிப்பாளராக உள்ளோம். மேலும், நாங்கள் நவீன சுற்றுலாத்துறையினை நிதியில் ரீதியாக பலப்படுத்துவதற்கும் பணிபுரிகின்றோம். பாரம்பரிய இரத்தினக்கல் கைத்தொழிற்துறை மற்றும் ஏனைய கைத்தொழிற்துறைகளை இலக்காக் கொண்டு பல்வேறுபட்ட நிதிச் சேவைகள் அமுல்படுத்தப்படுகின்றது. குறைந்த வருமானம் பெறும் குழுக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிககளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், நிதியியல் உதவிகள் வழங்கப்படுவதுடன், நாடு முழுவதிலும் நுண் நிதியியல் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முயற்சிகள், பெரும்பான்மையினரின் வாழ்வை வளமாக்குவதற்கு நமக்கு வழிவகுக்கின்றது.

அரச சேவையில் உள்ள ஊழியர்களை இலக்காகக் கொண்டு பல்வேறுபட்ட சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2016 இந்த பணியின் திட்டமிடல் ஆண்டாகும். மேலும், நாங்கள் 100% வீத வாடிக்கையாளர்களின் வாக்குறுதிகளை வைத்துக்கொண்டுள்ளோம். எங்களை நம்பி வரும் இவாகளை அரச வங்கியின் சொத்தாகக் கொண்டுள்ளோம். 2017ம் ஆண்டு அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு நாம் ஒரு கவர்ச்சிகரமான வட்டியை



நுண் நிதிக் கடன் அறிமுகம்.

அறிமுகப்படுத்தியுள்ளோம். அதுமட்டுமல்லாமல், மூத்த குடிமக்களுக்கும் சிறுவர்களுக்கும் பல்வேறு சேமிப்பு முறைகளை எங்களால் அறிமுகப்படுத்த முடிந்துள்ளது.

அரசாங்கத்தின் “அனைவருக்கும் ஒரு கணக்கு” மற்றும் “அனைவருக்கும் ஒரு வீடு” எனும் கருத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வகிபாகத்தைக் மேற்கொள்ளுகின்றது. தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட நிதியியல் துறையின் கீழ் வராதவர்களை செயற்படுத்தவதற்கான நடவடிக்கையை எங்களை வலையமைப்பு முறைமை மேற்கொள்ளுகின்றது. இந்த நோக்கத்தின் கீழ் சில உபாயமார்க்கங்கள் பயன்படுத்தப்படுவதுடன், இதனூடாக சமூகங்களை வலுவூட்டுவதுடன், வினைத்திறனான மற்றும் அனுபவம் சார்ந்த சேவைகள் வழங்கப்படுகின்றது. ஊடாகப் பங்களிப்புடன் இலக்குக் குழுக்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது 2017ம் ஆண்டு அதிக முன்னேற்றம் கொண்ட ஆண்டாக விளங்குகின்றது. இந்த வெற்றிக்கு முழு ஊழியர்களின் பங்களிப்பும் பண்டங்களில் பல்வகைத்தன்மையும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. மேலும், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் தொலைநோக்குடைய நிதிக் கொள்கை ஆண்டு முழுவதும் நிலையான மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

# நிதித் தகவல்கள்


| | |
|---|---|
| பணிப்பாளர்கள் அறிக்கை | 80 |
| நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை | 84 |
| நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு | 86 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 87 |
| வருமானக் கூற்று | 103 |
| விரிவான வருமானக்கூற்று | 103 |
| நிதி நிலைமையின் கூற்று | 104 |
| உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று | 105 |
| காசுபாய்ச்சல் கூற்று | 106 |
| கணக்கீட்டு கொள்கைகள் | 107 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 118 |
| பெறுமதி கூட்டப்பட்ட கூற்று | 139 |
| மூலதன போதுமை | 140 |
| வருமானத்தின் மூலகங்களும், பயன்பாடும் | 141 |
| பத்து வருட புள்ளிவிபரவியல் சுருக்கம் - வங்கி | 142 |




# பணிப்பாளர்கள் அறிக்கை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி 31 டிசம்பர் 2017இல் முடிவடைந்த கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றுதிரட்டிய நிதியியல் கூட்டுக்களுடன் வங்கி விவகாரங்கள் மீது அவர்களுடைய அறிக்கையை சமா்ப்பிப்பதில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளா் சபை மகிழ்ச்சியடைகின்றது.

**பணிப்பாளர்கள்**

சபை ஒன்பது நிறைவேற்று அதிகாரமற்ற சுதந்திரமான பணிப்பாளா்களை உள்ளடக்கியுள்ளது. சபையின் தலைவரை பணிப்பாளா் சபையில் உள்ள பணிப்பாளா்களில் இருந்து பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அமைச்சா் தோ்ந்தெடுப்பாா். வங்கியில் நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளா்கள் இல்லை.

1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்தின் திருத்தச் சட்டத்தின் 7ம் பிரிவுக்கு அமைவாக மூன்று பணிப்பாளா்கள் பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் கீழ் வருமாறு நியமிக்கப்படுவா்

(அ) நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு
(ஆ) வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அமைச்சு மற்றும்
(இ) சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அமைச்சு ஒரு பணிப்பாளா் திறைசேரி பிரதிநிதியாக நியமிக்கப்படுவாா்.
சபையின் குறைவெண் வரம்பாக மூன்று அங்கத்தவா்கள் கூட்டத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். வங்கிச் சட்டம் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கமைவாக குறைந்தபட்சம் மாதத்திற்கொருமுறை பணிப்பாளா் சபைக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும்.
சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளா்களின் வருகை
13 கூட்டங்கள் 2017ம் ஆண்டு நடாத்தப்பட்டது.

**சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை**

13 கூட்டங்கள் 2017ம் ஆண்டு நடாத்தப்பட்டது.

| பணிப்பாளரின் பெயர் | வருகை தருவதற்கு தகைமையுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை | வருகை தந்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு திஸ்ஸ ஜினதாச (தலைவா்) | 13 | 12 |
| டாக்டா் நிரோஷன் கமகே | 13 | 10 |
| திரு. எம்.எஸ்.டி. இரத்னசிறி (31.01.2017ம் திகதி ஓய்வுபெற்றாா்) | 01 | 01 |
| திரு ரொஷான் ஹெட்டியாரச்சி | 13 | 11 |
| திரு. ராஜித நுவன் ஹல்வல | 13 | 10 |
| செல்வி. டப்.கே.கே. அத்துக்கோரள (05.12.2017ம் திகதி ஓய்வுபெற்றாா்) | 12 | 12 |
| திரு. பி.ஏ. குலசூரிய | 12 | 07 |
| திரு. ஈ.ஏ. லெஸ்லி எதிரிசிங்க | 12 | 10 |
| திரு. பி.எஸ்.கே.ஆா். வீரகோன் | 11 | 10 |
| திரு. எஸ்.ஜி. சேனாரத்ன | 10 | 10 |

**வங்கியின் பிரதான செயற்பாடுகள்**

வீடமைப்பு, விவசாயம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி நிதி, மற்றும் சேமிப்பு திரட்டல்கள் என்பவற்றை மேம்படுத்துவதும் வங்கியின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளன.

**செயற்பாடுகளின் மீளாய்வும், எதிர்கால அபிவிருத்திகளும்**

2017 நிதி ஆண்டின் போது வங்கியின் நிதி சாா்ந்த ஒட்டு மொத்த நோக்கமும், மற்றும் செயற்பாட்டு செயலாற்றலும் எதிா்கால அபிவிருத்திகளும், மற்றும் இத்தகைய செயற்பாடுகளின் விளைவுகளும், தலைவாின் அறிக்கை, பொது முகாமையாளரின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும் ஆகியவற்றை கொண்டுள்ள இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் இந்த வருடாந்த அறிக்கையின் ஓா் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

**ஒப்பந்தங்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் ஈடுபாடுகள்**

வங்கியுடன் எந்தவொரு பணிப்பாளரும் அல்லது பணிப்பாளரின் மனைவி அல்லது தங்கியிருக்கும் பிள்ளை அல்லது பிள்ளைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டிருக்கவில்லை. பணிப்பாளா்கள் தாங்கள் வகிக்கும் ஏனைய பணிப்பாளா் பதவிகள் மற்றும் தொடா்புகள் பற்றி சபைக் கூட்டத்தின் போது வெளிப்படுத்துவதனூடாக அவ்வாறான விடயங்கள் தொடா்பான வாக்கெடுப்புகளில் அவா்களது ஈடுபாடுகளை தவிா்த்து கொள்ள முடியும். இது இலங்கை மத்திய வங்கியினால் வங்கிச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக தொடா்புடைய தரப்பினாின் கொடுக்கல் வாங்கல் கொள்கைக்கு அமைவாக பின்பற்றப்பட்டது. 2017ம் ஆண்டு எவ்விதமான தொடா்புடையவா்களின் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

**மூலதனப் போதுமை விகிதம்**

மூலதனப் போதுமை விகிதமானது உரிய முறையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ குழுவினால் தொடா்ச்சியாக கண்காணிப்பு செய்யப்படுகின்றது. வங்கி எப்போதும் மிகக்குறைந்த மூலதனப் போதுமைத் தேவையைப் பேணுகின்றது.

**பிரதம நிறைவேற்று அதிகாரி**

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாாியாக பொது முகாமையாளராக இருப்பதுடன், பணிப்பாளா் சபையினால் நியமிக்கவும்படுகின்றாா். சபையினால் அங்கீகாிக்கப்பட்ட நோக்கங்கள், கூட்டிணைந்த பெறுமதிகள் மற்றும் முழுமையான இடா் கொள்கை மற்றும் இடா் முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றை வங்கியின் வியாபாரத்துடன் இணைந்த நாளாந்த நடவடிக்கைகளை அவா் மேற்கொள்வாா்.

**தொலை நோக்கு, பணி, பெறுமதிகள்**

தொலை நோக்கு, செயற்பணி, பெறுமதிகள் இந்த ஆண்டறிக்கையின் 04 ஆம் மற்றும் 05ம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன. வங்கி அதன் நடவடிக்கையில் உயா்வான ஒழுக்க தரங்களையும் பேணுகின்றது.

**நிருவன ஆளுமை**

நிருவன ஆளுமை பயனுறுதியுள்ள நிருவன ஆளுமை கட்டமைப்பு ஒன்றையும் அதன் செயலாற்றலையும் பேணுவதில் பணிப்பாளா் சபை கடப்பாட்டுடன் செயற்படுகின்றது. வங்கியின் நிதி, செயற்பாடுகள், மற்றும் இணங்குவிப்பு நடவடிக்கைகளை நிருவன ஆளுமை பிரயோகங்களுக்கு அமைவாக நெறிப்படுத்தியும் செயற்படுத்துகின்றது. கூட்டிணைந்த ஆளுமை அறிக்கையானது வருடாந்த அறிக்கையின் பக்கம் 22 இருந்து 59 வரை வழங்கப்பட்டுள்ளது.

**சபை உப குழுக்கள்**

சபை உப குழுக்கள் வங்கியின் ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கு 2007ம் ஆண்டு 12 ஆம் இல வங்கிச் சட்டத்துடன் இணங்கி செயற்படும் நான்கு உப குழுக்களையும் கொண்டுள்ளது.

# பணிப்பாளர்கள் அறிக்கை (தொடர்ச்சி)

- **சபையின் கணக்காய்வு குழு**

வங்கியின் சபையின் கணக்காய்வுக் குழு அதன் செயற்பாடுகளை தொழில்சார் முறையில் மேற்கொண்டது. சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கம் அதன் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பணிப்பாளர்களின் சபைக்கு உதவுதல் முக்கியமாக உள்ளது. அவையாவன, வங்கிக் கணக்குகளின் நிதித் தகவலை மறுபரிசீலனை செய்வதன் மூலம் வங்கியின் நிதி அறிக்கைகளின் முழுமையைப் பேணுதல் மற்றும் வெளிப்படுத்துவதற்காக தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள், அவற்றின் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியியல் அறிக்கையிடல் தீர்மானங்களை மீளாய்வு செய்தல் வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையை மேற்பார்வை செய்தல், சட்ட மற்றும் ஏனைய ஒழுங்குவிதித் தேவைகளுடன் வங்கியின் இணக்கம், வங்கியின் வெளியக கணக்காய்வு செயற்பாடுகளின் வருடாந்த பணி நிகழ்ச்சித்திட்டத்தை கலந்துரையாடல் மற்றும் வங்கியின் உள்ளக கணக்காய்வு செயலாற்றுகை என்பனவாகும்.

இக்குழு மூன்று சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன், ஒரு பணிப்பாளர் பதிலீட்டு அங்கத்தவராக நியமிக்கப்படுவார். சபையின் தலைவர், சுயாதீனமான நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக இருப்பதுடன், அவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வில் தகைமை பெற்றவராக இருப்பார். இப் பணிப்பாளர் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்துவார். சபைக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் உட்பட அனைத்து உபகுழுக்களுக்குமான உறுப்பினர்கள் தேவையான தகுதிகள், திறமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்கும் பணிபாளர் சபை உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுவர்.

சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். பொது முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் -நிதி உதவிப் பொது முகாமையாளர் இடர் முகாமைத்துவம் உதவிப் பொது முகாமையாளர் - கடன் ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தந்தனர். அதேவேளை கணக்காய்வாளர் நாயகத்தின் அத்தியட்சகர் அவதானிப்பாளராக அனைத்து கூட்டங்களிலும் பங்குபற்றினார். நான்கு சபை கணக்காய்வுக் கூட்டங்கள் 2017ம் ஆண்டு நடாத்தப்பட்டன. 2017ம் ஆண்டு அரச கணக்காய்வு அத்தியடசகருடன் குழு ஒரு சந்திப்பை நடாத்தியதுடன். அதில் பிரதான நிறைவேற்று அதிகாரி பங்குபற்றியிருந்தார்.

2017 ஆம் ஆண்டின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.ஜி. சேனாரத்ன | - | தலைவர் (2017 மே மாதத்திலிருந்து) |
| டாக்டர் நிரோஷன் கமகே | - | அங்கத்தவர் |
| திரு ராஜித என் ஹல்வல | - | அங்கத்தவர் |
| திருமதி.டபி.கே.கே.அத்துகோரள | - | பதிலீட்டு அங்கத்தவர் |

- **சபையின் மனித மூலவளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு**

குழு வங்கியின் சார்பாக மனிதவள அபிவிருத்தி உபாயமார்க்கங்களை மீளாய்வு செய்ததுடன், அனைத்து மனிதவள பிரச்சினைகள் மீதும் ஏனைய உப குழுக்களுடன் ஆலோசனைக் குழுக்களையும் பாரமரிக்கின்றது.
பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி சார்ந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் தவிர்த்து, குழுவின் ஏனைய அனைத்து கூட்டங்களிலும் பங்குபற்றினார். உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) சபையின் மனித மூலவளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் செயலாளராக பணியாற்றினார். வங்கியின் பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் ஊதியக் கொள்கையைத் தீர்மானிப்பது குழுவின் பொறுப்பாகும்.

குழு அனைத்து பிரதான மனித வள கொள்கைகள், சம்பளக் கட்டமைப்புகள் மற்றும் சிரேஸ்ட நிறைவேற்றுத் தர ஊழியர்கள் தொடர்பாக நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை மீளாய்வு செய்யும். இந்த செயன்முறையின் போது, வங்கியின் பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரோஸ்ட முகாமைத்துவத்திடமிருந்து அவசியமான தகவல்களையும் விதப்புரைகளையும் குழு பெற்றுக்கொள்ளும். குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு முறை தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், அவசியமாயில் மேலதிக கூட்டங்களை நடாத்தும். 2017ம் ஆண்டு நான்கு சபையின் மனித மூலவளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

2017ம் ஆண்டின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி. டபி.கே.கே. அத்துகோரள | - | தலைவி |
| திரு நிரோஷன் கமகே | - | அங்கத்தவர் |
| திரு. ராஜித ஹல்வெல | - | அங்கத்தவர் |
| திரு பி.எஸ்.கே.ஆர்.வீரகோன் | - | பதில் அங்கத்தவர் |

- **சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு**

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அனைத்து இடர்கள் அதாவது கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க இடர்கள் என்பவற்றை இடர் காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களின் ஊடாக மதிப்பீடு செய்யும். வங்கிச்சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக, 2007ம் ஆண்டு 11ம் இலக்க பணிப்புரையின் பிரிவு 3 (6)ற்கு இணங்குமாறு, அனுமதி பெற்ற விசேட வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகையின் கீழ் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு பணிப்பாளர் சபையினால் நிறுவப்பட்டுள்ளது.

இந்தக் குழு, பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் இடர் முகாமைத்துவத் தலைவருடன் 3 சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) குழுவின் செயலாளராக பணியாற்றினார்.

குழு, வங்கியுடன் தொடர்புடைய இடர் மற்றும் இணக்கம் மீதான கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளை மீளாய்வு செய்தது. சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, குறித்துரைக்கப்பட்ட இடர்களை தீர்ப்பதற்கும் அளவு மற்றும் தர இடர் வரையறைக்குள் இந்த இடர்களை முகாமைத்தவம் செய்வதற்கு கடன் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்தது. குழு வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகளின் அடிப்படையில் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விவேகமான அளவுக்கு அப்பால் அபாயங்கள் இருக்கும் போது, இந்த குறித்துரைக்கப்பட்ட இடர்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, சபையின் கண்ணோட்டம், இணக்கம் மற்றும் அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளைப் பெற்றுக்கொள்வதன் நோக்கத்துடன் சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தலை உறுதி செய்கின்றது. அனைத்து வியாபார செயற்பாடுகளின் மீது உள்ளக கட்டுப்பாடு மற்றும் அனுமதிக்கப்பட்ட கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பவற்றுடன் வங்கியின் இணக்கத்தை மதிப்பீடு செய்தவற்கு சுயாதீன இணக்கச் செயற்பாட்டிற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் நான்கு கூட்டங்கள் இடம் பெற்றன.

# பணிப்பாளர்கள் அறிக்கை (தொடர்ச்சி)

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் பணிப்பாளர்கள்

திரு. ரொஷான் ஹெட்டியாராச்சி - தலைவர் (ஏப்பிரல் 2017 வரை)
திரு. எஸ்.ஜி.சேனாரத்ன - அங்கத்தவர் (2017ற்கு பின்னர் தலைவர்)
திரு நிரோஷன் கமகே - அங்கத்தவர்
திரு. ராஜித ஹல்வல - பதில் அங்கத்தவர்

- **சபையின் பரிந்துரைக் குழு**

சபையின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு சபையின் பரிந்துரைக் குழு அறிக்கைகளை வழங்கும். பணிப்பாளர் சபையன் செயலாளர், பரிந்துரைக் குழுவின் செயலாளராக பணியாற்றுவார்.

சபையின் பரிந்துரைக் குழு வங்கியின் பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் நியமனம் அல்லது பதவியுள்ார்வுகளின் போது கவனத்தில் கொள்வதற்கு வங்கியின் பொது முகாமையாளர்-பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் தேர்வு- நியமனம் தொடர்பான நடைமுறைகளை அமுல்படுத்தவதற்கு, அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான நற்பண்புகள் என்பவற்றை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாகும்.

தற்போதுள்ள பணிப்பாளர்களை மீளத் தேர்வு செய்வதற்கு அவசியமான விதப்புரைகளை (அல்லது விதப்புரைக்காது விடல்) என்பவற்றுக்காக செயலாற்றுகை மற்றும் பங்களிப்புகளை கவனத்தில் கொள்ளல. இது பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நகர்கள் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

2017ம் ஆண்டு அங்கத்தவர்கள்

திரு. திஸ்ஸ ஜினதாச - தலைவர்
டாக்டர் நிரோஷன் கமகே - அங்கத்தவர்
திரு. பி.ஏ. குலசூரிய - அங்கத்தவர்
திரு ஈ.ஏ. லெஸ்லி எதிரிசிங்க - பதில் அங்கத்தவர்

மூன்று குழுக் கூட்டங்கள் 2017ம் ஆண்டு நடைபெற்றது.

### இடர் முகாமைத்துவம்

முகாமைத்துவ இடர்கள் தொடர்பாக முழுமையான பொறுப்பையும் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. வங்கி வருடாந்த அறிக்கையின் 65ம் பக்கத்தில் விபரிக்கப்பட்டவாறு வங்கியின் இடர்களை குறைப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### உள்ளகக் கட்டுப்பாடு

வியாபாரத்தின் நாளாந்த முகாமைத்துவத்திற்கு அவசியமான கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கான வழிகாட்டலை வழங்குவதற்கு கணக்காய்வுக் குழுவின் ஊடாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுக்கான வினைத்திறனுடையதும் மற்றும் விரிவானதுமான முறைமையை அமுல்படுத்தலை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தியுள்ளது. வருடாந்த அறிக்கையின் 84 மற்றும் 85ம் பக்கங்களில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### இலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

2017 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொதத் வருமானம் ரூ. 4,907.23 மில்லியன் ஆகும்.

வங்கியின் இலாபம் தொடர்பான விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

| | 2016 ரூபா 000 | 2017 ரூபா 000 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 4,371,871 | 4,916,232 |
| வட்டி வருமானம் | 4,240,771 | 4,745,059 |
| வட்டி செலவு | 2,425,330 | 3,101,891 |
| தேறிய வட்டி வருமானம் | 1,815,441 | 1,643,168 |
| ஏனைய வருமானம் | 131,100 | 171,172 |
| தேறிய வருமானம் | 1,946,541 | 1,814,341 |
| கழி: தொழிற்பாட்டுச் செலவுகள் | 1,020,018 | 1,248,379 |
| பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டுயெழுப்பும் வரி | 220,454 | 187,033 |
| வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 706,069 | 378,929 |
| கழி: வரிக்கான ஏற்பாடுகள் | 270,051 | 200,404 |
| வருடத்திற்கான இலாபம் | 436,018 | 178,524 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபங்கள் | 2,449,406 | 2,706,976 |
| பகிர்வுக்காக கிடைக்கப்பெறும் இலாபம் | 2,885,424 | 2,885,500 |
| பகிர்வுகள் | - | - |
| முற்கால சீராக்கல்கள் | 1,846 | 27,885 |
| கருதப்பட்ட பங்குலாப வரி | 173,347 | 93,266 |
| திரட்டிய நிதியத்திற்கான கொடுப்பனவு | 10,000 | 25,000 |
| ஒதுக்குநிதியத்திற்கான மாற்றல்கள | 28,305 | 15,278 |
| முதலீட்டு நிதியத்திற்கான மாற்றல்கள் | - | - |
| ஏனைய விரிவான வருமானம் | 31,357 | 5,207 |
| முன்கொண்டு செல்லப்பட்ட மீதி | 2,706,976 | 2,729,278 |

### அறுதியிட்ட பங்கிலாபங்கள் மற்றும் ஒதுக்கங்கள்

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆண்டுக்கான வரி விதிப்பின் பின்னரான தேறிய இலாபத்தின் மீது 25% 2017 ஆம் ஆண்டு தொடர்பாக அறுதியிட்ட பங்கிலாப வரியாக வழங்கப்பட்டது.

### ஒதுக்கங்கள்

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறு மொத்த ஒதுக்கமானது ரூபா 4,067 மில்லியன் (2016 - ரூ 4,028 மில்லியன்) ஆகும். இது உரிமைப்பங்குகள் மாற்றங்கள் கூற்றில் 103ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

### மூலதனச் செலவினம்

வங்கியின் ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் மோட்டார் வாகனங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய குறிப்பு 14 ஆண்டறிக்கையின் 123ம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது

### அசையாத சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

31 டிசம்பர் 2017ம் திகதியில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி கட்புலனாகும் அசையாத சொத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

# பணிப்பாளர்கள் அறிக்கை (தொடர்ச்சி)

**பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம்**

இலங்கை அரசாங்கமானது ரூ. 889,812,889.00 பெறுமதியான மூலதனத்தை பங்களிப்புச் செய்துள்ளது.

**கருதத்தகு பங்கு உரிமையும் பங்குகள் தொடர்பான தகவல்களும்**

அரசாங்க ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் மூலதனம் தொடர்பான ஏக உரிமையாளராக இலங்கை அரசாங்கம் உள்ளது. மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுகளில் வழங்கப்பட்டுள்ளன.

**திரண்ட நிதிக்கான கொடுப்பனவு**

2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 வரை திரண்ட நிதிக்கு ரூபா 155 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டது. நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

**நியதிச்சட்ட கொடுப்பனவுகள்**

அரசங்கம் மற்றும் ஊழியர்களுக்கு உரிய நியதிச்சட்ட கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது என அவர்களின் அறிவுக்கெட்டியவரை திருப்பதியடைவதாக பணிப்பாளர்கள் நம்புகின்றனர்.

**வரியிடல்கள்**

2017ம் ஆண்டு வங்கியின் செயற்பாடுகளில் இருந்து உருவாகக்கூடிய வரியிடக்கூடிய வருமானத்தின் 28% வீதம் வரியாக செலுத்தப்பட்டது.

**ஐந்தொகை திகதியின் பின்னர் நிகழ்வுகள் ஏற்பட்டது.**

நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டிய அல்லது சீராக்கம் அவசியமாகிய எவ்வித சந்தர்ப்பங்களும் ஐந்தொகை திகதியில் இருந்து ஏற்படவில்லை.

**இயங்கிக் கொண்டிருக்கும் நிருவனம்**

நிதிக்கூற்றுகள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் இறைமை பங்குதாரர்களின் பங்களிப்பு, முன்கணிப்புகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் கடன்பெறும் தேவைப்பாடுகள் மற்றும் முதிர்ச்சிகள் தற்போதுள்ள மற்றும் சார்ந்த பொறுப்புகள் மாறும் சூழ்நிலைக்கு அமைவாக நிதியியல் போதுமை உற்பத்திப் பண்டம் மற்றும் சந்தைப் போக்கு முழுமையான இடர் முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள் மற்றும் தடைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அதன் தொழிற்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதனையும் மேற்கொள்ளாது, முன்னுனர் எதிர்காலத்தில் அதன் தொழிற்பாடுகளை தொடர்வதற்கு வங்கி போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என சபை திருப்தியடைந்துள்ளது.

எனவே, இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள, இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாகவும் மற்றும் நியாயமாக பிரயோகிக்கப்படும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது. மற்றும் நியாயமானதும் அவசியமானதுமான நிதி கூற்றுகளை தயாரிக்கும் போது, அவசியமான இடங்களில் விவேகமான தீர்வுகள் ஏற்படுத்தப்பட்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையிலும் வங்கியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு இணங்கி செயற்படுவது**

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈடு முதலீட்டு வங்கி சட்டம் மற்றும் ஏனைய அனைத்து ஏற்புடைய சட்டங்கள் நிபந்தனைகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணக்கமாக செயற்படுவதை, அனைத்து நேரங்களிலும் வங்கி, நிச்சயப்படுத்திக் கொள்ளுகின்றது.

**பங்குடமையாளர்கள் அனைவரையும் சமமாக நடத்துவது**

எமது பங்குடமையாளர்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் வங்கி மேற்கொண்டுள்ளது. வங்கி அதன் சேவைகளை, நியாய விலையிடல், தரமான சேவைகள் மற்றும் நேர்மை மற்றும் நாணயம் என்பவற்றை மேம்படுத்த எண்ணியுள்ளது.

**வாடிக்கையாளர்களும் கடன் பெறுனர்களும்**

பெற்றுக் கொள்ளக்கூடிய விலையில் வீடமைப்புக் கடன்களை நாட்டிற்கு வழங்குவது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த விடயம் தொடர்பாக கிரமமான ஆய்வுகளை மேற்கொள்வதில் வங்கி விசேட கவனம் எடுக்கின்றது. வேலையின்மையை இல்லாதொழிக்க விரும்பும் அரசாங்கத்திற்கு உதவும் வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும், கைத்தொழிற்சாலையாளர்களுக்கும் உதவுதற்கான பல்வேறுபட்ட கடன் திட்டங்களை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. வைப்பாளர்களும் வழங்குனர்களும்

வங்கியின் பிரதான நிதி வழங்குனர்களாக வைப்பாளர்கள் உள்ளனர். வைப்பு வீதங்கள் வெளியிடப்படுவதுடன் போட்டித்தன்மையாகவும் காணப்படுகின்றது. மூலதனம் மற்றும் வட்டி உரிய திகதியில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. உரிய கொடுப்பனவை மேற்கொள்வதற்காகவும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்விமனுவை வங்கி கோருகின்றது.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி இருக்கின்றார். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் இலக்க விதப்புரையின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமையதிபதின் பணிப்புரைகளுக்கு கீழ் மேற்கொள்ளப்பட்டது. 31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகளின் நிதி கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, இந்த ஆண்டறிக்கையின் 87 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

**ஒப்புதல்**

வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு, ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றிற்காக அவர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் ஒழுங்குபடுத்தம் அதிகாரங்களுக்கான அவர்களின் ஆழமான மற்றும் உண்மையான நன்றியை வெளிப்படுத்த பணிப்பாளர்கள் இந்த வாய்ப்பைப் பெறுகின்றார்கள். அனைத்து பணிப்பாளர்களிடமும் வங்கி தொடர்ந்து செயல்படுவதில் வலுவான செயற்திறன் கொண்ட ஊழியர்களால் காட்டப்படும் அர்ப்பணிப்புக்கான உங்கள் பாராட்டுக்களை ஆழமாக வெளிப்படுத்த பணிப்பாளர்கள் விரும்புகின்றார்கள்.

.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் படி,

**டபிள்யு.கே. பெரேரா**
சபையின் செயலாளர்

# நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 3 (8) 11 (ஆ) விதப்புரைக்கு இசைவாகவும், இலங்கை பட்டய கணக்காளர் நிருவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரமும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக பணிப்பாளர் சபை இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றது.

வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டையும் மற்றும் அதன் திறனாற்றலையும் மீளாய்வு செய்யும் பொறுப்பு சபைக்கு உள்ளது. சொத்துக்களை உரிய முறையில் பாதுகாப்பது, கணக்குப் புத்தகங்கள் சரியாக பேணப்படுவது, மற்றும் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையின் நம்பகத் தன்மை ஆகியவற்றை நியாயமான அளவு உறுதிப்பாட்டுடன் வழங்குவதற்கு ஏற்ற வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறை வடிவமைக்கப்பட்டுள்ளதென பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும் தவிர்க்க முடியாத இடர்களின் காரணமாக சாத்தியமான தவறுகள், ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகளை ஒழிப்பது தொடர்பாக முழு அளவிலான உத்தரவாதத்தினை இந்த முறைமை வழங்குவதில்லை.

வங்கி முகம் கொடுக்கும் பிரதான இடர்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக நடைமுறையொன்றை சபை நிறுவியுள்ளதுடன், வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைகளில் மற்றும் ஏனைய வழிகாட்டல்களில் ஏற்படும் மாற்றத்தின் போது உள்ளக கட்டுப்பாடுகளின் முறைமையை மேம்படுத்தலையும் உள்ளடக்கியுள்ளது. இந்த படிமுறை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் அறிக்கை மீதான வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதுவதுடன், சபையினால் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றது. வழிகாட்டலில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் மதிப்பீட்டுக்கான கோட்பாடுகளை கருத்தில் கொண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை சபையினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அமைப்பானது நிதியியல் அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்த நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் போதுமானதாக இருப்பதுடன் அதற்கான கணக்குக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் என்பவற்றுடன் இணங்கியிருக்கும்.

வங்கி எதிர்நோக்கும் இடர்களை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்வதன் மூலம், சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் அமுல்படுத்தலில் முகாமைத்துவம் சபைக்கு உதவுவதுடன் இந்த இடர்களை அகற்றிக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், தொழிற்பாடுத்தல் மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ளுகின்றது.

அவ்வப்போது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்திறனை மதிப்பீடு செய்யும் முறைமையையும் சபை ஏற்படுத்தியுள்ளது. பிரதான படிமுறை மற்றையவற்றுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

- வங்கிக்குள் போதுமையும், நேர்மையும் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையை உறுதி செய்வதற்காக, பல்வேறு உப குழுக்களை சபை நிறுவியுள்ளதுடன், வங்கியினால் முகங்கொடுக்கும், கொள்கைகள், நடைமுறைகள் என்பவற்றை மதிப்பிடுவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும், சபை மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக வங்கியின் நிருவன முகாமைத்துவம், சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் முகாமையாளர்கள் அடுக்குகளில் இருப்பவர்களிடையில் சபையின் அதிகாரத்தை பகிர்ந்து அளித்தும் உள்ளது.

- சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு சுயாதீனமான, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடங்கியுள்ளது. வங்கியின் இடர் விபரத்திரட்டை மீளாய்வு செய்வதற்கும், முகங் கொடுக்கும் பிரதான இடர்களை அடையாளம் காணுவதற்கும் வங்கியின் இடர் முகாமைத்துவம் அடிப்படையிலான கொள்கைகளை தயாரிப்பதற்கும் குழு பொறுப்பாக இருக்கும்.

- உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் நிறுவப்பட்ட வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒத்திருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தவதற்கு மாதிரி அடிப்படையிலான பரிசோதனைகளை வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவு நடத்துகின்றது. வங்கியின் நடைமுறைக் கூறுகள் மற்றும் உற்பத்திகள் என்பவற்றுடன் தொடர்புடைய இடர் மட்டங்களின் அடிப்படையில் அடிக்கடி தீர்மானிக்கப்படுகின்ற அனைத்து கூறுகளின் மீதும், கிளைகளின் மீதும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் நிலவக் கூடிய ஒழுங்கின்மைகள், புரள் கூற்றுகள், மோசடிகள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக, பணிப்பாளர்கள் சபையின் தலைவருக்கு, சுயாதீனமான குறிகோள்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு உள்ளக கணக்காய்வுத் தலைவருக்கு உள்ளது.

- பொதுவாக, உரிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் முழு மொத்த விளைத்திறனை கணக்காய்வு குழு ஆய்வு செய்கின்றது. அதனோடு, உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பலவீனங்கள் தொடர்பாக குறிப்பான அவதானிப்புகள் பற்றி கிரமமாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது, இதற்கேற்ப குழு முறைமைகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பயன்படுத்திய பொறி முறைமைகளில் கணக்காய்வாளரின் உள்ளக கணக்காய்வு அறிக்கை, உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் ஒழுங்கு விதி சார்ந்த அறிக்கைகள், வருடாந்த - மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் உள்ளடங்குகின்றன.

- இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கும் அமைவாக, வருடாந்த நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவதற்காக, வங்கியின், நிதி அறிக்கையிடல் கூற்றின் செயன்முறையை சபை மீளாய்வு செய்கின்றது.

- தினசரி வியாபார தொழிற்பாடுகளின் வங்கியின் முக்கிய பரப்புகளில் திறம்பட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான மேம்பாட்டுடன் முகாமைத்துவ மட்டத்திலான குழுக்கள் செயற்படுகின்றன.

## நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை தொடர்ச்சி

- வருடாந்த மீளாய்வு கட்டமைப்பு ஒன்றின் வடிவமைப்பு, மற்றும் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த திறனாற்றல்கள் என்பவை மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் ஆவணப்படுத்தலை சபை ஏற்கனவே தீர்மானித்துள்ளது. இது உள்ளக கட்டுப்பாடுகளின் திறனாற்றல்கள் மீதான மீளாய்வின் அத்தியாவசியத்திற்கு இது உதவுகின்றது.

- வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் திறமையை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் அறிக்கையிடல் நடைமுறையை வடிவமைப்பதற்கும், செயற்படுத்துவதற்கும், மேலதிக கட்டுப்பாட்டு நடைமுறைகள் உள்ளன என்பதை சபை அறிந்துள்ளது.

**உறுதிப்படுத்தல்**

மேலே கூறப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கும் அமைவாக வங்கியின் நிதியியல் அறிக்கை முறைமை நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பாக நியாயமான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வெளிவாரி கணக்காய்வாளர் மேற்குறிப்பிட்ட 31 டிசம்பர் 2017ம் திகதி முடிவடைகின்ற வருடத்திற்கான நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கையை மீளாய்வு செய்வார்.

**எஸ். ஜீ. சேனாரத்ன**
*தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு / பணிப்பாளர்*

**திரு. நிரோஷன் கமகே**
*பணிப்பாளர்*

**ரஜித ஹல்வெல**
*பணிப்பாளர்*

# நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இந்த அறிக்கை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதி அறிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பை விளக்குகின்றது.

2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதி நிலைமை மற்றும் முடிவடைந்த நிதியாண்டில் வங்கியில் செயலாற்றுகை என்பவற்றை நோக்கின் நிதியியல் கூற்றுகள் உண்மையானவை மற்றும் நியாயமானவை என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

இந்த ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தியுள்ள நிதிக்கூற்றுகளின் நேர்மை மற்றும் பொருண்மை தொடர்பாக உள்ள பொறுப்புகளை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

### நிதியியல் கூற்றுகள்

1975இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தினதும் அதன் திருத்தங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கும், இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அதன் தொடர்ச்சியான 1988 இன் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் திருத்தங்களுக்கும் மற்றும் பணிப்புரைகளுக்கும் அமையவும் வங்கியின் பணிப்பாளர்கள் வங்கியின் கணக்குப் புத்தகங்களை சரியாக பேணுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பினை கொண்டுள்ளனர். இது வங்கியின் நிதி நிலைமை எந்த நேரத்திலும் நியாயமான அளவு சரியாக வெளிப்படுத்துவதாகவும், நியம தேவைப்பாடுகளுடன் இணங்கியதாகவும் செயற்படுவதை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தனது அலுவல்களின் நிலைமையை உண்மையாகவும் நேர்மையாகவும் அளிக்கும் வகையில், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீடு நியமம், மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் ஆகியவற்றிற்கு அமைவாக நிதி கூற்றுகளை தயாரிப்பதாகவும் இருக்கும்.

2017ம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகளை வெளிப்படுத்தும் இந்த ஆண்டறிக்கை கீழ்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றது.

i. 1975ம் ஆண்டு 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்,
ii. 1988ம் ஆண்டு 30 ஆம் இல. வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கும் மற்றும் அதன் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகள்,
iii. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் தேவைகள்,
iv. அரச கூட்டுத்தாபனங்கள் (நிதியியில் கட்டப்பாட்டு) சட்டம்.

2017ம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் உறுதியான வகையில் தெரிவு செய்யப்பட்டு, பிரயோகிக்கப்படுவதுடன், அகற்றல்கள் எவையுமிருப்பின், அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டும் உள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து இரண்டு மாதங்களினுள், வங்கியின் இணையத்தளம் உட்பட பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும், பிரதான செயலாற்றுகைக் காட்டிகளுடன் காலாண்டு நிதியியல் கூற்றுகளை வங்கி வெளியிடுகின்றது.

சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதும் விதப்புரை செய்யப்பட்டதுமான இடைக்கால நிதியியல் கூற்றுகளை வெளியிடுவதற்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகரிக்கின்றது. இந்த ஆண்டறிக்கையின் 60ம் பக்கத்தில் சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### இயங்கிக் கொண்டிருக்கும் நிருவனம்

முன்னுணர் எதிர்காலத்தில் அதன் தொழிற்பாடுகளை தொடர்வதற்கு வங்கி போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என சபை திருப்தியடைந்துள்ளது. எனவே, இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள, இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாகவும் மற்றும் நியாயமாக பிரயோகிக்கப்படும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது. மற்றும் நியாயமானதும் அவசியமானதுமான நிதி கூற்றுகளை தயாரிக்கும் போது, அவசியமான இடங்களில் விவேகமான தீர்வுகள் ஏற்படுத்தப்பட்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையிலும் வங்கியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு

உள்ளக நிதியியல் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றுக்கும் மற்றும் வங்கியின் சொத்துக்கள் மற்றும் மோசடியும் தவறான முகாமைத்துவமும் ஏற்படாது பாதுகாப்பதற்கு பாதுகாவளராக பணிப்பாளர்களும் பொறுப்பாக இருப்பார்கள்.

இந்த ஆண்டறிக்கையின் 84ம் மற்றும் 85ம் பக்கங்களில் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான பணிப்பாளர்களின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### கணக்காய்வு அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154வது சரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வங்கியின் கணக்காய்வாளராக, கணக்காய்வாளர் தலைமை அதிபதி இருப்பதுடன், வங்கியின் நிதிக் கூற்றுகள் மீதான இறுதி கருத்தை வழங்குபவராகவும் இருக்கின்றார். இந்த ஆண்டறிக்கையின் 87 ஆம் பக்கத்தில் உள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் நிதியியல் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் முக்கியமான ஒப்பந்தங்களில் உள்ள ஆர்வம் வருட இறுதியில் அல்லது வருடத்தின் எக்காலப்பகுதியிலும், நேரடியாக அல்லது மறைமுகமாக குறிப்பிடக்கூடிய ஆர்வம் வங்கியின் பணிப்பாளராக மற்றும் வங்கித் தரப்பாக எவ்வித முக்கிய ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

### நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

நிதியியல் நிலைமைத் திகதியில் உள்ளவாறு, வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய. அனைத்து தொடர்புடைய ஒழுங்கமைப்பு மற்றும் நியம அதிகாரிகள் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நியம கொடுப்பனவுகள் வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது அல்லது பொருத்தமானவிடத்து நிதிக் கூற்றுகளில் வழங்கப்பட்டுள்ளதென பணிப்பாளர்கள் திருப்தியடைந்துள்ளனர் என்பதை தமது சிறந்த அறிவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

இந்தக் கூற்றில் தரப்பட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளனர் எனும் கருத்தை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.



சபையின் கட்டளைப்படி

**டபிள்யூ.கே. பெரேரா**
*சபை செயலாளர்*

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය எனது இல. My No. | BAF/G/SMIB/1/17/1 | ඔබේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | 14 January 2019 |

தலைவர்,
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி.

**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 65(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் இற்கான ரூபா 2,040,000 கடன் விடுவிப்பு மற்றும் 1,100,658 மூலதன மீட்பு 2017 ஆம் ஆண்டிற்கான எல்லை கணக்கிற்கு பதிவிடப்பட்டிருந்த அதேவேளை 2017 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய வயபாடிரிய (Wayabadiriya) செயற்திட்டத்தின் கீழ் கடன் விடுவிப்பு மற்றும் மூலதன மீட்பு முறையே ரூபா 420,000 மற்றும் ரூபா 1,112,305 எல்லைக் கணக்கிற்கு பதிவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கிளை நடைமுறைக் கணக்கொன்றிற்கு நேரடியாகப் பெறப்பட்ட ரூபா 2,436,835 மொத்த தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஈடு (Mortage), ஈபிஎவ், மற்றும் தனிநபர்கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் முறைமையினால் உருவாக்கப்பட்ட கடன் கலவை (Portfolio) மற்றும் மீதிகளின்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

பட்டியல்களின் பிரகாரம் கடன் மீதிகளுக்கிடையே ரூபா 6,975,092 தேறிய வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசங்கள் இணக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நட்டக்கழிவு கணிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பட்டியல்களில் காட்டப்பட்ட கடன் மீதிகள் மற்றும் ஈடு (Mortage), ஈபிஎவ், தனிநபர் மற்றும் நுண்நிதி கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 234,228 தேறிய வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) உள்ளூர் கிளைக் கணக்குகளில் ரூபா 4,268,346 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) அனுப்பும் படிவங்களில் காட்டப்பட்ட தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் கணக்குகளுக்கான வங்கி பங்களிப்புக்கிடையே ரூபா 2,923,635 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் முன்னைய காலப்பகுதி சரிப்படுத்தலின் கீழ் ரூபா 493,558 மீதியொன்று இனங்காணப்படாத வித்தியாசங்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சேமிப்புக்கள் திட்ட வைப்புக்களின் (Saving Scheme deposits) முறைமை மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 250,867 மொத்த வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களில் தோற்றமளித்த மீதி மற்றும் விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவினங்களுடன் தொடர்புடைய சந்தைப்படுத்தல் பிரிவின் பதிவுகளில் தோற்றமளித்த மீதிகளுக்கிடையே ரூபா 2,632,245 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொருத்தமில்லாத கணக்கொன்றின் மீதி மற்றும் தொடர்புடைய முறைமையினால் உருவாக்கப்பட்ட பட்டியல்களுக்கிடையே ரூபா 28,883,653 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பண செலுத்துகைகளின் கீழ் ரூபா 5,362,744 முற்பண மீதியொன்றில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து மீதிகீழ்க் கொண்டுவரப்பட்ட ரூபா 2,917,537 மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், இந்த மீதியின் நம்பகத்தன்மை மற்றும் மீள்அறவிடுகை கணக்காய்வில் அறிந்துகொள்ளமுடியாதிருந்தது.

(ஆ) வங்கியினால் பேணப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், கிளை ஆலோசனை கணக்கின் மீதி செலவு மீதியொன்றாகக் காணப்படும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளை ஆலோசனைக் கணக்கில் ரூபா 7,529,740 தீர்ப்பனவுசெய்யப்படாத வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) பொதுவாக கோரிக்கை உறுதிச்சீட்டுக் கணக்கில் (Claim voucher account) வரவு மீதியொன்று காட்டப்படவேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த கணக்கில் ரூபா 23,590,021 அசாதாரணமான செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,513,448 தொகையான ஆறு கணக்குகளின் மீதிகள் நிச்சயமற்றதாகக் காணப்பட்ட அந்த மீதிகளின் மீள்அறவிடுகையினை இனங்கண்டிராது இரண்டு வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் மீதிகீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் சேமலாப நிதியத்திற்கான அட்டுறு உதவிக் கணக்கு மற்றும் வரவு வரி கணக்கில் முறையே ரூபா 1,512,882 மற்றும் ரூபா 6,696 வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. தொடர்புடைய தரப்பினர்களினால் அந்த மீதி உறுதிப்படுத்தப்பட்டுக் காணப்படாததிலிருந்து இந்த மீதியின் மீள்அறவிடுகை உறுதிப்படுத்தமுடியாது காணப்பட்டது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஊ) 1988 ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 139,936 தொகையொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இந்த மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் தேறுகைக் கணக்கின் மீதான காசோலைகளில் ரூபா 14,265,463 அசாதாரண வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தமையினால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள், சமமான தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய பிடித்துவைத்தல் வரிக் கணக்கில் ரூபா 3,005,380 இனங்காணப்படாத வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இனங்கண்டு குறித்த மீதியினை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வங்கியினால் பின்பற்றப்பட்ட முறைமையின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதியின் மீது அளிக்கப்பட்ட ஈட்டுக் கடனுக்கான செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள் கடன் அளிக்கப்பட்ட மாதத்தினைப் பின்தொடர்ந்து வருகின்ற 20 நாட்களுக்குள் தொழில் உதவி ஆணையாளருக்கு செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செலுத்தவேண்டிய ACL கட்டணங்கள் கணக்கில் ரூபா 179,500 இனங்காணப்படாத வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 216,500 தொகையொன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டிராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்கொடுத்தோர்களாக ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்தும் காணப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் ரூபா 22,350,414 வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், போதுமான தகவலின் பற்றாக்குறை காரணமாக இந்த தொகையின் அறவிடுகை நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முன்னைய முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினை பின்பற்றுவதுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தரப்பட்ட படிவத்தின் பிரகாரம் பேணப்படவேண்டிய போதிலும், ரூபா 127,189,798 பெறுமதியுடைய கணனிகள் தொடர்பில் வங்கியினால் அவ்வாறானதொரு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | ரூபா 1,792,650 கூட்டுத்தொகையான 6 மாதங்களினை விட அதிகமான செலுத்துகைக்கு சமர்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.4 போதியளவான அதிகாரத்தால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2016 யூலை 29 ஆந் திகதிய 16.07.83.07 ஆம் சபை தீர்மானத்தின் பிரகாரம், ரூபா 200,000 இனை விட அதிகமான மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய மதிப்பீடுகள் உதவி பொது முகாமையாளரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக, கிரிபத்கொட கிளையினை இடம்மாற்றுவதற்கான ரூபா 314,145 பெறுமதியுடைய மதிப்பீடு பிரதம முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வங்கியின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 706 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 379 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமாகக் காணப்பட்டமையினால் நிதிசார் விளைவுகளில் ரூபா 327 மில்லியன் அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. ஆண்டிற்கான நட்டக் கழிவுக் கட்டணம் ரூபா 190,115,585 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதிசார் விளைவு ரூபா 173,457,667 இற்கு அதிகரித்திருந்த போதிலும், தனிநபர் ஊதியங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்குச் செலுத்தவேண்டிய வரியினைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் 2013 ஆகஸ்ட் ஆண்டிற்கான வங்கியின் பெறுமதி சேர்க்கை ரூபா 933,770,458 இலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,662,254,618 இற்கு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் அது முன்னைய ஆண்டிற்கு எதிராக மீளாய்வாண்டிற்கு ரூபா 344,599,816 அல்லது 21 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.3.2 முக்கியமான நிதிசார் விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான வங்கியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|
| | எஸ்எம்ஜபீ | உரிமம்பெற்ற விசேட வங்கித் துறை | எஸ்எம்ஜபீ | உரிமம்பெற்ற விசேட வங்கித் துறை |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| i. தேறிய வட்டி எல்லை | 4.35 | 3.2 | 5.36 | 3.5 |
| ii. சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 3.52 | 19.2 | 9.50 | 18.3 |
| iii. சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.97 | 1.5 | 2.03 | 1.5 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | | |
| தட்டு I | 23.74 | 12.8 | 22.96 | 13.5 |
| **திரவதன்மை விகிதங்கள்** | | | | |
| i. திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் | 22.10 | 61.6 | 22.82 | 61 |

தேறிய வட்டி எல்லை உரிமம் பெற்ற விஷேட வங்கி துறையினை விட 1.15 சதவீதத்தினால் உயர்வாக இருந்த போதிலும், சராசரி உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 15.68 சதவீதத்தினால் தாழ்வாகக் காணப்பட்டது. மேலும், 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வங்கியின் திரவத்தன்மை உரிமம்பெற்ற விசேட வங்கி துறையினை விட தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 செயற்பாடும் மீளாய்வும்**

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 5 ஆம் இலக்கின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தனிநபர் கடன் விகிதங்களின் இலக்குகள் முறையே 3 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு குறைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 4 கிளைகள் தனிநபர் கடன் இலக்கினை அடைவதற்கு தவறியிருந்ததுடன் 12 கிளைகள் ஈட்டுக் கடன் இலக்கினை அடைவதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வங்கியின் கிளை செயற்படுத்தல் பிரிவினால் வழங்கப்பட்ட கடன் பணவளிப்பு இலக்குகளின் பிரகாரம், 24 கிளைகளில் 6 கிளைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான இலக்குகளின் 75 சதவீதத்தினை அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) சந்தைப்படுத்தல் திணைக்களம் 2020 அளவில் ரூபா 2 பில்லியன் இலாபத்தினை அடைந்துகொள்ளும் பிரதான இலக்குடன் 2016/2017 ஆம் ஆண்டிற்கான அதன் சந்தைப்படுத்தல் திட்டத்தினை தயாரித்திருந்தது. எவ்வாறாயினும், வங்கியின் வரிக்குப் பின்னரான 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 257,493,476 அல்லது 59 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட குழந்தை வங்கியல் எண்ணக்கரு (The Child banking Concept) 2017 திசெம்பர் 31 வரையிலும் அடிப்படை மட்டத்தில் காணப்பட்டது.

(உ) 1975 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம், இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளினை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பின் அபிவிருத்தியில் உதவுவது வங்கியின் நோக்கமாகக் காணப்படுகின்றது. அதற்கமைய, 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், வங்கி

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

வாடிக்கையாளர்களுக்கு விவசாயம் மற்றும் வீடமைப்பு கடனாக அதன் கடன் கலவையின் 99.9 சதவீதத்தினை வழங்கியிருந்தது.

(ஊ) வங்கி மாறுபடும் விகிதமாக ஆண்டிற்கு AWPLR + 12% வட்டியில் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து ரூபா 2 பில்லியன் கடனொன்றை வங்கி பெற்றிருந்தது. AWPLR 10% ஆகக் காணப்பட்டால், உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி விகிதத்தின் அரையாண்டு மீளமைப்பினை புறக்கணக்கிற்கு ஆண்டிற்கான வட்டியாக அண்ணளவாக ரூபா 224 மில்லியனை வங்கி செலுத்த வேண்டிக் காணப்படும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயற்பாடற்ற கடன் விகிதம் 22 சதவீதம் என அறிக்கையிட்டது. இந்த பின்னணிகளை கருத்திற் கொண்ட பின்னர் இந்தக் கடன் நிதிகளினை பயன்படுத்துவதன் மூலம் அதி உத்தம திரும்பலொன்றை வங்கியினால் விளைவிக்க முடியுமா என்பது ஐயத்திற்குரியதாகக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 இல் ஏற்பட்ட மோசடி தொடர்பில், நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோர்களில் மோசடி கணக்காக ரூபா 2,400,000 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் சம்பவத்தை தெளிவாக்கி நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 9,613,360 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டில் வங்கியினால் அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அகற்றப்பட்ட வகைகளினை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக பழமை வாய்ந்த வகைகளின் கிரயம் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது கடன் பணவளிப்பின் பெறுமதி ரூபா 2,381 மில்லியன் அல்லது 29 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கடன்களின் எண்ணிக்கை 429 அல்லது 3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், முன்னைய

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் போது மொத்த பணவளிப்பில் முறையே சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகள் மற்றும் நுண் நிதியிடல் கடன்கள் 2,975 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் தனிநபர் கடன்கள் 79 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) வங்கி ரூபா 32,540 மில்லியன் தொகையான கடன் வசதிகளினை அறிந்திருந்ததுடன் அதில் ரூபா 7,466 மில்லியன் அல்லது 23 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலற்றவைகளாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மொத்த ஊழியர் சேமலாப நிதிக் கடன்களில் ரூபா 5,894 மில்லியன் தொகையொன்று அல்லது 18 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயலற்றவைகளாக அறிக்கையிடப்பட்டது.

(இ) செயலற்ற கடன்களின் வயதுப் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயலற்ற கடன்களின் மொத்த தொகை ரூபா 7,460 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில், ரூபா 4,106 மில்லியன் அல்லது 55 சதவீதம் 1 வருடத்திற்கும் மேலாப நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன், குறித்த பெறுமதியில் ரூபா 3,670 மில்லியன் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதி கடன்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ii) 3 வருடங்களுக்கும் மிகையான செயலற்றவைகளின் பெறுமதியில், ரூபா 66 மில்லியன் தொகையொன்று கையளிக்கப்பட்ட சொத்துக்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(iii) மொத்த செயலற்ற கடன் மீதிகளில் 07 பாரிய செயலற்ற ஈட்டுக் கடன்கள் ரூபா 48 மில்லியன் தொகை 3 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றதுடன் அதில் ரூபா 46 மில்லியன் கூட்டுத்தொகையான 04 கடன்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பாரிய செயலற்ற தனிநபர் கடனின் மொத்த செயலற்ற கடன் மீதிகளில், ரூபா 18 மில்லியன் 3 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்களின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிப்பனவு செய்யப்படல்வேண்டும். அதற்கு முரணாக, ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்திராது வங்கியினால் ரூபா 20,122,583 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 வெளிப்படையான முறைகேடுகள்**

மோசடியான ஆவணங்கள் மற்றும் மோசடியான தகவல்களினை வழங்கி 47 தனிநபர்களினால் ரூபா 68.34 தொகையான மொத்தப் பெறுமதியுடைய கடன்கள் பெறப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த கடனின் மொத்த தொகை 2017 திசெம்பர் 31 இல் செயற்பாடற்ற மீதியில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் பதவியணியினர் நிலைமையின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 471 மற்றும் 365 ஆகக் காணப்பட்டமையினால் 106 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மேற்குறித்த வெற்றிட நிலமைகளில் மூன்று பிரதிப் பொது முகாமையாளர்கள் பதவிகள், மூன்று உதவிப் பொது முகாமையாளர்கள் பதவிகள் மற்றும் நான்கு பிரதம முகாமையாளர்களின் பதவி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவை வங்கி தொழிற்பாடுகளின் சுமூகமான செயற்பாட்டிற்கு தாக்கமளிக்கக்கூடும்.

**4.7 சந்தைப் பங்கு**

2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வங்கியின் வைப்புக்கள் மீதான அடிப்படையில் சந்தைப் பங்கினை விசேட அனுமதிபெற்ற வங்கி துறையுடன் ஒப்பிடுகையில் 2 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்திருந்தது. மேலும், 2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வங்கியின் சொத்துக்கள் மீதான அடிப்படையில் சந்தைப் பங்கினை விசேட அனுமதிபெற்ற வங்கி துறையுடன் ஒப்பிடுகையில் 17 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்திருந்தது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

வங்கியின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2016 சனவரி 01 இலிருந்து தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

### 5.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 5.2.1 பெறுகைகள்

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், தலைமை அலுவலகத்திற்கான புதிய கட்டத்தின் கொள்வனவுக்கு மற்றும் ஹொரண கிளைக்கான காணி மற்றும் கட்டிடமொன்றிற்கு முறையே ரூபா 1,300 மில்லியன் மற்றும் ரூபா 62 மில்லியன் தொகைகள் மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், புதிய கட்டத்தின் பெறுகை ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டது. ஹொரண கிளைக்கான காணி கொள்வனவுக்கு வங்கி தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டலின் 4.2.1(உ) அத்தியாயத்தின் பிரகாரம், பிரதான பெறுகைத் திட்டம் ஆறு மாதங்களினை மிகைக்காத இடைவெளிகளில் தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்படல் வேண்டும். வங்கி அந்த வழிகாட்டலுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், வங்கி ஐந்து கிளைகளில் இயலளவினை விரிவாக்க எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், வங்கி மேற்குறித்த இலக்குகளினை அடைவதற்கு முழுமையாக தவறியிருந்தது.

(ஈ) பெறுகை வழிகாட்டலின் 2.3.2(இ) அத்தியாயத்தின் பிரகாரம், விபரக்குறிப்புக்கள் மற்றும் மீளாய்வு மற்றும் அங்கீகாரத்திற்கு ரீஈசீஎஸ் (TECs) இற்கு அதனை சமர்ப்பிப்பது உள்ளடங்கலாக வரைவு விலைமனு ஆவணங்களின் தயாரிப்பில் பெறுகை செயற்பாடொன்றின் பதவியணியினர் பொறுப்பாகக் காணப்படுவர், எவ்வாறாயினும், 8 கிளைகளின் பகுதிகளாக பிரித்தல் தொடர்பில் வங்கியினால் அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் இல் உள்ளவாறு ரூபா 2,370,878 தொகையொன்று தலைமை அலுவலகத்திற்கு ஏற்பட்டிருந்தது.

மேலும், பெறுகை வழிகாட்டலின் 6.3.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், விலைமனு ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் விலைமனுக்கள் மூடப்படுவதுடன் தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் திறக்கப்படாது திருப்பியனுப்பப்படும். இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பெறுகை இறுதித் திகதிக்கு பின்னர் சமர்பபிக்கப்பட்ட விலைமனுதாரர்க்கு ஒப்பந்ததாரரொருவர்க்கு அளிக்கப்பட்டிருந்தது.

(உ) அரச பெறுகை வழிகாட்டல் 2006 இன் 5.1.1(அ) பந்தியின் பிரகாரம், பெறுகை நிறுவகம் தொழில்நுட்ப விபரக்குறிப்புக்கள், வரைபடங்கள் உள்ளடங்கலாக விலைமனு ஆவணங்களின் வரைவினை ஆரம்பித்துவைக்க வேண்டும். ரூபா 2,112,357 பெறுமதியுடைய கணனி உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்கு விலைமனு ஆவணங்களினை வரையும் போது வங்கி தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களினை சமர்ப்பித்திருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கடனுடன் தொடர்புபட்ட செலவினங்கள், பதவியணியினர் கற்கை மற்றும் பயிற்சிக்கான செலவினம், நிலையான சொத்துக்கள் மற்றும் கடன் பெறுதல் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது விளைத்திறனானதொரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 06. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வித்தியாசங்கள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பொதுப் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் | கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் விளக்கமளிக்கப்படாதவற்றை கண்டறிவதற்கு கவனம் செலுத்தப்படவில்லை. |
| (இ) | சந்தைப் பங்கினை பேணுதல் | சந்தைப் பங்கின் ஏற்றுக்கொள்ளக்கூடிய வளர்ச்சி அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பதிவேடுகளைப் பேணுதல் - | இருப்பு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நாளேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருமானக் கூற்று

| 31 டிசம்பர் 2017 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | | 4,745,059,385 | 4,240,771,159 |
| வட்டி செலவினம் | | (3,101,891,268) | (2,425,330,442) |
| **தேறிய வட்டி வருமானம்** | 1 | 1,643,168,117 | 1,815,440,717 |
| கட்டணங்களும் தரகும் வருமானம் | | 149,313,983 | 121,154,693 |
| கட்டணங்களும் தரகும் செலவினம் | | - | - |
| **தேறிய கட்டணங்களும் தரகும் வருமானம்** | 2 | 149,313,983 | 121,154,693 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய) | 3 | 21,858,420 | 9,945,623 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | 1,814,340,520 | 1,946,541,033 |
| கடன்களுக்கும் ஏனைய நட்டங்களுக்கும் பெறுமதி குறைப்பு விதிப்பனவு | 4 | (225,391,986) | (35,276,398) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | | 1,588,948,534 | 1,911,264,636 |
| ஆளணி செலவுகள் | 5 | (725,129,018) | (698,204,774) |
| ஏனைய செலவுகள் | 6 | (297,858,463) | (286,537,111) |
| **பெறுமதி சேர்ந்த வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | 565,961,053 | 926,522,751 |
| நிதியியல் சேவைகள் மீது பெறுமதி சேர்த்த வரி | | (165,028,588) | (189,618,676) |
| நிதியியல் சேவைகள் மீது தே.க.வரி | | (22,003,812) | (30,835,193) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | 378,928,654 | 706,068,883 |
| வரி செலவுகள் | 7 | (200,404,345) | (270,051,098) |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 178,524,309 | 436,017,785 |

# விரிவான வருமானக்கூற்று

| 31 டிசம்பர் 2017 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 178,524,309 | 436,017,785 |
| **ஏனைய முழுமையான வருமானம், தேறிய வரி** | | | |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதியியல் சொத்துகளை மீள் அளவிடலின் மீது இலாபமும் நட்டமும் | | 655,000 | (530,000) |
| அறுதியிட்ட நன்மை திட்டங்களின் (+/-) கணிப்பீட்டு இலாபமும் (நட்டங்களும்) | | 5,206,601 | 31,357,418 |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | | 184,385,910 | 466,845,203 |

# நிதி நிலமையின் கூற்று

| 31 டிசம்பர் 2017 அன்றுள்ளவாறு | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 09 | 104,191,042 | 98,024,536 |
| நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் வைத்துள்ளவை | 10 | 7,070,477,026 | 5,700,335,444 |
| கிடைக்க வேண்டியவையும் வாடிக்கையாளர்களா் கடன்களும் | 11 | 32,987,158,106 | 28,163,700,935 |
| நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | 12 | 23,274,078 | 22,619,078 |
| நிதியியல் முதலீடுகள் - முதிர்விற்கு வைத்துள்ளவை | 13 | 1,035,368,792 | 667,814,030 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 14 | 71,381,532 | 93,575,951 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | 15 | 95,801,007 | 95,858,266 |
| ஏனைய சொத்துகள் | 16 | 634,770,231 | 505,230,283 |
| **மொத்த சொத்துகள்** | | 42,022,421,815 | 35,347,158,523 |
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 17 | 32,047,664 | 19,056,864 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 18 | 33,620,237,411 | 28,845,169,193 |
| எனைய கடன் பெறுகைகள் | 19 | 2,497,188,501 | 502,912,396 |
| ஊழியா் நன்மை பொறுப்புகள் | 20 | 336,544,991 | 322,682,597 |
| ஏனைய பொறுப்புகள் | 21 | 579,972,958 | 739,142,216 |
| **மொத்த பொறுப்புகள்** | | 37,065,991,525 | 30,428,963,265 |
| **பங்கு முலதனம்** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம்/நியமிக்கப்பட்ட மூலதனம் | 22 | 889,812,899 | 889,812,899 |
| நியம ஒதுக்கு நிதி | 23 | 246,635,734 | 231,357,505 |
| பிடித்துவைத்துள்ள வருவாய் | 24 | 2,729,277,654 | 2,706,975,850 |
| ஏனைய ஒதுக்குகள் | 25 | 1,090,704,004 | 1,090,049,004 |
| **மொத்த பங்கு முலதனம்** | | 4,956,430,290 | 4,918,195,257 |
| **மொத்த பங்கு முலதனமும் பொறுப்புகளும்** | | 42,022,421,815 | 35,347,158,523 |
| **ஏற்படக்கூடிய பொறுப்புகளும் கடப்பாடுகளும்** | 26 | - | - |

சான்றிதழ்: (அ) இலஙக்க மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட மாதிரி வரைவிலக்கணங்களுக்கு இணங்கியதாக மேலேயுள் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**கே.எல்.என்.ஏ.பெரேரா**
உதவி பொது முகாமையாளர்
(நிதி)

இந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் வெளிப்படுத்தவதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையுடையதாகும் . இந்த நிதியியல் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

| **திரு. நிரோஷன் பெரேரா**<br>தலைவர் | **திருமதி. கே.டி.ஆர். ஒல்கா**<br>பணிப்பாளர் | **டப்ளியூ.எம். தயசிங்க தலைவர்**<br>பி.நி.அ/ பொது முகாமையாளா |
|---|---|---|

# உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

**31 டிசம்பர் 2017ம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் | நியம ஒதுக்கு மூலதனம் | மூலதன ஒதுக்கு | பொது ஒதுக்கு | உரிமை நட்டோத்தரவாத நிதியம் | பிடித்துவைத்த பெறுகைகள் | விற்பனைக்கு கிடைக்கக் கூடிய ஒதுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **31.12.205ம் திகதியன்று மீதி** | 889,812,899 | 203,052,939 | 9,176,000 | 683,280,000 | 1,031,000 | 2,449,406,437 | 27,363,822 | 4,263,123,097 |
| முன் வருடத்திற்கான சீராக்கங்கள் | | | | | | 1,845,834 | | 1,845,834 |
| இவ்வாண்டுக்கான தேறிய இலாபம் | | | | | | 436,017,785 | | 436,017,785 |
| கருதப்பட்ட பங்குலாப வரி | | | | | | (173,347,059) | | (173,347,059) |
| அரசாங்க கடன் மாற்றம் | | | 384,322,004 | | | - | | 384,322,004 |
| ஏனைய விரிவான வருமானம் | | | | | | 31,357,418 | (15,123,822) | 16,233,595 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | | 28,304,566 | | | | (28,304,566) | | - |
| திரட்டிய நிதிக்கான மாற்றங்கள் | | | | | | (10,000,000) | | (10,000,000) |
| **31.12.2016ம் திகதியன்று மீதி** | 889,812,899 | 231,357,505 | 393,498,004 | 683,280,000 | 1,031,000 | 2,706,975,850 | 12,240,000 | 4,918,195,257 |
| இவ்வாண்டுக்கான தேறிய இலாபம் | | | | | | (27,884,783) | | (27,884,783) |
| கருதப்பட்ட பங்குலாப வரி | | | | | | 178,524,309 | | 178,524,309 |
| அரசாங்க கடன் மாற்றம் | | | | | | (93,266,093) | | (93,266,093) |
| ஏனைய விரிவான வருமானம் | | | | | | 5,206,601 | 655,000 | 5,861,601 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | | 15,278,229 | | | | (15,278,229) | | - |
| திரட்டிய நிதிக்கான மாற்றங்கள் | | | | | | (25,000,000) | | (25,000,000) |
| **31.12.2017ம் திகதியன்று மீத** | 889,812,899 | 246,635,734 | 393,498,004 | 683,280,000 | 1,031,000 | 2,729,277,654 | 12,895,000 | 4,956,430,290 |

# காசுபாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் 2017 முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| கிடைத்த வட்டி | | 3,700,799,179 | 3,512,102,483 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | | (2,188,853,183) | (1,827,279,478) |
| பணியாளார்களுகான காசு கொடுப்பனவு | | (687,458,688) | (648,946,375) |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பற்றுச்சீட்டுகள் | | 151,964,903 | 125,012,566 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மீதான கொடுப்பனவுகள் | | (295,331,973) | (286,104,056) |
| **தொழிற்பாட்டு சொத்துகளின் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | | 681,120,237 | 874,785,139 |
| **செயற்பாட்டு சொத்துகளின் (அதிகரிப்பு)/குறைவு** | | | |
| வாடிக்கையாளர்களுக்கு முற்பணமாக கொடுத்த நிதி (தேறிய) | | (5,000,603,645) | (1,758,233,406) |
| ஏனைய குறுங்கால பிணையங்கள் | | (1,756,102,303) | 741,830,982 |
| | | (6,756,705,948) | (1,016,402,424) |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/(குறைவு)** | | | |
| வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புகள் (தேறிய) | | 3,866,183,753 | 276,337,326 |
| ஏனையவைகள் | | - | - |
| | | 3,866,183,753 | 276,337,326 |
| **வருமான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | (2,209,401,958) | 134,720,041 |
| செலுத்தப்பட்ட வரி | | (530,114,582) | (678,620,779) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | (2,739,516,540) | (543,900,738) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| பெறப்பட்ட பங்கிலாபங்கள் | | 19,207,500 | 6,087,750 |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து வருவாய் | | 214,300 | - |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (11,116,587) | (56,687,346) |
| ஏனைய வங்கிகளுடனான வைப்புகளிலிருந்து கிடைத்த வட்டி | | 569,376,251 | 408,206,582 |
| ஏனைய வங்கிகளுடனான வைப்புகளிலிருந்து கிடைத்த வட்டி | | 189,888,295 | 251,561,432 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | 767,569,760 | 609,168,418 |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல** | | | |
| தொகுதிக் கடன்களின் மீள்கொடுப்பனவு | | - | - |
| கடனகளின் மீள்கொடுப்பனவு | | (218,897,514) | (72,701,054) |
| கடன்பெறுகைகளிலிருந்து வருவாய்கள் | | 2,209,020,000 | - |
| திரட்டு நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | (25,000,000) | (10,000,000) |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | 1,965,122,486 | (82,701,054) |
| **காசும் காசுக்கு சமனானவற்றிலும் தேறிய அதிகரிப்பு** | | (6,824,294) | (17,433,375) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவையும் | | 78,967,672 | 96,401,047 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமனானவையும் | | 72,143,378 | 78,967,672 |
| **காசும் காசுக்கு சமனானவற்றினதும் கணக்கிணக்கம்** | | | |
| காசும் குறுங்கால நிதியமும் | | 104,191,042 | 98,024,536 |
| வங்கிகளிடமிருந்து கடன் பெறுகைகள் | | (32,047,664) | (19,056,864) |
| | | 72,143,378 | 78,967,672 |

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. நிறுவனத் தகவல்

### 1.1 பொது

இலங்கை அரச ஈட்டு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கியாக 06 டிசம்பர் 1931 இல் ஒன்றிணைக்கப்பட்டது. 1975 இன் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சட்டத்தினால், வங்கி நிறுவப்பட்டது. இலங்கை அரச ஈட்டு வங்கி மற்றும் விவசாயமும் கைத்தொழிலும், கடன் கூட்டுத்தாபனம் என்பவற்றை ஒன்றிணைத்ததாக இது 1943 இல் தாபிக்கப்பட்டது.

### 1.2 முக்கிய நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முக்கிய செயற்பாடு வீடமைப்பு நிதி வழங்களாக இருப்பினும் உருவாகிவரும் போட்டிகளுக்கு முகங்கொடுப்பதற்காக அண்மைக் காலத்தில் வாகனக் கடன்கள் மற்றும் சுயதேவைக் கடன்கள் போன்ற ஏனைய கடன் வசதிகளையும் பன்முகப்படுத்தி வருகின்றது..

### 1.3 பணிப்பாளர்களின் பொறுப்பேற்றல் கூற்று

2007 இன் 07 ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கும் (SLFRS) அமைவாக, இந்த நிதிக் கூற்றுகளின் தயாரிப்பிற்கும், வெளியிடலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது.

### 1.4 அதிகாரமளிக்கப்பட்ட திகதி

31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதியியல் கூற்றுகள் 25.09.2018 அன்று பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, வெளியிடப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

31 டிசம்பர் 2017 அன்றுள்ளவாறு, வங்கியின் பணியாட் தொகுதியினர் வலு 365 ஆகும். (31 டிசம்பர் 2016 இல் 375).

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1. தயாரித்தலுக்கான அடிப்படை

இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமத்திற்கு (SLFRS and LKAS) அமைவாக 31 டிசம்பர் 2017 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இந்த நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்பட்டன.

உண்மை பெறுமதியில் அளக்கப்படும், விற்பனைக்கான முதலீடுகளுக்கு கிடைக்கக் கூடியவை தவிர்ந்த, வரலாற்று ரீதியான கிரய அடிப்படையில், இலங்கை ரூபாய்களில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (அ.ஈ.மு.வ.) நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளன. வீக்க நிலைமைகளுக்காக சீராக்கல்கள் எவையும் செய்யப்படவில்லை.

### 2.1.1. கூற்றுக்களின் இணக்கம்

நிதிக் கூற்றுகளை வெளியிடுவது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்திற்கு (இநிஅறி) அமைவாகவும் வங்கியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.2. நிதியியல் கூற்றுக்களை வெளிப்படுத்தல்

நிதிக் கூற்றுகளை வெளியிடுவது வங்கி அதன் நிதியியல் நிலைமை கூற்றுகளை அதிகமாக திரவ அடிப்படையில் அளிக்கின்றது. குறிப்பு 30இல் வங்கியின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் ஒப்பந்த முதிர்வுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நிதியியல் சொத்துகளும், நிதியியல் பொறுப்புகளும் ஈடுசெய்யப்படுகின்றதுடன், அடையாளம் காணப்பட்ட தொகைகள் ஈடுசெய்வதற்கான உரித்து சட்டரீதியாக நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே நிதியியல் நிலைமை கூற்றில் தேறிய தொகை அறிவிக்கப்படும் என்பதுடன், தேறிய அடிப்படையில் கொடுத்துத் தீர்ப்பதற்கான உத்தேசம் அல்லது ஒரே நேரத்தில் சொத்துகளை அறிவதும பொறுப்புகளை கொடுத்துத் தீர்ப்பதுமாகும். தேவை ஏற்படின் அல்லது ஏதாகிலும் கணக்கீட்டு தரப்படுதல் அனுமதிக்குமாயின் அல்லது விளக்கமளிப்பதற்கும், வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விசேடமாக வெளிப்படுத்தப்படும்.

### 2.2. முக்கியமான கணக்கீட்டு தீர்வுகளும், மதிப்பீடுகளும், ஊகங்களும்

வங்கியின் கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகளை தீர்மானிப்பதற்கு. முகாமைத்துவம் தீர்ப்புகளையும், மதிப்பீடுகளையும் பயன்படுத்தியுள்ளது. நிச்சயமின்மைகளுடன் தொடர்புடைய முக்கியமான குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்ப்புகளும், மதிப்பீடுகளும், ஊகங்களும் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன. அதேநேரம் தொடர்புடைய குறிப்புகளில் அத்தகைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொடர்புடைய கொண்டு செல் பெறுமதிகளும் தரப்பட்டுள்ளன.

### 2.2.1. தீர்ப்புகள்

**வரி விதிப்புகள்**

வரி விதிப்புகள் நிதி சேவை மீதான பெறுமதியிடப்பட்ட வரி உள்ளடங்களாக வருமான வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு வங்கி உள்ளாக்கப்படுகின்றது. நிதி கூற்றுகளின் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தை கை கொள்வதற்காக வரி வழிகாட்டிகளாக, நடப்பு, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளின் மொத்த ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க தீர்ப்புகளும் வரிகளை விதிப்பதற்கான நோக்கத்திற்கு வரியிடக்கூடிய இலாபமும் தேவைப்பட்டன. இத்தகைய நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் நேரத்தில் வரிச் சட்டங்களை பிரயோகிப்பதை விளக்குவது தொடர்பாக நிச்சயமின்மைகளும் ஏற்படுகின்றன.

உத்தேச மதிப்பீடுகளின் அடிப்படையில் மேலதிக வரிகளுக்கான தேவை உள்ளதா என்பதை நடப்பு, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஊடாக வங்கி இனங்கண்டுள்ளது. ஆரம்ப பதிவுகளின் தொகைகளிலிருந்து வேறுபடுவதாக, இறுதியான வரிகள் இருப்பது இதில் கவனிக்கப்படுமாயின் தீர்வுகள் எடுக்கப்படும் காலத்தில் வருமானம் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி தொகைகளில் இத்தகைய வேறுபாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### 2.2.2. உத்தேச மதிப்பீடுகளும் கருதுகோள்களும்

**இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம்**

வங்கியின் முகாமைத்துவம் வங்கியின் தொடர்ந்து இயங்கும் தன்மையை அளவீடு செய்து, வங்கி எதிர்பார்க்கக்கூடிய காலத்துக்கு இயங்கும் தன்மை உள்ளது என்று திருப்திபடுகின்றது. மேலும் தொடர்ந்து இயங்கும் தன்மையைச் சந்தேகிக்கக்கூடிய கணக்கெடுக்கக்கூடிய ஐயங்கள் எதுவும் முகாமைத்துவத்திற்கு அறியக்கிடைக்கவில்லை. எனவே நிதியில் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற முறையிலேயே தயார் செய்யப்படுகின்றது.

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதி**

நடைமுறைச் சந்தையில் இருந்து நிதி நிலைமை கூற்றின் மீதான, நிதி சொத்து மற்றும் நிதியியல் ஏற்பாடுகளின் பெறுமதியை பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து, இவை கணித முறைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப முறையில் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவற்றின் தரவுகள் கண்டுக் கொள்ளக் கூடிய தரவுகளாலும், கண்டுக் கொள்ளக் கூடிய தரவுகள் இல்லாதவிடத்து, உண்மைப் பெறுமதியில் வெளியிடப்படுவதற்கான தீர்வு ஏற்படுத்தப்படும்.

**கடன்களும் முற்பணங்களும் மீதான பெறுமதி குறைப்பு**

**தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும்**

நட்டங்கள் தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும் கடன்தீர் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகளுக்கு (வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் மற்றும் முதிர்ச்சி முதலீட்டிற்காக பிடித்துவைத்துள்ளவையும் போன்றவை) தனிப்பட்ட ரீதியில் முக்கியம் பெறும் நிதிச் சொத்துகள் அல்லது தனிப்பட்ட வகையில் முக்கியம் பெறாத கூட்டாக செயற்படும் நிதிச் சொத்துகள் என்பவற்றிற்கு பெறுமதி குறைப்பிற்கான வாய்ப்புள்ள சான்றுகள் உள்ளதா என வங்கி முதலில் மதிப்பீடு செய்யும்.

**கிடைக்கக்கூடிய விற்பனை முதலீடுகளுக்கு, பெறுமதி குறைப்பு**

கிடைக்கக் கூடிய விற்பனை முதலீடுகள் என வகைப்படுத்தப்பட்ட அதன் முதலீடுகளை, அவை பெறுமதி குறைப்பிற்கு ஆளாகியுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியும் வங்கி அவற்றை மீளாய்வு செய்யும். தனிப்பட்ட மதிப்பீட்டு முறைகளுக்கு பிரயோகிக்கப்பட்ட அதே மாதிரியிலான தீர்ப்புகள் கடன்களும் முற்பணங்களும் இவற்றிற்கும் தேவைப்படும்.

கிடைக்கக்கூடிய விற்பனை பங்குகளின் கிரயம், உண்மை பெறுமதியை விட குறைவானதாக குறிப்பிட்ட ஒரு காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் வீழ்ச்சிப் போக்கை காண்பிக்கும் போது வங்கி பெறுமதி குறைப்பு விதிப்பனவுகளுக்கு பதிவு செய்யும். இந்த குறிப்பிட்ட காலம் அல்லது நீண்ட காலம் என்பவற்றிற்கு தீர்ப்புகள் தேவைப்படும். வங்கி ஏனைய காரணிகளுடன், வரலாற்று ரீதியான பங்கு விலை அசைவுகள், மூலதனமொன்றின் உண்மை பெறுமதி, அதன் கிரயத்தை விட குறைவாக இருப்பது என்பவற்றையும் உத்தேச மதிப்பிடு செய்யும்.

**ஒத்திவைக்கப்பட்ட வரி**

சொத்துகள் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் வரி நட்டங்கள் தொடர்பாக இனங்காணப்படுகின்றன. எதிர்காலத்தில் வரியிடக் கூடிய இலாபங்கள் கிடைக்கும் என்ற கருதுகோலுடன் நட்டங்களுக்கு எதிராக இவற்றை பயன்படுத்திக் கொள்ள முடியும் என ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. இனங்காணப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகளின் தொகையை தீர்மானிப்பதற்கு, காலம் மற்றும் எதிர்கால வரியிடல் இலாபங்களின் மட்டங்கள் என்பவற்றுடன் எதிர்கால வரியிடல் திட்ட உபாயங்களுக்கும் தீர்ப்புகள் தேவைப்படுகின்றன.

**ஊழியர் நன்மை பொறுப்புகள் - பணிக் கொடை**

கணிப்பீட்டு மதிப்பீடு ஒன்றை பயன்படுத்தி பணிக்கொடை அதாவது அறுதியிட்ட பணிக்கொடை நன்மைத் திட்டத்தின் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் எஞ்சியுள்ள பணியாளர்களின் பணியாற்றும் காலம், மற்றும் இறப்பு வீதங்கள் என்பவை கணிப்பீட்டு மதிப்பீட்டின் ஊகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கடப்பாடுகளின் நீண்ட கால இயல்பினால் இத்தகைய உத்தேச மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைகளுக்கு உள்ளாகலாம். பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்வருமாறு.

| | 2017 | 2016 |
|---|---|---|
| வட்டி வீதம் | 11.50% | 10.00% |
| வருடாந்த சம்பள அதிகரிப்பு வீதம் | 7.50% | 8.50% |
| ஓய்வு பெறும் வயது | 55-60 ஆண்டு | 55-60 ஆண்டு |

பணிக்கொடை ஏற்பாட்டின் ஊழியர் நன்மை கடப்பாடு குறிப்பு 20இல் தரப்பட்டுள்ளது

**ஊழியர் நன்மை பொறுப்பு - மருத்துவ நன்மை**

கணிப்பீட்டு மதிப்பீடு ஒன்றை பயன்படுத்தி பணிக்கொடை அதாவது அறுதியிட்ட மருத்துவ நன்மைத் திட்டத்தின் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு வீதங்கள், மருத்துவத்துறை வீக்க நிலைமைகள் மற்றும் இறப்பு வீதங்கள் என்பவை கணிப்பீட்டு மதிப்பீட்டின் ஊகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கடப்பாடுகளின் நீண்ட கால கடப்பாடுகளினால் இத்தகைய உத்தேச மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைகளுக்கு உள்ளாகலாம். பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்வருமாறு. .

பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்வருமாறு.

| | 2017 | 2016 |
|---|---|---|
| கழிவு வீதம் | 11.50% | 10.00% |
| மருத்துவச் செலவு விரிவாக்கம் | 10.00% | 10.00% |
| பங்கேற்பாளர் தரவு (செயற்படுவது) அன்றுள்ளவாறு குடிமதிப்பீட்டு தகவல் | 31.12.2017 | 31.12.2016 |

குறிப்பு 20 இல் ஊழியர் நன்மை விபரங்கள் தரப்பட்டுள்ளது

## 2.3. முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

### 2.3.1. நிதியியல் பத்திரங்கள் - ஆரம்ப இனங்காணல்களும் பின்னைய அளவீடுகளும

**அ. இனங்காணப்பட்ட திகதி**

கொடுத்ததுத் தீர்க்கும் கணக்கீட்டுத் திகதியைப் பயன்படுத்தி, பொதுவாக நிதியியல் சொத்துகளின் கொள்வனவுகள் இனங்காணப்படுகின்றன. நிறுவனமொன்றிற்கு சொத்தொன்று அளிக்கப்படும் திகதி கொடுத்துத் தீர்க்கும் திகதியாகவிருக்கும். நிறுவனத்தினால் சொத்து ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்ட நாள் கொடுத்துத் தீர்க்கும் கணக்கீட்டு திகதியை குறிப்பிடுவதாக இருக்கும். சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கு கணக்கீடுகளை செய்வதை போலவே வணிக திகதிக்கும் கொடுத்தத் தீர்க்கும் திகதிக்கும் இடையிலான காலத்தில் சொத்துகளின் உண்மை பெறுமதியில் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றத்திற்கும் நிறுவனக் கணக்குகளில் கொடுத்து தீர்த்தல் கணக்கீடுகள் பிரயோகிக்கப்படும்.

வழமைக்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்ட நிதியியல் பத்திரங்கள் பொறுப்புகள் - வணிக திகதியில் இனங்காணப்படுகின்றன.

பொதுவாக சந்தையில் ஒழுங்கமைப்பு அல்லது கூட்டம் ஒன்றில் தாபிக்கப்பட்ட நேரச்சட்டத்திற்குள் சொத்தொன்று அளிக்கப்படுவதற்கான தேவைக்கு அமைவாக, ஒரு ஒப்பந்தத்தின் கீழ் நிதியியல் சொத்தொன்று கொள்வனவு செய்யப்படுவது வழமையான ஒரு கொள்வளவு நடைமுறையாகும்.

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**ஆ. நிதியியல் பத்திரங்களின் ஆரம்ப அளவீடுகள்**

நிதியியல் பத்திரங்களின் வகைப்படுத்தலின் ஆரம்ப இனங்காணல் அவற்றின் நோக்கமும் இயல்பும் மற்றும் அவற்றை சுவீகரிப்பதற்கான முகாமைத்துவத்தின் உத்தேசத்திலும் தங்கியுள்ளன. சகல நிதியியல் பத்திரங்களும் ஆரம்பத்தில் அவற்றின் உண்மை பெறுமதியிலும் கொடுக்கல் வாங்கல் செலவிலும் அளவிடப்படுகின்றன. இலாப நட்ட கணக்கின்ஊடாக உண்மை பெறமதியில் பதிவு செய்யப்படும் நிதியியல் பொறுப்புகளும் நிதியியல் சொத்துக்களும் இதில் விலக்களிக்கப்படும்.

**இ. விற்பனைக்கு கிடைக்கக் கூடிய நிதியியல் பத்திரங்கள்**

விற்பனைக்கு கிடைக்க கூடிய நிதியியல் முதலீடுகளில் யுனிட் டிரஸ்ட் முதலீடுகளும் உள்ளடங்கும். இவ்வாறானவை, வணிகத்திற்காக பிடித்து வைத்துள்ளவையோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்டவையோ அல்ல.

வங்கி எத்தகைய கடன்களையும் அல்லது கிடைக்கக் கூடியவற்றையும், விற்பனைக்குக் கிடைக்கக் கூடியவை என குறித்தொதுக்கவில்லை. விற்பனைக்குக் கிடைக்கக் கூடியவை நிதி முதலீடுகளின் ஆரம்ப அளவீடுகளின் பின்னர் தொடர்ந்து உண்மை பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

பணமாக்கப்படாத வருவாய்களும் நட்டங்களும். விற்பனைகளாக கிடைக்கக் கூடிய ஒதுக்கின் பங்கு மூலதனத்தில் நேரடியாக

இனங்காணப்படுகின்றன. (ஏனைய முழுமையான வருமானம்) முதலீடு அகற்றப்பட்ட பின்னர், முன்னதாக பங்கு மூலதனத்தில் இனங்காணப்பட்ட ஒட்டு மொத்த வருவாய் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் காட்டப்படும். கொடுப்பனவு அதிகாரம் நிரூபிக்கப்பட்டதும், வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில், விற்பனைக்கு கிடைக்கக் கூடிய நிதியியல் முதலீடுகளில் வைத்துள்ள பங்கிலாபங்களில் ஈட்டப்பட்டவையாக இணங்காணப்படும். அத்தகைய முதலீடுகளின் பெறுமதி குறைப்பிலிருந்து உருவாகும் நட்டங்கள், வருமானக் கூற்றில், நிதி முதலீடுகளின் மீதான பெறுமதி குறைப்பு நட்டங்களில் இணங்காணப்பட்டு, விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து அகற்றப்படும்.

**ஈ. முதிர்ச்சிக்கென வைத்துள்ள நிதியியல் முதலீடுகள்**

முதலீடுகள் நிர்ணயிக்க வேண்டியவை அல்லாதவையான நிதியியல் சொத்துக்கள், அவை தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் தீர்மானிக்கக்கூடிய முதிர்ச்சியையும் உடையவை. வங்கி இவற்றை முதிர்ச்சி வரை கொண்டிருக்கும் எண்ணமும் தகைமையும் உடையது. ஆரம்ப கணக்கீட்டின் பின் முதிர்ச்சிக்கென கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள் பின்னர் கொடுக்கப்பட்ட செலவின் அடிப்படையில் வி.வ.வீ ஐ உபயோகித்து ஊறு நீக்கலாக கணக்கிடப்படும். கையேற்கும் போது கிடைக்கும் விலைக்கழிவு. விலை உயர்வு என்பவற்றை ஒரு உள்ளடக்கமாகக் கொண்டு வி.வ.வீ கணக்கிடப்படுகின்றது. மீள் கொடுப்பனவுகள் வருவாய்க்கூற்றில் "வட்டியும் அது போன்ற வருமானங்களும்" என்பதில் உள்ளடங்கும். அத்தகைய முதலீடுகளில் இருந்து உருவாகும் ஊறுகளால் ஏற்படும் நட்டங்கள் வருவாய்க்கூற்றில் பெறுமதி குறைப்பு செலவினமாகக் காட்டப்படும்.

குறிப்பிடக்கூடியதல்லாத அளவிற்கு மேம்பட்ட முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகளை வங்கி விற்க வேண்டுமாயின் (சில விசேட நடைமுறைகள் தவிர்ந்த) முழுப்பகுதியுமே விற்பனைக்கு உள்ள முதலீடுகளாக பகுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் அடுத்த இரு வருடங்களுக்கு வங்கி முதிர்ச்சி வரை கொண்டுள்ள பகுப்பில் எந்த நிதியியல் சொத்தையும் வைத்திருக்க தடை செய்யப்படும்.

**உ. ஏனைய நிதியியல் பொறுப்புகள்**

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக. உண்மை பெறுமதியில் தரப்படாத வங்கியினால் வழங்கப்பட்ட நிதியியல் பத்திரங்கள் ஏனைய நிதியியல் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும். ஒப்பந்த ஒழுங்கின் விளைவாக வங்கிக்கு ஏற்கக்கூடிய கடப்பாடு ஒன்றினால், காசு அளிக்க வேண்டிய அல்லது வைப்பாளருக்கு வேறொரு நிதி சொத்தினை அளிக்க அல்லது நிலையான பணத்தொகை ஒன்றை அல்லது வேறொரு நிதி சொத்தைப் பரிமாறிக் கொள்வதனூடாக கடப்பாட்டை திருப்தி செய்வதாக இருக்கும்

வாடிக்கையாளரிடமிருந்து வைப்புகள், வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை, வங்கிகளிலிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் கடன் பெறுகைகள், மற்றும் தொகுதிக் கடன்கள் என்பவை ஏனைய நிதியியல் பொறுப்புகளில் உள்ளடங்கும். ஆரம்ப அளவீட்டின் பின்னர். அடுத்துவரும் அளவீடுகள் வி.வ.வீ யை பயன்படுத்தி கடன்தீர் கிரயத்தில் ஏனைய நிதியியல் பொறுப்புகள் அளவிடப்படும். வி.வ.வீ இன் ஒன்றிணைந்த பகுதியான விடயங்கள் மற்றும் கிரயங்கள் மீது எந்தவொரு கழிவுகள் அல்லது ஊதியங்கள் என்பவை கணக்கிலெடுக்கப்பட்டு கடன்தீர் கிரயத்தில் கணக்கிடப்படும்.

**ஊ. கடன்களும் கிடைக்க வேண்டியவையும் என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துகள்**

கடன்களும் கிடைக்க வேண்டியவையும் என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துகளில் சந்தையில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்பட்ட சொத்துகளும். உள்ளடங்கும்.

- உடனடியாக அல்லது நெருங்கிய காலத்திற்குள் விற்கவேண்டும் என வங்கி உத்தேசித்துள்ளவையும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக உண்மை பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டவையும்
- விற்பனைக்கு கிடைக்கக் கூடியதாக ஆரம்பத்திலேயே வங்கியினால் இனங்காணப்பட்டவை.
- கடன் சிதைவு தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக, வங்கி அதன் ஆரம்ப முதலீடுகள் அனைத்தையும் முடிந்தளவு அறவிட முடியாத போது உருவானது.

ஆரம்ப அளவிட்டின் பின்னர், பெறுமதி குறைப்பு அலவன்சுகளை கழிவு செய்து விவவீயை பயன்படுத்தி கடன்தீர் கிரயத்தில் வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டியவையும் வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் என்பவையும் அளக்கப்படுகின்றன. சுவீகரிக்கப்பட்டதன் மீதான எவ்வித கழிவு அல்லது ஊதியத்தையும் மற்றும் விவவீன் ஒன்றிணைந்த பகுதியான கட்டணங்களையும், கிரயம் கணக்கிலிருந்து கடன்தீர் கிரயம் கணக்கிடப்படுகின்றது. வருமானக் கூற்றில் வட்டியும் மற்றும் அதுபோன்ற வருமானங்களும் மற்றும் ஒன்றிணைந்த பகுதியான கட்டணங்களையும், கிரயமும் காண்பிக்கப்படுகின்றது. வருமானக் கூற்றின் பெறுமதிக் குறைப்பு செலவில், பெறுமதி குறைப்பிலிருந்து உருவாகும் நட்டங்கள் இணங்காணப்பட்டுள்ளன.

**எ. பதவியினரின் கடனுக்குள்ள முதலாவது நாள் வித்தியாசம்**

சந்தை வட்டி வீதங்களுக்கும் கீழாக வழங்கப்பட்டுள்ள பதவியினரின் கடன்கள் யாவும் உண்மை பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளன. உண்மை பெறுமதிக்கும், பகிரப்பட்ட தொகைக்கும். இடையிலான வேறுபாடு, முதலாவது நாள் வித்தியாசமாக கருதப்படுகின்றதுடன், விளைவு வீதத்தை பயன்படுத்தி கடன் காலத்தின் போதான பதவியினரின் கிரயமாக கணக்கிடப்பட்டு பதவியினரின் கடன்கள் அதனைத் தொடர்ந்து கடன்தீர் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

**ஏ. நிதிச் சொத்துகளின் மீள் வகைப்படுத்தல் மீள் வகைப்படுத்தல்**
திகதியின் உண்மை பெறுமதியில் மீள் வகைப்படுத்தல்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது புதிய கடன்தீர் கிரயமாகின்றது. விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை வகைப்படுத்தலின் கீழ், மீள் வகைப்படுத்தப்பட்ட சொத்து ஒன்றிற்கு வி.வ.வீ யை பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய காலப்பகுதி மீது இலாபம் அல்லது நட்டத்திற்கு பங்குகளில் இனங்காணப்பட்ட அந்த சொத்தின் எந்தவொரு முன்னைய இலாபம் அல்லது நட்டம் புதிய கடன் தீர் நிதி கிரயத்திற்கும், எதிர்பார்க்கப்பட்ட காசுபாய்ச்சலுக்கும் இடையிலான எந்தவொரு வேறுபாடும் வி.வ.வீ ஐ பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய காலத்தின் மீதான, கடன்தீர் நிதியாக்கப்படும். அதனைத் தொடர்ந்து, சொத்து பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது தீர்மானிக்கப்படும் போது, பங்குகளில் பதிவு செய்யப்பட்ட தொகை, வருமானக் கூற்றிற்கு மீள் சுழற்சி செய்யப்படும்.

பெற்றுக்கொள்ள முடியாத வணிகச் சொத்தை வங்கி மீள்வகைப்படுத்துவதனூடாக வணிகத்திற்காக பிடித்துவைத்தலை வகைப்படுத்தலிலிருந்து வெளியேற்றி, கடன்களும் கிடைக்க வேண்டியவையும் வகைப்படுத்தலின் வரைவிலக்கனத்திற்குள் செயற்படும் கடன்களும், கிடைக்க வேண்டியவையும் வகைப்படுத்தலுக்குள் கொண்டு வருவதுடன், தென்படக்கூடிய எதிர்காலம் அல்லது முதிர்ச்சிக் காலம் வரை நிதியியல் சொத்தொன்றை பிடித்து வைக்கவும், வங்கிக்கு உத்தேசமும் தகைமையும் இருக்க வேண்டும். நிதியியல் சொத்தொன்று மீள்வகைப்படுத்தப்பட்டு, அதனால் ஏற்படும் காசு அறவீட்டு அதிகரிப்பின் விளைவாக, எதிர்கால காசு வரவுகளின் உத்தேச மதிப்பீடுகளில் வங்கி அதன் தொடர்ச்சியாக அதிகரிப்பை ஏற்படுத்துமாயின், உத்தேச மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து வட்டிவீதத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டதாக இவ் அதிகரிப்பின் தாக்கம் இணங்காணப்படும்.

முகாமைத்துவத்தின் தேர்தலில் மீள் வகைப்படுத்தல் இடம் பெறுகின்றதுடன் ஒவ்வொரு பத்திரத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றது. ஆரம்ப இனங்காணலுக்கு பின்னர், இலாப நட்ட வகைப்படுத்தலின் ஊடாக உண்மை பெறுமதியில், நிதி பத்திரங்கள் எவற்றையும் வங்கி மீள் வகைப்படுத்தவில்லை. குறிப்பு 08 இல் நிதியியல் சொத்துகளின் மீள் வகைப்படுத்தலின் பகுப்பாய்வு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

### 2.3.2. நிதியில் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளை இனங்காணலின்மை

**அ) நிதியியல் சொத்துகள்**
நிதியியல் சொத்தொன்று (அல்லது பிரயோகிக்க கூடிய நிதியில் சொத்துகளின் பகுதி ஒன்று அல்லது அதே மாதிரியான நிதியில் சொத்துகளின் தொகுதியின் பகுதி ஒன்று) பின்வரும் நிலமைகளில் இனங்காண முடியாமற் போகும்

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறும் உரித்துகள் காலாவதியாகும் போது.
- சொத்துகளிலிருந்து காசுக்பாய்ச்சல்களை பெறும் உரித்துகளை மாற்றுவதற்கான வங்கியின் உரித்து அல்லது, உள்நுழையும் ஒழுங்கொன்றின் கீழ் மூன்றாந் தரப்பின் ஒருவருக்கு தாமதமின்றி, பெறப்பட்ட காசுப்பாய்ச்சல் தொகையை முழுமையாக கொடுத்து தீர்க்கும் கடப்பாட்டை ஏற்றுக் கொள்வது.
- சொத்தின் இடர்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமான அளவு வங்கி மாற்றியுள்ளது.
- சொத்தின் இடர்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமான அளவு மாற்றுவதற்கு அல்லது தக்கவைத்துக் கொள்வதற்கு வங்கி ஈடுபடவில்லை. ஆயினும் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியுள்ளது.

சொத்து ஒன்றிலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கு வங்கி அதன் உரித்துகளை மாற்றும் போது அல்லது உள்நுழையும் ஒழுங்கொன்றில் ஈடுபடும் போதும், வங்கியின் சொத்தின் இடர்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமான அளவு மாற்றும் அல்லது தக்கவைத்துக் கொள்ளும் போது அல்லது சொத்தின் கட்டுப்பாடுகளை மாற்றும் போது சொத்தின் மீதான வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாடாக சொத்து இணங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட பொறுப்பையும் வங்கி இனங்காணுகின்றது. வங்கி பிடித்து வைத்துள்ள உரித்துகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அடிப்படையில், மாற்றப்பட்ட சொத்துகளும் சம்பந்தப்பட்ட பொறுப்புகளும் அளவிடப்படுகின்றன.

சொத்தின் ஆரம்ப கொண்டு செல் தொகையின் குறைவாக அளக்கப்படும் மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமாகி,ஈடுபாட்டின் தொடர்ச்சி இருக்கின்றதுடன், வங்கியினால் மீள் கொடுப்பனவு செய்யக்கூடிய உச்ச தொகையாகவும் இருக்கின்றது.

**ஆ) நிதியியல் பொறுப்புகள்**
நிதியியல் பொறுப்புகள் பொறுப்பின் கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்பு மீள இனங்காணப்படுகின்றது. கணிசமான அளவிற்கும் வேறுபட்ட விதிகளில் அதே கடன் கொடுப்பவருக்கு மற்றுமொரு வகையான செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிதி பொறுப்பு ஒன்றினை பதிலாக பெறும் போது, அல்லது செயற்பட்டுக் கொண்டிருக்கும் பொறுப்பு கணிசமான அளவு திருத்தப்படும் போது, அத்கைய பரிமாற்றம் அல்லது திருத்தம், ஆரம்ப பொறுப்பின் இனங்காணலின்மையாக கருதப்படுவதுடன் புதிய பொறுப்பாகவும் இனங்காணப்படும். ஆரம்ப நிதியியல் பொறுப்புடன் கொண்டு செல் பொறுப்பிற்கும், கொடுக்கப்பட்ட அவதானிப்பிற்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

### 2.3.3. மீள் கொள்வனவு மற்றும் மீள் கொள்வனவு திருப்புதல்களின் ஒப்பந்தங்கள்

குறிப்பிடக்கூடிய வகையில் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் வங்கி கொண்டிருப்பதால், மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பொறுப்புகள் நிதியில் நிலமைக்கூற்றில் இருந்து அகற்றப்படுவதில்லை. இது தொடர்பாகப் பெறப்பட்ட காசுத் தொகை கடன் கொடுத்த பணப்பொறுப்புகளும் திரும்பப்பெறும் ஒப்பந்தங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒருங்கு சேர் வட்டி ஒரு பொறுப்பாகவும் ஒருங்கிணைந்த நிதியியல் நிலைக்கூற்றில் திரும்ப வேண்டிய சொத்தாகவும் காட்டப்படும். இது வங்கிக்கு கிடைத்த கடன் போன்று காட்டப்படும். விற்பனை விலைக்கும் திரும்பப் பெற்ற விலைக்கும் இடையேயான வித்தியாசம் வட்டி செலவினமாக ஒப்பந்த காலம் வரை வி.வ.வீ முறையின் கீழ் ஒருங்கு சேர் வட்டிச் செலவினமாகும்.

மாறாக குறிப்பிட்ட கால முடிவில் விற்பனை செய்வதற்காக வாங்கப்பட்ட பொறுப்புகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் உள்ளாக்கப்படுவதில்லை. ஒருங்கு சேர் வட்டி உட்பட கொடுக்கப்பட்ட விலை மதிப்பு நிதியியல் நிலைமைக்கூற்றில் திரும்ப வாங்கும் ஒப்பந்தத்தின் கீழ் கடனாகப்பெற்ற பொறுப்புகளின் பணத்தொகையாக இக்கொடுக்கல் வாங்கல் வங்கி கொடுத்த கடனாகக் காட்டப்படும். வாங்கிய மற்றும் விற்ற விலைகளுக்கிடையேயான தொகை வி.வ.வீ முறைப்படி "நிகர வட்டி வருமானமாக" ஒப்பந்தகாலம் வரை ஒன்று சேரும்

### 2.3.4. உண்மை பெறுமதியை தீர்மானித்தல்

கொடுக்கல் வாங்கல் கிரயங்களுக்காக எந்தவொரு கழிவும் செய்யப்படாது. நிதியியல் பத்திரங்களில் குறிக்கப்பட்ட சந்தை

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

விலையின் அடிப்படையில் அறிக்கையிடும் திகதியில் சந்தைகளில் வணிகத்திற்கு இடப்பட்ட நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதி.

சந்தையில் வணிகத்திற்கென விடப்படாத ஏனைய அனைத்து நிதியியல் பத்திரங்களுக்கும், பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு உண்மை பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை, சந்தை அவதானிப்புகளின் விலைகள் உள்ள அது போன்ற பத்திரங்களின் ஒப்பீடு, மற்றும் எனைய தொடர்புடையவை மதிப்பீட்டு நுட்பத்தில் உள்ளடங்கும். நடப்பு சந்தை கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அவதானிக்கக் கூடிய சந்தை தரவுகள் கிடைக்காத போது மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்தி உண்மை பெறுமதியில், சில நிதியியல் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. விலைகள் அல்லது, உண்மையான சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக, பரீட்சிக்கப்பட்ட மதிப்பீட்டு மாதிரி ஒன்றை பயன்படுத்தி அவற்றின் உண்மை பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றதுடன், வங்கியின் மிகவும் பொருத்தமான மாதிரி ஊகங்களின் சிறந்த உத்தேச மதிப்பீடுகளும் பயன்படுத்தப்படுகின்றது.

நிதியியல் பத்திரங்களின் உண்மை பெறுமதியின் பகுப்பாய்வும், அவை எவ்வாறு அளவிடப்பட்டு வழங்கப்படுகின்றன என்பது குறித்த மேலதிக விளக்கங்களும் குறிப்பு 28இல் தரப்பட்டுள்ளது.

## 2.3.5. நிதியியல் சொத்துகளின் பெறுமதி குறைப்பு

### அ) கடன்களும் முற்பணங்களும்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் எந்தவொரு நிதியியற் சொத்துக்களுக்கு அல்லது ஒரு தொகுதி சொத்துகளுக்கு கணக்கெடுக்கக்கூடிய ஊறு விளைந்துள்ளதா என வங்கி மதிப்பீடு செய்யும். ஆரம்ப மதிப்பீட்டின் பின் ஒரு நிதியியற் சொத்துக்கு, அல்லது ஒரு தொகுதி சொத்துக்களுக்கு கணக்கெடுக்கக்கூடிய வகையில் ஊறு ஏற்பட்டு (ஒரு செலவின் நட்ட இடர் நிகழ்வு) அதனால் எதிர்கால சொத்தின் காசு பாய்சலுக்கு, தொகுதி சொத்துக்களின் காசு பாய்ச்சலுக்கு மதிப்பிடக்கூடிய தாக்கம் ஏற்பட்டால் மட்டும் (அந்த பெறுமதி குறைப்பு நடைமுறை அல்லது முறைகள்) அது நிதியியல் பெறுமதி குறைப்பு என கொள்ளப்படும்.

ஒரு கடனாளி அல்லது ஒரு தொகுதி கடனாளிகள் குறிப்பிடக்கூடிய நிதி நெருக்கடியில் உள்ளார்கள் என்றோ, அதனால் அவர்கள் கடன் மீள முடியாதவர்கள் ஆகவோ, பிற நிதியியல் மீள் ஒழுங்கு அமைத்தோ, வட்டி, அல்லது முதல் என்பவற்றை திருப்பிச்செலுத்த முடியாதவராய். எதிர்கால காசு ஒழுங்கில் குறிப்பிடக்கூடிய குறைவுக்கான தரவுகள் தெரிந்தாலோ, கொடுக்க வேண்டிய தொகை காலங்கடந்து செலுத்த முடியாத நிலை தோன்றினாலோ அல்லது பொருளாதார நிலைமைகளினாலோ அது பெறுமதி குறைப்பிற்கான சாட்சியாகும்.

அவ்வாறான சான்றுகள் உள்ளன என்பதை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் அலகுகள் பின்வருமாறு:

- பெறுநரினால் அனுபவிக்கப்படும் காசுப்பாய்ச்சலில் அறியப்பட்ட சிரமங்கள்
- மூலதனம் அல்லது வட்டியின்ஒப்பந்த கொடுப்பனவில்நிலுவைகள்
- கடன் ஒப்பந்தம் அல்லது நிபந்தனைகளை மீறுவது
- வங்குரோத்து நிலைமை அல்லது ஏனைய நிதியியல் நிலைமைக்குள் கடன் பெறுனர் நுழையக்கூடிய சாத்தியம்

காணக்கூடியதான ஒரு பெறுமதி குறைப்பு உண்டாயின் அந்த நட்டம் கொண்டுள்ள தொகைக்கும் அந்த சொத்தால் ஏற்படும் எதிர்கால காசு பாய்ச்சலுக்கும் (ஏற்படும் என எதிர்பார்க்கும் இதுவரை கணக்கிடாத நட்டம் நீக்கலாக) இடையேயான வித்தியாசம் நட்டம் எனக் கொள்ளப்படும். சொத்து கொண்டுள்ள தொகை ஒரு விருப்பு கணக்கு மூலம் குறைக்கப்பட்டு நட்டத்தொகை வருமான கூற்றில் காட்டப்படும்.

தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது, முக்கியமான தனிப்பட்ட கணக்குகளின் மீது பெறுமதி குறைப்பு அலவன்சுகள் மேலும் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிடித்து வைத்துள்ள ஏதாகிலும் இணைப் பிணையங்களை செயற்படுத்தல், மற்றும் நேரம் மற்றும் உண்மைத் தொகையும். எதிர்பார்க்கப்பட்ட வரவுகளும் என்பவற்றை இது வழமையாக உள்ளடக்குகின்றது. உத்தேச நட்டங்களின் குறைப்பிற்கு நியாயமான சான்றுகள் இருக்கும் போது மட்டுமே தனிப்பட்ட பெறுமதி குறைப்பு அலவன்சுகளின் மதிப்பீடுகள் வெளியிடப்படும்.

#### கூட்டாக மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும்

இரண்டு சந்தர்ப்பங்களில், கூட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு மதிப்பிடப்படுகின்றது.

- உள்ளாக்கப்பட்ட நட்டங்களை ஈடுசெய்வது, ஆனால் தனிப்பட்ட மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்படும் கடன்கள் மீது இன்னமும் அடையாளம் காணப்படாதவை
- தனிப்பட்டவகையில் முக்கியமானவை என கருதப்படாத ஒரே இயல்பிலான குழுக்களின் கடன்கள்.

#### உள்ளாக்கப்பட்ட ஆனால் இன்னமும் அடையாளம் காணப்படாத பெறுமதி குறைப்பு

கூட்டு நட்டமொன்றின் உத்தேச மதிப்பீட்டை கணக்கிடும் நோக்கத்துடன், அவற்றின் கடன் இடர் தன்மைகளுக்கு அமைவாக, ஒன்றாக தொகுதியாக்கப்பட்டதும் குறிப்பாக தனிப்பட்டவை என்ற அடிப்படையில், நட்டங்களுக்கான சான்றுகள் அற்றதுமான தனிப்பட்ட வகையில் மதிப்பீடு செய்யப்பட்ட கடன்கள் வங்கியினால் தனிப்பட்ட ரீதியில் அடையாளம் காணமுடியாத கடன்களாக ஐந்தொகை திகதிக்கு முன்னர் ஏற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக, வங்கி உள்ளான பெறுமதி குறைப்பு நட்டங்களை இது பிரதிபலிக்கின்றதுடன் அவை நம்பகத்தன்மை கொண்ட உத்தேச மதிப்பீடுகளாகவும் உள்ளன. எதிர்காலத்தில் இந்த நட்டங்கள், தனிப்பட்டவையாக மட்டுமே அடையாளம் காணப்படும். தொகுதிக்குள் இருக்கும் தனிப்பட்ட கடன்களின் நட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் போது, குழுவிலிருந்து அத்தகைய கடன்கள் அகற்றப்பட்டு, பெறுமதி குறைப்பை கணக்கிடுவதற்காக தனிப்பட்டவை என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

பின்வருவனவற்றை கணக்கிலெடுத்துக் கொண்டதின் பின்னர் கூட்டு பெறுமதி குறைப்பு அலவன்சுகள் தீர்மானிக்கப்படும்.

- அதேமாதிரியான கடன் இடர் விபரத்திரட்டல்களின் வரலாற்று ரீதியான நட்ட அனுபவங்கள்.
- வரலாற்று ரீதியான அனுபவத்தால் தெரிவிக்கப்பட்டதிலும் அதிகமாக அல்லது குறைவாக, ஐந்தொகை திகதியில் நிலவிய நடப்பு பொருளாதாரம் மற்றும் உண்மையான கடன் நிலைகளின் மட்டங்கள் குறித்த முகாமைத்துவத்தின் அனுபவமிக்க தீர்ப்புகள்.

#### ஒரே இயல்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் தொகுதி

ஒரே இயல்பான தொகுதியிலமைந்த கடன்களுக்கு சேகரிப்பு அடிப்படையில் பெறுமதி குறைப்பு நட்டங்களை தீர்மானிப்பதற்கு புள்ளிவிபர முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. தனிப்பட்ட கடன்கள், பதிவழிக்கப்படும் போது, இவ்வாறான கடன் தொகுதிகளின் நட்டங்கள் தனிப்பட்டவை என்ற அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் குழுவிலிருந்து அவை அகற்றப்படுகின்றன.

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

சேகரிப்பு அடிப்படையில் வரலாற்று ரீதியான நட்ட அனுபவங்களை கணக்கிடுவதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன:

குழு கடன்கள் நீண்டகால தன்மையுடையவையாக இருக்கும் போது, "கடன் தவறுதல்களுக்கான சாத்தியம்" முறை (இடர் பெயர்வு) பயன்படுத்துகின்றது.

இந்த முறைமையின் கீழ், கடன்களின் தொகைகளை உத்தேச மதிப்பீடுகள் செய்ய பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் அசைவுகள், அறவிட முடியாத வகைப்படுத்தலின் கீழ் மதிப்பீட்டைக் கொண்டதாகவும் தனிப்பட்ட கடன் அடிப்படையிலும், வங்கியினால் அடையாளம் காண முடியாததாக ஐந்தொகை திகதிக்கு முன்னர் நிகழும் நிகழ்வாக இது இருக்கும்.

இந்த முறைமையின் கீழ், நிலுவையாகவுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப. கடன்கள் குழுக்களாக பிரிக்கப்படுவதுடன் பலவகையான கட்டணங்களுடாக ஒவ்வொரு கடனின் முன்னேற்றமும் உத்தேச மதிப்பீடு செய்யப்படுவதற்கு புள்ளிவிபர பகுப்பாய்வும் செய்யப்பட்டு இறுதியாக அறவிட முடியாதவை என நிரூபிக்கப்படுகின்றன.

நடப்பு பொருளாதார நிலமைகளும் துறைசார்ந்த இடர் முகாமைத்துவக் காரணிகளும் நட்டத்தை தவிர்ப்பதற்கு தேவைப்படும் பொருத்தமான அலவன்சுகளின் மட்டத்தை கணக்கிடும் போது மதிப்பீடு செய்யப்பட்டன.

இந்த மேலதிக பாரிய மற்றும் துறைசார்ந்த இடர் காரணிகளில் உள்ளடங்குபவை:

- அண்மை காலத்தின் கடன்துறை வளர்ச்சியும் உற்பத்தி கலவையும்.
- வேலையின்மை வீதங்கள். மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (மொஉஉ) வீக்கம்
- வட்டி வீதங்கள்

அரசாங்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளில் மாற்றங்கள் குறிப்பு 11 இல் கடன்களும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு நட்டங்களும் மேலும் விபரமாக வெளியிடப்பட்டுள்ளன.

**கடன்தீர் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள்**
உள்ள நிதியியல் சொத்துக்கள் சம்பந்தமாக (பிற வங்கிகளில் இருந்து வர வேண்டியவை, வாடிக்கையாளரின் கடன்களும் முற்கொடுப்பனவுகளும். மற்றும் முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகள்) வங்கி முதலில் தனித்தனியாக குறிப்பிடக்கூடிய நிதியில் சொத்துக்களையும், குறிப்பிட முடியாத சொத்துக்களின் பகுதிகளையும் காணக்கூடிய ஊறுகள் உள்ளனவா என்று ஆராயும். காணக்கூடிய ஊறுகள் இல்லாதவிடத்து அது போன்ற ஆபத்துத் தன்மையுடைய சொத்துக்களை ஒன்ற சேர்த்து ஊறுகளுக்காக மதிப்பிடப்படும். தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஊறு உள்ளதாகக் காணப்பட்ட சொத்துக்கள் இந்த கூட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்பட மாட்டாது.

காணக்கூடிய ஊறு உண்டாயின் அந்த சொத்து கொண்டுள்ள தொகைக்கும் அந்த சொத்தால் ஏற்படும் எதிர்கால காசு ஒழுங்குக்கும் (ஏற்படும் என எதிர்பார்க்கும் இதுவரை கணக்கிடாத நட்டம் நீக்கலாக) இடையேயான வித்தியாசம் நட்டம் எனக் கொள்ளப்படும். சொத்து கொண்டுசெல் தொகை ஒரு விருப்பு கணக்கு மூலம் குறைக்கப்பட்டு நட்டத்தொகை வருமான கூற்றில் காட்டப்படும். வட்டி வருவாய் குறைக்கப்பட்டு கொண்டுசெல் தொகையில் தொடர்ந்தும் கணக்கிட்டு ஒருங்கு சேர்க்கப்படும். இதற்கு எதிர்கால காசு பாய்ச்சல் இடர் சம்பந்தமான நட்டத்திற்கு உபயோகித்த வட்டி வீதம் உபயோகிக்கப்படும்.

வட்டி வருமானம், வட்டியும் அது போன்ற வருமானங்களும் எனப்பதிவு செய்யப்படும். எதிர்காலத்தில் அனைத்து இணைப்பிணையங்களும் உபயோகப்படுத்தப்பட்டு அல்லது வங்கிக்கு மாற்றப்பட்டு மீளளிப்புக்கான நிலைமை இல்லை என்ற நிலையில் கடன் சம்பந்தமான அலவன்சுகள் பதிவழிக்கப்படும். பின் ஒரு வருடத்தில் ஊறு கணக்கெடுக்கப்பட்ட பின் ஏற்படும் நிகழ்ச்சியால் தீர்மானிக்கப்பட்ட ஊறு குறைந்தாலோ கூடினாலோ முன்பு கணக்கெடுத்த ஊறு, விடுப்புக்கணக்கில் மாற்றம் செய்வதன் மூலம் கூட்டியோ, குறைக்கவோ செய்யப்படும். அழித்தொழிக்கப்பட்டது பின்னர் அறவிடப்பட்டால், அறவிடப்பட்ட தொகை "பெறுமதி குறைப்பு செலவில் கணக்கில்" வரவிலிடப்படும்

நிதியியல் சொத்தின் இப்போதைய மதிப்பின் எதிர்கால காசு பாய்ச்சல் நிதியியல் சொத்தின் ஆரம்ப விவவீ முறையில் கழிவு செய்யப்படும். ஒரு கடனுக்கு மாற்றம் அடையும் வட்டி வீதம் இருந்தால், இடர் நட்டத்தை அளவிட தற்போதய விவவீ உபயோகிக்கப்படும். வங்கி ஒரு கடன் அல்லது முற்கொடுப்பனவின் வணிக சொத்தை மீள் பகுப்புச் செய்திருந்தால் இடர் நட்டத்தை அளவிடுவதற்கான கழிவு வீதம் மீள் பகுப்பின் போது தீர்மானிக்கப்பட்ட புதிய விவவீ ஆகும். சொத்துக்களைப் பொறுப்பாகக் கொண்டுள்ள நிதியியல் முன்னைய சொத்து தற்போதைய மதிப்பிற்காக எதிர்கால காசு பாய்சலில் கணக்கிடும் பொழுது, கையகப்படுத்தல் சம்பந்தமான செலவுகளாகும் கையகப்படுத்தல் எதிர்பார்க்கப்பட்டாலும் அல்லாவிடினும், கணக்கில் எடுக்கப்படும்.

கூட்டு முறையில் இடர் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் வங்கியின் உள்ளக கடன் பகுப்பு முறையின் படி பகுக்கப்படும்.

சொத்துவகை, இணை பிணையவகை செலுத்தப்பட்ட முன்னைய நிலமை மற்றும் ஏனைய தொடர்புடைய காரணி போன்ற கடன் இடர் தன்மைகளின் அடிப்படையில் நிதியியல் சொத்துகள் குழுக்களாக்கப்பட்டுள்ளன.

இடர் கணக்கிடுவதற்காக கூட்டாக பகுக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் எதிர்கால காசு பாய்ச்சல் அதே போன்ற சொத்துக்களின் வரலாற்று நட்டங்கள் அடிப்படையில் திர்மானிக்கப்படும். வரலாற்று நட்டங்கள், தற்போதய கண்டு கொள்ளக்கூடிய திகதியில் கண்டு கொள்ளக்கூடிய, வரலாற்று அடிப்படையில் உள்ள இப்பொழுது இல்லாத காரணிகள் சம்பந்தமான மாற்றங்களுக்கு இடம் கொடுத்து நடைமுறைப்படுத்தப்படும்.

வருடா வருடம் தரவுகளில் காணக்கூடிய மாற்றங்களை (வேலை இல்லாமை வீதம், சொத்துக்கள் விலை பொருள்கள் விலை, கொடுப்பனவு நிலை, பகுதியில் நட்டங்களைக் காட்டும் மற்றைய காரணிகளும் அவற்றின் அளவும்) நேரடியாக கணக்கெடுக்கும் தீர்மானங்களைக் கொண்டு எதிர்கால காசு ஒழுங்கு நிர்ணயிக்கப்படும். நட்டங்களின் நிர்ணயத்திற்கும் உண்மை நட்டத்திற்கும் இடையேயான வித்தியாசத்தைக் குறைப்பதற்காக எதிர்கால காசு பாய்ச்சல் கணக்கிடும் முறையும் நிர்ணயங்களும் காலத்துக்காலம் மீளாய்வு செய்யப்படும்.

**i) விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகள்**
குறைவடைந்துள்ளதற்கு நியாயமான சான்றுகள் உள்ளதா என அறிவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், விற்பனைக்காக கிடைக்கக் கூடிய நிதியியல் முதலீடுகளை வங்கி மதிப்பீடு செய்யும்

விற்பனைக்குள்ளவை எனப்பகுக்கப்பட்ட பங்கு முதலீடுகளில் குறிப்பிடக்கூடிய அல்லது நீண்டகால உண்மை மதிப்புக் குறைவு முதலீட்டிலும் குறைவாயின் அதுவும் காணக்கூடிய மதிப்பாக இருக்கும். குறிப்பிடக்கூடியது என்பது 20மூ எனவும் நீண்டகாலம் என்பது ஆறு மாதத்திலும் கூடியதெனவும் வங்கி பொதுவாகக் கொள்ளும். இடர் ஒன்று இருக்கும் சாத்தியமிருக்குமிடத்து ஒருங்கு சேர் நட்டம்

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

வாங்கிய விலைக்கும் தற்போதைய நல்லெண்ண மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தில் அந்த முதலீட்டில் கண்டு கொள்ளப்பட்ட வருமானக்கூற்றில் கணக்கிடப்பட்ட பங்கு மதிப்பீட்டில் அகற்றப்படும். இடர் காரனமான பங்கு முதலீட்டின் நட்டம் வருமானக்கூற்றில் திருப்பிக் கழிக்கப்படாதவிடத்து மற்றய வருமானங்கள் கண்டு கொள்ளப்பட்ட பின் நல்லெண்ண மதிப்பை அதிகரிக்கும்.

#### ஈ) மீளமைக்கப்பட்ட கடன்கள்

மீளமைக்கப்பட்ட கடன்கள் வங்கி இயன்றவரை கூட்டுக் கடன் பொறுப்புக்களை, கையேற்பதிலும் பார்க்க மீளமைக்க முயற்சிக்கின்றது. இது மீளளிப்புக் கால ஏற்பாடுகளை அதிகரித்து புதிய கடன் நிபந்தனைகளை ஏற்படுத்துவதையும் உள்ளடக்கும். நிபந்தனைகள் மீளமைக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி குறைப்பு ஏற்கனவே உள்ள விவவீ முறையில், மீளமைக்கு முன்னர் இருந்தவாறு கணக்கிடப்பட்டு, அந்த கடன் அதன் பின்னர் காலங்கடந்தது எனக்கொள்ளப்படுவதில்லை. மீளமைக்கப்பட்ட கடன்களின் அனைத்து அலகுகளும் பின்பற்றப்படுவதையும் எதிர்கால கொடுப்பனவுகள் நடப்பதையும் உறுதி செய்யும் பொருட்டு முகாமைத்துவம் தொடர்ந்து மீளாய்வு செய்யும். கடன் தொடர்ந்தும் தனியாகவோ கூட்டாகவோ மதிப்பீடு செய்யப்படும். இதில் பழைய விளைவு வட்டி வீதம் உபயோகிக்கப்படும்.

#### உ) இணைப்பிணையங்களின் மதிப்பீடு

இணைப்பிணையங்களின் மதிப்பீடு நிதியியல் சொத்துகள் மீதான இடர்களை குறைப்பதற்காக இயலுமான இடங்களில் இணை பிணையங்களை வங்கி பயன்படுத்துகின்றது. காசு, பிணையங்கள், கடன்/உத்தரவாத கடிதங்கள் அசையாச் சொத்துகள், கிடைக்க வேண்டியவை, பொருட்பட்டியல்கள், ஏனைய நிதி சொத்துகள். மற்றும் ஏனைய கடன் அபிவிருத்திகள் போன்ற பல்வேறு வகைகளில் இணைப்பிணையங்கள் வருகின்றன.

### 2.3.6. நிதியியல் பத்திரங்களை ஈடுசெய்தல்

நிதியியல் சொத்துகளும், நிதியியல் பொறுப்புகளும் ஈடு செய்யப்படும். நிதி நிலைமை கூற்றில் அறிவிக்கப்பட்ட தேறிய தொகையை. இனங்காணப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கான சட்ட உரித்தொன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே தேறிய அடிப்படையில் கொடுத்துத் தீர்ப்பதற்கான உத்தேசம் காணப்பட்டால் அன்றி ஒரே நேரத்தில் சொத்தை பெறுவதற்கும் பொறுப்பை கொடுத்ததுத் தீர்ப்பதற்கும் முடியும். இது பொதுவாக பிரதான தேறிய ஒப்பந்தங்களில் ஏற்புடையதாகாது. எனவே, தொடர்புடைய சொத்துகளும், பொறுப்புகளும் நிதிக் கூற்றில் ஒட்டு மொத்தமாக அறிவிக்கப்படுகின்றது.

### 2.3.7. குத்தகை

ஒப்பந்தமொன்றின் சாராம்சத்தின் அடிப்படையில், ஒப்பந்தம் ஒன்று குத்தகையா அல்லது ஒரு குத்தகையை கொண்டுள்ளதா என்பது தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட சொத்து ஒன்றின் அல்லது சொத்துகளின் பயன்பாட்டில் ஒப்பந்தத்தின் நிறைவேற்றல் தங்கியுள்ளதா என்பதற்கும் மதிப்பீடு ஒன்று தேவைப்படுவதுடன், சொத்தை பயன்படுத்தவதற்கான உரித்தையும் ஒப்பந்தம் குறிப்பிடும்..

### 2.3.8. வருமானம் மற்றும் செலவு இனம்காணல்

வருமதி நம்பகமாக அளவிடக்கூடியதாகவும் ஏற்படக்கூடியதாகவும் பொருளாதார நன்மை வங்கிக்குக் கிடைக்குமாயின் வருவாய் கணக்கில் எடுக்கப்படும். வருவாய் இனங்காணப்படுவதற்கு முன் பின்வரும் அலகுகள் இனங்காணப்பட்டு அறியப்பட வேண்டும்.

#### அ) வட்டியும் அது போன்ற வருமானமும் செலவும்

தவணைக்கழிவு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கும், விற்பனைக்கும் உள்ளவையாகப் பகுக்கப்பட்ட வட்டி கிடைக்கும் நிதியியல் முதலீடுகளுக்கும், இலாப நட்டக் கணக்கூடாக நல்லெண்ண மதிப்பில் கொள்ளப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கும், வட்டி வருவாய் அல்லது செலவு வி.வ.வீ.யை உபயோகித்து கணக்கிடப்படும் இந்த வி.வ.வீ. எதிர்பார்க்கும் காலத்திற்கு ஏற்படும் காசு கொடுப்பனவுகளையும், வருமதிகளையும் கணக்கிட உண்மையில் உபயோகிக்கப்படுகிறது. இது நிதியியல் சொத்துக்களுக்கும் பொறுப்புகளுக்கும் நிகர மதிப்பீட்டை அளப்பதற்கும் உபயோகிக்கப்படும். கணக்கிடுதல் நிதியியல் பத்திரத்தின் ஒப்பந்தக் காரணிகள் எல்லாவற்றையும் கணக்கில் எடுக்கும் (உதாரணமாக:- கொடுப்பனவு முறைகள்) பத்திரத்தில் நேரடி தொடர்புள்ள கட்டணங்கள், மதிப்பேற்று செலவினங்கள் போன்றவை வி.வ.வீ இன் பகுதியாக உள்ளன. ஆனால் இவை எதிர்கால வரவு நட்டங்கள் அல்ல.

பெறுமதி குறைப்பு நட்டத்தின் காரணமாக நிதி சொத்து ஒன்றின் அல்லது அது போன்ற நிதிச் சொத்துக்களின் பெறுமதி குறைவடையும் போது, பெறுமதி குறைப்பு நட்டத்தை அறவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசு பாய்ச்சலின் கழிவிற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தை பாவித்து, வட்டி வருமானம் தொடர்ச்சியாக இனங்காணப்படும்.

#### ஆ) கட்டணங்களும் தரகு வருமானமும்

வாடிக்கையாளர்களுக்கு வங்கி வழங்கும் அதன் பல்வேறு சேவைகளிலிருந்து கட்டணம் மற்றும் தரகு வருமானத்தை வங்கி ஈட்டுகின்றது. கட்டண வருமானத்தை பின்வரும் இரண்டு வகைப்படுத்தல்களினுள் பிரிக்கலாம்:

#### குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வழங்கப்படும் சேவைகளிலிருந்து ஈட்டப்படும் கட்டண வருமானம்

காலப்பகுதி ஒன்றிற்குள் சேவை ஏற்பாடுகளிலிருந்து அக்காலப் பகுதியில் சுவீகரிக்கப்பட்டவையாகும். வருமான மீட்டும் கட்டணங்கள் தரகு வருமானமும் சொத்து முகாமைத்துவமும், பாதுகாத்தல் மற்றும் ஏனைய நிர்வாகமும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கான கட்டணம் என்பவை இக்கட்டணங்களில் உள்ளடங்கும். கடன் தொடர்பான கட்டணங்கள் ஒத்திவைக்கப்பட்டவையாகும். கடன் வீ.வ.வீ. சீராக்கங்களுக்கென இனங்காணப்படுபவையுமாக இருக்கும்.

#### கொடுக்கல் வாங்கல் சேவைகளை வழங்குவதிலிருந்து பெறப்படும் கட்டண வருமானம்

மூன்றாவது தரப்பு கொடுக்கல் வாங்கள் ஒன்றின் பேச்சு வார்த்தைகளிலிருந்து அல்லது பேச்சுவார்த்தையில் பங்கேற்பதிலிருந்து உருவாகும் கட்டணங்கள் பங்குகளின் சுவீகரிப்பு ஒப்பந்தங்கள் அல்லது ஏனைய பிணையங்கள் அல்லது வர்தகமொன்றின் கொள்வனவு அல்லது விற்பனை செய்வது போன்ற கொடுக்கல் வாங்கல்கள் பூரணமடைந்ததன் பின்னர் இனங்காணுவது குறிப்பிட்ட செயன்முறையுடன் தொடர்புடைய கட்டணங்களின் பகுதிகளில் அல்லது கட்டணங்களின் பகுதிகள் குறிப்பிட்ட அலகுகளின் கீழ் நிறைவேற்றப்பட்டிருப்பதன் பின்னர், இனங்காணுவது.

#### இ) பங்கிலாப வருமானம்

கொடுப்பனவு உறுதியாக்கப்பட்டதன் பின்னர், அதனை பெற்றுக் கொள்வதற்கு வங்கிக்கு உள்ள உரித்தை இனங்காணுவது பங்கிலாப வருமானமாகும்.

#### (ஈ) தேறிய வணிக

வருமானம் உண்மை பெறுமதியின் மாற்றங்களிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அனைத்தும், மற்றும் தொடர்புடைய

## கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

வட்டி வருமானம் அல்லது நிதிச் சொத்துகளுக்கான செலவுகளும் பங்கிலாபங்களும்/ மற்றும் வர்த்தகத்திற்காக பிடித்துவைத்துள்ள நிதியியல் பொறுப்புகளும் வணிக நடவடிக்கைகளிலிருந்து உருவாகும் விளைவுகளில் உள்ளடங்கும் பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் எந்தவொரு திறமையின்மையையும் இது உள்ளடக்குகின்றது.

**உ) ஏனைய வருமானம்**

திரட்டு அடிப்படையில், ஏனைய வருமானம் இனங்காணப்படுகின்றது.

**ஊ) ஏனைய செலவுகள்**

ஏனைய அனைத்து செலவுகளும், அவற்றின் தொடர்புடைய காலத்தில் உள்ளாக்கப்படுவதால் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்படுகின்றது. வர்த்தகத்தின் செயற்பாட்டில் உள்ளாக்கப்பட்ட செலவினங்கள் யாவும், ஆண்டிற்கான இலாபத்தில் ஏற்பட்ட வருவாயாக விதிக்கப்பட்டு திறமையான மூலதன சொத்துகளாக பேணப்படுகின்றன.

### 2.3.9. காசும் காசுக்கு சமனானவையும்

கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள மீதிகள், வங்கிகளில் வைத்துள்ளவைகள், அழைப்பின் பேரிலும் குறுங்கால அறிவித்தலிலும் கிடைக்கும் பணம் என்பவை காசு மற்றும் குறுங்கால நிதியில் உள்ளடங்கும். நிதிக் கூற்றுகளின் குறிப்பு 9 இல் காசு மற்றும் குறுங்கால நிதி என்பவை தரப்பட்டுள்ளன.

### 2.3.10. ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்

திரண்ட பெறுமானத் தேய்வின் கழிவிலும் பெறுமதியின் திரண்ட மதிப்புக் குறைப்பிலும் நாளாந்த சேவைகளின் கிரயம் தவிர்ந்த கிரயம் அல்லது பெறுமதியாக ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும் குறிப்பிடப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலத்தின் மாற்றங்கள், பெறுமானத் தேய்வுக் காலம் அல்லது முறை என்பதில் எது பொருத்தமானதோ அதை மாற்றுவதனூடாக இது கணக்கிடப்படுகின்றதுடன், உத்தேச கணக்கீட்டு மாற்றங்களாக கருதப்படுகின்றது.

**அ) கிரய மாதிரி**

கிரய மாதிரி நாளாந்த சேவைகள், கிரயம் தவிர்ந்த பொறிகளும் உபகரணங்களும் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பீட்டின் திரண்ட பெறுமதிக் கழிவு என்பவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இனங்காணப்படும் அலகுகள் சந்திக்கப்படுமாயின் கிரயத்திற்கு உள்ளாக்கப்படும் போது பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மீளளிப்பதற்கு ஏற்படும் கிரயம் இந்த கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

**அ) பின் தொடரும் செலவு**

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் ஒரு பொருளின் பகுதி ஒன்று மீளளிக்கப்படுவதனால் ஏற்படும் கிரயம் பொருளின் கொண்டு செல்லும் தொகையில் இனங்காணப்படும். அப்பகுதியில் பதியப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்குள் பாய்ச்சப்படும் என்பதற்கான சாத்தியம் காணப்படும் போதும் அதன் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிடலாம்.

**இ) புதுப்பித்தல் செலவு**

புதுப்பித்தல் செலவு எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளை தரக்கூடியவற்றை புதுப்பிப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு என, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திருத்த வேலைகள் அல்லது பராமரிப்புகளுக்கு ஏற்படும் செலவு, முழுமையான வருமானக் கூற்றில் உள்ளானவை என விதிக்கப்படும்

**ஈ) மூலதனம் - செய்து கொண்டிருக்கும் வேலைகளின் முன்னேற்றங்கள்**

கட்டிடங்களின் நிர்மாணம் பாரிய பொறிகள் மற்றும் இயந்திரங்களின் நிர்மாணம், மற்றும் முறைமை அபிவிருத்திகள் என்பவற்றிற்கு காத்திருக்கும் மூலதனமாக நேரடியாக உள்ளாக்கப்படும் மூலதன இயல்புள்ள செலவுகளாக இவை இருக்கின்றன. இவை நிதிநிலைமை கூற்றில் கிரயத்தில் தரப்பட்டுள்ளன.

| சொத்தின் வகை | பெறுமானத் தேய்வுக் காலம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25.00% p.a. |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 12.50% p.a. |
| அலுவலக உபகரணங்கள் | 12.50% p.a. |
| கணிப்பீட்டு பொறிகள் | 25.00% p.a. |
| கணணிகள் | 25.00% p.a. |
| ஏனையவை | 12.50% p.a. |

**உ) பெறுமானத் தேய்வு**

ஆதனங்கள் மற்றும் உபகரனங்களின் கிரயம், அவற்றின் உத்தேச மதிப்பீட்டின் பயன்பாட்டு காலத்தில் நேர் வரிசை முறையை பயன்படுத்தி பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகின்றது. உத்தேச மதிப்பீட்டு பயன்பாட்டுக் காலம் பின்வருமாறு:

அலுவலக கட்டிடங்களில் விரிவாக்கங்களை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மற்றும் திருத்த வேலைகளுக்கான செலவு 4 ஆண்டுகளுக்கும் அதிகமான கடன்தீர் நிதியாக அல்லது ஆரம்ப குத்தகை காலமாக அவற்றில் எது குறைவானதோ அதில் அளவிடப்படும். கணனி மென் பொருள் 4 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்திற்கு கடன்தீர் நிதியாக இருக்கும்.

**ஊ) இணங்கானல் நிறுத்தப்பட்டவை**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் கிடைக்காத போது இனங்காணல் நிறுத்தப்படுகின்றது. சொத்து இனங்காணப்படுவது நிறுத்தப்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில், ஏனைய செயற்பாட்டு வருமானங்களில், சொத்தை இனங்காணுவது நிறுத்தப்பட்டதால் உருவான எந்தவொரு இலாபம் அல்லது நட்டம் குறிப்பிடப்படுகின்றது. (இது தேறிய அகற்றல்களின் வருவாய்களுக்கும், சொத்தின் கொண்டு செல் தொகைக்கும் இடையிலான வேறுபாடாக கணக்கிடப்படுகின்றது.)

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

## 2.3.11. கட்புலனாகாச் சொத்துக்கள்

கணனி மென்பொருளின் பெறுமதி வங்கியின் ஏனைய கட்புலனாகாச் சொத்துகளில் உள்ளடக்கப்படுகின்றது. கட்புலனாகா சொத்துகளின் மதிப்பு நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் அதில் இருந்து எதிர்காலத்தில் அது சம்பந்தமான பொருளாதார நன்மை வங்கிக்கு வந்து சேருமாயிருப்பினும் மட்டுமே கட்புலனாகாச் சொத்துகள் என கொள்ளப்படும். தனியாக கையேற்கப்படும் கட்புலனாகா சொத்துகள், கிரயத்தில் அவற்றின் ஆரம்ப இனங்கானலில் அளவிடப்படும்.
ஆரம்ப கணிப்பின் பின், ஒருங்கு சேர் தவணைக் கழிவுகள், ஒருங்கு சேர் இடர்கள் என்பன ஆரம்ப மதிப்பீட்டில் இருந்து கழிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படும்.

கட்புலனாகாச் சொத்துக்களின் உபயோக காலம், முடிவுற்றதாகவோ முடியவுள்ளதாகவோ இருக்கும். முடிவுற்ற உபயோகக்காலம் உள்ள கட்புலனாகாச் சொத்துக்களின் மதிப்பு அவற்றின் பொருளாதார உபயோக காலம் வரை தவணை முறையில் கழிக்கப்படும். முடிவுள்ள உபயோக காலம் உள்ள கட்புலனாகாச் சொத்துக்களின் தவணைக் கழிவுக்காலமும் தவணைக்கழிவு முறையும் குறைந்தது ஒவ்வொரு நிதியில் ஆண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். சொத்தில் அடங்கியுள்ள எதிர்பார்க்கப்படும் உபயோக காலத்தில் மாற்றமோ அல்லது எதிர்பார்க்கப்படும் பொருளாதார நன்மைகள் பெற்றுக்கொள்ளும் முறையில் மாற்றமோ அந்த சொத்தின் தகுந்த முறையில் கடன்தீர் காலத்திலோ அல்லது முறையிலோ மாற்றம் செய்து கணக்கிடப்பட்டு அவை கணக்கியல் நிர்ணய மாற்றங்களாகக் கொள்ளப்படும். கட்புலனாகாச் சொத்தின் உபயோககாலம் உள்ள தவணைக்கழிவு வருமானக்கூற்றில் செலவு பகுதியில் கட்புலனாகாச் சொத்தின் பாவனைக்கேற்பக் கணக்கிடப்படும்.

கட்புலனாகாச் சொத்துகளின் கிரயத்தை எழுதுவதற்கு, நேர்வரிசை முறையை பயன்படுத்தி கடன்தீர் நிதி கணக்கிடப்படுகின்றது. அவற்றின் உத்தேச மதிப்பீட்டு பயன்பாட்டுக் காலங்களின் மீதான எஞ்சிய பெறுமதிகள் பின்வருமாறு.

| கட்புலனாகாச் சொத்துக்களின் வகுதி | பயன்பாட்டுக் காலம் | கடன்தீர் முறை |
|---|---|---|
| கணணி மென்பொருள் | 4 வருடங்கள் | நேர்கோட்டு முறை |

## 2.3.12. நிதியல்லாத சொத்துகளின் மதிப்புக் குறைப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், சொத்தொன்றிற்கு மதிப்புக் குறைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பதை வங்கி மதிப்பீடு செய்கின்றது. ஏதாகிலும் இருக்குமாயின் அல்லது சொத்தொன்றிற்கு வருடாந்த மதிப்பு குறைப்பு பரீட்சைகள் தேவைப்படுவதாயின் சொத்தின் அறவீட்டுத் தொகையை வங்கி மதிப்பீடு செய்யும். சொத்தொன்றின் அறவிட்டுத் தொகை உயர்வானதாகவும் அல்லது காசு உருவாக்கும் அலகின் உண்மையான பெறுமதியின் விற்பனைக்கு கிரயத்தில் குறைவானதாகவும் இருக்கும்போது பயன்படுத்தப்படும் அதன் பெறுமதி, சொத்தொன்றின் அறவீட்டுத் தொகையாகவுள்ளது. சொத்தொன்றின் கொண்டு செல்லும் தொகை அல்லது காசு உருவாக்கும் அலகு அதன் மீள்பெறக்கூடிய தொகையை விஞ்சும் போது சொத்து பெறுமதி குறைக்கப்பட்டதாக கருதப்பட்டு அதன் அறவீட்டு தொகையில் எழுதப்படும்.

பயன்படுத்தலில் நிலவும் பெறுமதிகள் மதிப்பிடப்படும்போது, வரிக்கு முன்னரான கழிவு வீதத்தைப் பயன்படுத்தி அவற்றின் நடப்பு பெறுமதியின் எதிர்கால உத்தேச மதிப்பீட்டு காசுப்பாய்ச்சல்கள் கழிவு செய்யப்படும். இது பணத்தின் நேரடிப் பெறுமதியின் நடப்பு சந்தை பெறுமதியையும், சொத்தொன்றிற்கான குறிப்பிடத்தக்க இடரையும் பிரதிபலிக்கின்றது. உண்மைப் பெறுமதி கழிக்கப்பட்ட விற்பனைக்குள் கிரயங்களை தீர்மானிக்கும் போது, பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. மதிப்பீட்டு பெருக்கங்கள், பகிரங்கமாக வாணிபம் செய்யப்படும் உப நிறுவனங்கள் அல்லது ஏனைய கிடைக்கக் கூடிய உண்மை பெறுமதி குறிகாட்டிகள் ஊடாக இக் கணக்குகள் இணைக்கப்படுகின்றன.

## 2.3.13. நிதியியல் உத்தரவாதங்கள்

சாதாரணமாக வியாபாரத்தின் போது, கடன் கடிதங்கள், உத்தரவாதங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் போன்றவை உள்ளடங்கிய நிதியியல் உத்தரவாதங்களை வங்கி அளிக்கின்றது. நிதியியல் உத்தரவாதங்கள், உண்மை பெறுமதியில், நிதியியல் கூற்றுகளின் ஆரம்பத்தில் இணங்காணப்படுகின்றன. (ஏனைய பொறுப்புகளில்) இவை கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டணங்களாகும். ஆரம்ப இணங்காணலை தொடர்ந்து, வங்கியின் பொறுப்புகள் ஒவ்வொரு உத்தரவாதங்களின் கீழும், ஆரம்பத்தில் இணங்காணப்பட்ட தொகையிலும் உயர்வானதாக அளிக்கப்படுகின்றன. வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட திரண்ட கடன்தீர் நிதியமும் உத்தரவாதங்களின் விளைவாக உருவாகும் எந்தவொரு நிதியியல் கடப்பாடுகளையும் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படும் சிறந்த உத்தேச செலவீடுமாகும்.

வருமானக் கூற்றில் கடன் நட்ட செலவில் நிதியியல் உத்தரவாதங்களுடன் தொடர்புபடுத்தக் கூடிய பொறுப்புகளின் எந்தவொரு அதிகரிப்பும் பதிவு செய்யப்படுகின்றது. உத்தரவாதத்தின் ஆயுட்காலம் மீது நேர்வரிசை அடிப்படையில் தேறிய கட்டணங்களும் தரகு வருவாயின் கீழ் வருமானக் கூற்றில் கிடைத்த தவணைக் கட்டணமும் இனங்காணப்படுகின்றது.

## 2.3.14. ஓய்வூதிய நன்மை கடப்பாடு

### அ) பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இல. பணிக் கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், பணிக்கொடை பெறுவதற்கு வங்கியின் ஊழியர்கள் அனைவரும் தகுதி பெறுவார்கள்.

1983 இன் 12 ஆம் இல. பணிக் கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், பதவி விலகிய ஊழியர்கள் அல்லது ஓய்வு பெறுதல் தவிர்ந்த வேறு காரணங்களினால் சேவையியிலிருந்து நிறுத்தப்பட்டவர்கள் ஆகியோரும் பணிக்கொடை பெறுவதற்கு தகுதி பெறுவார்கள். நிதி ஆண்டின் இறுதி மாதத்தில் மொத்த சம்பளத்தின் ஒன்றரை வீதத்தை பெறுவார்கள். 5 ஆண்டுகளுக்கும் அதிகமாக சேவையாற்றியவர்கள், தொழிலிருந்து நிறுத்தப்பட்ட அல்லது விலகிய சேவையை பூர்த்தி செய்த ஒவ்வொரு ஆண்டிற்கும், அவர்கள் வெளிப்படுத்தப்பட்ட வரவு அலகு கணிப்பீட்டு மதிப்பீட்டு முறையை பயன்படுத்தி அறுதியிட்ட நன்மை திட்டமான பணிக்கொடை ஓய்வூதிய நன்மைகளை நடப்பு பெறுமதியில் வங்கி அளவீடு செய்கின்றது.

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

ஓய்வூதிய நன்மை கடப்பாடுகளின் கணக்கிடும் முறை கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், கணக்கீட்டு கொள்கையின் மாற்றங்களும் அதற்கேற்ப கணக்கிடப்பட்டுள்ளன.

#### கணிப்பீடுகளின் நட்டங்கள் - இலாபங்களை இனங்காணல்

இலாபம் அல்லது நட்டத்தில் கணிப்பீட்டு நட்டங்களும் - இலாபங்களும் தரப்பட்டுள்ளன.

#### சொத்துகள் மீது எதிர்பார்க்கப்பட்ட வருவாய்

இத்திட்டம் முன்னராகவே நிதியிடப்படாமையினால், சொத்தின் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் பூஜ்யமாகும்.

#### வட்டி செலவு

கொடுத்துத் தீர்த்தலுக்கு ஒருவருடம் அண்மியதாக, நன்மைகள் இருப்பதன் காரணமாக, பொறுப்புகளின் நடப்பு பெறுமதி காலத்தின் போது, வட்டியினால் ஏற்படக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு, வட்டி கிரயமாகக் கருதப்படும்.

#### நிதியிடல் ஒழுங்குகள்

பணிக்கொடை பொறுப்புகள் வெளியிலிருந்து நிதியிடப்படுவதில்லை.

#### ஆ) அறுதியிட்ட பங்களிப்புத் திட்டம்

அறுதியிட்ட பங்களிப்புத் திட்டமொன்றையும் வங்கி செயற்படுத்துகின்றது. ஊழியர்களினால் வங்கிக்கு அளிக்கப்பட்ட சேவைகளின் அளவிற்கு ஏற்ப, அறுதியிட்ட பங்களிப்பு திட்டம் ஒன்றிற்கான பங்களிப்பு கொடுப்பனவு செய்யப்படுகின்றதுடன், ஆளணி செலவுகளின் கீழ் செலவாக பதிவு செய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள் பொறுப்புகளாக பதிவு செய்யப்படுகின்றது.

பின்வரும் திட்டங்களுக்கு வங்கி பங்களிப்பு செய்கின்றது.

#### ஊழியர் சேமலாப நிதி

சேமலாப நிதியத்திற்கு (மேலதிக நேர வேலை நீக்கலாக) ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் முறையே 15% மும் 10% மும் வங்கியினாலும், ஊழியர்களினாலும் பங்களிப்பு செய்யப்படுகின்றது. வங்கியின் ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிதியமாகும்

#### ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையால் நிதி பகிரப்படும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு வங்கி ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் (மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு தவிர்ந்த) 3% பங்களிப்பு செய்கின்றது. 1983 இன் 12 ஆம் இல. பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் பணிக்கொடைக்கான தகைமையை ஊழியர்கள் பெறுவார்கள்.

#### இ) மருத்துவ நன்மை

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிரந்தர ஊழியர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் ஆகியோர் மருத்துவ மீளளித்தலுக்கு தகுதி பெறுவார்கள். மருத்துவ திட்டத்தில் பங்கேற்பதற்கு தகுதியுள்ளவர்களாகவும், தமது அங்கத்துவ கட்டணங்களை செலுத்துபவர்களாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் இதனை பெற முடியும். ஓய்வு பெற்ற ஒருவரின் குடும்ப அங்கத்தினர்கள் விசேட நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மட்டுமே தகுதி பெறுவார்கள். (ஓய்வு பெற்ற அங்கத்தினர் அல்லது அவரது குடும்ப அங்கத்தினர் ஒருவர் இதற்கு தகுதி பெறுவார்).

ஓய்வூதிய நன்மை கடப்பாட்டின் கணக்கிடும் முறை, கணிப்பீட்டு மதிப்பீட்டு முறையாக மாற்றமடைந்துள்ளதுடன், கணக்கீட்டு கொள்கையும் அதற்கேற்ப கணக்கிடப்பட்டுள்ளது. வங்கி கணிப்பீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு புரொஜெக்டட் யுனிட் கிரடிட் முறையை பயன்படுத்துகின்றது. இம் முறையின் கீழ், கணிப்பீட்டு இலாபங்களும்/ நட்டங்களும் அவை ஏற்படுவதைப் பொருத்து, பொதுவாக நிதியிடப்படாத கணிப்பீட்டு பொறுப்பை குறைக்கலாம்/அதிகரிக்கலாம்.

#### சாதாரணமானதும், காலத்திற்கு முன்னரானதுமான ஓய்வு

55 வயதில் சாதாரண ஓய்விற்கு பங்கேற்பாளர் ஒருவர் தகுதி பெறுவர். இவர் 3 ஆண்டுகள் சேவைக் காலத்தையும் கொண்டிருக்க வேண்டும். அனைத்து பங்கேற்பாளர்களும் 60 வயது வரையிலும் பதவி நீடிப்பு செய்வதற்கு தகுதி பெறுவர்.

#### கணிப்பீட்டு நட்டங்களையும் - வெற்றிகளையும் இணங்காணல்

இலாபம் அல்லது நட்டத்தில் கணிப்பீட்டு வருவாய்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

#### சொத்துகளின் மீது எதிர்பார்க்கப்பட்ட வருவாய்கள்

திட்டம் முன்னராக நிதியிடப்படாததால் சொத்துகள் மீது எதிர்பார்க்கப்பட்ட வருவாய்கள் பூஜ்யமாக இருந்தது.

#### வட்டி கிரயம்

அறுதியிட்ட நன்மை கடப்பாட்டின் தற்போதய பெறுமதியின், காலப் பெறுமதி, மற்றும் நடப்பு சேவை கிரயம் என்பவை வட்டி கிரயமாகும். நிதியிடும் ஒழுங்கு முறைகள் மருத்துவ நன்மை திட்டத்திற்கு வெளியிலிருந்து நிதியிடப்படவில்லை.

### 2.3.15. ஏற்பாடுகள்

முன்னைய நிகழ்வொன்றின் விளைவாக, வங்கிக்கு தற்போது கடப்பாடு (சட்டம் அல்லது நிலைப்படுத்தப்பட்ட) ஒன்று ஏற்படும்போது, ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. கடப்பாட்டை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படும் பொருளாதார நன்மைகளை கொண்ட மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலும். கட்டுப்பாட்டுத் தொகையை ஏற்றக் கொள்ளத்தக்கதான உத்தேச மதிப்பீடுகளை செய்ய முடிவதும் ஏற்பாடுகளாகவிருக்கும் எந்தவொரு ஏற்பாடுகளுடனும் தொடர்புடைய செலவுகள், எந்தவொரு தேறிய மீளளித்தல்கள் வருமானக் கூற்றில் அளிக்கப்படும்.

### 2.3.16. வரிகள்

#### அ) தற்போதைய வரி நடைமுறை

நடப்பு வருடத்துக்கும் கடந்த வருடங்களுக்குமாக, மீளப்பெற வேண்டிய அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையை தற்போதைய வரி சொத்துகளும் பொறுப்புகளும் காட்டுகின்றன. உபயோகிக்கப்பட்ட வரி வீதங்களும் வரிச்சட்டங்களும் நிதியியல் நிலை காட்டும் திகதிக்கு முன்னரோ அந்த திகதியிலோ செய்யப்பட்ட சட்டங்களாகும். இதன்படி, 2006ம் ஆண்டு உள்நாட்டு இறைவரிச் சட்டம் இல. 10ற்கும் மாற்றங்களுக்கும் அமைவாக.

# கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சி

வருடத்திற்கான வரி ஒதுக்கீடு அவ்வருட இலாபத்தில் மாற்றம் செய்யப்பட்ட நிதியில் கூற்றில் குறிப்பு 08 இல் காட்டியபடி அந்த வீதத்தில் இடம் பெறுகிறது

**ஆ) ஒத்திவைக்கப்பட்ட வரியிடல்**
நிதியியல் அறிக்கை இடுவதற்காக, சொத்துக்கள், பொறுப்புகள் என்பனவற்றின் வரி அடிப்படையில் ஐந்தொகை தினத்தில் ஏற்படுத்தப்படும் தற்காலிக வித்தியாசங்களைக் கணக்கில் கொள்வதற்காக பொறுப்பு முறையில் பின்வருபவை தவிர்ந்த ஒத்திவைக்கப்பட்ட வரி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

- நல்லெண்ணம் குறித்த ஆரம்ப இணங்காணல், அல்லது வர்த்தக கூட்டு அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றின் சொத்து அல்லாத பொறுப்பும் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் போது, கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரியிடக் கூடிய இலாபம் அல்லது நட்டத்தை பாதிக்காததாகவும் இருப்பதிலிருந்து, ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு உருவாகின்றது.
- உப மற்றும் துணை நிருவனங்களின் முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட வரியிடக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக அந்த தற்காலிக வேறுபாடுகளை மீள்திருப்பும் நேரத்தை கட்டுப்படுத்தக் கூடியதாகவும், தென்படக் கூடிய எதிர்காலத்தில், இவ்வாறான மீள் திருப்புதல்களை தற்காலிக வேறுபாடுகள் ஏற்படுத்தாது என்கின்ற நிலமையிலும். எல்லா கழிக்கக்கூடிய வித்தியாசங்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் கணக்கெடுக்கப்படுகின்றன. உபயோகிக்கப்படாத வரி வரவுகளும் உபயோகிக்கப்படாத வரி பற்றுகளும் மற்றும் கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களும், வரி செலுத்தக்கூடிய இலாபங்களுக்கு எதிராக உபயோகிக்கக்கூடியதாக முன்கொணரப்பட்ட, வரி வரவுகளும் வரி பற்றுகளும் பேணப்படும்.

சொத்து ஒன்றின் ஆரம்ப இனங்காணலில் இருந்து, கழிவு செய்யப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புடைய ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் உருவாகும்போது அல்லது, வர்த்தக கூட்டு அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றின் பொறுப்பு மற்றும் அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் நேரத்தில், அது கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரியிடக்கூடிய இலாபத்தில் அல்லது நட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத போது.

- உப மற்றும் துணை நிருவனங்களின் முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட, கழிவு செய்யப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, தென்படக் கூடிய எதிர்காலத்தில் தற்காலிக வேறுபாடுகள் மீள் திருப்பல்களை ஏற்படுத்தும் என்கின்ற சாத்தியமுள்ளபோது மட்டுமே ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகளாக இனங்காணப்படும். அத்துடன், தற்காலிக வேறுபாடுகளை பயன்படுத்துவதன் ஊடாகவே வரியிடக்கூடிய இலாபமும் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்து ஒவ்வொரு ஐந்தொகை தினத்திலும் மீளாய்வு செய்யப்பட்டு அதன் முழுத்தொகை ரூபா அல்லது பகுதியையோ உபயோகிக்கக்கூடிய வரி செலுத்த வேண்டிய இலாபம் கிடைக்குமா என ஆராய்ந்து அதற்கேற்ப குறைக்கப்படும். கணக்கில் எடுக்காத பிற்போடப்பட்ட வரி சொத்துகள் ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் மீள் மதிப்பு செய்யப்பட்டு எதிர்கால வரி செலுத்த வேண்டிய இலாபம்

பிற்போடப்பட்ட வரி சொத்துகளை மீளளிப்பதற்கு போதுமானதாகக் கணக்கெடுக்கப்படும்.

ஐந்தொகை திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது அதை தொடர்ந்து சட்டமாக்கப்பட்ட வரி வீதங்களினதும் வரி சட்டங்களினதும் அடிப்படையில், ஏற்றுக் கொள்ளப்பட்ட சொத்துகளும், கொடுத்துத் தீர்க்கப்படும் பொறுப்புகளும் நிகழும் ஆண்டில் பிரயோகிக்க எதிர்பார்க்கப்படும் வரி வீதத்தில், ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகளும், பொறுப்புகளும் அளக்கப்படுகின்றன.

**இ) நிதியியல் சேவையில் பெறுமதி சேர் வரி (VAT)**
2002ம் ஆண்டின் 14 ஆம் இல. பெறுமதி சேர் வரி சட்டத்தினதும் மற்றும் அதற்கான திருத்தங்களினதும் பகுதி 25இற்கு கிணங்க வங்கியின் பெறுமதி சேர் வரி 12மூ ஆகும்.

### 2.3.17. ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்
ஐந்தொகை நிகழ்விற்கு பின்னரான அனைத்து பொருண்மையான நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, நிதிக் கூற்றுகளின் தொடர்புடைய குறிப்புகளில் ஏற்புடைய சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 2.3.18. அரசாங்கம் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்படைய தரப்பினருடான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்
அரசாங்கத்துடனும் அரசாங்கத்துடன் தொடர்புடைய வற்றுடனும், தொடர்புடையவர்களின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன், 25 ஆம் பந்தியின் கீழ், வங்கி வெளிப்படுத்தல்களுக்கான விதிவிலக்குகளை தெரிவு செய்வதில்லை.

### 2.3.19. இன்னமும் நடைமுறைபடுத்தப்படாத ஆனால் தரப்படுத்தல் வழங்கப்பட்டவை
எதிர்காலத்தில் பயன்தரும் திகதியொன்றை கொண்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பின்வரும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் வழங்கப்பட்டது. இந்த இநிஅநி, தற்போது வங்கியினால் கைகொள்ளப்படும் கணக்கீட்டு கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், எதிர்கால நிதியியல் கூற்றுகளின் மீதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

(i) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 - நிதியியல் பத்திரங்கள்: இகநி 39 இற்கு பதிலாக வைக்கப்பட்ட பணியின் முதலாவது கட்டத்தை பிரதிபலிப்பதாக இது வெளியிடப்பட்டதுடன், நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கும் அளவீடுகளுக்கும் பிரயோகிக்கக்கூடியதாகவும் உள்ளது.

(ii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 - உண்மை பெறுமதி அளவீடுகள் இநிஅநி இன் கீழ் உண்மைப் பெறுமதி அளவீடுகள் அனைத்திற்கும் வழிகாட்டியாக தனியொரு மூலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இநிஅநி இன் கீழ் உண்மை பெறுமதி அளவீடுகள் அனைத்திற்கும் இநிஅநி 13 வழிகாட்டலை வழங்குகின்றது. இநிஅநி 9 மற்றும் இநிஅநி 13 ஆகியவை முறையே 01 ஜனவரி 2015 மற்றும் 2014 அன்று அல்லது அதற்கு பின்னரான நிதியியல் காலங்களிலிருந்து நடைமுறைக்கு வரும்.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **1. தேறிய வட்டி வருமானம்** | | |
| வட்டி வருமானம் | | |
| இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள் | 188,195,405 | 268,883,451 |
| கடன்களும் முற்பணங்களும் | 4,000,991,626 | 3,507,069,283 |
| நிதியியல் முதலீடுகள் | 555,872,354 | 464,818,425 |
| **மொத்த வட்டி வருமானம்** | 4,745,059,385 | 4,240,771,159 |
| **வட்டி செலவினங்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 511,984 | 191,425 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 3,065,753,523 | 2,403,891,658 |
| ஏனைய கடன்பெறுகைகள் | 32,875,761 | 18,497,360 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 2,750,000 | 2,750,000 |
| மொத்த வட்டி செலவுகள் | 3,101,891,268 | 2,425,330,442 |
| **தேறிய வட்டி வருமானம்** | 1,643,168,117 | 1,815,440,717 |

**அ. இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களிலிருந்து தேறிய வருமானம்**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| வட்டி வருமானம் | 188,195,405 | 268,883,451 |
| (கழிக்க): வட்டிச் செலவினங்கள் | - | - |
| **தேறிய வட்டி வருமானம்** | 188,195,405 | 268,883,451 |

**2. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 149,313,983 | 121,154,693 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகுச் செலவினம் | - | - |
| **தேறிய தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 149,313,983 | 121,154,693 |
| **உள்ளடக்கப்பட்டுள்ளவை** | | |
| வங்கிச் சேவைக் கட்டணம் | 138,023,927 | 104,804,828 |
| சட்டம் மற்றும் தொழில்நுட்பக் கட்டணங்கள் | 398,371 | 484,395 |
| ஊனைய கடன் கட்டணமும் | 10,891,685 | 15,865,470 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 149,313,983 | 121,154,693 |

**3. ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய)**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் | 19,207,500 | 6,087,750 |
| நானாவித வருமானம் | 2,650,920 | 3,857,873 |
| **ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)** | 21,858,420 | 9,945,623 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **4. கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான மதிப்பு குறைப்பு விதிப்பனவுகள்/(மீள் திருப்பம்)** | | |
| தனிப்பட்ட மதிப்பக் குறைப்புகள் | 110,780,644 | 3,503,255 |
| கூட்டு மதிப்பக் குறைப்புகள் | 114,611,342 | 31,773,143 |
| மொத்தம் | 225,391,986 | 35,276,398 |

**5. ஆளனி செலவுகள்**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் மிகைக் கொடுப்பனவு | 494,652,203 | 470,891,369 |
| அறுதியடப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்பு | 66,084,826 | 67,867,961 |
| அறுதியடப்பட்ட நன்மைத் திட்டங்களுக்கான பங்களிப்பு | 83,268,905 | 75,821,856 |
| ஏனைய ஊழியர்களுக்கான செலவினங்கள் | 81,123,083 | 83,623,588 |
| மொத்தம் | 725,129,018 | 698,204,774 |

**6. ஏனைய செலவுகள்**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| பணிப்பாளர்களின் ஊதியங்கள் | 2,880,056 | 2,684,224 |
| கணக்காய்வாளரின் சம்பளம் | 1,400,000 | 1,400,000 |
| தொழில்ரீதியான மற்றும் சட்ட செலவினங்கள் | 840,563 | 1,445,635 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் பெறுமதி தேய்வு/கடன்தீர்ப்பனவு | 33,105,203 | 37,527,092 |
| அலுவலக நிர்வாகம் மற்றும் தாபனச் செலவுகள் | 159,335,029 | 145,141,277 |
| விளம்பர மற்றும் ஊக்குவிப்ப செலவுகள் | 10,918,122 | 14,278,436 |
| வாகன பாராமரிப்ப மற்றும் போக்குவரத்து | 8,461,708 | 7,523,141 |
| பொதுச் செலவினங்கள் | 13,419,948 | 11,893,478 |
| மாவட்ட முகவர் தரகு | 4,250 | 16,750 |
| ஏனைய நட்டங்கள், அறவிடமுடியாக் கடன்கள் மற்றும் பதிவழிப்புகள் | - | 23,898 |
| இலங்கை மத்திய வங்கி வைப்புக் காப்புறுதி | 26,867,288 | 25,302,525 |
| ஏனைய செலவினங்கள் | 40,626,295 | 39,300,654 |
| மொத்தம் | 297,858,463 | 286,537,111 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **7. வரி செலவுகள்** | | |
| **நடப்பு வருடம்** | 200,347,087 | 275,142,167 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் செலவுகள் (கடன்) | 57,258 | (5,091,070) |
| **மொத்தம்** | 200,404,345 | 270,051,098 |
| **a. அ. வரி செலவின் கணக்கிணக்கம்** | | |
| வரிக்கு முந்திய இலாபம்/நட்டம் | 565,961,053 | 926,522,751 |
| முன்னைய காலங்களின் நடப்பு வருமானவரி தொடர்பான சீராக்கல் | | |
| சேர்க்க: வரி நோக்கங்களுக்கான கழிக்க முடியாத வரி விளைவுகளுக்கான செலவுகள் | 222,959,074 | 143,472,133 |
| கழி : வரி தேவைகளுக்காக கழிவு செய்யப்பட்ட செலவுகளின் வரி விளைவு | (65,411,333) | (58,856,031) |
| சொத்துகளை அகற்றுதல | - | - |
| மூலதன ஈட்டுகை மற்றும் பங்கு இலாபம் | (19,207,500) | (41,317,087) |
| ஆண்டிற்கான சீராக்கம் செய்யப்பட்ட இலாபம் | 704,301,294 | 969,821,765 |
| ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் வரியிடல் | 197,204,362 | 271,550,094 |
| ஒத்திவைக்கப்பட்ட வரியிடலுக்கு/இலிருந்து மாற்றம் | 57,258 | (5,091,070) |
| முன்னயை ஆண்டுகளின் ஏற்பாடுகள் (மிகை)/குறைவு | 3,142,724 | 3,592,073 |
| **காலத்திற்கான வரி செலவு** | 200,404,345 | 270,051,098 |
| **ஆ. வருமானக் கூற்றின் ஒத்திவைக்கப்பட்ட வரி (வரவு) விதிப்பனவில் பின்வருபவை உள்ளடங்கும்** | | |
| **ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள்** | | |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | (1,568,410) | (5,507,139) |
| ஊழியர் நன்மை கடப்பாடுகள் | (94,232,597) | (90,351,127) |
| **வருமானக் கூற்றிற்கு ஒத்திவைக்கப்பட்ட வரி (வரவு)/விதிப்பனவு** | (95,801,007) | (95,858,266) |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 8. அளவு அடிப்படையில் நிதியியல் பத்திரங்களின் பகுப்பாய்வு வங்கி - நடப்பு ஆண்டு (2017)

வங்கி - நடப்பு ஆண்டு (2017)

| ரூபாய்களில் | எச்டிம் | கடன்கள் மற்றும் பெறுகைகள் | ஏஎப்எஸ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| மத்திய வங்கியுடனான காசு மற்றும் மீதிகள் | | 104,191,042 | | 104,191,042 |
| இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள் | 1,035,368,792 | | | 1,035,368,792 |
| வங்கி மீதிகள் | | | | - |
| முதலீட்டுப் பிணையங்கள் | | | 5,379,078 | 5,379,078 |
| ஏனைய வங்கிகளுடனும் நிதி நிறுவனங்களுடனும் வைத்துள்ளவையும் கடன்களும் | | | | - |
| வர்த்தகப் பத்திரங்கள் | | 0.02 | | - |
| மீள் விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் பிடித்துவைத்துள்ள திறைசேரி உண்டியல்கள் | | 1,017,022,848 | | 1,017,022,848 |
| நிலையான வைப்புகள் | | 5,987,564,588 | | 5,987,564,588 |
| தொகுதிக் கடன்கள் | | 65,889,590 | | 65,889,590 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் கிடைக்க வேண்டியவையும் | | 32,987,158,106 | | 32,987,158,106 |
| நிதியியல் முதலீடுகள் - பிரமிட் டிரஸ்ட் | | | 17,895,000 | 17,895,000 |
| ஏனைய சொத்துகளும் - முன்னராகவே கொடுக்கப்பட்ட பணியாளர் கடன்களும் | | 290,496,356 | | 290,496,356 |
| **மொத்த நிதியியல் சொத்துகள்** | 1,035,368,792 | 40,452,322,530 | 23,274,078 | 41,510,965,401 |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | | 32,047,664 | | 32,047,664 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | | | | - |
| வைப்புகள் | | 20,541,237,021 | | 20,541,237,021 |
| நிறுவன வைப்புகள் | | 12,004,035,662 | | 12,004,035,662 |
| திட்ட வைப்புகள் | | 1,074,964,727 | | 1,074,964,727 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | | 110,180,822 | | 110,180,822 |
| ஏனைய கடன் பெறுகைகள் | | | | - |
| வங்கிக் கடன்கள் | | 2,056,658,089 | | 2,056,658,089 |
| ஏஎச்எப் | | 20,840,226 | | 20,840,226 |
| குறிப்பு பெறுகைகள் | | 309,509,365 | | 309,509,365 |
| ஏனைய பொறுப்புகள் | | 233,164,395 | | 233,164,395 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | - | 36,382,637,972 | - | 36,382,637,972 |

முதிர்விற்காக பிடித்துவைத்தவை - எச்டிஎம்

விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை - ஏஎப்எஸ்

கடன்களும் கிடைக்க வேண்டியவையும்/கடன்தீர் கிரயத்தில் வைப்புகள், கடன்தீர் கிரயம்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

### வங்கி - கடந்த ஆண்டு (2016)

| ரூபாய்களில் | எச்டிம் | கடன்கள் மற்றும் பெறுகைகள் | ஏஎப்எஸ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| மத்திய வங்கியுடனான காசு மற்றும் மீதிகள் | | 98,024,536 | | 98,024,536 |
| இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள் | 667,814,030 | | | 667,814,030 |
| வங்கி மீதிகள் | | | | - |
| முதலீட்டுப் பிணையங்கள் | | | 5,379,078 | 5,379,078 |
| ஏனைய வங்கிகளுடனும் நிதி நிறுவனங்களுடனும் வைத்துள்ளவையும் கடன்களும் | | | | - |
| வர்த்தகப் பத்திரங்கள் | | 291,436,924 | | 291,436,924 |
| மீள் விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் பிடித்துவைத்துள்ள திறைசேரி உண்டியல்கள் | | 940,400,465 | | 940,400,465 |
| நிலையான வைப்புகள் | | 4,402,498,884 | | 4,402,498,884 |
| தொகுதிக் கடன்கள் | | 65,999,171 | | 65,999,171 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் கிடைக்க வேண்டியவையும் | | 28,163,700,935 | | 28,163,700,935 |
| நிதியியல் முதலீடுகள் - பிரமிட் டிரஸ்ட் | | | 17,240,000 | 17,240,000 |
| ஏனைய சொத்துகளும் - முன்னராகவே கொடுக்கப்பட்ட பணியாளர் கடன்களும் | | 275,456,318 | | 275,456,318 |
| **மொத்த நிதியியல் சொத்துகள்** | 667,814,030 | 34,237,517,233 | 22,619,078 | 34,927,950,341 |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | | 19,056,864 | | 19,056,864 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | | | | - |
| வைப்புகள் | | 17,814,278,697 | | 17,814,278,697 |
| நிறுவன வைப்புகள் | | 9,982,831,015 | | 9,982,831,015 |
| திட்ட வைப்புகள் | | 1,048,059,480 | | 1,048,059,480 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | | 110,180,822 | | 110,180,822 |
| ஏனைய கடன் பெறுகைகள் | | | | - |
| வங்கிக் கடன்கள் | | - | | - |
| ஏஎச்எப | | 29,320,659 | | 29,320,659 |
| குறிப்பு பெறுகைகள் | | 363,410,915 | | 363,410,915 |
| ஏனைய பொறுப்புகள் | | 273,522,635 | | 273,522,635 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | - | 29,640,661,087 | - | 29,640,661,087 |

## நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **09. காசும் காசுக்கு சமனானவையும்** | | |
| வங்கிகளுடனுள்ள காசும் மீதிகளும் | 104,191,042 | 98,024,536 |
| மொத்தம் | 104,191,042 | 98,024,536 |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **10. வங்கிகளுடன் மற்றும் நிதி நிறுவனங்களுடன் வைத்துள்ளவைகள்** | | |
| வர்த்தக பத்திரம் | 0.02 | 291,436,924 |
| மீள் விற்பனை ஒப்பந்தத்தின்கீழ் பிடித்துவைத்துள்ள திறைசேரி உண்டியல்கள் | 1,017,022,848 | 940,400,465 |
| தொகுதிக் கடன்கள் | 65,889,590 | 65,999,171 |
| நிலையான வைப்புகள் | 5,987,564,588 | 4,402,498,884 |
| மொத்தம் | 7,070,477,026 | 5,700,335,444 |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **11. வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வரவுகள்** | | |
| மொத்த கடன்களும் கிடைக்க வேண்டியவையும் | 33,579,344,566 | 28,530,495,410 |
| தனிப்பட்ட மதிப்பு குறைப்பு | (123,673,707) | (12,893,063) |
| கூட்டு மதிப்புக் குறைப்பு | (468,512,753) | (353,901,411) |
| **தேறிய கடன்களும் மற்றும் கிடைக்க வேண்டியவையும்** | 32,987,158,106 | 28,163,700,935 |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **அ. பகுப்பாய்வு** | | |
| **உற்பத்திகளுடாக** | | |
| ஈடு | 9,179,939,734 | 9,076,121,011 |
| ஊசேநி | 9,312,656,134 | 10,343,697,912 |
| வாகனம் | 27,482,737 | 40,344,555 |
| பணியாட் கடன்கள் | 884,353,343 | 841,704,479 |
| தனிப்பட்ட கடன்கள் | 13,193,612,739 | 7,430,006,373 |
| ஏனையவை | 981,299,878 | 798,621,080 |
| **ஊழியர் கடன்கள்** | 33,579,344,566 | 28,530,495,410 |
| **பிணையங்களுடாக** | | |
| பிணையங்களாக வைத்துள்ள இணைப் பிணையங்கள் | 19,404,431,950 | 20,301,867,957 |
| ஏனைய கடன் அதிகரிப்புகள் | 14,174,912,617 | 8,228,627,453 |
| | 33,579,344,566 | 28,530,495,410 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **ஆ. தனிப்பட்ட மற்றும் கூட்டு மதிப்பிடுதலில் அசைவுகள்** | | |
| **தனிப்பட்ட மதிப்புக்குறைப்பு** | | |
| ஜனவரி 01ம் திகதியில் ஆரம்ப மீதி | 12,893,063 | 9,389,808 |
| வருமான கூற்றுக்கான கட்டணம்/பதிவுசேர்ப்பு | 110,780,644 | 3,503,255 |
| **இறுதி மீதி** | 123,673,707 | 12,893,063 |
| **கூட்டு மதிப்புக்குறைப்பு** | | |
| ஜனவரி 01ம் திகதியில் ஆரம்ப மீதி | 353,901,411 | 322,128,268 |
| வருமான கூற்றுக்கான கட்டணம்/பதிவுசேர்ப்பு | 114,611,342 | 31,773,143 |
| **இறுதி மீதி** | 468,512,753 | 353,901,411 |
| **மொத்தம்** | 592,186,460 | 366,794,474 |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **12. விற்பனைக்கு வைத்துள்ள நிதியியல் முதலீடுகள் (இலங்கை அரசாங்க பிணையங்கள் தவிர்ந்தவை)** | | |
| பங்கு மூலதன பிணையங்கள் - யுனிட்டிரஸ்ட் | 17,895,000 | 17,240,000 |
| முன்னிலைப்படுத்தப்படாத பங்குகள் | 5,379,078 | 5,379,078 |
| (கழிக்க): மதிப்பு குறைப்பு விதிப்பனவுகள் | - | - |
| **தேறிய விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகள்** | 23,274,078 | 22,619,078 |

- யுனிட் ட்ரட்ஸ் 500,000 கூறுகளை ஈகல் குரோத் அன்ட் இன்வெஸ்மன்ட் நிதியத்தில் கொண்டுள்ளது. நிதி கூற்றுகளின் திகதி அன்றுள்ளவாறான சந்தை விலைகளின் அடிப்படையில் உண்மை பெறுமதியில் இம்முதலீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நம்பகத் தன்மையுடன் அறவிடப்பட முடியாதவையாக பிடச் ரேடிஸ் லங்கா லிமிடட் (Fitch Rating Lanka Limited) மற்றும் கடன் தகவல் பணியகம் (Credit Information Bureaர) ஆகியவற்றின் பங்குகளை முன்னிலைப்படுத்தப்படாத பங்குகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பணிப்பாளரின் மதிப்பீட்டில் கொணடு செல்லப்படுகின்றன.

**13. நிதியியல் முதலீடுகள் - முதிர்விற்காக வைத்துள்ளவை**

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| கடன் பிணையங்கள் - திறைசேரி உண்டியல்கள் | 1,035,368,792 | 667,814,030 |
| (கழிக்க): மதிப்பு குறைப்பு விதிப்பனவுகள் | - | - |
| **தேறிய முதிர்விற்காக வைத்துள்ள முதலீடுகள்** | 1,035,368,792 | 667,814,030 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 14. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### அ. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| ரூபாய்களில் | வாகனம் | தளபாடங்களும் உபகரணங்களும் | மொத்தம் |
|---|---|---|---|
| **2017 (நடப்பு ஆண்டு)** | | | |
| **கிரயம்/உண்மை பெறுமதி** | | | |
| **01.01.2017 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி** | 70,903,939 | 247,167,718 | 318,071,657 |
| கூட்டல்கள் | - | 11,116,587 | 11,116,587 |
| அகற்றல்கள் | (105,685) | (9,507,675) | (9,613,360) |
| சீராக்கல்கள் | - | - | - |
| **1/12/2017 அன்றுள்ளவாறு முடிவடைந்த மீதி** | 70,798,254 | 248,776,629 | 319,574,883 |
| **(கழிக்க): திரண்ட பெறுமானத் தேய்வு** | | | |
| **01/01/2017 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி** | 66,794,514 | 157,701,192 | 224,495,705 |
| ஆண்டிற்கான விதிப்பனவு | 4,109,425 | 28,995,778 | 33,105,203 |
| கூட்டல்கள் | - | | |
| அகற்றல்கள் | (105,685) | (9,301,873) | (9,407,558) |
| சீராக்கல்கள் | - | - | - |
| **31/12/2017 அன்றுள்ளவாறு முடிவடைந்த மீதி** | 70,798,254 | 177,395,097 | 248,193,351 |
| (கழிக்க): மதிப்பு குறைப்பு விதிப்பனவுகள் | | | |
| **31/12/2017 அன்றுள்ளவாறு தேறிய புத்தகப் பெறுமத** | - | 71,381,532 | 71,381,532 |

| ரூபாய்களில் | வாகனம் | தளபாடங்களும் உபகரணங்களும் | மொத்தம் |
|---|---|---|---|
| **(முன்னைய ஆண்டு) 2016** | | | |
| **கிரயம்/உண்மை பெறுமதி** | | | |
| **01/01/2016 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி** | 70,903,939 | 190,480,371 | 261,384,310 |
| கூட்டல்கள் | - | 56,687,346 | 56,687,346 |
| அகற்றல்கள் | - | - | - |
| சீராக்கல்கள் | - | - | - |
| **31/12/2016 அன்றுள்ளவாறு முடிவடைந்த மீதி** | 70,903,939 | 247,167,718 | 318,071,657 |
| **(கழிக்க): திரண்ட பெறுமானத் தேய்வு** | | | |
| **01/01/2016 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி** | 58,552,689 | 128,415,925 | 186,968,613 |
| ஆண்டிற்கான விதிப்பனவு | 8,241,825 | 29,285,267 | 37,527,092 |
| கூட்டல்கள் | - | | |
| அகற்றல்கள் | - | - | - |
| சீராக்கல்கள் | - | - | - |
| **31/12/2016 அன்றுள்ளவாறு முடிவடைந்த மீதி** | 66,794,514 | 157,701,192 | 224,495,705 |
| (கழிக்க): மதிப்புக் குறைப்பு விதிப்பனவுகள் | | | |
| **31/12/2016 அன்றுள்ளவாறு தேறிய புத்தகப் பெறுமதி** | 4,109,426 | 89,466,526 | 93,575,951 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 15. ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள்/(பொறுப்புகள்)

| | நிதி நிலைமையின் கூற்று | | வருமான கூற்று | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2017 | 2016 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 1,568,410 | 5,507,139 | (3,938,729) | 5,298,274 |
| ஊழியர் நன்மை கடப்பாடுகள் | 94,232,597 | 90,351,127 | 3,881,470 | (207,204) |
| **தேறிய மொத்தம்** | 95,801,007 | 95,858,266 | (57,258) | 5,091,070 |

28% மான விளைவு வரி வீதத்தின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்ட வரி தீர்மானிக்கப்பட்டுள்ளது..

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **16. ஏனைய சொத்துகள்** | | |
| கிரயம் காகிதாதிகள் இருப்பு | 10,815,198 | 10,062,368 |
| வைப்புகளும் முன்னரான கொடுப்பனவுகளும் | 31,512,850 | 34,042,465 |
| முன்னராக கொடுப்பனவு செய்யப்பட்ட பணியாளர் கடன்கள் | 290,496,356 | 275,456,318 |
| ஏனையவைகள் | 301,945,826 | 185,669,131 |
| **மொத்தம்** | 634,770,231 | 505,230,283 |

## 17. வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| வங்கி மேலதிகப் பற்று | 32,047,664 | 19,056,864 |
| **மொத்தம்** | 32,047,664 | 19,056,864 |

## 18. வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை | 33,620,237,411 | 28,845,169,193 |
| **மொத்தம்** | 33,620,237,411 | 28,845,169,193 |
| **பகுப்பாய்வு** | | |
| உற்பத்திகளுடாக | | |
| வைப்புகள் | 20,541,237,021 | 17,814,278,697 |
| நிருவன வைப்புகள் | 12,004,035,662 | 9,982,831,015 |
| திட்ட வைப்புகள் | 1,074,964,727 | 1,048,059,480 |
| **மொத்தம்** | 33,620,237,411 | 28,845,169,193 |

## 19. ஏனைய கடன்பெறுகைகள்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| தொகுதிக் கடன்கள் | 110,180,822 | 110,180,822 |
| வங்கிக் கடன்கள் | 2,056,658,089 | - |
| ஏஎச்எப் | 20,840,226 | 29,320,659 |
| இலங்கை மத்திய வங்கியின் குறிப்புக் கடன்கள் | 309,509,365 | 363,410,915 |
| **மொத்தம்** | 2,497,188,501 | 502,912,396 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 20. ஊழியர் நன்மை

உய்த்தறியப்பட்ட அலகுக் கடன் முறைமையைப் பயன்படுத்தி காப்புறுதிக் கணிப்பீட்டருடன் வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டமான வங்கி தற்போதைய வரையறுக்கப்பட்ட நன்மைகள் தேவைப்பாட்டினை அளவிடுகின்றது. கழிவுவீதங்கள், சொத்துகள் மீதான வருவாய்களின் எதிர்பார்க்கப்படும் வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் மற்றும் இறப்புவீதங்கள் என்பவை குறித்த ஊகத்தின் அடிப்படையில் கணிப்பீட்டு மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. இத் திட்டங்களின் நீண்டகால தன்மையின் காரணமாக இத்தகைய உத்தேச மதிப்பீடுகளை குறிப்பிடத்தக்களவு நிச்சயமின்மைகளுக்கு உள்ளாக்கப்படலாம். முன்னர் அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ள எடுகோள்கள் அவ்வாறே இருக்கும் வகையில், அனைத்து ஊழியர்களினதும் நன்மைத் தேவைப்பாடுகள் 31 டிசம்பர் 2017ம் திகதியில், 31 டிசம்பர் 2017ம் திகதியில் கணிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டது. இது செல்விபியல் எஸ் குணதிலகஅன்ட் அசோசியேட் நிறுவனம் மற்றும் மனேஜ்மன்ட் கன்சல்டேசன்ஸ் (பிறைவட்) நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சூத்திரங்கள் மற்றும் அறிவுறுத்தல் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது.

கணிப்பீட்டாளர்களினால் பயன்படுத்தப்பட்ட பிரதான எடுகோள்கள் ஊகங்கள் பின்வருமாறு:

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| வட்டி வீதம் | 11.50% | 10.00% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | 7.50% | 8.50% |
| ஓய்வூதிய வயது | 55-60 years | 55-60 years |

### பணிக் கொடை

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **பணிக்கொடைக்கான ஏற்பாடு** | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் மீதி | 141,313,199 | 159,681,831 |
| நடப்பு சேவை செலவு | 16,957,584 | 6,333,716 |
| வட்டி செலவு | 5,923,541 | 14,371,365 |
| கணிப்பீட்டு (இலாபம்)/நட்டம் | 16,554,312 | (34,819,070) |
| செலுத்தப்பட்ட நன்மை | (5,854,754) | (4,254,643) |
| **மொத்தம்** | 174,893,882 | 141,313,199 |
| **ஊழியர் நன்மை பொறுப்பு மொத்தம்** | 336,544,991 | 322,682,597 |

## 21. ஏனைய பொறுப்புகள்

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| கொடுப்பனவு வருமானவரி | 9,359,678 | 143,370,993 |
| அட்டுறு செலவினம் | 46,952,528 | 46,792,271 |
| ஏனையவை | 233,164,395 | 273,522,635 |
| ஒரு நாள் வித்தியாசத்திற்கான படி - பணியாளர்கள் கடன் | 290,496,356 | 275,456,318 |
| **மொத்தம்** | 579,972,958 | 739,142,216 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 22. குறித்தொதுக்கப்பட்ட மூலதனம்/சாட்டப்பட்ட மூலதனம்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் | 2,000,000,000 | 2,000,000,000 |
| பங்களிப்பு செய்த மூலதனம் | 889,812,899 | 889,812,899 |

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அச்சட்டம் தொடர்பான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, அதிகாரம் வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 2 பில்லியன் ஆகும். விவசாய மற்றும் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிற்கு ஏற்ப விவசாய மற்றும் கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கான முற்பணத் தொகையில் 1979 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதிய நிலுவையாக உள்ள தொகை, அத்துடன் விவசாய மற்றும் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனத்தின் ஒதுக்கத் தொகை, 1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிய இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் கடன் ஒதுக்கத்துக்கான நிலையியல் கட்டளைத் தொகையாகிய வங்கியின் மூலதனத்தின் ஒருபகுதியாக உருவாக்கப்பட்டது மற்றும் அரசாங்கத்தினால் வங்கியின் மூலதனமாக பங்களிப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட அது போன்ற தொகைகள் என்பவற்றை பங்களிப்புச் செய்த மூலதனம் உள்ளடக்கியுள்ளது.

அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட 1979 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் வங்கியின் மூலதனத்திற்கு அரசாங்கம் பங்களிப்பொன்றை செய்தது. அத்தோடு, அவ்வாறான தொகையுடன் மேலே பந்தியில் விபரித்த ரூ. 889,812,899 தொகை என்பவற்றை 2017 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கி மூலதனமாக உள்ளடக்குகின்றது.

மேலும், சட்ட ஏற்பாட்டின் பிரகாரம், அ.ஈ.மு.வ காலத்துக்குக் காலம், வங்கியின் மூலதனப் பங்களிப்பை அதற்கு ஏற்றவகையில் அதிகரிக்கின்றது. இதில் இலங்கை குடியரசிற்கு வெளியக ரீதியாக அல்லது உள்ளக ரீதியாக அரசாங்கத்திலிருந்து அல்லது வேறு வள மூலங்களிலிருந்து ஏற்கனவே சேகரித்த வீதத்திலான நிதி போன்ற நிதிகளும் வங்கியின் திரட்டு நிதியில் விதிப்பனவு செய்யப்படும்.

## 23. நியதிச் சட்ட ஒதுக்க நிதி

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | 231,357,505 | 203,052,939 |
| காலத்தின் போதான மாற்றல்கள | 15,278,229 | 28,304,566 |
| **திசம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுற்ற நிலுவை** | 246,635,734 | 231,357,505 |

## 24. பிடித்துவைத்த பெறுகைகள்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி | 2,706,975,850 | 2,449,406,437 |
| கடந்த கால சீராக்கங்கள் | (27,884,783) | 1,845,834 |
| வருடத்திற்கான இலாபம் | 178,524,309 | 436,017,785 |
| ஏனைய ஒதுக்குகளுக்கு பரிமாற்றல் | (40,278,229) | (38,304,566) |
| ஏனைய விரிவான வருமானம் | 5,206,601 | 31,357,418 |
| கருதப்பட்ட பங்குலாப வரி | (93,266,093) | (173,347,059) |
| **திசம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுற்ற நிலுவை** | 2,729,277,654 | 2,706,975,850 |
| | | |
| கடந்த கால சீராக்கங்கள் | | |
| கீழ்வரும் வருடங்களின் ஆரம்ப பிடித்து வைக்கப்பட்ட விளைவு சீராக்கங்கள் | | |
| 2015 ஆண்டுக்கு முன்னரான சீராக்கங்கள் | (16,011,659) | |
| 2014 ஆண்டுக்கு முன்னரான சீராக்கங்கள் | 7,147,459 | |
| 2013 ஆண்டுக்கு முன்னரான சீராக்கங்கள் | 11,705,046 | |
| 2012 ஆண்டுக்கு முன்னரான சீராக்கங்கள் | (31,219,187) | |
| அடையாளம் காணப்படாத வேறுபாடு | 493,558 | |
| **31.12.2016ம் திகதியில் முன்கொண்டு செல்லப்பட்ட வேறுபாடு** | (27,884,783) | |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 25. ஏனைய ஒதுக்குகள்

### (அ) வங்கி - நடப்பு ஆண்டு (2016)

| | 01/01/2017 இல் ஆரம்ப மீதி | அசைவு/ மாற்றம் | 31/12/2017 இல் முடிவுற்ற மீதி |
|---|---|---|---|
| பொது ஒதுக்கு | 683,280,000 | - | 683,280,000 |
| மூலதன ஒதுக்கு | 393,498,004 | - | 393,498,004 |
| பிரதான இழப்பெதிர்காப்பு நிதியம் | 1,031,000 | - | 1,031,000 |
| ஏஎப்எஸ் | 12,240,000 | 655,000 | 12,895,000 |
| **மொத்தம்** | 1,090,049,004 | 655,000 | 1,090,704,004 |

### ஆ. வங்கி - முந்திய அண்டு (2016)

| | 01/01/2016 இல் ஆரம்ப மீதி | அசைவு/ மாற்றம் | 31/12/2016 இல் முடிவுற்ற மீதி |
|---|---|---|---|
| பொது ஒதுக்கு | 683,280,000 | - | 683,280,000 |
| மூலதன ஒதுக்கு | 9,176,000 | - | 9,176,000 |
| பிரதான இழப்பெதிர்காப்பு நிதியம் | 1,031,000 | - | 1,031,000 |
| ஏஎப்எஸ் | 13,840,000 | 13,523,822 | 27,363,822 |
| **மொத்தம்** | 12707,327,000 | 13,523,822 | 720,850,822 |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **26. அவசர தேவை பொறுப்புகளும் கடப்பாடுகளும்** | | |
| வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | - | - |
| ஏனைய கடப்பாடுகள் | - | - |
| **மொத்தம்** | - | - |

வங்கி அதன் வழமையான வர்த்தகத்தின் போது, பல்வேறு கடப்பாடுகளை செய்கின்றது. ஆகவே அதன் வாடிக்கையாளர்களுக்கு சட்ட ரீதியாக ஒரு சில அவசர தேவைக்கான பொறுப்புகளை ஏற்கின்றது. இத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக, பொருண்மையான நட்டங்கள் என்பவற்றையும் அது எதிர்பார்ப்பதில்லை.

## 27. முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் கொடுக்கல் வாங்கல்கள‘

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கு அமைவாக, “தொடர்புடையவர்களின் வெளிப்படுத்தலில், வங்கி மற்றும் அதன் உப நிருவனம், துணை நிருவனங்களின் நடவடிக்கைகளை திட்டமிடுவது, நெறிமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது என்பவற்றிற்கு அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளவர்களாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் உள்ளனர். சபையின் பணிப்பாளர்கள், வங்கியின் நிருவன முகாமைத்துவ அங்கத்தினர்கள், மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர், வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **27.1 (அ) முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு இழப்பீடுகள்** | | |
| குறுங்கால ஊழிய நன்மைகள் | 20,218,526 | 26,000,080 |
| முன்னைய ஊழிய நன்மைகள் | 4,284,574 | 7,621,383 |
| **மொத்தம்** | 24,503,100 | 33,621,463 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

27.1 (ஆ) முக்கிய முகாமைத்துவ ஆளணி அல்லது அவர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தினர்களினால் குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்தக் கூடிய தலையிடக்கூடிய முக்கிய முகாமைத்துவ ஆளணி, அவர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள்.

| | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **வருமானக் கூற்று** | | |
| உழைக்கப்பட்ட வட்டி (கடன்களில் இருந்து) | 2,149,477 | 2,180,715 |
| கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி (வைப்புகளுக்கு) | 423,112 | 4,528,358 |
| 27.1 (அ) வில் குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு | 24,503,100 | 33,621,463 |
| **நிதியியல் நிலமைக்கூற்று** | **2017** | 2016 |
| **சொத்துக்கள்** | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 24,694,468 | 29,096,056 |
| **பொறுப்புகள்** | | |
| வைப்புகள் | 11,548,808 | 24,027,895 |

## 28. நிதியியல் பத்திரங்களின் உண்மைப் பெறுமதி

உண்மை பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் பத்திரங்கள்

